இதழ் 35 ஜூலை - செப்டம்பர் 2010

# காலம்

ISSN - 1715 - 4030

ரூ. 40 (இந்தியா மட்டும்)



கோவை ஞானி



ஐராவதம் மகாதேவன்

## இயல் விருது

## சிறப்பிதழ்



**Ketha Nadarajah**
**President**

# N.K.S.
**Drapery & Blinds Fabric Ltd**



210 Silver Star Blvd, Unit # 825
Scarborough, ON, M1V 5J9
Telephone (416) 321 - 6420  Fax (416) 321 - 2217
Email : info@nksdrapery.ca  Web: www.nksdrapery.ca

# காலம்

இதழ் 35 ஜூலை- செப்டம்பர் 2010

**ஆசிரியர்**
செல்வம்

**ஆலோசனைக் குழு**
என்.கே.மகாலிங்கம்
செழியன்

**தயாரிப்பும் வடிவமைப்பும்**
ராஜகோபால்

**அட்டை ஓவியம்**
அபராஜிதன், சென்னை



**தொடர்பு முகவரி**

KALAM
16, Hampstead Court Markam,
ONT L3R 3S7
Canada
Email : kalam@tamilbook.com

KALAM
44, First Floor, 5th street,
Om sakthi Nagar,
Valasaravakkam,
Chennai - 600 087.
Email : kaalammagazine@gmail.com
Phone: 94442 74205



Printed at
Jyothi Press
Triplicane,Chennai - 600 005

**சந்தா விபரம் :**

**இந்தியா**

ஒராண்டு சந்தா: 160 ரூபாய்
இரண்டாண்டு சந்தா: 300 ரூபாய்
ஐந்தாண்டு சந்தா: 750 ரூபாய்

**பிற நாடுகள்**

ஒராண்டு சந்தா: 640 ரூபாய்
இரண்டாண்டு சந்தா: 1200 ரூபாய்
ஐந்தாண்டு சந்தா: 3000 ரூபாய்

சந்தா செலுத்த விரும்புபவர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளவும்.
மின்னஞ்சல்: kaalammagazine@gmail.com
தொலைபேசி: 94442 74205




R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

ஒரு அறுபது ஆண்டுகால இலங்கைத் தமிழர்களின் அரசியல் போராட்டம் கண்ணீராலும், இரத்தத்தாலும் சேறுண்டு வீழ்ந்து கிடக்கின்றது. எதற்காகப் போராடினோம் என்பதும் மறந்து போய், ஒரு குவளை நீருக்காகவும், ஒரு வாய் உணவுக்காகவும், சொந்த இருப் பிடத்துக்காவும், காணாமல் போன உறவுகளுக்காகவும் மக்கள் கையேந்தி நிற்கின்றார் கள். இந்த மக்களுக்கு நீதி செய்வதற்குதான் ஒருவரும் இல்லை. ஆனால் கருணை செய்ய வும் தான் யாரும் இல்லையா?

எங்கள் கண்களின் முன்னால் நடந்து கொண்டிருக்கின்றது மிக அதிர்ச்சியான அநீதி. சில காலங்களின் பின் இதை வரலாறாக இன்னொரு தலைமுறை படிக்கும். ‘கொடுமையான அநீதி’ என்று வர்ணிக்கும்.

எங்கள் நீதியான அரசியல் போராட்டத்தில் தர்மர்கள் இருந்தார்கள். அர்ச்சுனர்கள், வீமர்கள், நகுலர்கள், சகாதேவர்கள் எல்லாருமே இருந்தார்கள். முப்படைகள் இருந்தன. எல்லாம் இருந் தும் ராஜதந்திரங்களையும், அரசியல் சூழ்சிகளையும் சொல்லித்தர கண்ணன் இல்லாமல்போய் விட்டான். கண்ணன் இல்லாமல் எந்த ஒரு தர்ம யுத்தமும் வெல்லப்படமாட்டாது.

தவறுகளில் இருந்து கற்றுக் கொண்டு அடுத்த காலடியை காலத்தின் துணையோடு எடுத்து வைப்போம்.

இயல் விருது பெறும் அறிஞர் ஐராவதம் மகாதேவனையும், அறிஞர் கோவை ஞானி யையும் காலம் வாழ்த்துகிறது.

செல்வம்


To Buy, to Sell and to become a REAL estate agent
VEEDU
REALTY INC.
BROKERAGE
Home of the
REAL
Estate Agents
Tam Sivathasan B.Sc Eng.
Broker of Record
Tel: 416.804.3443
Veedu Realty Inc.
Brokerage
1345 Morningside Ave., Suite 8, Toronto, ON, M1B 5K3
Office: 416.759.6000, Fax: 416.759.6005
www.veedu.com

## தேடக்கிடைக்காத ஓர் படம்



(படம்: நன்றி - குமரன்)

வித்துவசிரோமணி கணேசையர் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் சுவாமி விபுலானந்தர் க.நடசேபிள்ளை ஆகியோர் உட்பட தமிழ் அறிஞர்களுடன் சுவாமி ஞானப்பிரகாசர்


RMA
REAL MORTGAGE ASSOCIATES
Brokerage Lic # 10464

**Murugadas narayanasamy (Das)**
Broker
Lic # M08007147



Cell: 416-543-6614
Phone: 905-861-2734
Fax: 1-888-511-8960

dasn@rmabroker.ca
www.realmortgagebroker.ca

Gta East:
213-5215 Finch Ave East,
Scarborough ON
M1S 0C2

Gta West:
26 Maddybeth Cres.,
Brampton ON
L6Y 5R7

"வளமான வாழ்வின் அடையாளம்"
வீடு வாங்கவும், விற்கவும்.

ரஞ்சன் பிரான்சிஸ்
Dir: 416-816-1220



RED CARPET
Red Carpet Royal Realty Ltd., Brokerage*
880 ELLESMERE ROAD Office:416-284-5555

Ranjan Francis Xavier
Sales Representative

[ இயல் விருது ]

# மணல்மேட்டில் இன்னொரு அழகிய வீடு

யமுனா ராஜேந்திரன்

ஞானியை நேரில் சந்திக்கும் போதெல்லாம் நான் ஞானியிடம் எதிர் கொண்ட உருவ ஒற்றுமை ஒன்று குறித்து அவரிடம் ஞாபகமாகச் சொல்லியிருக்கிறேன். ஞானியும் ழூான் பவுல் சார்த்தரும் ஒரு கண்ணில் பூ விழுந்த, மங்கலான பார்வை கொண்டவர்கள். புன்னகை செய்யும், கூர்மையான, பகடி செய்யும், அலட்சியம் தொனிக்கும் முகங்கள் இவர்களுடையவை. இருவரும் சிறிய, நொய்மையான உடல் கொண்டவர்கள். தம்மை விடவும் மிகக் குறைந்த வயதும் உத்வேகமும் மிக்க இளைஞர்களால் எப்போதும் சூழப்பட்டவர் கள். மாவோவை ஆராதித்தவர்கள். விடுதலை சார் அரசியல் வன் முறையைப் போற்றியவர்கள்.

தமது முதியவயதில் முற்றிலும் கண்பார்வையை இழந்தவர்கள். தமது வாசிப்புக்கும் நடமாட்டத்திற்கும் பிறரைச் சார்ந்திருந்தவர்கள். அதனா லேயே அவர்களது உடனடி வாசிப்பில் நேர்ந்த தடங்கல்களையும், அதன் மீதான விமர்சனங்களையும் தவிர்க்கவியலாது எதிர்கொள்ள நேர்ந்திருப்பவர்கள். மிகப்பெரும் வாசிப்பும் சிந்தனைக் கிளர்ச்சியும் பெற்றவர்களாகத் தம்மளவில் தனிமைத் துயரையும், பிறரிடம் புரிந் துணர்வையும் ஒரு சேரக்கோரும் இருத்தலியல் முரண்நிலை இது. ழூான் பவுல் சார்த்தரிடமும் ஞானியிடமும் நான் அவதானிக்க நேரும் முரண்களையும், நடைமுறை குறித்த புரிதல்களையும் இந்த இருத் தலியல் பதட்டத்திலிருந்தே நான் புரிந்துகொள்ள முயல்கிறேன்.

தடுக்கிவிழ நேர்கிற வரலாற்றின் தடங்களிலெங்கும் தத்துவவாதிகள் தென்பட, அன்றாட வாழ்வின் சிக்கல்களுக்கு எதிர்வினை செய்தவர் களும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களும் மட்டுமே என்றும் நடை முறையில் நினைவுகூரப்படுகிறார்கள். மார்க்சியப் பிதாமகர்களான மார்க்ஸ்எங்கெல்ஸ் துவங்கி, பிரெஞ்சுத் தத்துவவாதிகளாகத் திகழ்ந்த ஸார்த்தர்தெரிதா ஈராக, சமநாட்களின் அந்தோனியோ நெக்ரி பிரெடரிக் ஜேம்சன் வரை இதுதான் நிஜம். அன்றாட நடை முறைக்கு எதிர்வினை செய்தவர்கள் எனும் அளவிலும் செயலில் ஈடுபட்டார்கள் எனும் அளவிலும்தான் இவர்களது முக்கியத்துவம் உணரப்படுகிறது.

மார்க்சியத்தைப் பிற தத்துவங்களில் இருந்து கறாராக வித்தியாசப் படுத்தும் அதனது முக்கியமான பண்பு எது? உலகை வியாக்யானப் படுத்துவதிலிருந்து அதனை மாற்றுவது என்கிறார் மார்க்ஸ். மார்க்சியம் நடைமுறைத் தத்துவம் என்றார் கிராம்ஸி. எதிர்வினை செய்தலும் மாற்றுவதற்காக இயக்கத்தில் ஈடுபடுதலும் என்பார் பாவ்லோ பிரெய்ரி. அன்றாடம் நிலவும் நடைமுறைத் தத்துவத்தின் மீது ஒரு அரசியல் அமைப்பை உருவாக்குவது என இதனை விரித்துச் சொல்வார் லுகாக்ஸ். கலாச்சார மார்க்சியர்களான லுகாக்சும் கிராம்ஸியும் புரட்சிகர நடைமுறைக்காக லெனினியக் கட்சியைக் கட்டமுனைந்தவர்கள்.

■

தமிழக மார்க்சியம் என எடுத்துக் கொண்டால் கட்சி சார்ந்து கோட் பாட்டு ரீதியில் எழுதியவர்கள் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ப.விருத்தகிரி, அ.சீனிவாசன், ப.ஜீவானந்தம், எஸ்.ராமகிருஷ் ணன், கே.பாலதண்டாயுதம், ஆர்.கே.கண்ணன், நா. வானமாமலை, ஆராய்ச்சி குழுவினர் மற்றும் நா.முத்துமோகன் போன்றவர்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்து பி.ராமமூர்த்தி, கே.முத்தையா, மாயாண்டிபாரதி, அருணன், எல்ஜி. கீதானந்தன் போன்றவர்களையும் இருபிரதான கட்சிகளுக்கும் வெளியில் விமர்சன மார்க்சிய எழுத்துக் களைத் தமிழில் கொடுத்தவர்கள் என எஸ்.என்.நாகராசன், எஸ்.வி.ராஜ துரை, குணா, கோ.கேசவன், ஞானி போன்றவர்களையும் குறிப் பிட்டுச் சொல்ல வேண்டும்

ஞானியைப் பற்றிப் பேசுவதென்பது, ஒருவகையில் ஐம்பதுகளில் பிறந்த, அறுபதுகளின் இறுதி எழுபதுகளின் ஆரம்பத்தில் இலக்கியம் அல்லது அரசியல் கற்க நேர்ந்த, தமது பள்ளி இறுதி நாட்களை விட்டு வெளி வந்த கோவையின் இளைஞர்களைப் பற்றிப் பேசுவதுதான். இலக்கியம் அரசியல் என இவைபிரண்டிலும் தீவிரமான ஆர்வம் கொண்ட எவருக்கும் ஞானியைத் தெரிந்திருக்கும். இதுவன்றி இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என இரண்டிலும் இயங்கிக்கொண்டிருந்த அந்தத் தலைமுறையின் இளைஞர்களுக்கும் ஞானியைத் தெரிந்திருந்தது.

அந்நாட்களில்தான் நக்சலிச அரசியல் சார்புடன் வசந்தத்தின் இடி முழக்கம் எனும் அரசியல் எக்காள முழக்கத்துடன், அறுபதுகளின் இறுதியில் கோவையிலிருந்து புதிய தலைமுறை இதழ் வந்தது. ஞானி அதனது ஆசிரியர் குழுவில் இருந்தார். தொடர்ந்து தோழர் அப்புவின் தீக்கனல் இதழும் வந்தது. தோழர் தா. பாண்டியன் உதவ அப்பு தோற்றுவித்த தீக்கதிர் இதழ் பின்னாளில் மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ இதழாக ஆனது.

புலவர் ஆதி, மனோ என்கிற எஸ்.வி.ராஜதுரை, கோவை ஞானி, சத்திய மங்கலம் நாகராஜன் போன்ற எழுத்தாளர்களையும், லிங்குசாமி, கண்ணாக்குட்டி, எல்.கீதானந்தன், குமாரவேலு, எல்.அப்பு என வாஞ் சையுடன் அழைக்கப்பெற்ற அற்புதசாமி என்கிற எனது கனவு மனிதர் போன்ற நடவடிக்கையாளர்களையும் நான் அறிந்த நாட்கள் அவை தான். இவர்களில் சத்தியமங்கலம் நாகராஜன், கண்ணாக்குட்டி, அப்பு, லிங்குசாமி, குமாரவேலு, கீதானந்தன் போன்றவர்கள் அடிக்கடி எனது தந்தையைச் சந்திக்க வருவார்கள். ஞானி ஆசிரியர் குழுவிலி ருந்த புதிய தலைமுறை, தீக்கனல் போன்ற பத்திரிக்கைகள் அனைத்தை யும் எனது தந்தையார் வழி நான் அறிந்தேன். எனது தந்தையார் எப்போதுமே கட்சி சார்ந்த நடைமுறையாளராக இருந்தார் எனும் அளவில் நடவடிக்கையாளர்களைத் தெரிந்த அளவில் எழுத்தாளர்

## ஞானி பெரும்பாலானோர்க்கு இலக்கிய விமர்சகர். இன்னும் சிலருக்கு விரிந்து கற்ற தமிழறிஞர். பிறருக்குக் கடவுள் குறித்து சிக்கலான கருத்துக்கள் தெரிவிக்கும் இறையியலாளர்.



களோடு நேரடிப் பரிச்சயம் அற்றவராகவே இருந்தார்.

ஒரு முறை உப்பிலிபாளையத்தில் காவல்துறையினர் எனது தந்தை யாரிடம் அவரது நக்சலிச அரசியல் சார்புக்காக விசாரணைக்கு வருகிறார்கள் என்பதனையிட்டு அவசர அவசரமாகத்தீக்கனல் பத்திரிக் கையைக் கத்தையாக அள்ளி நான் பரணில் கொண்டு மறைத்தது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது.

எனது தந்தையாரான ஜி.கே என தோழர்களால் அழைக்கப்பெற்ற, 2008ஆம் ஆண்டு தனது எண்பத்தி இரண்டாம் வயதில் மரணமுற்ற, ஜி.கஸ்தூரிசாமியின் அரசியல் உடன்பயணி என என்னை நான் சொல்லிக் கொள்ள முடியும். தோழர் எல்.ஜி.கீதானந்தனோடு இணைந்து கண்ணாக்குட்டி, அப்பு போன்றவர்கள் அனைவரும் தமிழக மில் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்த நாட்களும் இது தான்(1). அன்று இலக்கியமும் அரசியலும் எனக்கு மனோரதிய மானதாகவே இருந்தது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, நக்சலிச அரசியல், மீளவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதாகவே, தந்தை யின் அரசியல் பயணத்தை அடியொற்றியதாகவே எனது வாலிப நாட்களின் அரசியல் பயணமும் இருந்தது.

■

ஞானி பெரும்பாலானோர்க்கு இலக்கிய விமர்சகர். இன்னும் சிலருக்கு விரிந்து கற்ற தமிழறிஞர். பிறருக்குக் கடவுள் குறித்து சிக்கலான கருத்துக்கள் தெரிவிக்கும் இறையியலாளர். எனக்கு இவையெல்லாம் ஒரு போதும் முதன்மையானவைகளாக இருந்ததில்லை. ஞானிக்கும் அப்படித்தான் இருந்திருக்கும் என நினைக்கிறேன். அவர் அடிப்படை யில் மனித விடுதலையை அவாவிய ஒரு மனிதர். அதற்கென மார்க் சிய நெறியைக் கண்டடைந்தவர் அவர்.

எனது எழுத்து வாழ்வின் இளமை நாட்களில் நான் பெற்ற இரண்டு கடிதங்கள் எனது ஞாபகத்தில் எப்போதும் இருந்துவருகின்றன. முதல் கடிதம் அன்று வானம்பாடிகளில் ஒருவராகயிருந்து பிரபஞ்ச கவி எனும் பெயரில் கவிதைகள் எழுதிய பிரபஞ்சன் எழுதியது.

பிரபஞ்சன் அன்று பாண்டிச்சேரியில் இருந்து நடத்தி வந்த வண்ணங்கள் சிற்றிதழில் எனது அசுரவித்துக்கள் எனும் குறுங்கவிதை பிரசுரமாவது குறித்து எழுதிய அறிவித்தல் கடிதம்.

ஞானியின் முதல் கடிதமும் ஞானியை முதன்முதலில் நேரடியாகக் கண்ட தருணமும் இன்னும் ஞாபகம் இருக்கிறது. வடகோவையில் தேசியத் தனிப்பயிற்சிக் கல்லூரியில் மாதம் தோறும் இரண்டாவது ஞாயிறன்று நிகழும் இலக்கியக் கூட்டமொன்றுக்கு நானும் நண்பர்கள் வி.உதயகுமாரும், ஆர்.பாலகிருஷ்ணனும் சென்றிருந்தோம். கூச்ச சுபாவமும் தனிமை விரும்புதலும் ஒதுங்கியிருத்தலும் அப்போதைய எனது இயல்புகள். எவரிடமும் நேரில் சென்று அறிமுகப்படுத்திக் கொள்ள மறுக்கிற,எவ்வளவுதான் முக்கியமான ஆளுமைகளாயிருந்தாலும் அவர்களின் பாலான வழிபாட்டு உணர்வை மறுக்கிற எனது அன்றைய இயல்பு இன்றுவரை தொடர்கிறது.

அன்று வருகை தந்தவர்களின் பதிவேட்டில் எனது பெயரை மட்டும் பதிந்துவிட்டு வந்தேன். பிற்பாடு பதின்மவயதுகளை அப்போது தான் கடந்திருந்த எனக்கு ஞானியிடம் இருந்து முன்பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்ட சுருக்கமான தபால் கார்டு வந்தது. அறிவித்துக் கொள்ளாமல் வந்து சென்றிருக்கிறீர்கள். தொடர்ந்து கூட்டத்திற்கு வரவேண்டும் என ஞானி எழுதியிருந்தார். தாமரை, செம்மலர், மனிதன், விடியல், புதிய நம்பிக்கை போன்ற மார்க்சிய இலக்கிய இதழ்களில் யமுனா புத்திரன் எனும் பெயரில் எனது கவிதைகள் பிரசுரமாகியிருந்த காலம் அது.

இன்றைய திமுக அரசியலாளரும் உளியின் ஓசை திரைப்பட இயக்குனருமான கவிஞர் இளவேனிலின் பின்னாளில் இவரது கவித்துவத்துடன் அழகான வடிவமைப்பில் ஒரு கையடக்கச் சிருங்காரப் பத்திரிக்கையும்வந்தது அற்புதமான ஓவியங்களுடனும் வடிவமைப்புடனும் கார்க்கி, சிகரம், பிரகடனம், மனிதன் பிற்பாடு சோலை போன்ற மார்க்சிய சஞ்சிகைகளும், புவியரசு மற்றும் தற்கொலை செய்துகொண்டு மரணமுற்ற கங்கை கொண்டான் போன்றோரது அழகான வடிவமைப்பில் வானம்பாடி விலையிலாக் கவிமடல் என மனோரதியமும் புரட்சிகர அரசியலும் கலந்து இளைஞர்களை முறுக்கேற்றிக் கொண்டிருந்த நாட்கள் அது. நக்சலிச அரசியலுக்கும் மரபான கம்யூனிஸத்துக்கும் இளைஞர்கள் ஊசலாடிக் கொண்டிருந்த காலமும் அதுதான்.

பிறிதொருபுறத்தில் மார்க்சியர்கள் பற்றிய விமர்சனங்களுடன் தீவிரமான இலக்கியப் பிரக்ஞையுடன் கசடதபற பத்திரிக்கை வெளியானது. சிறுகதையாசிரியர் இராஜேந்திர சோழனின் ஆசிரியத்துவத்தில் பிரச்னை போன்ற இதழ்களும் முன்பின்னாக வந்தன. பின்னாளில் பிரக்ஞை வெளிவந்தது. வெங்கட்சாமிநாதன், தர்மு அரூப் ஜீவராமு என்கிற பிரமிள் போன்றோர் வானம்பாடிகளை ஒருபுறம் கடுமையாகவிமர்சித்துக்கொண்டிருக்க,வானம்பாடிகளினுள் நக்சலிச அரசியல் போக்கும், மரபான கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஆதரவான போக்கும் என்பதற்கு இடையில் முறுகல் நிலை துவங்கியிருந்தது. இந்திரா காந்தி கொணர்ந்த அவசர நிலைக்கு ஆதரவாக சிற்பி, புவியரசு, மேத்தா போன்றோரும், அதற்கு எதிராக ஞானி, அக்கினி புத்திரன் போன்றோரும் அணிபிரிந்த காலம் இது. தத்துவக் கூடுகளுக்கு எம்மைத் தாங்குகிற வலிமை இல்லை என்பதாக முத்திரைகளும் முகத்திரைகளும் என்கிற சிற்பியின் வானம்பாடி இதழ் தலையங்கத்துடன் வானம்பாடி இயக்கம் தனது பிளவை உறுதி செய்தது.

கோவை தேசியத் தனிப்பயிற்சிக் கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தில் சிற்பி,புவியரசு,ஞானி,சக்திக்கனல் சிதம்பரநாதன் ஆகியோர் பிரசன்னமாயிருக்க, இலக்கியப் படைப்பில் மார்க்சிய அரசியலும் கடப்பாடும் குறித்த அழுத்தத்துடன் நான் ஒரு கட்டுரை படித்தேன். ஞானி எனது கட்டுரையை ஆதரித்துப் பேசினார். அதனோடு அக்கட்டுரையைப் பிரசுரிக்க வேண்டும் எனவும் கேட்டிருந்தார். அன்று கைதவறி எங்கோ வைத்த கட்டுரையை மறுபடி இருபது ஆண்டுகளின் பின் 2001 ஆம் ஆண்டு நான் இங்கிலாந்திலிருந்து கோவை சென்ற தருணத்தில்தான் கண்டெடுக்க முடிந்தது.

ஞானியுடன் இணங்கிய தருணங்கள் போலவே முரண்பட்ட வேளைகளும் வன்மமுடன் வன்முறையில் இறங்கிய தருணமும் உண்டு. கருத்தியல் அளவில் ஒரு தனிநபராக நக்சலிச அரசியலுடன் ஒட்டுதலும் விலகுதலும் கொண்டவனாக மட்டுமல்ல, தந்தையின் அடியொற்றிச் சென்றவனாக அவருடன் அவரது மரபான கம்யூனிஸ்ட் கட்சி அரசியலுடன் முரண்பட்டு மாதக் கணக்கில் அவருடன் பேசாது ஒரே வீட்டில் வாழ்ந்த பிளவுண்ட மனிதனாக நான் இருந்த நாட்கள் அவை. கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்த பல இளைஞர்கள் நக்ஸலைட்டுகளின் தியாகத்திற்கும் அர்ப்பணி உணர்வுக்கும் ஆட்பட்டவர்களாக இருந்தார்கள். பல தலைமறைவு நக்ஸலைட் தோழர்களுக்கு எனது தந்தையின் கருத்தை மீறி பொருளாதார ரீதியிலும் அவர்களது தங்குதலுக்கும் உதவிக் கொண்டிருந்த நான், பிறிதொரு புறத்தில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் சதா விமர்சித்துக் கொண்டிருந்த, நேரடியான அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடாத ஞானி, நாகராஜன், ராஜ்கௌதமன் போன்றோர் பங்குபற்றிய கோவை இலக்கு மாநாட்டின் மீது பெரும்கோபம் கொண்டு அங்கு நான் சார்ந்திருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இளைஞர் அமைப்பினருடன் சென்று கலவரத்தில் ஈடுபட்டேன்.

ஞானி அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த அவரது முன்னாள் அரசியல் சகா தோழர். கீதானந்தனுடன் தனது வருத்தத்தையும் பகிர்ந்துகொண்டார். கோட்பாட்டு நடைமுறையை அழுத்தமாகப் பேசிவந்த ஞானியினது பங்களிப்பை இன்றும் நான் எனது புத்தக அடுக்கில் தொகுத்து வைத்திருக்கிற பரிமாணம் இதழ்களும் அதனுள் சொருகப்பட்டிருக்கும் ஞானியின் நான்கு பக்க வேண்டுகோளும் அதனது சாட்சியங்களாக என்முன் இருக்கிறது எதிர்த்து நடவடிக்கையாளன் எனும் நோக்கிலிருந்து நான் செய்த அன்றைய எனது கலக நடத்தைக்காக, இருபது ஆண்டுகளின் பின்பு 2001 ஆம் ஆண்டு ஞானியை அவரது இல்லத்தில் சந்தித்தபோது என்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

■

எழுபதுகளின் இறுதி என்பது நக்சலிச அரசியல் இந்தியாவெங்கிலும் கடுமையான அடக்குமுறையையும் பின்னடைவையும் அழித்தொழிப்பையும் சந்தித்த காலம். மனோரதிய அரசியலும் அதையொட்டிய இலக்கியமும் கரைந்தழிந்த காலம். சிற்றிதழ்களில் கோலோச்சிய இலக்கிய அடிப்படைவாதம் என்பது கோட்பாட்டுச் சர்ச்சைகளில் அதிகமும் ஈடுபாடு கொள்ளத் துவங்கியது. ஞானியின் பரிமாணம், தமிழவனின் படிகள், ராஜ்கௌதமனின் இலக்கிய வெளிவட்டம், சென்னை நண்பர்களின் பிரக்ஞை போன்ற சிற்றிதழ்கள் கலை இலக்கியம் தாண்டி அரசியலிலும் சமூகவியலிலும் கோட்பாட்டிலும் இப்போது அதி அக்கறை காட்டின. இந்த வரலாற்றுப் போக்கில் வேள்வி, பரிமாணம், பிற்பாடு நிகழ், பிற்பாடாகத் தமிழ்நேயம் என இவ்வாறு ஞானியினது வேறுபட்ட அக்கறைகள் இப்போது அவரை விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக, தமிழ் தேசியத்தில் அதி பற்றுள்ளவராகக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

வானம்பாடிகளின் காலமும் வானம்பாடிகளும் குறித்த எதிர்மறையிலான புறக்கணிப்பு விமர்சனங்களே வந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் அது குறித்த ஞானியினது மௌனம் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. சுந்தர ராமசாமியின் காலச்சுவடு, காலஞ்சென்ற ராஜமார்த்தாண்டன் அடியொற்றி சுகுமாரன், குட்டி ரேவதி வரை தட்டையாக வானம்பாடி இயக்கம் குறித்த விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள். வானம்பாடிகள் கோஷங்களை மட்டுமே எழுதினார்கள் என்பது மாதிரியான சித்திரத்தை இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

புவியரசுவின் இதுதான் தொகுதிக் கவிதைகள், ஏலி ஏலி லாமா சபக்தானி போன்ற அவரது அகம்சார் அரசியல் கவிதைகள், கங்கை கொண்டானின் கூட்டுப் புழுக்கள் தொகுதி, வானம்பாடி பிளவுபட்டபின் வைகறை பதிப்பகம் சார்பாக ஞானி கொணர்ந்த வெளிச்சங்கள் தொகுதியிலான பல கவிதைகள், அவசரநிலைக் கால கட்டத்தில் வந்த போஸ்டர் கவிதைகள் தொகுப்பு, இன்குலாப்பின் பிரமிடுகளிலிருந்து அடிமைகள் விடுதலைப் பிரகடனம் செய்கிறார்கள் உள்ளிட்ட கவிதைகள் என்பனவற்றைத் துப்புரவாக எவரே புறக்கணிக்க முடியும்? கோஷங்களையும் இவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதற்காக வானம்பாடிகள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட வேண்டுமானால் தர்முஜீவராமுவின் முழுத் தொகுப்பின் பாதிக் கவிதைகள், பிறர் மீதான விமர்சனக் கவிதைகள் மற்றும்

## கம்யூனிஸ்ட் கட்சிகளில் இருந்த பல இளைஞர்கள் நக்ஸலைட்டுகளின் தியாகத்திற்கும் அர்ப்பணி உணர்வுக்கும் ஆட்பட்டவர்களாக இருந்தார்கள்.

எதிர்கோஷங்கள் எனும் வகையில் எழுதப்பட்டவை அனைத்தும், இலக்கிய வரலாற்றின் குப்பைக் கூடைக்குத்தான் போகும். விமர்சன மற்று கடவுள் நிலைக்கு இன்று உயர்த்தப்பட்டிருக்கும் தர்மூவின் அந்த எழுத்துக்களில் அவ்வளவு அபத்தங்கள் குவிந்து கிடக்கின்றன.

வானம்பாடிகளின் மீதான பிறிதொரு முனையிலான வன்மமான தாக்குதல் ஜெயமோகனிடம் இருந்து வருகிறது. கேரளத்தின் காத்திர மான கவிகளான சச்சிதானந்தன், கடம்மனிட்ட ராமகிருஷ்ணன் போன்றோரின் அரசியல் கவிதைகள் வானம்பாடி இதழ்களில்தான் வந்தன. ஈழக் கவிதைகளுக்கென அவர்கள் ஒரு சிறப்பிதழும் வெளி யிட்டார்கள். பிற்பாடு சச்சிதானந்தனின் கவிதைகளைச் சிற்பி தனது மொழிபெயர்ப்பில் வெளியிட்டார். பிரமிளின் ஐன்ஸ்டீனின் சூத்திரம் குறித்த கவிதையைச் சிற்பி சிறந்த கவிதையாகக் கொண்டாடினார். புவியரசு தொழில்முறை வருமானத்துக்கு வேறுபட்ட மொழி பெயர்ப்புக்களைச் செய்தாலும், நஸ்ருல் இஸ்லாம் மற்றும் தாஸ் தயாவ்ஸ்க்கியின் கரமசோவ் சகோதரர்களையும் அவர்தான் மொழி பெயர்க்கிறார். புதுக்கவிதை மரபில் காங்கிரஸ் கட்சியின் அரசியலோடு அகம்சார் நமைச்சல்களை மட்டுமே எழுதிக்கொண்டிருந்த புதுக் கவிதைச் சூழலில், இடதுசாரிச் சார்புடன் கவிதையைச் சமூகவயப் படுத்தியதில் அரசியல்மயப்படுத்தியதில் வானம்பாடிகளின் பங்கை எவரும் மறுக்க முடியாது.

சாகித்ய அகாதமி போன்ற நிறுவனங்களில் முன்னாள் வானம்பாடிகள் கொண்டிருக்கும் அதிகாரம், பரிசுகளை அவர்களுக்கே அளித்துக் கொள்வது போன்ற மோசமான இன்றைய நடைமுறைகளை மட்டு மே முன்னிறுத்தி, வரலாற்று ரீதியில் வானம்பாடிகளின் மீதான சமநிலையற்ற விமர்சனங்கள் மலிந்திருக்கும் சூழலில் அக்கால கட்டம் பற்றிய சமநிலை கொண்ட பார்வையை ஞானி நிச்சயமாக முன்வைக்க முடியும். இது தனிநபர்கள் சார்ந்த பிரச்சினை இல்லை. ஒரு வரலாற்று இயக்கத்தின் எழுச்சியும் தேய்வும் வீழ்ச்சியும் பற்றியதாகும். சிற்பி, புவியரசு, ஞானி போன்ற வானம்பாடியின் தூண்கள் இது குறித்த மௌனத்தைக் கலைக்க வேண்டும். அவர்கள் வெளிப்படையாகப் பேசவேண்டும்.

■

ஞானியின் மிக முக்கியமான நூல்கள் என்று நான் கருதுவது அவரு டைய எழுபதுகளின் நூல்களான இந்திய வாழ்க்கையும் மார்க்சிய மும் எனும் அழுத்தமான நிறங்களிலான அழகான அட்டைப் படத்துடன் வந்த தத்துவ நூலையும், பிற்பாடு கலை இலக்கியம் ஒரு தத்துவப் பார்வை என வெளியான கலையும் கருத்தியலும் குறித்த அவரது குறுநூலையும், ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி பற்றிய அவரது வாசிப்பில் விளைந்த இறை அனுபவம் குறித்த மணல் மேட்டில் ஒரு அழகிய வீடு எனும் குறு நூலையும்தான். கடந்த நாற்பது ஆண்டுகளாக இலக்கியம், தேசியம், பெரியாரியம், இறையியல், மார்க்சியம், தேசியம் என்பன குறித்த ஞானியினது பிற்பாடான விரிவான நூல்களுக்கான அடிப்படைகளை நாம் அவரது குறிப்பிட்ட இந்த ஆரம்ப நூல்களில் காணமுடியும்.

அறுபதுகள் தொடக்கம் இன்றுவரையிலும் ஞானி எழுதிவந்திருக்கிற எழுத்துக்களைத் தொகுதிகளாக காவ்யா பதிப்பகம் கொண்டு வந்து கொண்டிருக்கிறது (எடுத்துக்காட்டு : மார்க்சியமும் பெரியாரியமும் : ஞானியின் மெய்யியல் கட்டுரைகள் தொகுதி இரண்டு: 2006). தனது வாழ்வின் இன்றியமையாத சூழலில் மார்க்சியத்தைத் தேர்ந்து கொண்ட ஞானி, தனது சொந்த வாழ்வுக்கான அர்த்தம் தேடிய தனது எழுத்து வாழ்வில், அவர் வந்து அடைந்திருக்கும் தத்துவார்த்த நிலைபாடுகளை இந்தத் தொகுதிகள் நமக்குச் சொல்கின்றன. தன்னு டைய பார்வையை உருவாக்கிக் கொள்ளும் நோக்கில் அல்லது நிலை பாடு எடுக்கும் நோக்கில் தனது வாசிப்பிலிருந்து தான் செரித்துக் கொண்டதை, முரண்பட்ட பார்வைகளினுள்ளும் தான் தேர்ந்து கொண்டதை, தான் மதிக்கிற நோக்குகளிலிருந்தும் தான் கடந்து சென்றதை ஞானி தனது எழுத்துக்களில் தொடர்ந்து பதிவு செய்து வந்திருக்கிறார்.

புதிய தலைமுறை இதழிலிருந்து பரிமாணம் நிகழ் போன்ற இதழ்கள் வரை, எண்பதுகளின் இறுதிவரையிலும் நான் இந்தியாவில் இருந்த வேளையில் இவ்விதழ்களைத் தொடர்ந்து வாசித்து வந்திருக்கிறேன். தொண்ணூறுகள் தொடக்கம் வந்த பிற்பாடான அவரது தொகுப்பு நூல்களையும் தமிழ் நேயம் இதழ்களையும் 2001 ஆம் ஆண்டிலிருந்து நான் இந்தியா செல்லுகிற ஒவ்வொரு முறையும் ஞானி எனக்குக் கொடுத்து வந்திருக்கிறார்.

மீள் பார்வையில், அவர் எழுதிய, அதனோடு அவர் தொகுத்த கட்டுரை களின் பேசுபொருளை, அவரது பாஷையில் தொகுத்துக்கொள்ள முயன்றால் அது பின்வருமாறு அமையும் : சோவியத் சீன மார்க்சிய அனுபவங்கள், ஸ்டாலினியம், விமர்சன மார்க்சியமாக எழுந்த கிராம்ஸி, அல்தூசர், ஹெர்பர்ட் மார்க்யூஸ் போன்றோரது சிந்தனை கள், மாவோயிசம், குறிப்பாக சோசலிசக் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டம், கலாச்சாரப் புரட்சி, புரட்சியின் இலக்கை நோக்கிய வழிமுறையில் அறவியலின் பாத்திரம், அந்நியமாதல் கருத்தாக்கத்தின் அடிப்படையில் சமயம், கலை இலக்கியம் போன்றவை குறித்த புரிதல், சர்வதேசியமும் தேசியக் கலாச்சாரமும், மண்ணுக்கேற்ற அல்லது குறிப்பிட்ட பண்பாட்டு வேர்களினுள்ளிருந்து பெறப்படும் பொதுவுடமைச் சாரம் என்பதாக அவரது உலக நோக்கு விரி கிறது.

அவரது மார்க்சியம் அந்நியமாதல் கோட்பாட்டில் அக்கறை செலுத்திய இளைய மார்க்ஸ், பிற்பாடாக விஞ்ஞானமாக கம்யூனிசத்தை முன் வைத்த முதிய மார்க்ஸ் எனப் பிளவுபடாத மார்க்சியம். மனிதாபிமான மார்க்சியம். ஆதிப் பொதுவுடமைச் சமூகத்தில் துவங்கி, இடையில் அரசு தனியுடைமை போன்றவற்றினால் மானுடசாராம்சத்தை இழந்த மனிதன், இயற்கை சமூகம் என இரண்டிலிருந்தும் அந்நிய மான மனிதன், கலை இலக்கியம் சமயம் போன்றவற்றில் தொடர்ந்து அவனது இழந்த கூறுகளைப் பதிந்து கொண்டு, அவனது உழைப்புச் சிருஷ்டியின் வழி தனது சாராம்சத்தை மீளப் பெறுவதன் மூலம் விமோசனத்தை அடையும் மனிதாபிமான மார்க்சியம்.

மாறுபட்ட கருத்துக்கள், கருத்தியல்கள், இலக்கிய சிருஷ்டிகள் போன்ற வற்றுக்கும் பின்னுள்ள பொருள்வகையிலான அடிப்படைகளைப் புரிந்து கொள்வது அவரது பார்வை. மதம் குறித்த அவரது பார்வை பகுத்தறிவுவாதிகளுடன் குறிப்பாகப் பெரியாரியப் பார்வையுடன் உடன்படாத பார்வை. கடவுள் என்பதனை ஒரு கருத்தாக்கம் எனப் புரிந்து கொள்ளும் ஞானி கடவுளை நிலைநாட்டுகிறவர்களில் புரோகி தர்களும் தீர்க்கதரிசிகளும் என இரு பிரிவுகள் இருக்கின்றனர் என் பதை ஏற்கிறார். புரோகிதர்கள் சுரண்டலோடு ஒடுக்குமுறையோடு தொடர்புபட்டவர்கள். தீர்க்கதரிசிகள் அன்புமயமானவர்கள். ஆன் மாவற்ற உலகின் ஆன்மாவாக, இதயமற்ற உலகின் இதயமாக, ஒடுக்கு முறைக்கு எதிராகக் கடவுளை முன்நிறுத்துகிறவர்கள் இவர்கள். கடவுள் அல்லது சமயம் ஒரே சமயத்தில் போதையாகவும் வலிநிவாரணி யாகவும் இருக்கிறது. சுரண்டல் காரணங்களுக்காக, ஒடுக்குமுறைக்கான காரணங்களுக்காக, ஆதிக்கவாதிகள் கடவுளை / சமயத்தை முன்

நிறுத்துகிறார்கள். கடவுள் குறித்த ஒரு பகுதி உண்மைதான் இது. பிறிதொரு பகுதி உண்மைக்குள், பிரச்சினைக்குள் பகுத்தறிவுவாதிகள் செல்வதில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள், சுரண்டப்படும் மக்கள், துயருற்ற மக்கள் ஏன் கடவுளை ஏற்கிறார்கள்? அவர்களை முட்டாள்கள் என்று சொல்வது பிரச்சினையை எளிமைப்படுத்துவதாகும் என்கிறார் ஞானி. இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் அந்நியமான நிலையே சமயம் கலை இலக்கியம் போன்றவற்றின் இருத்தலுக்குக் காரணம் என்பது போலவே, ஆதிப் பொதுமைச் சமூகத்தின் தன்மைகளோடு மனிதனது ஆறுதலாகவும் ஆன்மாவாகவும் இவைகள் இருக்கின்றன என்கிறார் ஞானி.

ஞானியினதும், ஞானியினது மார்க்சியத்துக்குப் பெரும் பங்களிப்பு வழங்கியிருப்பவரான எஸ்.என்.நாகராசனதும் எழுத்துக்களை (2) வாசிக்கிறபோது அவைகள் வெறுமனே கோட்பாடு எனும் மட்டத்திலேயே சஞ்சரிப்பதை ஒருவர் உணரமுடியும். அதுபோலவே தத்துவத் தோய்விலேயே நடைமுறைப் பிரச்சினைகளை இவர்கள் கடந்து போய்விடுவதையும் ஒருவர் அனுபவம் கொள்ள முடியும். ஞானி முரணியக்கத்தில பகை முரணுக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கக் கூடாது, சாதக முரணுக்கும் இடம்தர வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார். மாவோவும் மாவோயிசமும் எஸ்.என்.நாகராசன் மீதும் ஞானியின் மீதும் மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதனை ஞானி பதிகிறார். முரண்பாடுகள் குறித்து மாவோ, தலைமைப் பீடத்தைத் தகர்த்தெறிவது குறித்து மாவோ, மக்களிடம் அன்பு செய்வது குறித்து மாவோ, கம்யூனிச சமூகம் என்பது இறுதியல்ல எனப் பேசிச் செல்லும் ஞானியினது எழுத்துக்களில், மாவோ காலத்தில் மாவோ சிலியின் கொடுங்கோலன் பினோசேயை அவர் ஆதரித்தது குறித்தும், கம்போடியப் படுகொலையாளன் போல்பாட்டை மாவோ ஆதரித்தது குறித்தும், மாவோவின் கலாச்சாரப் புரட்சி காலத்தில் கலைஞர்கள் வேட்டையாடப்பட்டது குறித்ததுமான நடைமுறை விவாதங்கள் இடம்பெறுவதில்லை.

மாவோவின் மாபெரும் பாய்ச்சல் காலத்தில் கொல்லப்பட்ட சீன வெகுமக்கள் பற்றி அமர்த்யா சென் போன்றவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். ஸ்டாலினியம் குறித்தும், சமூக ஏகாதிபத்தியமாக சோவியத் யூனியனது நடைமுறை குறித்தும் ஞானி பதிவு செய்த அளவில், மாவோவினதும் மாவோயிசத்தினதும் அவப்பக்கங்கள் பற்றி ஞானியினது எழுத்துக்களில் பதிவு செய்யப்படவில்லை. சோவியத் யூனியனது இன்றைய பின்னடைவுக்கான அல்லது பேரழிவுக்கான காரணத்தை ஸ்டாலினியத்தில் நாம் காணமுடிவது போலவே, சீனா இன்று வந்து அடைந்திருக்கும் பெருந்தேசிய நிலைபாட்டுக்கும், மனித உரிமைமீறல் நிலைபாட்டுக்கும் கால சென்ற பிரட் ஹாலிடே இது குறித்து பதிவுசெய்கிறார் மாவோவிலிருந்தே நாம் துவங்க வேண்டியிருக்கும். இத்தகைய விமர்சனத்தின் சுவடுகளை நாகராசனிடமோ அல்லது ஞானியிடமோ நாம் காணமுடிவதில்லை.

நகரப்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும், உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்குமான இடைவெளியை நிரவுவதில் மாவோவின் பங்களிப்பும், அவரது புதிய ஜனநாயக் தந்திரோபாயம் எனும் பங்களிப்பும் என ஒரு சில மட்டுமே இன்று அவரிடமிருந்து நாம் தேர்ந்துகொள்ள இருக்கிறது.

மார்க்சியத்தில் ஆதிப் பொதுவுடமைச் சமூகத்தைச் சுட்டிச் சொல்லப்படுகிற மனிதனது சாராம்சம், மார்க்ஸ் பேசிய அரசு உதிரும் எனும் கருத்தாக்கம் போன்றன நடைமுறையில் அர்த்தமற்றதாகிவிட்டதை நாம் பார்க்கிறோம். நிலையான மனித சாராம்சம் என்பதனைப் பெண்ணிலை வாதம், நிறம், பால்வேற்றுமை, பாலிலி நிலைமை, வேறுபட்ட அடையாளங்கள், வித்தியாசங்கள் போன்றன கேள்விக்குட்படுத்தி விட்டன. சோசலிசச் சமூகத்திலும் சரி அதன் பின்னும் சரி அரசு என்பது தற்காலிகமானதாக இருக்கவில்லை. மாறாக அது மிகவும் இறுகிப் போய்விட்டது.லெனினது கட்சி மூன்றாவது வர்க்கமாக ஆகிப் போனது. இச்சூழலில் மனித சாராம்சம் என்பதனையும் அரசு உதிரும் என்பதனையும் வைத்து அம்பேத்கார் அரசு உதிரும் என்பதைக் குறித்த விமர்சனத்தை முன்வைத்திருக்கிறார் இன்று ஒரு கற்பனா ராஜ்யத்தைக் கட்டுவது பொருத்தமாக இருக்கும் எனத் தோன்றவில்லை.

பாட்டாளி வர்க்கம் இன்று திரளாகவோ முன்னணிப் படையாகவோ பாத்திரம் வகிக்க முடியாத சூழலில் பாட்டாளி வர்க்க மையவாதமும் அதனது சர்வாதிகாரமும் அர்த்தமிழந்துவிட்டன என்றே தோன்றுகிறது. ஞானி தொடர்ந்து மார்க்சியப் பொருள்முதல்வாதப் பகுப்பாய்வின் பொருத்தத்தைச் சுட்டிக்காட்டுகிறார். கருத்துமுதல்வாதம் எனும் போக்கின் பின்னுள்ளவற்றைக் கூட பொருண்மையான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமேயொழிய அதனை எதிர்மறையாகப் பார்க்க வேண்டியதில்லை என்கிறார்.கலை இலக்கியம் போன்றவற்றின் சுயாதீனத்தன்மையை நாம் நிச்சயமாக இவ்வகையில் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். சோசலிச அமைப்பையும் அதனது நடைமுறைகளையும் கடுமையாக நிராகரிக்கிற கம்யூனிச விரோதிகள் கூட, ஒவ்வொரு முறையும் உலகில் பொருளாதார நெருக்கடி முற்றுகிற போது மார்க்சின் பொருள் முதல் வகையிலான பகுப்பாய்வை ஏற்கிறார்கள். அதனோடு மனிதனது அந்நியமாதல் குறித்தும் மார்க்சினது கருத்துக்களைப் பகுதியாக ஏற்கிறார்கள்.

■

மார்க்சினது அந்நியமாதல் கருத்தாக்கம், அதனையடியொற்றி சமயம், கலை இலக்கியம் கருத்துமுதல்வாதம் போன்றவற்றை ஞானி அணுகுகிறார். கலை இலக்கியத்தில் ஆதிப்பொதுவுடமைக்கான ஏக்கமும், மனித சாராம்சத்துக்கான வேட்கையும் பொதிந்திருப்பதாக ஞானி கருதுகிறார் என இதனைக் கொள்ள முடியும்.ஞானியின் கலை இலக்கியம் தொடர்பான விமர்சனப் பார்வை இவ்வாறுதான் தோற்றம் கொள்கிறது. ஜெயகாந்தனது ஒரு வீடு ஒரு மனிதன் ஒரு உலகத்தில் அவர் ஆழ்ந்து போகிறார். ஜெயமோகனின் விஷ்ணுபுரத்திலும் அவர் ஆழ்ந்து விடுகிறார். பிரமிளின் கவிதைகளுக்குள் அவர் தியான நிலைக்குச் சென்று விடுகிறார். அதே ஞானி தான் கடப்பாடும் புரட்சிகர நடைமுறையையும் முன்நிறுத்துகிற கவிஞர் இன்குலாப்பை கவிஞர்களின் கவிஞர் என அழைக்கிறார்.

ஜெயகாந்தனோ அல்லது ஜெயமோகனோ அல்லது பிரமிளோ இன்குலாப்பை ஏற்பார்கள் என்று சொல்ல முடியாது. கடப்பாடும் நடைமுறையும் இணைந்த இன்குலாப்பைஏற்கும்ஞானிஜெயமோகனையும், ஜெயகாந்தனையும், பிரமிளையும் எவ்வாறு விமர்சனமின்றி, சில வேளைகளில் கடுமையான மாறுபட்ட பார்வைகளை முன்வைக்காமல் ஏற்க முடியும்? இதற்கான விடை கலை இலக்கியம் குறித்த ஞானியினது பார்வையினுள் இருக்கிறது. டால்ஸ்டாய் பற்றிய, மாயக்கோவ்ஸ்க்கி பற்றிய லெனினது பார்வையினுள், பால்சாக் அல்லது ஹென்ரிச் ஹெனே பற்றிய மார்க்சினது பார்வையினுள் இதற்கான பதில் இருக்கிறது.

ஜெயகாந்தனின் ஹென்றி ஆதிப்பொதுவுடமைச் சமூகத்தின் தனிநபர் உடமை மனப்பான்மையை உதறிய மனிதன். அன்பு மயமான மனிதன். இத்தகை மனிதன் சமூகத்திற்கு அந்நியன்தான். விஷ்ணுபுரம் தீமைகளால் வீழும் ஒரு இலட்சிய சமூகம், எதிர்வரும் உன்னத கனவு சமூகம் எனும் எதிர்மையைப் புனைவுலகமாகப் படைத்திருக்கிறது. ஒரு வீடு ஒரு மனிதன் ஒரு உலகம் எழுதிய ஜெயகாந்தன் ஜெயேந்திரருக்கு ஆதரவாக எழுதிய ஹர ஹர சங்கராவில் எதனைப் படைக்கிறார்? ஆர்.எஸ்.எஸ். போன்ற ஒரு இந்துத்துவ பாசிச அமைப்பிலிருந்து வெளியேறிய ஜெயமோகன் அது பற்றின கடுமையான விமர்சனங்களைப் புனைவில் வைக்காமல், ஏன் மார்க்சியம் சுட்டிய இலட்சிய உலகின் வீழ்ச்சிக்குள் பின்தொடரும் நிழலின் குரல் வழி வெறுப்புடன் நுழைகிறார்? படைப்புக்கும் படைப்பாளனது அரசியலுக்கும் நேரடியிலான உறவுகளை நாம் பார்க்கத் தேவையில்லை. என்றாலும் ஒரு படைப்பாளியின் படைப்புத் தேர்வின் பின்னுள்ள' அரசியலை ஒரு மார்க்சியர் புறக்கணிக்க முடியாது.

ஒன்றின் தொடர்ச்சியான பிறிதொன்று எனத் தொடரும் முரணியக்க நடவடிக்கைகளில் உள்ளுறைந்த அரசியல் இருக்குமானால் அது புரோகிதர்கள் முன்வைக்கும் தீமையின் சார்பாக இருக்குமானால் அதனை எவ்வாறு தீர்க்கதரிசிகளை முன்னிறுத்தும் ஒருவர் பாராது போதல் சாத்தியம்? முரணியக்கத்தில் சாதக அம்சங்களை மட்டுமே எல்லா வேளையிலும் நாம் முன்னிறுத்தமுடியாது. பகை முரண்களையும் நாம் அவதானமாகப் பார்த்துச் சொல்ல வேண்டும். ஜெயகாந்தனது ஜெய ஜெய சங்கராவை ஏற்கிறவர் நிச்சயமாக ஹர ஹர சங்கராவை ஏற்க முடியாது. இன்னும் படைப்பு பற்றிய பார்வை என்பது தான் வாழும் வரலாற்றின் கருத்தியல்

## மதம் மனிதனுக்கு விரோதமாகப் போகாதவரை, அவனை இழிவு படுத்தாத வரை, ஒடுக்கும் நிறுவனத்துக்குத் தூணாக நிற்காதவரை மதம் குறித்துப் பிரச்சினையில்லை.



அரசியல் சரச்சைகளில் படைப்பாளி எங்கே நிற்கிறான் என்பதனைக் கவனத்தில் கொள்ளாமலும் மேற்கொள்ள இயலாது. படைப்பாளி எங்கே உரத்துப் பேசி எவரை வெறுப்பின் வழி பார்க்கிறான், எவருடன் அவன் மௌனமொழியில் உரையாட விரும்புகிறான் என்பது மார்க்சியம் நடைமுறையின் தத்துவமாக ஒரு நடைமுறைக் கேள்வி. ஞானியிடம் இந்தக் கேள்விகள் உரத்து ஒலிப்பதில்லை.

■

பெரியாரினது நோக்கில் மிகமுக்கியமான இரு கூறுகளில் முதலானது சாதிய ஒழிப்பு பிறிதொன்று பெண்விடுதலை. இந்த நோக்கிலிருந்தே அவரது மதம் மற்றும் இலக்கியம் குறித்த பார்வை வெளிப்படுகிறது. செவ்விலக்கியங்கள் குறித்த பெரியாரியப் பார்வையைப் பாரதி தாசனே கூட ஏற்கவில்லை. இலக்கியம் குறித்த தத்துவப் பார்வை எதனையும் பெரியார் கொண்டிருக்கவில்லை. சமயம் குறித்த பெரி யாரியப் பார்வை கவனம் கொள்ளாத, துயருற்ற வெகுமக்கள் ஏன் அதனை ஏற்கிறார்கள் என்பதற்கான விடையாக அவர்கள் முட்டாள் கள் என்பது பொருத்தமானது இல்லை. ஞானி சமயத்தின் இருத்தலுக் கான காரணத்தை அந்நியமாதலின் வழி காண்கிறார். அன்றாட வாழ்வில் மதத்திற்குள்ளும் வர்க்கப்போராட்டம் நடைபெறுகிறது என்பதனைக் கிராம்சியை வாசித்தவர் ஒப்புக்கொள்வர். இந்த வர்க்கப் போராட்டத்தை மதநிறுவனம் எனும் தளத்தினுள் தீர்க்கதரிசிகள் மேற்கொள்வர். இயேசு, அல்லா, புத்தன் என இப்படி இவர்களை இனம் காணமுடியும். இவர்கள் பற்றிய இணக்கமான பார்வையை மார்க்சியர்கள் கொண்டிருக்க முடியும். புரோகிதர்கள் பற்றிய இணக்க மான பார்வையை மார்க்சியர் கொண்டிருக்க முடியாது. மட்டு மன்று மதநிறுவனத்தினுள் அதனது செயல்போக்கினுள் மார்க்சியர் இடம்பெற்று வர்க்கப் போராட்டத்தை அதனுள் நடத்தவேண்டிய அவசியமுமில்லை. விடுதலை இறையியலாளர் கிறித்தவ நிறுவன அமைப்பினுள் இருந்தே தோன்றினர். சூபியிசம் இஸ்லாமுக்குள் இருந்துதான் கிளைவிட்டது. பக்தி இயக்கமும் இந்துமத அமைப்பி னுள் இருந்துதான் தோன்றியது.

மதம் மனிதனுக்கு விரோதமாகப் போகாதவரை, அவனை இழிவு படுத்தாதவரை, ஒடுக்கும்நிறுவனத்துக்குத் தூணாகநிற்காதவரை மதம் குறித்துப் பிரச்சினையில்லை. பிடல் காஸ்ட்ரோ இப்படித்தான் மதம் பற்றிப் பார்க்கிறார். லெனின் மனிதனது தனிநபர் வெளி சார்ந்தது மதம் என இதனால்தான் அவதானிக்கிறார். மார்க்சியர் இப்படித் தான் மதநிறுவனங்களில் இருந்து தூரத்தைக் கடைபிடிக்கின் றனர். மதத்தைப் பிற சமூக நிறுவனங்களிடமிருந்து பிரித்து நிறுத்தியது அறிவொளியுகத்தின் மிகப்பெரும் பங்களிப்பு. சில வேளைகளில் மதம் அரசினதும் நிறுவனங்களினதும், முழு சமூக அதிகாரத்தின

தும்பகுதியாகஆகுமானால், அதற்கான அமைப்புத் தன்மையைக் குறிப்பிட்ட மதம் கொண்டிருக்குமானால் அந்தமதத்தின் தலைமையைத் தகர்க்காத வரையிலும் அதற்கு அடிப்படையிலான கருத்தமைவைத் தகர்க்காத வரையிலும் அந்த மதத்தினுள் வர்க்கப் போராட்டமும் சாத்தியமில்லை. ஜனநாயகத்திற்கான போராட்டமும் சாத்தியமில்லை.

இந்து மதத்திலுள்ள சாதியம் எனும் கருத்தமைப்பும் அதில் பார்ப்பனர்களின் மேலாண்மையும் அத்தகையதாகும். அம்பேத்கார் சொன்னபடி நீட்சே அதிமனிதன் என்பவனைத் தனிமனிதனாகவே காண்கிறார். இந்துமதம் பார்ப்பனர்கள் என்கிற ஒரு கூட்டத்தையே அதிமனிதர்களாகக் கட்டமைத்து வைத்திருக்கிறது. இந்துமதத்தில் ஆயுதத்தில் நம்பிக்கை வைத்தவர்கள் விடுதலை இறையியலாளர்களாக இல்லாது ஆர்.எஸ்.எஸ்.அமைப்பாகத் திரண்டதும் அதற்குப் பார்ப்பனர்கள் தலைமையேற்றதும் மிகுந்த ஆய்வுக்குரிய ஒருவிஷயமாகும். இச்சூழலில் பார்ப்பனர்கள் என்கிற அதிமனிதக் கூட்டம், அதனைத் தாங்கி நிற்கும் அமைப்பு முறை என்பது இருக்கும் வரை இந்து மதத்தினுள் வர்க்கப்போராட்டம் அல்லது ஜனநாயகத்திற்கான போராட்டம் என்பது அந்த அமைப்பினுள் தோன்றுவது சாத்தியமேயில்லை.

மதம் தனிநபர் தொடர்பானது. அதனை சமூகநிறுவனங்களுக்குக் கொணர்கிறபோது அதற்கென அதன் மனிதவிரோதத்திற்கு எதிரான எதிர்ப்பு அதனுள் இருந்தே திரளும். அந்த எதிர்ப்புக்கான பொறியை மார்க்சியர்கள் மதத்திற்கு வெளியில் தமது அரசியல் அறவியல் செயல்பாட்டில் இருந்துதான் உருவாக்குகிறார்கள். மதத்தை எதிர் மறையாகப் பார்ப்பதோ அதனை மூடத்தனம் என்பதோ அதனை நம்புகிறவர்களை முட்டாள்கள் என்பதோ சமயம் குறித்த தத்துவப் பார்வையாக ஆகமுடியாது. மனிதனது பொருள் வகையிலான அனு பவத்துக்கு அப்பாற்பட்டதெல்லாம் எவ்வாறு கடவுளாக ஆகாதோ அது போலவே அது மூடத்தனமும் ஆகாது. பெரியாரை இவ்வகையில் கடந்து செல்வது என்பதில் ஞானியோடு உடன்பட முடியும்.

குறிப்பான மதம் குறித்த பார்வை என வரும்போது, நடைமுறையில் இஸ்லாம்,பௌத்தம்,கிறித்தவம் போன்றவற்றில் காண்கிற அறிவொளி சார் அம்சங்களை இந்துமதத்தில் குறிப்பாக இந்தியச் சூழலில் பிறப்பை முன்வைத்தசாதியம் காணமுடியாது. பெண்களின் விடுதலை என்பதில் அதற்கெதிரான மிகப்பெரும் விரோதியாக இருப்பது இஸ்லாமிய மதம்தான். ஞானி இந்திய வாழ்க்கையும் இந்தியச் சிந்தனையும் குறித்தே அதிகமும் முக்கியத்துவம் தந்து பேசுகிறார். ஒப்பீட்டளவில் பிற மதங்களுடன் இந்திய மரபை வைத்துப் பேசுவதான ஒப்பீட்டு நடைமுறை குறித்து அவரது எழுத்துக்களில் நாம் கொஞ்சமே காண முடியும். இதற்கான காரணத்தின் தடங்களை நாம் அவரது இந்திய வாழ்க்கையும் மார்க்சியம் நூலிலும் இந்தியச்சிந்தனை மரபு தொடர்பாக அவர் ஜெயமோகனுடன் பெருமளவில் தன்னால் உடன்பட முடிகிறது எனும் கூற்றிலும் காண முடியும். இன்று மதம் மற்றும் சாதியம் குறித்த இடதுசாரி உரையாடலில் ஞானியின் தாக்கம் நடை முறையில் போதியளவு இருப்பதற்கான சாத்தியம் இயல்பில் இல்லை எனவே கருதுகிறேன். ஜெயகாந்தன் ஜெயமோகன் போன்றோரது படைப்பில் இயங்கும் நடைமுறை இந்துத்துவம் சாதியம் குறித்து அவர் பேசாதபோது ஞானியின் மதநீக்க அரசியல் என்பது நடைமுறைச் சிக்கலுக்கு உள்ளாகிறது எனவும் நான் நினைக்கிறேன்.

■

தமிழக மார்க்சிய அரசியலில் மொழி, பண்பாடு, செவ்வியல் இலக்கியம், தத்துவம் போன்றவற்றில் அக்கறை கொண்ட கலாச்சார மார்க்சியர்களின் மரபு ஒன்று உண்டு, மார்க்சியத்தை வெறுமனே அதிகார அரசியலாகவும் தொழிற்சங்கப் பொருளாதாரவாதமாகவும் புரிந்து கொண்ட அரசியல் மரபு ஒன்றும் உண்டு. ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் பின்னதற்கு பி.ராமமூர்த்தியையும் முன்னதற்கு ப.ஜீவானந்தத்தையும் நாம் குறிப்பிட்டால், பிளவுபட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளில் பின்னதற்கு கே.முத்தையா, அ.சீனிவாசன் போன்றவர்களையும் முன்னதற்குத் தணிகைச் செல்வன், ஆர்.கே.கண்ணன் போன்றவர்களையும் குறிப்பிடலாம். ஞானி இந்த மரபில் ப.ஜீவானந்தம், ஆர்.கே.கண்ணன் போன்றவர்களின் மரபில் அவர்களைக் கடந்து சென்ற நவீன கலாச்சார மார்க்சியர் எனலாம்.

தமிழகத்தின் பிற மார்க்சியரிடமிருந்து ஞானி வேறுபடும் இடம் ஞானியின் மொழிநடையும் அதனை வெளிப்படுத்தும் முறையும் எனலாம். அவரது சிந்தனையமைப்பை, அவர் தனது வாசகனோடு காலந்தோறும் நடத்தும் மிக நீண்ட உரையாடல்வெளி எனலாம். கல்விப்புலம் சார்ந்த மேற்கோள் வகையிலான மார்க்சிய எழுத்தைத் தாண்டி, தனது வாசிப்பைச் செரித்துக் கொண்டு தன்அனுபவமாக மாற்றி, அதனைத் தனது வாழ்வு குறித்த சுயதேடலாக முன்வைப்பது ஞானியின் எழுத்துமுறை. பிற எந்த மார்க்சியரை விடவும் படைப்பிலக்கியவாதிகளை ஞானி ஆகர்ஷிப்பதற்கு இந்தத் தன்மையே காரணமாக இருக்கிறது.

ஞானியின் தமிழ்மொழி மீதான அவரது முதன்மைக் காதல், மனித விடுதலை தழுவிய அவரது மார்க்சியத்தின் மீதான தேட்டம் எனும் அவரது தனிமனித வாழ்வுக்கு அர்த்தம் தேடிய சிந்தனையின் மிகப்பெரும் இரு கூறுகளுக்கு இடையில்தான் அவரது பிற அக்கறைகள் இயல்பாக எழுகின்றன என்பதை அறியமுயலாதவர்கள், அவரது ஆளுமையை ஒரு இலக்கிய விமர்சகர் எனும் அளவில் குறுக்கி விடுகிறார்கள் எனக் கருதுகிறேன். இவர்களால் ஞானியினது முழுமையான ஆளுமையைப் பற்றிப்பிடிக்க முடிவதில்லை என்று கூட என்னால் சொல்லமுடியும். ஞானி குறித்த இவர்களது மிகைப்படுத்தல்களும் அபத்தமான பார்வைகளும் ஞானியினது ஆளுமையைக் குழப்புவதற்கும், பிற மார்க்சியரது பங்களிப்பைக் கொச்சைப்படுத்திவிடும் ஆபத்தும் இதில் உண்டு. குறிப்பாக அந்தோனியோ கிராம்சியின் சிந்தனைகளுக்கு இந்திய முன்னோடிகளாக எஸ்.என். நாகராசனையும் ஞானியையும் நிறுத்துவதும்(3), அந்நியமாதல் கோட்பாட்டின் முக்கியத்துவத்தினை நிறுவ, அல்தூசரின்பார்வையுடன் இணக்கமாக முன்வைப்பதும்(4) கூட இத்தகைய அபத்த நிலைப்பாடுகளாகவே இருக்கும்.

இந்திய, தமிழக மார்க்சியத்தை மேற்கத்திய விமர்சன மார்க்சிய அனுபவங்களுடன் கற்று, குறிப்பான இந்திய, தமிழக அனுபவங்களுடன் இணைக்க முனைந்த தலைமுறையின் பிரதிநிதி ஞானி என்று சொல்லலாம். இவர்கள் பெருமளவில் மாவோவினாலும் சீன அனுபவங்களாலும் ஆட்கொள்ளப்பட்டவர்கள். மண்ணுக்கேற்ற மார்க்சியம் அல்லது சீனாவின் தனித்தன்மைகளுக்கேற்ற மார்க்சியம் என்ற மாவோவைப் போல, இந்தியாவுக்கு ஏற்ற மார்க்சியம் ஞானியைப் பொறுத்து அது தமிழ்நிலத்துக்கு ஏற்ற மார்க்சியம் என்ற பார்வையை ஏற்றவர்கள் இவர்கள்.

இந்தப் போக்கில் முக்கியமானவர்கள் மூவர். முதலாமவர் எஸ்.என். நாகராசன். பிறகு ஞானி மற்றும் எஸ்.வி.ராஜதுரை. நாகராசன் அந்நியமாதல் கோட்பாட்டின் வழி மனிதவிமோசனத்தை விளக்கியவர். ஞானியையும் எஸ்.வி.ராஜதுரையையும் இணைக்கும் புள்ளி இது. நாகராசன் இலக்கியம் குறித்து அதிகம் எழுதியவர் இல்லை. ராஜதுரையும் ஞானியின் அளவு இலக்கியம் குறித்து எழுதியவர் இல்லை. அதுபோன்று ஞானி ராஜதுரையின் அளவு நடைமுறை அரசியல் குறித்து எழுதியவர் இல்லை. நடைமுறை அரசியலில் ஈடுபட்டவரும் இல்லை. ராஜதுரையையும் ஞானியையும் இன்று வித்தியாசப்படுத்தும் பகுதி இருவரது பெரியார் பற்றிய புரிதலும் தமிழ்தேசியம் பற்றிய புரிதலும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஞானியினது செவ்விலக்கியம் பற்றிய, மதம் குறித்த பார்வையை ராஜதுரையின் பெரியாரியம் ஏற்க முடியாது. ஞானியின் முழுமையான பண்பாட்டுத் தமிழ் தேசியத்தையும் சர்வதேசியவாதியான ராஜதுரையால் ஏற்கமுடியாது. ஞானியினது பங்களிப்பு என்பது நடைமுறை அரசியல் சார்ந்தது என்பதனைவிடவும், தமிழ் மொழியின் மீதான அவரது நேசத்தை அடிப்படை கொண்ட தமிழ் தேசியக் கலாச்சார அரசியல் சார்ந்தது எனவே இன்று வரையறை செய்ய முடியும்.

■

2008 ஆம் ஆண்டு மே மாதம் எனது தந்தையார் மரணமுறுவதற்கு முன்னால் அவரது கடைசிநேர ஆசைகள் என்னவாக இருக்கும் என நான் யோசித்தேன். அவரது நண்பர்களைப் பார்ப்பது அவருக்கு மகிழ்ச்சியளிக்கும் என நினைத்து எஸ்.என்.நாகராசனை அழைத்து வந்து காண்பிப்பது என முடிவு செய்தேன். அதனை எனது தந்தை

## இந்திய, தமிழக மார்க்சியத்தை மேற்கத்திய விமர்சன மார்க்சிய அனுபவங்களுடன் கற்று, குறிப்பான இந்திய, தமிழக அனுபவங்களுடன் இணைக்க முனைந்த தலைமுறையின் பிரதிநிதி ஞானி என்று சொல்லலாம்.

யாரிடம் நான் முன்பே சொல்லவில்லை. அவருக்கு எதிர்பாராத சந்தோஷத்தை அளிக்க விரும்பினேன். கோணங்கள் திரைப்பட இயக்க நண்பர் சந்திரன் மூலம் எஸ்.என்.நாகராசனைத் தொடர்பு கொள்ள சந்திரன் நாகராசனை எமது வீட்டுக்கு அழைத்து வந்தார்.

எலும்புக் கூடாக மெலிந்து கேபாயிருந்த எனது தந்தை ஒருக்களித்து சுவற்றைப் பார்த்துப் படுத்திருந்தார். அவர் மூச்சுவிடப் படும்பாடு அவரது நெஞ்சுக் கூட்டில் தெரிந்தது. மல்லாந்து படுத்தால் இரு மலில் அவர் உயிரே போய்விடுவது போல எனக்குத் தோன்றும். நாகராசன் மெதுவாகத் தனது மெலிந்த கைகளை எனது தந்தையின் தோளின் மீது வைத்தார். மெதுவாகத் திரும்பிப் பார்த்து உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு நாகராசனைத் திரும்பிப் பார்த்தார். புன்முறுவலுடன் நாகராசன் என்றார். பிரகாசமும் அன்பும் சந்தோஷமும் முகத்தில் தெரிந்தது. நாகராசன் கஸ்தூரி என்றபடி தனது பிடியை மெல்ல இறுக்கினார். எனக்கு அழுகை வந்தது. அம்மா வந்து அருகில் நின்று 'நாகராசன் வந்திருக்குது, சந்தோஷமா?' என்று அப்பாவைப் பார்த்துக் கேட்டார். 2010 ஆம் ஆண்டு ஜனவரியில் மரணமுற்ற எனது அம்மா நாகராசனைக் கண்டவுடன் அடையாளம் சொன்னார். அப்பா புன்முறுவலுடன் தலையசைத்தார். ஒரு மணி நேரம் வரை அப்பாவின்மீது கைவைத்தபடி நாகராசன் பேசிக்கொண்டேயிருந்தார். நாங்கள் அனைவரும் கேட்டுக் கொண்டிருந்தோம்.

கரை புரண்டோடும் வெள்ளமென நாகராசன் பேசிக் கொண்டேயிருப்பார். அது தான் அவரது இயல்பு. 'நாகராசன் யாரையும் பேச விட மாட்டான்' என்பார் அப்பா. நள்ளிரவு தாண்டி நாகராசன் எமது உப்பிலிபாளையம் வீட்டுக்கு வந்த பொழுதுகள், எனது தந்தையும் அவரும் பத்திரகாளியம்மன் கோவில் மேடையில் அமர்ந்து அதிகாலைவரை சதா சலசலவென பேசிக் கொண்டிருந்த, நான் தூக்கக் கலக்கத்தில் அவர்களை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்த எனது சிறுபிராய நினைவுகள் ஞாபகம் வந்தன. நாகராசன் இப்போதும் பேசிக் கொண்டுதான் இருந்தார். இப்போது எந்தவிதச் சலனமும் இல்லாமல் நாகராசன் பேசுவதை எனது தந்தையார் கேட்டுக் கொண்டிருந்தார். நான் நண்பர்கள் இருவரையும் முழுமையாக ஒளிப்பதிவு செய்துகொண்டிருந்தேன்.

நான் இங்கிலாந்து வந்து சேர்ந்த ஒரு மாதத்தின் பின் என் தந்தையார் மரணமுற்றார். கோவை பாப்பநாயக்கன்பாளையம் மின் மயானத்தில் அவர் எரியூட்டப்பட்டுச் சாம்பலானார். மதம் சார்ந்து அல்லது மதம் மீறி என அவருக்கு இறுதி ஆசைகள் ஏதும் இருக்கவில்லை. எனது தாயின் விருப்பத்தின்படி அவரது சாம்பல் பேரூரின் சன்னமான நதிநீரில் கரைக்கப்பட்டது. அவரது உடல் எரிக்கப்படும் முன்னர் என் தந்தையின் உடலைப் பார்க்க வெகுதொலைவிலிருந்து எஸ்.என். நாகராசனும் ஞானியும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்து சேரும் முன் அவரது உடல் எரிக்கப்பட நேர்ந்ததால், அவர்களது முதுமையும் ஞானியினது அலைச்சலும் கருதி அவர்களைப் பாதி வழியில் திரும்பிச் செல்லும்படி எனது அன்பு நண்பன் விசுவநாதன் கேட்டுக் கொண்டான்.

எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அப்பாவைப் பார்க்க அவரது நண்பன் வந்திருக்கிறான். ஞானி எனது தந்தைக்கு நண்பரும் இல்லை. கட்சி சார்ந்த நடவடிக்கையாளராக அவரை ஞானி பொருட்படுத்தி அறிந்திருக்கவும் வாய்ப்பில்லை. ஞானியை அவருக்குத் தெரியும். முறைப்படி ஆரம்பக் கல்விகூட படிக்காத கிராமத்து மனிதரான அவர் ஒரு தொழிலாளியாக ஞானியைப் படித்திருக்கிறார். தனது அரசியல் வாழ்வில் அவர் வாழ்காலத்திலேயே எல்.அப்பு போன்ற அவரது தோழர்கள் காணாமல் போனார்கள். பிற்பாடு கர்னாடகாவில் அவர் கொல்லப்பட்டார் என எஸ்.என் நாகராஜன் பகிர்ந்து கொண்டார். எனது தந்தையின் பல தோழர்கள் கொல்லப்பட்டார்கள். பலரது வாழ்வு நிலை குனிந்து போனது. தனது மகனாக என் மீது கொண்ட அன்பிலும் எனது பாதுகாப்பிலும் அக்கறை கொண்டு, இருபது ஆண்டுகளின் முன் ஞானியின் அரசியல் குறித்து என்னிடம் அவர் எச்சரித்திருக்கிறார். உயிரற்ற உடலாக என் தந்தையைக் காணவந்த, என்மீது கொண்ட அன்புக்கு ஞானிக்கு நன்றி எனச் சொல்லிக் கொள்கிறேன். ஞானி என்ற அன்புகொண்ட மனிதர் இன்னும் பல்லாண்டு பெருவாழ்வு வாழ்க என எனக்குள் சொல்லிக் கொள்கிறேன்.

■

2001 ஆம் ஆண்டிலிருந்து சில ஆண்டுகள் நீங்கலாக ஆண்டுதோறும் நான் இந்தியா செல்லும் வேளையில் ஞானியைச் சந்தித்துவருகிறேன். இப்போதும் எமது தலைமுறையினர் ஞானியோடு அன்பு கொண்டு அவரைச் சுற்றியிருந்தது போல் முத்துக்குமார் செந்தில் போன்ற இளம் நண்பர்கள் புத்தக் குவியலினுள் அவருடன் இருக்கிறார்கள். அறிவன் இப்போதும் ஞானியின் அருகாமையில் இருக்கிறார்.

வாசிப்பதில் அவரது ஆர்வம் குறையவில்லை. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக வாசிப்பு இயக்கத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் ஒரு மிகப்பெரும் பாய்ச்சலுக்கு அவரால் இயல்பாகவே ஈடுகொடுக்க முடியாது எனும் உண்மையை அவர் அறிந்திருக்கிறார். அந்தப் பாய்ச்சல் இணையவெளி எழுத்துக்கள். தமிழின் சிறு மற்றும் நடுவாந்திரப் பத்திரிக்கைகள் முதல், இன்று எழுதவரும் எழுத்தாளர்கள் ஈராக, பிரபலமான எழுத்தாளர்கள் தத்தமது தளங்களைக் கொண்டிருக்கிறார்கள். இலக்கிய அரசியல் தத்துவ விவாதங்கள் இன்று இணையவெளியில் நடக்கின்றன. பிரபலமான எழுத்தாளர்கள் தமது அரசியல் கருத்துக்களை அன்றாடம் எழுதுகிறார்கள். இதனைத் தொடர்ந்து செல்லாத ஒருவரால் குறிப்பிட்ட எழுத்தாளர்கள் குறித்து கருத்துக்களைக் கொண்டிருப்பது என்பது சாத்தியமில்லை. ஞானி இந்த இடைவெளியை நிரவ முடிந்தவரை முனைகிறார்.

குறிப்பாக ஒரு சம்பவத்தை நான் சொல்ல வேண்டும் : கோணங்கள் திரைப்பட இயக்கத்திற்காக ஸ்பானியத் திரைப்பட விழாவொன்றினை நான் நெறிப்படுத்தினேன். ஸ்பானிய இலத்தீனமெரிக்கப் புரட்சியாளர்கள் மரணமுற்று ஆவிகளாக எதிரிகளைப் பழிவாங்க அலைவது எனும் கருத்தாக்கத்தின் அடிப்படையில் ஆவிகளின் நிறம் சிவப்பு எனும் தலைப்பில் திரையிடலை நான் நெறிப்படுத்தினேன். திரைப்படம் என்பது முற்றிலுமாகப் பார்வை அனுபவம் என்பது ஒரு அடிப்படைப் பாடம். ஞானி தனது உதவியாளருடன் அந்தத் திரைப்பட விழாவுக்கு வந்திருந்து, திரைப்படத்தின் ஒலியைச் செவிமடுத்து, அவரது உதவியாளர் படக்காட்சிகளை அவ்வப்போது அவருக்கு விளக்கிச் சொல்ல, விக்டர் எரிஸின் அமர காவியமான தி ஸ்பிரிட் ஆப் த புஜீஹைவ் எனும் படத்தை முழுமையாக இறுதிவரையிலும் இருந்து அனுபவமாக்கிக் கொள்தலின் வழி, புரிந்து கொள்ள முனைந்தார். அறிதலில் ஞானிக்கு இருந்த இடையறாத வேட்கைக்கு இது ஒரு சானறு.

எழுத்தாளர்களிடமும் வாசிப்பவர்களிடமும் வேறுபட்ட அனுபவங்கள் கொண்டவர்களிடமும் நிறையப் பேசி, அதனைப் பதிவு செய்து வைத்துக் கொண்டு மறுமுறையும் அதனைக் கேட்கிறார். உதவியாளர்களை வைத்துக் கொண்டு வாசிக்கவும் தொடர்ந்து எழுதவும் செய்கிறார். இலக்கியக் கூட்டங்களுக்கும் கருத்தரங்குகளுக்கும் சென்று வருகிறார். தமிழ்நேயத்தைத் தொடர்ந்து கொண்டு

வருகிறார். 2010 ஜூன் மாத கோவை செம்மொழி மாநாட்டுக் கொண்டாட்டங்களுக்கு மாற்றாக, விமர்சன நோக்கில் உலகெங்கிலும் வாழும் தமிழ்ப் படைப்பாளிகளிடம் கேட்டு வாங்கி 420 பக்கத்தில் பெரிய அளவில் தமிழ் இலக்கிய ஆய்வுத் தொகுப்பொன்றினை மே மாதத்தின் இறுதியிலேயே கொண்டு வருகிறார். அவரது முன்னைய இடையறாத தன்வயமான வாசிப்புச் செயல்பாட்டில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியைப் பிற செயல்பாடுகளின் வழி அவர் கடந்து சென்று கொண்டிருக்கிறார்.

என்னோடும் எனது நண்பர்களோடும் அவர் மதுவிடுதிக்கு வந்து தண்ணியடிக்கவும் செய்தார். பாலுறவுத் தோய்வை எப்போதும் போல அப்போதும் அழகான மொழியில் நாம் பேசிக் களித்தோம். காந்திபுரம் தெருவிலுள்ள கையேந்தி பவனில் நள்ளிரவு கழிந்த நேரத்தில் எங்களோடு நின்றபடி மல்லிகைப் பூ இட்டிலியும் முறுகல் தோசையும்சாப்பிட்டார். வயதைஞானி அப்படித்தான் கடந்து கொண்டிருக்கிறார். கோவையில் நாங்கள் கழித்த இருபது ஆண்டுகளின் முன்பான எமது வாலிப நாட்களையும் எமது குழந்தைமையையும் இப்படித்தான் அவருடன் நாங்களும் மீட்டுக் கொண்டிருக்கிறோம்..

■

பின் குறிப்புகள் :

1. இக்காலகட்டம் பற்றிய ஒரு அரசியல் சித்திரத்தைத் தரும் ஒரு அற்புதமான நூல் காலஞ்சென்ற என். கண்ணாக்குட்டி அவர்களால் எழுதப்பட்ட போராட்டம் என் வாழ்க்கை (1982). ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நக்சலிச அரசியல் காலம் வரையிலான தனது பயணத்தைத் தனது தோழர்களினுடனான தனது அனுபவங்களின் வழி விளக்கும் நூல் இது. கம்யூனிஸ்ட் கட்சி மீதான கொடிய அடக்குமுறைக் காலங்களில் தனிமனிதராக மிகப்பெரும் தியாகங்களைப் புரிந்த தோழர். கண்ணாக்குட்டி தனது இறுதிக் காலத்தில் திமுகவில் சேர்ந்தார். இந்த அரிய வரலாற்று நூலை எனக்குப் படியெடுத்துக் கொடுத்த நண்பர் செந்தலை. கவுதமன் அவர்களை நான் இப்போது நெகிழ்வுடன் நன்றியுடன் நினைவு கூர்கிறேன். தோழர். அப்பு குறித்தும் இவ்வாறான ஒரு குறுநூல் வெளியாகியிருப்பதாகக் கேள்வியுற்றபோதும் இன்று வரையிலும் அந்த நூலை என்னால் பெற இயலவில்லை எனும் துயரத்திலும் ஆழ்ந்திருக்கிறேன். இந்த அனுபவங்களுடன் இன்றும் எம்மிடையில் இருக்கிற தோழர். எல்.ஜி.கீதானந்தன் தமது அனுபவங்களை எமக்குத் தரவேண்டும் என எதிர்பார்க்கிற மனிதர்களில் நானும் ஒருவன். ஞானியும் இந்த அனுபவங்களை எழுத வேண்டும் என விரும்புகிறேன். தோழர். கண்ணாக்குட்டி சொல்லச் சொல்ல எழுதப்பட்ட அவரது நூல் நிறையப் பிழைகளை வாக்கியம், சொல்,எழுதுமுறை எனக் கொண்டிருந்தாலும் புரட்சியாளன் ஒருவனது ஆத்மநிசனமும் துயரும் தொனிக்கும் ஒரு இருத்தலியல் பதட்டம் மிக்க சுயவரலாறு என்பதனை மறுபடி படிக்கவும் என்னால் உணரமுடிகிறது. இந்த நூலைப் படிக்க எனக்குத் தோன்றிய மிக முக்கியமான கேள்விகளில் ஒன்று இன்றைய சூழலில் மிகமுக்கியமானது : பிரதியின்பம் என்பதும் செய்நேர்த்தி என்பதும் ஒரு படைப்பில் பெரும் முக்கியத்துவம்தான் என்ன?

2. எஸ்.என்.நாகராசனின் முழு எழுத்துக்களும் கீழை மார்க்சியம் : வரலாறு அரசியல்மெய்யியல் (காவ்யா : 2008) என ஞானியின் முன்னுரையுடன் தொகுக்கப்பட்டிருக்கிறது. தமது தனித்துவம் எனும் அளவில் அடையாளம், வித்தியாசம், கீழைக் கலாச்சாரம் போன்ற கோருதல்கள் பிரபஞ்சமயமான மனித உரிமைகள் எனும் நிலைபாட்டுக்குச் சவாலாகத் தோன்றியிருக்கும் இன்றைய சூழலில் வைத்து எஸ்.என்.நாகராசனின் கீழை மார்க்சியம் எனும் கருத்தமைவை வாசிக்கத் தோன்றுகிறது. மார்க்சியர்களும் மனித உரிமைகளும் குறித்த விவாதத்தில் மட்டுமல்ல, தேசியக் கலாச்சாரங்களும் மனித உரிமைகளும் எனும் விவாதங்களிலும் கூட, தமது கலாச்சாரத்திற்கு மேற்கத்தியக் கருத்தாக்கங்கள் ஒவ்வாதவை என தேசியத் தலைவர்கள் கூறி வருகிறார்கள். தியானன்மென் சதுக்கப் படுகொலைகளையும், ஈழத் தமிழர் படுகொலைகளையும் இப்படித்தான் தேசியத் தனித்துவத்தின் பெயரில் இந்நாடுகளின் தலைவர்கள் நியாயப்படுத்தி வருகிறார்கள். அதீதமான நிலைகளில் நின்று கிழக்கு மேற்கு எனும் பிரிவினையைப் பேசுபவர்களுக்கு மாற்றான கருத்துக்களை இன்று முன்வைத்து வருபவர் நோபல் பரிசுபெற்ற பொருளியலாளரான அமர்த்யா சென். அன்பு அறம் அதிகாரம் ஊழியம் என கீழைநாடுகளுக்கு உரியதென நாகராசன் பேசிவரும் நிலைபாடுகளை மேற்கின் மார்க்சியர்கள் தொடர்ந்து பேசி வந்திருக்கிறார்கள். ஒற்றைக் கட்சி அதிகாரம் ஸ்டாலினியம் மனித முகத்துடன் சோசலிசம் மூன்றாம் வர்க்கம் மாரக்சியத்தினுள் ஆணாதிக்கம் மனித உரிமை ஜனநாயகம் எனும் பிரச்சினைகளில் விமர்சன மார்க்சியர்கள் இதனைத்தான் பேசி வந்திருக்கிறார்கள். மேற்கத்திய மார்க்சிய விவாதங்களை ஊன்றிக் கவனிப்பவர்கள் இதனை உணரமுடியும். நாகராசனின் பார்வையில் என்னளவில் தேர்ந்துகொள்ள ஏதேனும் இன்று இருக்குமானால் அது இதுதான் : எமது பண்பாட்டு வேர்களிலிருந்து, எமது வெகுமக்களின் மொழியின் வழி எத்தனை பெரிய கோட்பாடுகளாயினும் பேசப்பட வேண்டும். இது ஒரு தொடர்பாடல் கருவி அல்லது பிரக்ஞைபூர்வமான தந்திரோபாயத் தேர்வாக மட்டுமே இடம்பெறும் என நினைக்கிறேன். இந்நூலில் இடம்பெறும் பிடல் காஸ்ட்ரோ பற்றிய ஒரு கட்டுரை நாகராசனின் சமகால அரசியல் பிரக்ஞைக்கு ஒரு சான்று. பிடல் காஸ்ட்ரோ ஸ்டாலினை விமர்சித்த அதே பொழுதில் தியானன்மென் படுகொலையை ஆதரிக்கிறார். மாறுபட்ட கருத்துள்ள கலைஞர்கள் பால் அவரது அரசு அன்பைக் கைக்கொள்ளவில்லை. ஈழப் பிரச்சினையில் அவரது அரசு இனக்கொலையை ஆதரித்து நிற்கிறது. இன்று நிலவும் சோசலிச அரசுகளை நடத்திச் செல்வது கருத்தியலுக்கு மாறாக தேசியநலன்கள் என்பது ஒரு மகத்தான சோகம். நாகராசனின் மார்க்சியம், நடைமுறை அனுபவங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாத கோட்பாட்டு மாரக்சியம் மட்டுமே என்பதனையே உலக அனுபவங்கள் நிரூபிக்கிறது.

3. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் பண்பாடு என்பது வெறுமே பொருளியல் செயல்பாடுகளின் நுரை மட்டுமல்ல என்று சொல்ல முனைந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் அண்டோனியோ கிராம்ஷி. இவர் இத்தாலிய சிந்தனையாளர். இவரது சிந்தனைகள் எழுபதுகளில் தான் ஐரோப்பிய மொழிகளில் பரவலாகப் பேசப்பட்டன. இந்தியாவில் எண்பதுகளில் பேசுபொருளாயின. ஆனால் நாகராஜனும் ஞானியும் சமகாலத்திலேயே அவற்றை முன்வைத்தவர்கள். அவ்வகையில் கிராம்ஷியை ஒரு தீவிர உரையாடலுக்குக் கொண்டுவந்த ஆரம்பகட்ட இந்திய மார்க்ஸியர்கள் இவர்களே. (ஞானிக்கு இயல் விருது : ஜெயமோகன் : ஜெயமோகனது வலைத்தளம் : ஜனவரி 3 : 2010) என்கிறார் ஜெயமோகன். அந்தோனியா கிராம்சி குறித்து அந்தோனியோ கிராம்ஸி : வாழ்வும் சிந்தனையும் எனும் முழுமையானதொரு நூலை தமிழ்ச் சூழலில் எஸ்.வி. ராஜதுரை எழுதியிருக்கிறார். எழுபதுகளில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினால் வெளியிடப்பெற்ற மார்க்சிஸ்ட் மிசலினி இதழில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோட்பாட்டாளரான காலம்சென்ற மொகித்சென் அந்தோனியோ கிராம்ஸி குறித்து எழுதியிருக்கிறார் (Leninism of Gramsci : Mohits Sen: Marxist Miscellany : No. 5 : 1974). ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ஸ்டாலின் பிரச்சினை போன்றவை குறித்த சிறப்பிதழ்களையும் எழுபதுகளிலேயே இவ்விதழ் வெளியிட்டிருக்கிறது. இந்தியாவில் கிராம்சிய சிந்தனைகளின் பரவலாக்கம் (Gramsci's Presence in India : Sobhanlal Dutta Gupta : International Gramsci Society Newsletter : Number 3 :March 1994) அறுபதுகளிலேயே வங்காளத்தில் துவங்கிவிட்டது எனத் தரவுகள் வந்துள்ள இன்றைய சூழலில், ஞானியைக் குறித்த இவ்வகையிலான மிகையான கோருதல்கள் அவரை வெட்கமடையச் செய்யும் எனவே நான் கருதுகிறேன்

4. அந்நியமாதல் என்ற கருத்தாக்கத்தையும் முன்வைத்தார். மார்க்சின் கருத்துப்படி மனித உழைப்பு ஒரு படைப்புச் செயல். அது அவனை மகிழ்ச்சியாக வைத்திருப்பது. ஆனால் அந்த உழைப்பு அவனுக்குப் பயனையோ மகிழ்ச்சியையோ அளிக்காத நிலையை முதலாளியம் உருவாக்குகிறது. உழைப்பை மட்டும் வழங்குகிற அவன் அதன் பலனிலிருந்து விலக்கப்படுகிறான். அந்நியப்படுத்தப்படுகிறான். மார்க்சிய ஆய்வுகளிலிருந்து லூயி அல்தூசர் பகுத்தெடுத்த இந்தச் சிந்தனையை ஞானியும் அவரது சகாவான எஸ்.என். நாகராசனும் பரவலான சிந்தனைக்கு விட்டார்கள். அந்நியமாதலின் துக்கத்தையும் அதற்கு எதிரான தனி மனித சமூகக் குறுக்கீடுகளையும் ஆய்வதையே தனது இலக்கியக் கோட்பாடாக ஞானி வகுத்துக்கொண்டார் (ஞானியுடன் நடந்த தூரம் : சுகுமாரன் : காலச்சுவடு 123: மார்ச் 2010). என்கிறார் சுகுமாரன். அந்நியமாதலை முன்நிறுத்தி மனிதாபிமானம் பேசிய இளைய மார்க்ஸ், பிற்பாடு கறாரான விஞ்ஞானமாக மார்க்சியத்தை வளர்த்தெடுத்து முதிய மார்க்ஸ் என மார்க்ஸைப் பிரித்துப் பார்த்த அல்துலீசரின் எதிர்மனிதாபிமான மார்க்சியத்தை மறுத்து இக்காரணத்தினால் அல்தூசர் ஒரு ஸ்டாலினிஸ்ட் எனவும் விமர்சிக்கப்படுகிறார் மனிதாபிமான மார்க்சிய நிலைபாடு எடுக்கும் ஞானியினது தத்துவார்த்த நிலைபாட்டை அல்தூசரின் அமைப்பியல் மார்க்சியத்துடன் இணைக்கப்படுத்துவது அவருக்கு நியாயம் செய்கிற பார்வையாக இருக்காது. அல்தூசர் கோட்பாட்டுச் செயல்பாட்டையும் மேல்கட்டுமானத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியவர் எனினும் அவர் வந்து சேர்ந்த எல்லைகள் நிச்சயமாக ஞானிக்கு எதிர்திசையிலானது. அல்தூசரின் மார்க்சியம் குறித்து, அதிலிருந்து தான் விலகும் புள்ளி குறித்து, ஞானி தனது மார்க்சியத்திற்கு அழிவில்லை (புதுப்புனல் : 2001) நூலில் விரிவாகப் பதிவுசெய்திருக்கிறார். க்ரியா பதிப்பகம் வெளியிட்ட எஸ்.வி.ராஜதுரையின அந்நியமாதல் (1979) எனும் முழுமையான நூல் இங்கு கவனத்திற்கு உரியது. எதிர்மனிதாபிமானம், மனிதாபிமானம் மற்றும் அல்தூசர் குறித்து தனது நூலின் முன்னுரையில் எஸ்.வி. ராஜதுரை குறிப்பிடுகிறார்.

■

[ பத்தி ]

# நான் விசா வாங்கப்போனேன்

சச்சிதானந்தன் சுகிர்தராஜா

இன்றைய நவீன வாழ்க்கையில் என்னைப் பொருத்த வரையில் மிக உபத்திரமான காரியங்கள் மூன்று. ஒன்று தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் உங்கள் கடன் அட்டைகளை விழுங்கிவிடுவது அல்லது நிராகரிப்பது. இரண்டாவது பொது வெளியில் உரத்த சத்தத்தில் பேருந்து நிலையத்தை விட்டு வெளிக்கிட்டுவிட்டது இன்னும் அரைமணி நேரத்தில் வீட்டுக்கு வந்துவிடுவேன் என்ற உலகுக்கு அதிர்ச்சி தரும் செய்தியைக் கைபேசியில் கதைப்பது. மூன்றாவது இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் விசா வாங்குவது. இந்திய தூதரகத்தில் நுழைவனுமதி பெறுவது இரண்டு வார்த்தைகளை நினைவூட்டுகிறது: ஒட்டகமும் ஊசியின் காதும்.

முதலில் இந்திய விசா விண்ணப்பப் படிவம். இது கல்யாணத் தரகர்களால் தயாரிக்கப்பட்டது என்று நினைக்கிறேன். ஒரு ஏற்பாட்டு திருமணத்திற்கு வேண்டிய தகவல்கள் நிரப்பவேண்டிவரும். முக்கியமாக அப்பா, அம்மா அவர்கள் உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் பெயர், பிறந்த நாள், ஊர் எல்லாம் தெரிவிக்கவேண்டும். வேலை, பிறந்த நட்சத்திரமும் கோத்திரமும் நீங்கள் வாங்கும் சம்பளத் தொகையையும் உங்களுக்குச் சொந்த வீடும் வளவும் இருக்கிறதா என்று பட்டும் கேட்கவில்லை.

உங்களுக்கு பிரித்தானிய இராச்சியத்தின் கடவுச்சீட்டு இருக்கலாம். நீங்கள் பிரான்சு நாட்டுக் குடிமகன் எனறு சொல்லிக்கொள்ளலாம். நீங்கள் முப்பது வருடங்களுக்கு முன்னம் நெல்லியடியையோ அல்லது வாழச் சேனையையோ விட்டு வந்து அந்த ஊர்களின் மண் வாசனை மறந்தி ருக்கலாம் ஆனால் இந்திய அதிகார மனப்பான்மையாளர்களுக்கு நீங்கள் இலங்கையரே. அதுமட்டுமல்ல இந்தியத் தூதராலய அலுவர்களுக்கும் இராஜபக்சேக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. இந்த இருவருக்கும் எல்லா ஈழத் தமிழரும் புலிகள். ஆகையினால் விசா உங்களின் பயணப்பத்திரத்தில் பொறிக்க முதல் இலங்கையிலிருக்கும் இந்திய தூதரகத்தில் தடைநீக்க அனுமதி பெறவேண்டும். 'மை நேம் இஸ் கான் படத்தில் சாருக்கான் சொன்ன வசனத்தைக் கொஞ்சம் திருத்தி என் பெயர் ராஜா. நான் புலி இல்லை என்று சொல்லிப்பாருங்கள் கேட்கமாட்டார்கள். இந்தியா, கணினியில் சிறந்த நாடாகயிருக்கலாம். இன்றைய மின்னியல் யுகத்தில் கணினி சொடுக்கியைச் சுட்டினால் உங்கள் வாழ்வு பற்றிய முழு விபரங்களையும் அறிந்து கொள்ளலாம். ஆனால், இந்தியத் தூதரகம் இப்படியான கருவி இருக்கிறதென்று காட்டிக்கொள்வதில்லை. உங்கள் விபரங்களைப் பழைய பாரத மன்னர்கள் செய்தது போல் புறாவின் காலில் சுருளைக் கட்டி அனுப்புவார்கள் என்று நினைக்கிறேன். தடை நீக்க உத்தரவு வர உங்களுக்கு நல்ல காலமாயிருந்தால் மூன்று நாளாகும். உங்கள் முன்வினை கடன் தீர்க்கும் நாட்களாயிருந்தால் முப்பது நாட்களுக்கு மேலாகும். இன்னுமொன்று, இந்திய தூதராலய அலுவர்களை பொருத்தமட்டில் எல்லாமே மாறத்தன்மை உடையவை. முக்கியமாக உங்கள் கையெழுத்து. சமீபத்தில் நான் விசா விண்ணப்பப் படிவத்தில் இட்ட கையெழுத்து பல வருடங்களுக்கு முன் நான் கடவுச் சீட்டில் போட்ட கையொப்பத்துடன் ஒத்துவரவில்லை. சந்தேகப்பார்வையுடன் இந்திய உஸ்தியோகஸ்தர் மறுபடியும் போடச்சொன்னார். பதற்றத்தால் ஒவ்வொரு முறையும் பிழையாகவே எழுதினேன். புத்தர் உலகில் எதுவுமே நிரந்தரமானவை அல்ல என்று பிரசங்கம் பண்ணினார். இந்திய பணித் துறைஞர்களுக்கு (breaucrat) நுட்பமான தத்துவங்கள் தெறிந்திருக்க நியாயமில்லை. ஒன்று மட்டும் உறுதியாகிறது. இந்திய அரசின் Incredible Indiaaah என்ற சுற்றுலா பிரசாரம் ஈழத் தமிழர்களை ஈர்க்க விளம்பரப்படுத்தப்பட்டதல்ல.

சில பண்டைய சடங்குகள்

இந்தக் கட்டத்தில் இந்தப் பத்தியைச் சற்று பின்திருகு செய்து கொஞ்சம் பழைய கதை பேசலாம் என்று நினைக்கிறேன். விசா கிடைத்துவிட்டால் இப்போது போல் உடனே அந்த நாட்களில் விமானத்தில் பறந்துவிடமுடியாது. இலங்கைவிட்டு வெளிக்கிடுமுன் சில சமய கருமங்கள் செய்யவேண்டியிருக்கும். இவை மத சம்பந்தமானவை அல்ல. முதலில் கூப்பன் புத்தகத்தை DRO கந்தோரில் ஒப்படைக்கவேண்டும். அந்த நாட்களில் இலங்கை அரசு மக்கள் விருப்புவாத கொள்கைகளை மெலிசாகக் கடைப்பிடித்திருந்தது. இரண்டு கொத்து அரிசியும் பழைய இம்பிரியல் அளவையில் ஒரு இறாத்தல் சீனியும் இலவசமாகக் கிடைக்கும். இது கிடைப்பதற்கு வசதிசெய்ய ஒவ்வொருவருக்கும் அரசு கூப்பன் புத்தகத்தை வினியோகம் செய்திருந்தது. கடவுளுடைய இராஜியம் பூலோகத்திற்கு வராவிட்டாலும் அரிசியும் சீனியும் மக்களுக்குக் காசில்லாமல் கிடைப்பது பெரிய காரியமல்லவா? இன்னுமொன்றையும் சொல்லுகிறேன். அந்த நாட்களில் மருத்துவமும், கல்வியும்கூட இலவசமாகத்தான் கிடைத்தன. இன்றைய மாறுபட்ட முதாலாளித்துவ நுகவர் பொருளாதாரத்தில் இவை எல்லாம் சாத்தியமில்லை.

சரி, கூப்பன் புத்தகத்திற்கு வருவோம். இலங்கைக்கு வெளியே சற்று நாட்கள் தங்கியிருக்க நேர்ந்தால் கூப்பன் புத்தகத்தை DRO கந்தோரில் கொடுத்து விட வேண்டும். அதற்கு அடையாளமாகச் சீட்டையும் வாங்க வேண்டும். கந்தோருக்குப் போனால் கையெழுத்துப் போடுகிற பொறுப்பு அலுவலர் இருக்கவே மாட்டார். கதிர்காமத்திற்குப் போயிருக்கிறார் என்பார்கள் அல்லது அன்றைக்குதான் அவருடைய மகளின் பூப்புனித நீராட்டு விழா நாளாக இருக்கும். இந்த கிரிகைகள் எல்லாம் முடித்து அவர் கந்தோரிலில் இருக்கும் அபூர்வ நாளில் அவர் கையெழுத்துப் போடும்போது முகத்தை நேரில் பார்க்காமலே நீர் எப்போது திரும்பி வருவீர் என்று கேட்பார். நான் ஈனக்குரலில் வரும் திகதியைச் சொல்வேன்.

நான் இலங்கை திரும்பி வந்து கூப்பன் புத்தகத்தை மீட்பு எடுக்கப் போகும் போது எனக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருக்கும். அவர் அன்றைக்கு ஏதோ என்னுடைய வருகைதான் முக்கியம் என்பது போல் கதிரையில் அமர்ந்திருப்பார். நான் எந்த நடன பாடபுத்தகத்தில் இல்லாத அங்க அசைவுகளுடன் அவர் முன் போய் நின்று வந்த முக்கிய

காரியமான கூப்பன் புத்தகத்தைப் பெற்றுவிடுவேன். அந்த நேரத்தில் ஒத்திகை பார்க்காத, பார்வையாளர்கள் இல்லாத ஓரங்க நாடகம் நடை பெறும். நான் அவருக்கு இந்தியாவிலிருந்து வாங்கி வந்த பொருள் ஒன்றைக் கொடுப்பேன். அது பெரும்பாலும் இந்திய லுங்கியாகத்தான் இருக்கும். நம்முடைய மொழியில் சாரம். அவரும் 'சீச்சி இது எதற்கு' சொல்லுவார். நானும் 'இது சும்மாதான் கொணர்ந்த நான்' என்று சொல்லுவேன். எழுத்துப் பிரதி ஆக்கப்படாத இந்த உரையாடல் நாலு தடவையாவது அரங்கேறும். அதற்குப் பிறகு இது எல்லாம் எதற்கு என்று கொஞ்சம் கூச்சப்படுவது போல் நான் அவரின் மேஜை யில் வைத்த உபகாரத்தை எடுத்துக் கொள்வார். நான் கொடுத் தது லஞ்சம் என்று எண்ணிவிடாதீர்கள். நான் தான் சும்மா என்னு டைய நன்றியைத் தெரிவிக்கச் செய்த செயல். இந்தக் கட்டத்தில் இன்னொன்றையும் சொல்லவேண்டும். ஈழத்தமிழர்களின் மொழி யாடலில் 'சும்மா' என்ற வார்த்தை ஒரு தனிகுறியீடு. தருணம் கிடைக்கும்போது இதைக் கட்டுடைக்கலாம் என்று நினைக்கிறேன். எத்தனையோ அதிகாரிகளைக் கையொப்பம் வாங்கியிருக்கிறேன். ஒருவராவது என்னிடம் அது கொண்டு வா இது வாங்கி வா என்று சொன்னதில்லை. ஆகையினால் எல்லா அதிகாரிகளுமே உத்தம புத்திரர்கள் என்று அர்த்தமில்லை. அந்த கந்தோரில் வேலை பார்த்த ஒரு வருக்கு என் சக பயணிகள் வைத்த பட்ட பெயர் Nescafe. ஒரு காலகட்டத்தில் இலங்கை அரசு மார்க்சியத்தில் சொக்கிப் போயி ருந்தது. ஆகையினால் சில அன்னிய பொருட்களுக்குத் தட்டுப் பாடு இருந்தது. இந்தியா அந்த நாட்களில் தாராளமாக உற்பத்தி செய்த பண்டங்களில் நெஸ்கேபேயும் ஒன்று. இவருக்கு ஒரு போத்தல் நெஸ்கபே கட்டாயம் வாங்கி வர வேண்டும்.

இதற்கு ஒரு பின்சேர்க்கையும் இருக்கிறது. அதையும் சொல்லிவிடுகி றேன். நான் கல்கத்தாவில் (இன்றைக்கு கொல்கொத்தா) பணிபுரிந்த நாட்களில் அடிக்கடி சர்வதேச கருத்தரங்குகளுக்குப் போகவேண்டி யிருந்தது. இந்தியாவில் வேலை செய்யும் அன்னியர்கள் திரும்ப வும் இந்தியா வருவதற்கு எந்தத் தடையும் இல்லை என்ற சான்றி தழ் வாங்கவேண்டும். இதைப் பெறுவதற்குக் கல்கத்தாவில் மூன்று கந்தோருக்கு அலைகழிய வேண்டும். இது மூன்று கண்டங்களைத் தாண்டி வருவதற்குச் சமன். பங்களா பாபுகள் எனக்கு ஒரு தொந்தர வும் தராமல் உதவி செய்திருக்கிறார்கள். இப்படி ஒரு முறை அய் ரோப்ப போய் திரும்பி வந்த போது அவர்களுக்கு நன்றி உபகார மாகப் பந்து முனைப்பேனா (ballpoint pen) வாங்கி வந்தேன். அது பொருளாதாரத் தாராளமடையாத தபசு கால இந்தியா. சந்தையில் படிப்படியாகப் பந்து முனைப்பேனா மையூற்றெழுத்துகோலை (fountain pen) ஆக்கிரமித்துக்கொள்ளத் தொடங்கிய நேரம். பந்து முனைப் பேனா வாங்குவதானால் நீங்கள் ஒரு ஐ.பி.எல். குத்தகைக்காரராக இருக்கவேண்டும். கொண்டுவந்ததை நான் மிக மரியாதையாக கொடுத்தபோது அந்த வங்காளி ஊழியர் ஒரு கத்துக் கத்தினார். உங்களைப்போல் மத்தியதர ஆட்கள்தான் எங்களைக் கெடுப்பது. கொல்கத்தா அரசி ஊழியர்களில் பெரும்பான்மையினர் மார்ஸ்சிட்சு கள். மத்திய வர்க்கம் என்பது அவர்களுக்கு ஒரு இழிச் சொல். இவர் எழுப்பிய சத்தத்தைக் கேட்டவர்கள் நான் ஏதோ இவரை ஒரின சேர்க்கைக்கு உடன்படுத்த முயன்றதாக விளங்கிக்கொள்ளுவார்களோ என்று பயந்து மெதுவாக வெளியேறிவிட்டேன்.

நான் இப்பொது சொல்லப்போகும் அடுத்த செய்தியினால் உங்கள் புருவங்கள் கொஞ்சம் மேலே உயரலாம். அந்த நாட்களில் பழாலி விமான நிலையத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்குப் போவதற்கு விமான பயணச்சீட்டு கட்டணம் எவ்வளவு தெரியுமா? 64 ரூபாய்கள். இது பல்கலை மாணவர்களுக்கு எயர் சிலோன் கொடுத்த சலுகைக் கட்டணம். இந்தத் தொகை அப்போது எயர் சிலோன் இருந்த யாழ் பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலிருந்து மணிக்கூண்டு கோபுரம் வரைக்கும் ஆட்டோவிற்கு இன்றைக்குக் காணாது.

கடவுச் சீட்டின் கதை

விசா பற்றிச் சொல்லிய நான் கடவுச்சீட்டின் சரித்திரம் பற்றியும் சொல்லி விடுகிறேன். முதல் முதல் கடவுச்சீட்டு பற்றிய தகவல் எபிரேயரின் வேதத்தில் பதிவாய் உள்ளது. பாபிலோனில் சிறை வைக்கப்பட்ட யூதரான நெகெமியா சிதிலமடைந்திருக்கும் அவரு டைய மூதாதையர்களின் கல்லறைகளையும், நகரங்களையும் திரும்பச் சீரமைப்பு செய்ய தன்னுடைய ஊருக்குப் போகவேண்டும் என்று பாரசீக மன்னர் அர்தசஷ்டாவிடம் கேட்கிறார். நெகெமியா கடந்து போகும் நாடுகளின் தேசாதிபதிகள் அவரைத் தடையில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கவேண்டும் ஈரானிய அரசர் கொடுத்த கடிதமே பயணப் பத்திரத்தின் ஆரம்பமாகும். நெகெமியா எத்தனை வான் மையில் (airmiles) புள்ளிகள் சேர்த்திருப்பார் என்று அறியத் துடிக் கும் அன்பர்களுக்கு அவர் பயணம் செய்த தூரம் இன்றைய ஈரானி லிருக்கும் சுஷாவிலிருந்து இஸ்ரேயலிருக்கும் எருசலேம் வரை. முத லாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகும், போக்குவரத்து சாதனங்கள் அதிகரித்த பின்புதான் நவீன கடவுச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றபோது கடவுச்சீட்டு, மற்றும் விசா வைத்திருந்தாரா என்று தெரியவில்லை. அவரின் செயல் அமெ ரிக்க அரசு அல் கைதா சந்தேகி களை நாட்டுவிட்டு இரகசியமாகக் கடத்திய ஒப்படைதல் செயல்முறைக்கு (rendition) ஒத்திருக்கிறது. இரா வணனின் செயல் உலகின் முதல் ஒப்படைப்பு என்று எடுத்துக் கொள்ளுங்கள். நமது புராணங்களில் நவீன கால விஞ்ஞான கண்டு பிடிப்புகளுக்கு முன்னுதாரணங்கள் இருக்கிறதென்று பெருமைப் படுகிறவர்கள் இதையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வார்த்தைகள், ஆயுதங்கள்

கடைசியாக, இன்றைய விமானப் பயணத்தில் ஏற்படும் ஒரு கரைச்ச லான சடங்கு பற்றிக் கூறி இந்தப் பத்தியை முடிவுக்குக் கொண்டு வருகிறேன். இதை நவீன வாழ்க்கையின் நான்காவது உபத்திரமாக சேர்த்துக்கொள்ளலாம். சமீபத்தில் அமெரிக்காவுக்கு ஒரு ஆய்வரங் குக்குச் சென்றபோது எல்லா பயணிகளிடமும் வழமையாகக் கேட்கும் கேள்வியைக் குடிநுழைவு அதிகாரி என்னிடமும் கேட்டார். ஏதோ எல்லாப் பயணிகளிடமும் ஈராக்கில் சிக்காத பேரழிவு ஆயுதங்களைக் கொண்டு திரிவதுபோல 'உங்களிடம் ஏதும் கூர்மையான ஆயுதம் இருக்கிறதா?' இதே கேள்வியை அன்றைக்கு அவர் ஆயிரம் தடவை யாவது கேட்டிருப்பார். அப்பாவித்தனமான பார்வையுடன், உடல் மொழி காட்டிக் கொடுக்காதவாறு, பதற்றமிலாமல், ஒரு பலகீனமான தொனியில் என்னைப்போலவே அந்த ஆயிரம் பேரும் 'ஒன்றுமே இல்லை' என்ற ஒரே பதிலைத்தான் சொல்லியிருப்பார்கள். அந்த கருத்தரங்கத்திக்கு வாசிக்க எழுதிய ஆய்வுத்தாள் கட்டுரை என் கைப் பையில் இருந்தது. ஆனால் மிக கூரான ஆயுதம் என்னி டம் இருந்தது. அந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் கீழ்க்கண்ட கூற்று எழுத்துரையைக் கையாண்டிருந்தேன். இது முன்னால் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவருடைய மகள் இந்திராவுக்கு ஆங் கில அரசு அவரை சுதந்திரப்போராட்ட நாட்களில் சிறையில் வைத்த போது எழுதியது. முதலாம் உலகப் போருக்குப் பின் ஈராக் நாடின் போராண்மை உரிமை ஆங்கிலய பொறுப்பில் விடப்பட்டது. ஆங்கி லேயர் அந்த நாட்டிக்கு விளைவித்த அட்டூழியங்களைப் பற்றி நேரு தெரிவித்த கருத்து இது: The novel feature of the modern type of imperialism is its attempt to hide its terrorism and the exploitation behind pious phrases about 'trusteeship' and the 'good of the masses'...and like. They shoot and kill and destroy for the good of the people who shot down. This hypocrisy... shows that the truth is not liked, and therefore wrapped up in these comforting and deluding phrases, and thus hidden away. ஒன்றைக் கவனியுங்கள். நேரு ஏகாதிபத்தியத்தையும் பயங்கரவாதத்தையும் ஒரே திரசில் வைத்திருக்கிறார். ஆங்கிலேயருக்கு, அமெரிக்கர் என்று மாற்றிப் பொருத்தி வாசியுங்கள். சமகால அரசியல் நடப்பு தெரியும். இந்த வார்த்தைகளைத் திருப்பிப் படிக்கும் போது சில எண்ணங்கள் தோன்றுகின்றன: ஒன்று, நேருவின் தீர்க்கதரிசன வல்லமை; இரண்டு, பழைய சரித்திர சம்பவங்கள் மறுபடியும் சுற்றிவந்து நம்மைத் தாக்கும்; மூன்று, வரலாற்றிலிருந்து எந்த விதமான பாடங்களை நாங்கள். கற்பதில்லை. மொத்தத்தில் நேருவின் முன்னறிவிப்பான இந்த வாசகங்கள், எட்வார்ட் சையது பிரபலப்படுத்திய அதிகாரத்திடம் உண்மையைப் பேசும் வார்த்தைகள். எல்லாவற்றையும் இயந்திரக் கண் ணோட்டத்தில் பார்வையிடும் அந்த அமெரிக்க குடி நுழைவு அதி காரியும் அவரைப்போன்ற நிர்வாக கட்டுப்பாட்டாளர்களும் இந்த எடுத்துக்கூற்றின் பண்பு விளைவுகளை அறிந்திருக்க மாட்டார் கள். அந்த குடிவரவு அதிகாரி வினவிய ஆயுதங்களைவிட என் பையில் இருந்த நேருவின் புலப்பதிவான இந்த வசனங்கள் மிகக் கூர்மையானவை.

■


T. Jegatheesan
Barrister, Solicitor & Notary Public (ont)
LAW
2620 Eglinton Ave. E
Suite 201
Scarborough
On MLK 2S3
Tel: 416 - 266 6154 Fax : 416 - 266 4677

[ கவிதை ]

# புயல்

## மு.பொன்னம்பலம்

### புயல்

புயல் புகுந்த அந்த கணத்துள் வாழ்க்கையே கூட்டி ஒதுக்கப்பட்டு
மூலையில் கிடக்கிறது.
கோடிக்கதியால் வேலியில் தொங்கும் ஊத்தகோழியாய்
உள்ளதிர்ந்தபடி.
புயல் எங்கு, எப்பொழுது மையம் கொள்கிறது என்கிற
காலநிலவரம் தெரியாத எனக்கு,
கற்றுத்தரவோ அது இன்றென் வீட்டுக்குள் புகுந்தது?
சமயலறையில் ஒரு வெள்ளி தம்ளர் 'டங்'கென அதிர்ந்தது.
ஒரு சின்ன அதிர்வு.
தேநீர் கலக்கும் கரண்டி கைநழுவி கீழே விழுந்து சிணுங்கும் ஓசை
ஓர் சின்னச் சிணுங்கல்.
காலையில் பருகும் தேநீரோடு கலப்பதற்குப் பால் இல்லை.
வாங்கலாம் என்றால் சட்டைப்பையைத் தடவிய கைகள்,
வெறுமையைப் பிசைந்தன.
அப்போதான்,
எத்தனையோ தாழமுக்கங்களைத் தாண்டிவந்து
ஓர் அற்ப பால்பக்கட்டைச் சுற்றி புயல் திரள்வது எனக்குப் புரிந்தது.
மூன்று நாட்களாய் செறிவு கண்டிருந்த மூட்டம்
திடீரென கொட்டோ கொட்டென கொட்டியது போல.
நான் கையறு நிலையில்,
தாடியைத் தடவியவாறு நின்றபோது
உண்டியல் முட்டி திடீரென உடைவது கேட்டது.
சில்லறைகள் என்நெஞ்சில் சிதறி ஓடின.
இத்தனை நாளாய் அவள் சிறுகச் சிறுகச் சேர்த்த உண்டியல்
இப்படி உடையவா?
அடி வயிற்றில் புயல் எழுப்பிய ஆழிப்பேரலை
எகிறி விழுந்தபோது,
என் நெஞ்சக் கரையில் நிரைவிட்டிருந்த பூஞ்சட்டிகள்
அள்ளுண்டு போயின.
என் சின்ன மகள் வந்து, உண்டியல் உடைத்த காசைத் தருகிறாள்,
பால் வாங்கிவர.
கூடவே வெறும் 'தேத்தண்ணி' கோப்பையும்
அருகிலே வைக்கிறாள், ஆவி பறக்குது.
தேநீர்க் கோப்பையுள்ளும் புயல் மையம் கொள்ளும் விஷயம்
இப்போ புரிந்தது.
உண்டியல் என்பது ஒரு நாள் உடையத்தானே, என்ன மகள்?



என்றேன்,
அவள் திருதிருவென விழித்தாள்.
முன்னர் கிராமத்தில், சிறுவனாய்ப் பார்த்த புயல் நினைவில் சுழன்றது.
ஓங்கி அலைகள் கொக்கரிக்க,
எங்கோ கடல் வெளியிலிருந்து கதறிவரும் புயல்
ஏவிவிட்ட காமப்பேயென
என் ஓலைவிட்டு முகப்பைக் கிளப்பிக் கிளப்பிப் பார்த்துத்
தோல்வியுற்ற நிலையில்
முற்றத்து வேம்பின் கொம்புகளை முறித்து, அதில் குந்தியிருந்த
காகத்தை
விட்டெறிந்து வெளியில், இறகுதிரவைத்து குரூர ரசனையுடன்
காவோலைப் பேச்சிரிப்பாய் அள்ளுண்டு போகும் புயல்,
இன்றெவ்வாறு என்தேநீர்க் கோப்பையுள் வந்து புகுந்ததோ!

கையில் பாலோடு திரும்பியபோது,
புயலில் அடிப்பட்ட கமுகென என்னவள் ஒடிந்துபோயிருந்தாள்.
துயர் பீறிடுகையில்,
ஓசை எழுப்பாது தனக்குள் புதைவது அவள் இயல்பு.
ஆயினும்
நெற்றி விழி சுடரும் கூத்தனுக்கேற்ப
பக்கத்தே நின்றாடும் பத்தினி அல்லவா!
எழுந்த புயலை விழுங்கிய அவள் நெஞ்சில்
பொங்கியெழும் அலைகள் இத்தீவைப் பந்தாடாவோ?

## 2

முன்னொரு நாள் இங்கு நான் அகதியாக வந்தபோது
மூன்றரை ரூபாதான் பாண் ஒரு றாத்தல்.
பால் ஒரு பைக்கட்கூட ஆறு ரூபாய்தான்.
எப்படி இவைகள் உச்சிக்கேறின?
எந்தப் புயல் எழுந்திவற்றை அள்ளி ஏற்றிற்று?
அரிசியும் பருப்பும் மாவும் சீனியும்
புசிப்பதற்கல்ல.
ஆடம்பரப் பொருட்களாய் காட்சிக்கு வந்தன.

1. 'தேசத்தின் மகுடம்' உங்கள் தலையில் சூட்டப்படலாம்
சிரந்தாழ்த்தி ஏற்றிடுமின், இல்லையேல்
பார்வைக்கு வைத்துள்ள பல்குழல் பீரங்கிகள் உங்கள் நெஞ்சோடு
பறையவும் கூடும்.
கீரைத்தண்டிலும் போர்தான் முழங்கிற்று
தெருவில் செல்லும் ஒவ்வோர் உயிரும் கிள்ளுக்கீரைபோல்
ஆயினவோ!
இத்தனைக்கெல்லாம் என்ன காரணம்?
எங்கள் தலைவர் கேட்டார், பின்னர் அவரே,
'புயலாய் மாறிய யுத்தமே' என்று பதிலும் நல்கினார்.
புயலாய் மாறிய யுத்தம்!
எங்கள் வாய்கள் மீள மீள உச்சரித்தன.

வெள்ளை வான்களைத் தள்ளியவாறு புயலா வருகுது?
எங்கள் வயிற்றில் நெருப்பை வாலீஜ் புயலா கொட்டுது?
புதை குழியிலிருந்து வெளிவரும் அழுகிய உடல்களை
புயலா புதைக்குது?
வங்கிக் கணக்கில்,
ஓய்வூதியச் சேமிப்பில்,
சேமலாப நிதியில்
புயலின் விரலாய் நீளும் நகங்களேன் கணக்குப் பார்க்குது?
புயலாய் மாறிய யுத்தம்!
எங்கள் வாய்கள் மீள மீள உச்சரித்தன.

ஜனநாயகம் என்பதிப்பவோர் இனநாயகமாகிய புதுரசவாதம்
மக்கள் யாவரும் 'சகோதர'ரான புதியவோர் பேராட்சி.
'ஊடகச் சுதந்திரம் என்பது எங்கள் வகுப்பு மாணவர்
சாதனை சொல்லவே' என்றார் தலைவர்.
அவர் வார்த்தைகள் பேரர்த்தம் கொண்டன.
எங்கள் வரலாறு பேராறாய்,
எங்கள் ஆசை நிறைவேற்றின் வடிகாலாய்
கிளைகள் எறிந்து விளிம்புகள் தோறும் சீனி பூசி வழிந்தன போலும்
மக்கள் சோற்றையும் கறியையும் மறந்தனர்
புதிய வரலாற்றை உண்டு உண்டே வாழப்பழகினர்.
பத்துக் கந்தையர் மோதலில் இறந்ததால் பால்மா உயருது.
செத்தவர் இருபதாய் மேலும் கூடினால் பெற்றோல் உயருது.
நூறு பயங்கரவாதிகள் போயினர் என்றால் காஸ் விலை கூடுது.
வரலாற்றின் பதிவுகள் ஏற ஏற
மக்கள் பசியாறி பசியாறி வெறும் வாயை மென்றனர்.
கொல்லிமலை உச்சியில் மகிந்தனும் தேவியும் வந்தே இறங்கினர்'
என்ற செய்தி கேட்டு
ஊரே அள்ளுப்பட்டது.
ஆயினும் எவரும் அங்கு போவதை விடுத்து,
தமக்குள் அக்காட்சியின் தாஜீசனம் பெற்றனர்.
உணவின் தேவையை மறந்து உபவாசம் இருந்தனர்.
'பெருங்காலத்திற்குப் பின் நாட்டுக்குக் கிடைத்த புத்திரன் இவனென'
தொலைக்காட்சிகள் சொல்ல
மக்கள் தொழுதனர்.
சமய சாசனத்தின் இரண்டாம் எழுச்சி!
மிருந்தலையின் அடிவாரத்தில்
தேவநம்பியதிஸ்ஸனும் அவன் பாரிவாரங்களும்
முகத்தில் கைவைத்தவாறு அதிர்ந்துபோய் நின்றனர்.
'வரலாற்று மோசடி' அவர்கள் வாய் முணுமுணுத்தன.
மேலும் புயல் வீசிற்று.
அவர்கள் அள்ளுண்டு போயினர்.
'பாருங்கள், பயங்கரவாதிகள் செயலிது!'
தலைவர் கூறினார்.
அனைவரும் 'ஓம்' என ஒப்புக்கொண்டனர்.
புயலாய் மாறிய பயங்கரவாதம்!
எமது வாய்கள் உச்சரித்தன.

2 'தெற்கே இனநாயகமும் வடக்கே இந்துமாக் கடலும்
எம்மைக் கூனிக் குறுகிடச் செய்திடவில்லை
எம் இலக்கை நோக்கிப் புயலாய் எழவே செய்தன'
பயங்கரவாதிகள் பெரிதாய் முழங்கினர்.
தூரத்தே பெயர்ந்து வரும் புயலின் பிளிறல்
எல்லோர் நெஞ்சையும் அதிர வைத்தது.
எது எவ்வாறாயினும்,
எனது தேநீர்க் கோப்பையுள்
இன்னும் புயல் சுழன்றவாறே இருந்தது.

(2007)

*1 போரை ஊக்குவிப்பதற்காகப் போர் ஆயுதங்களை முதன்மைப்படுத்தும், கண்காட்சியின் பெயர்.*

*2 தெற்கே கடலும் வடக்கே கொடுந்தமிழரும் இருக்கையில் நான் எப்படி கூனிக்குறுகாமல் கிடக்கமுடியும் என்று எல்லாள மன்னனுக்கு எதிராகப் போரிட்ட துட்டகைமுனு கூறியது இங்கே மாற்றிச் சொல்லப்படுகிறது.*

[ கவிதை ]

# கபாலங்களைக் காவிச்செல்லும் பறவைகள்

## இளங்கோ



### கபாலங்களைக் காவிச்செல்லும் பறவைகள்

நள்ளிரவிலமும் குழந்தைகளை கதகதப்பாக்க
சிமினி விளக்குகளை காவியபடி
பறக்கும் சாம்பல் பறவைகள்
எனது குற்றங்களின் குறுகுறுப்பை
தாங்க முடியாத் துயரத்தில்
தவறவிடுகின்றன விளக்குகளை

சிதறிய எண்ணெய்த்துளிகளிலிருந்து
முத்துக்குமாரிலிருந்து முருகதாசன்வரை
எண்ணற்றோர் தீ மூட்டிக்கொள்ள
நூற்றாண்டுகளாய் நிலத்தினுள்
உறைந்துபோயிருந்த போர் அரக்கன்
விழிகள் விரித்து
இன்னமும் உடலங்கள் தாவென்று உக்கிரத்துடன்
தன் அகண்ட வாயைப் பிளக்கிறான்
வன்னிப் பதுங்குகுழிகளுக்குள்.

அவ்வைக்கு கள்ளோடு தமிழூட்டி
முன்னோர் காலத்தில் சந்ததிகளைப் பிரசவித்தபடி
காடுகளில் அலைந்த ஆதித்தாயே
குழந்தைகளின் குருதி குடித்தும்
எவரினதும் தாகம் தீராக்கண்டு
எல்லாப் பூர்வீகப் பிரதிகளும்
தம்மைத் தாமே எரிக்க
எமதெல்லோரினதும் அடையாளமாகிறது மகாவம்சம்

உடலங்கள் புதைந்த சதுப்புநிலத்தில்
இன்னமும் கொய்வதற்கு மிஞ்சியுள்ள
தலைகளுக்காய் காத்திருப்பவர்களின்
கைகளில் 'சமாதானம்' இருக்க
அரசர்களும் அதிகாரங்களும்
கவனிக்கவும் கதைக்கவும்படும் காலத்தில்
நாயொன்று கவ்விக்கொண்டுவந்த
எலுமிச்சை குத்தப்பட்ட வைரவரைப்போல
அநாதரவாயினர் மக்கள்

பறவைகள் காவிச் செல்லும்
சிமினி விளக்குகளுக்காய் குழந்தைகள் காத்திருந்த காலம்போய்
நேற்றுச் சரிந்து வீழ்ந்த உடலுக்கு
கொள்ளியிட எந்தப் பிசாசு நெருப்புக்கொண்டுவருமென்று
காத்திருக்கும் விழிகளின் கோரம் தாங்காது
நான் அனுப்பிக்கொண்டிருக்கின்றேன் எண்ணெய் ஊற்றி
எரியூட்டிய எனது கபாலத்தை.

### உடலப்பச்சையங்கள்

1. நேற்றைகளின் இரவுகளின்
ஒவ்வோர் கதகதப்பான அழைப்பிலும்
பச்சையம் படிந்து உருவான காடுகள்
கழுத்திலொரு வளையம் அணிவித்து

காலம் நம்மை நெருக்கியபோது
எல்லா இரகசியங்களையும்
தம்மோடு மூடிக்கொண்டு
துயரத்தில் தற்கொலை செய்திருந்தன
'எல்லாமும்' இருக்கின்ற
யாருமற்ற பனிப்பாலையில்
சுழியத்திலிருந்து தொடங்கும் பதியங்கள்
தவறுகளின் துரிதகதியில் ஊரத்தொடங்குகின்றன புத்தகப்பூச்சிகள்
புத்தகங்களும் வேண்டாம் பூனாவும் வேண்டாமென
மூர்க்கமாகி அனைத்தையும் உதைத்துத்தள்ளியபின்
கொளுத்தத்தொடங்கினேன் புத்தகம் + பூச்சிகளை.

2. இப்போது உதிர்ந்துகொண்டிருக்கும்
இலைகளில் பொழியும் மழை
மீண்டும் கிளர்த்திக்கொண்டிருக்கிறது கனவுகளை.

'நமக்கான கனவுகள் தனித்துவமானவை'
நூறிலிருந்து சுழியத்துக்கு நகர்ந்துகொண்டிருந்த
விருப்புக்களின் சதுரங்கத்திற்குள் நின்றொலித்திருக்கிறேன்
பாம்பு வாலால் சுழற்றி வீழ்த்தியபோதும்
ஏணியில் ஏற்றிவிட 'தொலைவிலொரு குரல்' காத்திருந்தது

பச்சையங்களில் வளர்த்த
நமக்கான காடு தற்கொலையை நாடியபோது
அதன் கடைசிப்பொழுது கத்தரிப்பூ நிறத்திலிருந்தது
பிடித்தமான கள்ளிச்செடிகளை வளர்க்கக்கூட
மூர்க்கமாய் மறுத்துத் தரிசானது நிலம் (அல்லது காடு).

3. பிறருக்கான
நன்றிகளையும் விருப்புக்களையும்
மறுதலித்து பாவங்களின் குறுக்குமறுக்குமான
முடிவிலி வலைக்குள் வீழ்ந்தா நானா?
நமக்கான கனவா?
காடெரிந்த கத்தரிப்பூச் சுவாலை
மீண்டும் ஊருலா வருகையில்
காலையில் தருமொரு முத்தமாய்
உன்துயில் கலைக்காது 'போய்விட' விரும்புகின்றேன்

'எரிப்பதை விட வனாந்தரத்தில் புதைப்பதே விருப்பமானது'
அன்பே, தயவுசெய்து மறந்துவிடாதே
கனவு எண் இருபத்தைந்தை.

காடு தன்னை எரித்ததுபோலவன்றி
அடையாளமின்றிப்போவதை மறுக்கின்றேன்
'இந்தக் கனவுகள் ஈரலிப்பானவை நித்தியமானவை நிகழக்கூடியவை'

பஞ்சவர்ணக்கிளியின் வழிகாட்டலோடு
கனவுகளை நிகழ்த்திக்காட்ட
வருமொருவரின் காலடித்தடங்களுக்காய்
மிதந்தபடியிருக்கட்டும்
என்னுடலப் பச்சையங்கள்.

**'நீ இன்னும் அழவில்லை'**

1. நேசத்தின் கசப்பு
மரங்களில் துளிர்த்து
நிலவொன்று தன்னை
தீமூட்டிக் கொன்ற கரியவிரவொன்றில்
இத்தெருக்களின் விளிம்புகளில் தொலைந்திருக்கின்றேன்
புராதனத்து மணத்தை
*வளாகத்துப் புறாக்கள் சிறகடித்து பரப்பிய
தேவாலயத்தின் வாசலில்
நாடற்றவனாகவும்
ஒருத்தியின் வெறுப்புக்குரியவனாகவும்
ஒருபொழுதில் கிடந்துமிருக்கிறேன்.

தன் மூதாதையர் நெய்துகொடுத்த
போர்வையைப் பகிர்ந்த பூர்வீகக்குடி
தங்களின் களவாடப்பட்ட நிலங்களின்மேல்
கட்டப்பட்ட இப்பெருநகரத்தின
வரலாற்றைத் துப்புகையில்
சூரியன் யாரையோ தொலைவில்
சுட்டுவிட்டு தலைமறைவாகிப்போவது தெரிந்தது
வானம் கருஞ்சாம்பலைப் போர்த்தியபடி
கொல்லப்பட்ட உடலைத் தேடிப் பகலில் அலைந்தது

இன்னமும் உலர்ந்துவிடாத
உயிர்தலுக்கான பச்சையத்தை
நேசமாயொருத்தி பகிர வந்தபோது
நாடற்றவர்களான நாமிருவரும்
இன்னமுமித்தெருக்களில்
திசைகளற்று அலைவதற்கான
சந்தர்ப்பங்கள் விழித்திருக்கின்றதென்றபடி
விடைதந்தார் பூர்வீகக்குடி

2. இன்று
நிகழ்கின்ற ஊழிப்பெருங்கூத்தில்
நின்று அழுவதற்கான காலங்கூட இல்லை
விழி நிரப்புகின்ற கண்ணீர்த்துளிகளை
குரல்களிலும் பதாதைகளிலும்
மறைத்து வைத்து
எவருமே செவிமடுக்காத சூனியத்தில்
எங்களைக் காப்பாற்றுங்களெனக் கெஞ்சுகின்றோம்
படுகொலைகளை நிறுத்தச்சொல்லி
எங்களோடு உரத்துக்கத்தும் 9வயது கீர்த்தி
தமிழ் மக்களைக் காப்பாற்ற
ஏனோர் சீனப்பெருஞ்சுவர் கட்டியிருக்கக்கூடாதென்கிறான்;
சிறுவர்களுக்கு கடந்த காலமோ
யார் நல்லவர் கெட்டவரென்ற
பகுப்பாய்வுகளுக்கோ அவசியமிருப்பதில்லை
இருளுகின்ற இக்கணத்து வானத்திலிருந்து
தெறிக்குமொரு மின்னலைப்போல
இறந்தவர்கள் நாளை உயிர்ப்பார்களென
கனவு காண்கிறார்கள் அவர்கள்

பிரிய கீர்த்தி,
என்றேனும் ஒருநாள்
எல்லோரும் நிதானமாய்க் கேட்கக்கூடிய
உனக்கதிகாரமுள்ள ஒரு சபையிலிருந்து...
நெடுஞ்சாலையில் வாத்துக்கள் நடந்துபோனாலே
கார்களை மணிக்கணக்கில் நிறுத்தி
வழிவிடும் இம்மக்கள்
பல்லாயிரக்கணக்கானோர் அழிவின்போது
மவுனம் சாதித்து
தங்களை நிர்வாணமாக்கிய வரலாற்றையும்,
எங்களைப் பகடையாக்கி சூதாடிய வல்லரசு
அடையாளமின்றி உடைந்து போனதையும்
என் கல்லறை முன்வந்து செப்பு.

அப்போது ஓர் ஊற்றாய் அழுது தீர்க்கிறேன்
ஏன் சிச்சியா
எல்லோரும் அழும்போதும்
நீயின்னும் அழவில்லையெனும் உன் கேள்விக்கு.

*Toronto Campus (May 10, 2009)

[ சிறுகதை ]

# நரகத்திற்குச் செல்லும் நான்

## கறுப்பி

சில மணிநேரங்கள் கண்களை மூடித் தியானநிலையில் இருக்கும் போது எல்லாமே வந்து விடுகின்றது. வந்தவற்றைக் கண்களைத் திறந்து மீண்டும் ஒரு முறை மீட்டுப் பார்க்க முயல்கையில் ஒன்று மற்ற நிலையே எஞ்சியிருக்கும்.

திட்டமிட்டுச் செயல்படுபவர்கைளப் பார்க்கையில் வெறுப்பாக வருகின்றது. முறுக்கிவிட்டது போல் ஒவ்வொருநாளையும் ஒரே மாதிரி, மூன்று நேரம் சாப்பிட்டு, அதற்கிடைப்பட்ட நேரத்தில் வேலையும், உதிரி வேலைகளையும் செய்து முடித்து கட்டிலில் "டாண்" என்று அதே நேரத்திற்குச் சரிந்து, இன்று உடலுறவு கொள்ளலாம் என்று முன்கூட்டியே குறித்து வைத்திருப்பார்களோ என்னவோ. இயக்கம் என்பது இவர்களை இயக்கிக்கொண்டேயிருக்கின்றது. இவர்களும் இயங்கிய படியேயிருக்கின்றார்கள்.

நான் இப்படித்தான், இப்படித்தான் இருக்கப்போகின்றேன் என்று முடிவெடுத்த பின்னர் யாராவது அடையாளப்படுத்தவோ, ஒரு கட்டத்துக்குள் அடைத்து விடவோ முயல்கையில் கோபம் வேகமாக வந்து போகின்றது. (போகின்றது என்றவரை சந்தோஷம்தான்) இன்று போல் நாளை வாழ மனம் ஒப்பா நிலையில் அலைந்து கொண்டிருக்கின்றேன்.

'சுஷானி' என்ற போது இந்தியாவாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தாலும், உருவம் அதற்குப்; பொருந்தாமல் இருந்தது. நிச்சயமாக ஐரோப்பா அதிலும் குறிப்பாக லண்டனிலிருந்து வந்திருப்பாள் என்று மனதுக்குள் பட்டது. இங்கிலாந்து மக்களுக்கென என் கணிப்பில் இருக்கும் அந்தக் கச்சிதமான உடை அலங்காரம் முழுமையாக அவளிடமிருந்தது. பொன்நிறத் தலைமயிரை கட்டையாக வெட்டியிருந்தாள். மிக நாகரீகமாக உடையணியும் பல்கலாச்சாரப் பெண்கள் மத்தியில், ஒரு அலுவலகத்திற்கேயான ஒழுங்கு முறையான உடையணிந்த அவள் கதைக்கும் போது ஆங்கிலத்தைச் சிரமப்பட்டுத் விழுங்கிய போதுதான் எனக்குள் சந்தேகம் எழுந்தது. எங்கிருந்து வந்திருக்கின்றாய் என்று கேட்டேன். ரஷ்யா, கனடா வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றது என்றாள். நான் உடனேயே எழுந்து நின்று விட்டேன்.

விடுமுறைக்காக இந்தியா சென்றிருந்த போது நாங்கள் சென்ற புகையிரத வண்டி கேரளாவைக் கடந்து செல்கையில் நான் யன்னலால் எட்டி எட்டி எதையோ தேட பொறுமை இழந்த என் கணவன் என்னத்தை அப்படி ஆவலோடு தேடுகிறீர் என்று கேட்டபோது மோகன்லால் அல்லது மம்முட்டி யாராவது கண்ணில் தட்டுப்படுகின்றார்களா என்று பார்க்கின்றேன் என்று சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. இப்போது அந்தப் பட்டியலில் மீரா ஜாஸ்மீனும் சேர்ந்துகொண்டிடுள்ளார்.

நான் கலவரம் அடைந்து விட்டேன். 'நீ பிறந்த ஊர் எது? யஸ்னயா போல்யனா விற்குச் சென்றிருக்கின்றாயா?' 'பிளேஸ் வித் த லிட்டில் கிறீன் ஸ்டிக்'; ஐப் பார்த்திருக்கின்றாயா? கேள்விகளை அடுக்கத் தொடங்கினேன். நான் எழுந்து நின்றதையும், என் விசித்திரமான கேள்விகளையும் கண்டு அவளும் கலவரம் அடைந்து என்னை வினோதமாகப் பார்த்தாள்.

நான் என்னை சுதாகரித்த படியே, இல்லை ட்ரோல்ஸ் ஸ்ரோய் என்றால் விசராகும் அளவிற்கு பிடிக்கும். அன்ட்ரூவையும், லெவினையும் உண்மையாக் காதலிப்பவள் நான் என்றால் நம்பவா போகிறாய்?. நான் நினைக்கிறேன் அன்ட்ரூவையும், லெவினையும் லியோ தன்னை வைச்சுத்தான் உருவகப் படுத்தியிருக்கின்றார் என்று. அப்பிடிப் பார்த்தால் உண்மையிலேயே நான் காதலிப்பது லியோவைத்தான் என்று நினைக்கின்றேன் என்றேன்.

வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே ஒரு லூசிடம் மாட்டிக்கொண்டு விட்டேனோ என்ற பாவனையில் முகத்தைத் திருப்பித் தனக்காக மேசை மேல் வைக்கப்பட்டிருந்த வேலைப் பத்திரங்களைக் கையில் எடுத்துப் புரட்டத் தொடங்கினாள் அவள். நான் அவமதிக்கப்பட்டது போல் உணர்ந்தேன். என் மேசையின் பக்கம் திரும்பி ஒரு தமிழ் பாடலை முணுமுணுத்த படியே அவள் என் கேள்விகுப் பதில் சொல்லாது திரும்பிக் கொண்டது பெரிய பாதிப்பு ஒன்றையும் எனக்குத் தரவில்லைப் போல் காட்டிக்கொண்டு எனது வேலையில் மிக மும்மரமாக ஈடுபடத் தொடங்கினேன். நான் அவளுக்கு வேலையில் மூத்தவள். வயதில் நிச்சயமாகச் சின்னவளாகத்தான் இருப்பேன் என்றொரு நம்பிக்கை. வேலையில் சந்தேகம் வந்தால் நிச்சயமாக என்னிடம் தான் கேட்க வேண்டும் அப்போது பார்த்துக் கொள்கின்றேன் என்று என் காயப்பட்ட மனதிற்கு ஆறுதல் சொன்னேன். நான் மின்கணனியின் மேல் பார்வையைச் செலுத்தும் போது அவள் என் கடைக்கண் பார்வையில் விழுந்தபடியே இருந்தாள். ஒரு பத்திரத்தை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிய படி என் பக்கம் திரும்புவதும் பின்னர் அதிகாரியின் அறை பக்கம் பார்வையை ஓட்டுவதுமாகத் தடுமாறிக் கொண்டிருந்தாள். ஒரு கிழமை வேலைப் பயிற்சியை முடித்துக் கொண்டு மிக ஆர்வமாக

முதல் நாள் வேலையைத் தொடங்கியவளுக்கு முதல் பத்திரமே சந்தேகத்தை எழுப்பி விட்டிருந்தது. நான் மனதுக்குள் குதுகலித்துக் கொண்டிருந்தேன். வழமையாக மற்றவர்களின் துக்கத்திலோ, சிரமத்திலோ குதுகலிக்கும் வன்மமான மனம் கொண்டவளல்ல நான். இன்று அப்படி உணர்வதில் எனக்குள் சங்கடமான ஒரு சந்தோஷம்.

சில நிமிடங்களின் பின்னர் என் மனச்சாட்சி என்னைத் தொல்லை செய்தது. நான் மிகவும் மும்மரமாக வேலையில் ஈடுபடுவதுபோல் பாசாங்கு செய்வதால் அவள் என்னைத் தொந்தரவு செய்யத் தயங்குகின்றாள். இல்லாவிட்டால் என்னிடம் ஏதாவது கேட்கப் போய் நான் பதில் சொல்லப்படாத கேள்விகளை மீண்டும் தொடரலாம் என்ற தயக்கம் கூட அவளுக்கு இருக்கலாம். நான் என் முதல்நாள் வேலை அனுபவத்தை மனதுக்குள் ஒருமுறை மீட்டுப் பார்த்தேன். எப்போதுமே என்மேல் அபரிமிதமான நம்பிக்கை கொண்டவள் நான். அதனால் சிலவேளைகளில் அதிகப்பிரசங்கித் தனமாக நடந்து கொண்டு மூக்கை உடைத்துக்கொள்வதும் உண்டு. ஒருகிழமை வேலைப் பயிற்சியின் பின்னர் இந்த மேசைக்கு நான் அனுப்பப்பட்டு முதல்பத்திரம் என் கைகளுக்கு வந்தபோது நானும் தடுமாறித்தான் போனேன். முதல் பத்திரமே என்னை முழுசிப் பார்த்தது. முதல்கோணல் முற்றும் கோணலாய் போய் விடுமோ என்ற அச்சத்தில் நான் முழித்திருக்கையில் நான் கேட்காமலே தானாய் வந்து கைகொடுத்தவர்கள் பலர். இப்போது நான் அனுபவசாலி. பலருக்கு உதவியிருக்கின்றேன். நீ என் பக்கத்து மேசைக்காறி. உனக்கு நான் உதவுவேன் என்ற நம்பிக்கையில் உன்னை ஒருவரும் நாடிவரப் போவதில்லை. என் உதவி உனக்கு நிச்சயம் தேவை என்பது எனக்குப் புரிகிறது, ஆனால் நீயாகக் கேட்க வேண்டும் என்று என் குரூரமனம் ஏனோ என்னை உனக்கு நானான உதவுவதை இழுத்துப் பிடிக்கின்றது.

ஏதாவது ஒரு உரையாடலுடன் அவளுக்கு உதவி வேண்டுமா என்றறிந்து உதவு என்று என் நல்ல மனம் உத்தரவிட்டது. நான் ஒரு சுவிங்கத்தை எடுத்து ஒன்றை வாயிற்குள் போட்ட படியே இயல்பாக அவளின் பக்கம் ஒன்றை நீட்டினேன். இப்போதாவது அவள் இறங்கி வந்து என்னிடம் தானாக உதவி கேட்கின்றாளா என்று பார்க்கும் எண்ணத்தோடுதான் நான் அதைச் செய்தேன். அவள் சிநேகிதமாய் சிரித்த படியே ஒன்றை எடுத்துக் கொண்டு நன்றி சொன்னாள். எல்லாம் சரியாக இருக்கிறதா? சந்தேகம் ஒன்றும் இல்லையே என்று கேட்டேன். தடுமாறிய படியே பத்திரத்தை என்னிடம் காட்டித் தனக்கான சந்தேகத்தைக் கேட்டாள். நான் சந்தோஷத்துடன் அவளுக்கு விளக்கிக் கூறினேன். அவள் நட்போடு சிரித்த படியே நன்றி சொல்லி விட்டு வேலையை ஆரம்பித்தாள்.

உதவி பெற்றுவிட்டாள். இப்போது அவள் எனக்கு அடிமை. தேத்தண்ணி இடைவேளையில் போது அவளையும் அழைத்துக் கொண்டு ஓய்வு அறையின் பக்கம் சென்றேன். அவள் கண்களில் என்னுடன் உரையாடல் தொடங்குவதற்கான மிரட்சி தெரிந்தது. முதல் முதலில் ஒருவர் அறிமுகமாகும் போது இரண்டு நல்ல வார்த்தை பேச வேண்டும் என்பதை மறந்து நான் கேட்ட கேள்விகளுக்காக இப்போது வருந்தி, “உனக்கு எத்தனை பிள்ளைகள்?, என்ன பிள்ளைகள்?, எத்தனை வயது? என்ற உப்புச்சப்பில்லாத வழமையான கேள்விகளைக் கேட்டு அவளை இயல்புநிலைக்குக்கொண்டுவந்தேன். இருந்தாலும் என் முந்தைய கேள்விகளைச் சுற்றியே என் மனம் சுழன்றுகொண்டிருந்தது. தேனீரோடு ஒரு பிஸ்கட்டையும் சாப்பிட்டு விட்டுத் திரும்பவும் எமது இருக்கைக்கு வந்தோம். இப்போது அவள் என்னோடு ஒட்டிக்கொண்டு விட்டாள். கைப்பைக்குள் இருந்து தனது குடும்பப் படத்தை எனக்கு எடுத்துக் காட்டினாள். இரண்டு பெண்பிள்ளைகள். மூத்தவள் அண்மையில்தான் திருமணம் செய்ததாகச் சொன்னாள். மருமகனைத் தனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றாள். விட்டால் வேலை எதையும் செய்யாமல் குடும்பக் கச்சேரி நடத்தத் தொடங்கிவிடுவாளோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்க, எனது “சீனியோரிட்டியை” இப்போது காட்டி அவளைச் சிறிது நோகப்பண்ணலாம் என்று என் சாத்தான் மனது சொன்னது. “வேலை நேரத்தில இப்பிடி அளவுக்கு அதிகமாக் கதைக்கக் கூடாது, அதிகாரி கவனித்தால் உனக்குத்தான் பிரச்சனை” என்றேன். அவள் முகம் சுருங்கிக் கொண்டது. உடனே மன்னிப்புக் கேட்டு விட்டு தன்வேலையைத் தொடங்கினாள். எனக்குத் திருப்தியாக இருந்தது. யாரையாவது அதிகாரம் பண்ணும்போது கிடைக்கும் சந்தோஷமே அலாதிதான். என் கணவர் எதற்கு வேண்டாததற்



கெல்லாம் என்னை அதிகாரம் பண்ணுகின்றார் என்பது இப்போது புரிந்தது.

தொடர்ந்து வந்து நாட்களில் அவள் தனக்கான வேலைத்தள நண்பியாக என்னை வரிந்து கொண்டாள். அவளை நான் வெறும் ‘தொல்லை’ என்பதாய்க் காட்ட முயன்றாலும் அவள் என்னைச் சுற்றிசுற்றி வருவது எனக்கும் பிடித்திருந்தது. எங்கள் ஆங்கில அறிவு ஒருவருக்கொருவர் ஒத்துப்போவதாய் இருந்தது. அவளுடைய உச்சரிப்பு எனக்கு விளங்கவில்லை என்று நக்கலாக நான் சொல்வதுண்டு. புலிக்கு (நாலுகால் மிருகம்) வாலாய் இருப்பதை விடப்

பூனைக்குத் தலையாய் இருக்கலாம் என்று மனம் சொன்னது. என் உச்சரிப்பு அவளுக்கும் நகைப்பாய் இருக்கின்றது என்று தெரிந்த போது எனக்குள் கோபம் எழுந்தது. எத்தனை வருடங்கள் கனடாவில் வாழ்ந்தாலும் று க்கும் ஏ க்குமான உச்சரிப்பு வித்தியாசம் விளங்கமாட்டேன் என்கிறது. கனேடியர்கள் முன்நிலையில் சரியாக உச்சரிக்கின்றோமா என்ற தயக்கத்தோடு கதைப்பதை விட அவளோடு கதைப்பது சுலபமாக விருந்தது. இருந்தும் ஏதாவதொரு காரணம் கண்டுபிடித்து அவளை மட்டம் தட்டி அவள் முகம் சுருங்கிப் போவதைக் கண்டு வக்கிரமாகத் திருப்திப்படுவதுமுண்டு. சிலவேளைகளில் அவள் முகம் சுண்டிப்போவதைக் கண்டு என் மனமும் நொந்து போகும். எதற்காக நான் இப்படி நடக்கின்றேன் என்று என்னை நானே கேட்பதுமுண்டு. அவள் ஒரு பிற்போக்குவாதி முட்டாள்தனமாக எதையாவது புகுத்துவாள். நான் ரோல்ஸ் ரோய், தவ்தஸ்வாக்கி, சிமோன்தி

பூவா. பிரேட்ய் அது இதுவென்று வாசித்துத் தள்ளும் ஒருமுற்போக்குவாதியாக இருந்துகொண்டு எதற்காக இந்தச் சின்னத்தனம். அவள் பிற்போக்குவாதி குறை உடையவள். நான் முற்போக்குவாதி அனைத்தையும் அறிந்தவள். எனவே குறை உள்ள ஒரு உயிரினத்தை நிறைவான ஒரு மனிதன் காயப்படுத்த மாட்டான் என்று நான் கண்டுபிடித்த தத்துவத்தின் மூலம் எனக்குள்ளேயே ‘அவளை மனம் நோகப்பண்ண மாட்டேன்’ என்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டேன்.

அவளுக்கும் எனக்கும் சின்னச்சின்ன விஷயங்களிலெல்லாம் போட்டி இருந்தது. சின்னச்சின்ன



விஷயங்கள் என்று சொல்வதைவிட உப்புச்சப்பில்லாத விஷயங்கள் என்று சொல்வதுதான் சரி. எப்படிப்பட்ட விஷயங்களுக்குப் போட்டி போடுவது என்று விவஸ்தையே இல்லாமலே போட்டி போட்டுக் கொண்டிருந்தோம். அவளிலும் பார்க்க எனக்கு சிறிது ஐ.கியூ கூடுதலாக இருக்கிறது என்றே நம்புகின்றேன். எங்கு எப்படி அவளை அடிக்கலாம் என்று புரிந்து வைத்திருந்தேன். எனது சத்யபிரமாணம் அவ்வப்போது மறந்து போகும். ஐம்பதை எட்டிக்கொண்டிருக்கும் இருவருக்கிடையிலும் யாருக்குக் குறைவாக நோய் என்பதில் போட்டி. 'நாரி சரியாக நோகுது' என்று அவள் சொன்னால், 'நான் நல்ல ஃபிட்' என்று நான் சொல்வேன். 'எனக்கு இண்டைக்கு டொக்டரிடம் அப்பொன்ட்மென்ட்' என்று நான் சொன்னால் அவள் கண்கள் மின்ன முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு 'உடம்புக்கு என்ன என்பாள்', அவள் உள்ளம் வேண்டுவது ஏதாவது ஒரு கொடிய நோயைத்தான் என்று எனக்குப் படும், நான் மிக இயல்பாக முகத்தை வைத்து, மார்பகத்தில் தட்டுப்படும் கட்டியால் ஒருகிழமையாகத் தொலைத்த நித்திரையையும் மறைத்து 'சும்மா ஒரு செக்கப்' என்பேன். மதியநேரம் சாப்பாட்டு வேளையில் யார் என்ன சாப்பாடு என்பதிலும் போட்டி. மிளகாய்த்துள் உடம்புக்குக் கூடாது என்பாள் அவள். எங்கள் மசாலாப் பொருட்கள் மேல் மோகம் கொண்டுதான் ஐரோப்பியர்கள் எமது நாட்டைக் கைப்பற்றி ஆண்டார்கள் அது தெரியுமா உனக்கு என்று அவளை நான் மடக்குவேன். உங்கள் உணவு எந்தவிதமான உப்புச்சப்பும் இல்லாமல் இருக்கிறதே எப்படித்தான் சாப்பிடுகின்றீர்களோ என்று அலுத்துக் கொள்ளுவேன். என் அதிரடிகள் தாங்காது அவள் மௌனமாவாள். எனக்கும் கவலையாக இருக்கும். வாழ்க்கையில் என் கணவன், குழந்தைகளோடு செலவிடும் நேரத்தைவிட அவளோடு நான் செலவிடும் நேரமே அதிகம். அவளோடு சுமூகமான உறவு ஒன்றை மேற்கொள்வதை விடுத்து எதற்காக இத்தனை காழ்ப்புணர்வு.

எங்கள் கணவர்கள் பற்றியும் எங்களுக்குள் போட்டி. இந்த விடையத்தில் நான் கொஞ்சம் 'வீக்'. என் முற்போக்குப் பெண்ணியச்சிந்தனை என்பனவற்றில் உணர்ச்சிவசப்பட்டு என் கணவனின் அதிகார குணம் பற்றிப் போட்டு உடைத்து விட்டேன். அவள் நிதானமாக ஒரு சம்மனசுபோல் புன்னகைத்தபடியே 'என் கணவன் மிகவும் நல்லவர். அவரைப் போல ஒரு நல்ல கணவன் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்கின்றேன். நான் வாழ்வில் மிகவும் சந்தோஷமாக உள்ளேன். நான் மிகவும் அதிஷ்டசாலி, அதிஷ்டசாலி' என்றாள் கண்களை மயங்குவது போல் மூடி மூடித் திறந்து. எனக்கு யாரோ அம்மிக்குளவியைத் தலையில் துக்கிப் போட்டதுபோல் இருந்தது.

எந்த ஒரு சூழ்நிலையிலும் உனது குடும்ப அங்கத்தவரைப் பற்றிக் குறை கூறாதே. எல்லா வீட்டின் அலுமாரியிலும் எலும்புக்கூடுகளே உள்ளன, ஆனால் ஒருவரும் கதவைத் திறந்து காட்டப் போவதில்லை. உண்மை பேசுகின்றோம், நேர்மையாக இருக்கின்றோம் என்று முட்டாள்தனமாக உன் அலுமாரியின் எலும்புக் கூடுகளை வெளியே எடுத்துப் போடாதே. எனது சகோதரியின் கூற்று என் மண்டையில் தட்டியது.

சில கிழமைகளுக்கு முன்புதான் ஒரு வெள்ளிக்கிழமை நான் தொலைபேசி மூலம் ஆங்கில நாடகம் ஒன்றிற்கான பற்றுச்சீட்டுப் பதிவு செய்த போது ஒட்டுக் கேட்டவள் போல், நான் தொலைபேசியை வைத்தவுடன் என் அருகில், மிக அருகில் வந்து 'எங்கே போகின்றாய்?' என்றாள். 'வேலை முடிய நாடகம் ஒன்றிற்குப் போகப் போகின்றேன் வெள்ளிக்கிழமைகளில் பத்து டொலருக்கு டிக்கெட் கிடைக்கும் நீயும் வருகின்றாயா?' என்று கேட்டேன். அதிர்ந்தவள், தனியாகவா 'போகின்றாய்?' என்றாள். 'ஓம்' என்ற எனது பதில் அவளுக்கு மேலும் அதிர்சியைத் தந்திருக்க வேண்டும், 'உன் கணவன் இதற்கெல்லாம் சம்மதிப்பாரா?' என்றாள்.

'அனுமதி கேட்டால் சம்மதம் கிடைக்காது, அறிவித்து விட்டுப் போகப் போகின்றேன்' என்றேன். அவள் முகம்; சுருங்கிக் கொண்டது. 'என் வீட்டில் ஒரு கொலையே விழும் என்றாள்'. அங்கொங்கும் இங்கொங்றுமாக அவளுடனான உரையாடல்களில் இருந்து சேகரித்ததகவல்களின் படி 'இப்பிடி ஒரு அருவீமாயன(நல்ல) கணவனை அடைய நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்' என்ற 'டயலாக்' இற்குச் சிறிதும் பொருந்தாதவர் அவள் கணவன் என்பது என் அனுமானம். இன்று அனைத்தையும் மறந்து தன் கணவனை உயரே உயர்த்திச் சுழற்றுகின்றாள்.

தான் அதிஷ்டசாலி,அதிஷ்டசாலி என்று அவள் கூறியதைத்தொடர்ந்து என் முகம் போன போக்கில் நான் பெரியதொரு தாக்குதலுக்கான வார்த்தைகளைச் சேகரிக்கின்றேன் என்று அவள் ஊகித்துக் கொண்டவளாய் உடனேயே அந்த இடத்திலிருந்து விலகிக் கொண்டாள். என் மனம் பாம்புபோல் சீறிக்கொண்டிருந்தது.

'ப்பிச்' வாயுக்குள் முணுமுணுத்துக் கொண்டு இனிமேல் இவளோடு நான் சேரப்போவதில்லை என்று அருவரிப்பிள்ளைகளைப் போல் முடிவெடுத்துக் கொண்டேன். அன்று மீதியிருந்த நாட்களில் வேலையில் என் மனம் ஓடவில்லை. இவளை ஏதாவதொரு வழியில் தாக்கிவிடவேண்டும் என்று என் மனம் திட்டம் போட்டது. அவ்வப்போது என்ன ஆச்சு உன் சத்தியபிரமாணம்? என்று என் சாத்தான் மனம் அடித்துக்கொள்ள, அவளைத் தாக்குவதென்று முடிவெடுத்த பின்னர் அதனைச் சரியென்று சரிப்படுத்துவதற்கான காரணத்தை என் மனம் தேடித் தேடிக் களைத்துப் போனது. கோவத்தால் கனைத்துக் கொண்டிருந்த மனதோடு அன்றைய நாள் முழுக்க அநியாயமாகிப் போக இதன் மிகுதியை வீட்டிற்கும் இழுத்துச் சென்று கணவர், குழந்தைகளிடமும் சீறப் போகின்றேன்.

அதன் பின்னர் அவளைத் தவிர்த்து ஆனால் அவளின் காதுகளில் படும்படி, என் கணவர் எனக்காகச் சாப்பாடு கட்டித்தந்திருக்கின்றார், இன்று நான் போட்டிருக்கும் உடை என் கணவர் எனக்காக வாங்கி வந்தது,நேற்று வேலையிலிருந்து வீட்டிற்குச் சென்றபோது இரவு உணவு மேசையில் மெழுகுதிரி சகிதம் இருந்தது, அருகில் பூக்கொத்து வேறு என்று இல்லாத கற்பனையில் எனது ஒண்டுக்கும் உதவாத கணவனை மற்றவர்களுக்குப் புழுகித் தள்ளிக்கொண்டிருந்தேன். அவர்களும் ஆ.. ஓ.. என்று என் சந்தோஷத்தில் பங்கெடுத்துகொண்டார்கள். 'அப்படி என்ன அற்புதம் அவருக்கு நீ செய்து விட்டாய்?' என்ற கேள்வி வேறு, நான் பொய்யாக வெட்கப்பட்டுக் கொண்டேன். சுஷானிக் வாயுக்குள் சிரித்துக் கொள்கின்றாளோ என்ற சந்தேகம் அடிக்கடி எனக்குள் வந்து போகாமலில்லை. என் சின்னத் தனம் என்னைக் கேலி செய்தது. உன் பெண்ணியம் இதுதானா என்ற கேள்வி அடிக்கடி என் மனதுக்குள் எழாமலில்லை.

தொடர்ந்து வந்த நாட்களில் அவளோடு வழமைபோல் நேரத்தைச் செலவிட்டாலும் இருவருக்குமிடையில் ஒரு மௌனப்போர் நிகழ்ந்து கொண்டிருப்பது உணரமுடிந்தது. தாக்குதல் எதிர்த்தாக்குதல் என்று அகோரமாகப் போய்க்கொண்டிருந்தன நாட்கள். அவள் ஞாயிற்றுக் கிழமைப் பூசைக்குத் தவறாமல் கோயிலுக்குப் போய் வருவாள் என்பதை அறிந்து கொண்டு 'நீ எதற்காகக் கோயிலுக்குத் தவறாமல் போகின்றாய்?' என்று கேட்டு வேண்டுமென்றே அவளை வம்புக்கிழுத்தேன். 'என்ன

## எந்த ஒரு சூழ்நிலையிலும் உனது குடும்ப அங்கத்தவரைப் பற்றிக் குறைகூறாதே. எல்லா வீட்டின் அலுமாரியிலும் எலும்புக்கூடுகளே உள்ளன.

நீ தெரியாத மாதிரிக் கேட்கின்றாய்? நீ எதற்காக உங்கள் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்கின்றாயோ அதே போல்த்தான் நானும் எங்கள் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்து கொள்கின்றேன்' என்றாள். 'நான் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்வதாக யார் உனக்குச் சொன்னார்கள்?' என்றேன். மௌனமானாள். குழம்பிய நிலையில் என்னைப் பார்த்தாள். ஒரு பெண், ஒரு மனைவி, ஒருதாய், கோயிலுக்குப் போகாமலிருப்பது எவ்வளவு சாத்தியம் என்பது அவளது கற்பனைக்கு எட்டாவிடையம். கண்கள் கொஞ்சம் பனித்திருக்க (என் கற்பனையோ என்னவோ) 'நீ உங்கள் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்வதில்லையா?' என்றாள். இல்லை என்பதாய் நான் தலையசைத்தேன். 'அப்ப வீட்டிலா பிரார்த்திக்கின்றாய்? கோயிலுக்குப் போய்தான் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்ற அவசியமில்லைத்தான்' என்றாள் மிகவும் புரிந்துணர்வு கொண்டவள் போல். 'நான் பிரார்த்திப்பதே இல்லை, எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை, நான் ஒரு நாஸ்த்திகை' என்றேன். அதிர்ந்து போய் நம்பிக்கையின்மையோடு என்னைப் பார்த்தாள். நான் பெருமையாய்ச் சிரித்தேன். அவள் கண்கள் சாந்தமாக மிளிர்ந்தது. மீண்டும் ஒரு சம்மனசு போல்க் காட்சியளித்தாள். பாவப்பட்ட என்னை கடவுள் மன்னிப்பார் என்பது போல் அவள் பார்வை இருந்தது. 'ஆண்டவன் அனைவரையும் மன்னிக்கும் அற்புதம் கொண்டவர், சொர்க்கம், நரகம் இரண்டில் எதற்குப் போகப் போகின்றோம் என்பதை நாங்கள் இப்போது பூமியில் வாழும் போதே தீர்மானித்து அதற்கேற்ப எமது வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் வேண்டும், செய்யும் தவறு...' அவள் முடிக்கு முன்பே குறுக்கிட்டு 'தற்போதைய வாழ்க்கையை நரகமாக்கி நான் இறந்த பின்னர் சொர்க்கம் போக வேண்டிய அவசியம் எனக்கில்லை, அதிலும் பார்க்க இப்போது சொர்க்கத்தை அனுபவித்து விட்டு, இறந்த பின்னர் நான் நரகத்திற்கே போய்க் கொள்கின்றேனே, இருந்தாலும் எனக்கு சொர்க்கம், நரகம், அதிலும் நம்பிக்கை இல்லை' என்றேன். தலையைச் சிலுப்பிக் கொண்டாள்.

அதன் பின்னர் அவள் என்னை முற்றாகத் தவிர்த்து மற்றைய பெண்களோடு நெருங்கிச் செல்வது புரிந்தது. என் ஐகியூ மேல் எனக்கே சந்தேகம் எழுந்தது. அவள் என்னைத் தவிர்த்து, மற்றவர்களோடு சேர்ந்து கொண்டு எனது நாஸ்திகம் பற்றி வம்பு பண்ணுகின்றாள் என்று வேண்டாத கற்பனை எனக்குள் விஸ்வரூபம் எடுத்தது. நானறிந்து எனது அலுவலகத்தில் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் ஒருவருமில்லை. அந்தப் பேச்சுக்கே அங்கே இடமிருக்கவில்லை. வேண்டுமானால் உன்னுடைய கடவுளிலும் விட என்னுடைய கடவுள் மேல் என்ற விவாதத்திற்கு இடமிருக்கலாம். தொடர்ந்த நாட்களில் வெறும் காலை வணக்கத்தோடு எமது நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

2009ம் ஆண்டு பங்குனி மாதத்தில் ஒருநாள், குளிரோடு, சிறிது பனியும் வடிந்து கொண்ருந்தது. தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள் அனைத்திலும் ஈழப்பிரச்சனை முக்கியத்துவம் பெற்றுக்கொண்டிருந்த நாட்கள் அவை. வேலை நேரத்தில் முடிந்தவரை மின்கணனியில் எமது நாட்டு நிலவரம் பற்றி அறிந்து கொண்டிருந்தேன். ஈழ மக்களின் நேரடிப்பாதிப்புக்கள் ஒளிநாடாக்களில் பார்க்க நேரிடுகையில் எழும் உணர்வைப் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையில் வேண்டா வெறுப்பாக அலுவலக வேலைளை அளைந்து கொண்டிருக்கும் கண்களும், கைகளும். எனது அலுவலகத்தில் இலங்கையர்கள் ஒருவரும் இல்லாததால், மனம் சோர்ந்து போகும் பொழுதுகளின் நண்பர்களுடன் தொலைபேசியில் மட்டுமே உரையாட முடிந்தது.

அன்று எனது அலுவலகம் அமைந்திருக்கும் பெருஞ்சாலையில் சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை, கடுங்குளிரையும் பொருட்படுத்தாது கை கோர்த்து, பாதாகைகள் தூக்கி 'எமது தலைவர் பிரபாகரன், எமக்கு வேண்டும் தமிழீழம்' என்று கோஷம் போட்டபடியிருந்தார்கள். நான் தலையைக் குனிந்த படியே அலுவலகத்திற்குள் நுழைந்து எனது இருக்கையில் இருந்த பின்பும் பல மணிநேரமாக எனது பதட்டம் குறையவில்லை. பதட்டத்திற்கான காரணம் புரியவில்லை. நான் என்றும் உணராத நெஞ்சின் நெருடல் என்னை அலைக்கழித்துக்கொண்டிருந்தது. வெட்கமா? கவலையா? இயலாமையா? அவமானமா?.

மின்கணனியை அழுத்திவிட்டு வெறுமனே இருந்தேன். சுஷானிக் வேகமாக வந்தாள். எனது தோளைத் தொட்டாள். 'உனது நாட்டில் என்ன பிரச்சனை?, ஏன் உன் நாட்டு மக்கள் கோஷம் போடுகின்றார்கள்?, நீ இது பற்றி ஒருநாளும் கதைத்ததில்லையே.' அவள் கேள்வி தொடர்ந்து கொண்டேயிருந்தது. நான் அப்போதிருந்த மனநிலையில் உரையாடலைத் தவிர்க்க எண்ணி, 'நீ தொலைக்காட்சிச் செய்தியைப் பார்த்து அறிந்து கொண்டிருப்பாய் என்று நினைத்தேன்' என்று கூறிவிட்டு எனது வேலையில் கவனம் செலுத்துவது போல் பாவனை செய்தேன். 'நீ ஏன் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை?, மேலதிகாரியிடம் சொல்லி விட்டு ஒரு மணித்தியாலம் ஆவது போய் வரலாம் தானே' என்றாள். எனக்குள் சினம் எழுந்தது. என் அப்போதான மனநிலை அவளோடு போட்டி போடவோ, விவாதம் பண்ணவோ சுமூமாக இயங்கவில்லை. இல்லை என்பது போல் வெறுமனே தலையை அசைத்தேன். அவளும் விடுவதாயில்லை 'ஏன்?' என்றாள். கண்களில் சினம் பொங்க 'உனக்கு எங்கள் நாட்டு அரசியல் பற்றி என்ன தெரியும்?' என்றேன். அவள் மீண்டும் சாந்தமாகக் 'கோவிக்காதே ஏதோ கொஞ்சம் விளங்குகின்றது, உன்னில் இருக்கும் அக்கறையில்தான் கேட்கின்றேன், அங்கே வெளியில் அந்தக் குளிருக்குள் நிற்பவர்கள் உன் மக்கள் தானே?, உன் இனம் தானே?, அவர்களுக்கு இருக்கும் பிரச்சனை உனக்கும் உள்ளதுதானே? கதவைத் திறந்து கொண்டு வெளியில் இறங்கினால் நீயும் அவர்களில் ஒருத்தி, பின்னர் ஏன் கலந்து கொள்ளாமல் இங்கே நிற்கின்றாய்?' என்றாள். நான் என்னைச் சாந்தப்படுத்திக்கொண்டு 'எனக்கு அவர்கள் அரசியலோடு ஒத்துப் போவதில்லை, அவர்கள் செய்யும் போராட்ட முறை எனக்குப் பிடிக்கவில்லை, எமது மக்களுக்கான தலைவர் என்று குறிப்பிடும் அவரை நான் ஏற்றுக்கொள்ளவில்லை' என்றேன். அவள் மௌனமானாள். காலம் நேரம் பார்க்காமல் ஒரு பெருந்தாக்குதலுக்கு அவள் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டிருந்தாள். கண்களைச் சுருக்கி என்னைச் சிறிது நேரம் பார்த்தாள். பின்னர் குரலைச் செருமிச் சரிப்படுத்திவிட்டு, நிதானமாக 'நீ உனது கணவருக்குத் தெரியாமல் சிலவற்றைச் செய்யும்போது எனக்குள் சந்தேகம் இருந்தது, பின்னர் கடவுள் நம்பிக்கையில்லை என்றாய் அதையும் ஒருமாதிரித் தாங்கிக் கொண்டேன், ஆனால் இப்போது உனது மக்களுக்காக முதியவர்கள், சிறுவர்கள் என்று குளிருக்குள் நின்று வாடுகின்றார்கள் இப்போதும் உன் விதண்டாவாதத்தை நீ விடவில்லை. உனது மக்களுக்காகச் சிறிது நேரம் குளிருக்குள் நிற்க உன்னால் முடியவில்லை, உனது மக்களின் பாதுகாப்பிற்காக உன்னால் கடவுளிடம் இரங்கி வேண்ட முடியில்லை. நீயெல்லாம் ச்சீ.. நீ நரகத்திற்குப் போவது நிச்சயம்' பொரிந்து விட்டு தனது இருக்கையை இழுத்து என்னிலிருந்து மிகத் தூரத்தில் முடிந்தவரை தன்னை இருத்திக் கொண்டாள். ஒரு முழுமையான அதிர்வோடு, உடல்விறைக்க நான் அசையாது இருந்தேன்.

■

[ கட்டுரை ]

# ரோசா லக்சம்பேர்க்

## மணிவேலு பிள்ளை

ஒரு துவக்குச் சோங்கினால் அவருடைய தலை தகர்க்கப்படுகிறது. குற்றுயிருடன் அவர் ஓர் ஊர்தியில் ஏற்றப்படுகிறார். அந்த ஊர்திக்குள் வைத்து அவர் சுடப்படுகிறார். அவருடைய உடல் ஒரு கால்வாயில் வீசப்படுகிறது. 'கிழட்டுப் பரத்தை கிடந்து நீந்துகிறாள்' என்கிறான் கொலையாளிகளுள் ஒருவன். மூன்று மாதங்களாக அது அப்படியே கிடக்கிறது. அப்பொழுது ரோசாவுக்கு 48 வயது. இது அவரது நடுகல்லுரை:

சிவப்பு ரோசாவும் இனி இல்லையே
அவர் புதையுண்ட இடமும் புலப்படவில்லையே
வாழ்வின் பொருளை அவர் வறியோர்க்கு ஈந்தாரே
பொருள்படைத்தோர் அவரைத் துடைத்தெறிந்தனரே.

1919 ஜனவரி 15ம் திகதி ஜேர்மன் படையாட்களால் கொல்லப்பட்ட ரோசா லக்சம்பேர்க் 1871 மார்ச் 5ம் திகதி போலாந்தில், ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தவர். தனது 16 வயது முதல் 3 தசாப்தங்களுக்கு மேலாக அவர் சமூகவுடைமை நாடிப் போராடியவர். சமூகவுடைமை ஊடாகவே நீதி, அமைதி, சமத்துவம் அடையமுடியும் என்று திடமாக நம்பியவர். அவரைப் பொறுத்தவரை மானுடத்தின் இறுதித் தெரிவுகள் இரண்டே இரண்டு: (1) சமூகவுடைமை, (2) காட்டுமிராண்டித்தனம். அதே சமூகவுடைமைக்காகப் போராடிய ரோசா, அதே காட்டுமிராண்டித்தனத்துக்கே பலியானார்!

'அவர் ஒரு சிறிய பெண்மணி. நலிந்த மேனி. வருத்தக்காரி போன்ற தோற்றம். வீறார்ந்த முகம். அறிவொளி வீசும் அழகிய விழிகள். தன் உளவலி, குணநலம் கொண்டு மற்றவர்களை ஈர்ப்பவர். பலவித குணவியல்பு படைத்தவர். அவரது நுண்ணிய சிறப்புகள் அவருக்கு மெருகூட்டுபவை. புரட்சி வேட்கை, மானுடம், கலை, இயற்கை, புள்ளினம், மரஞ்செடிகொடிகள் அனைத்தும் அவரது அகவீணை நரம்புகளை மீட்டவல்லவை' (Leon Trotsky, My Life).

சுவிற்சலாந்தில் ரோசாவைச் சந்தித்த யோன் மில் என்னும் யூத சமூகவுடைமைவாதி, அவரை இப்படி விபரித்தார்: 'அவர் குறுகிய உடலும், பாரிய தலையும் கொண்டவர். நொண்டியும், தாண்டியும் நடப்பவர். முதன்முதல் அவரை நான் கண்டபொழுது என் உள்ளத்தில் நல்ல தாக்கம் ஏற்படவில்லை. ஆனால் அவருடன் கொஞ்ச நேரம் கழித்த பின்னர், அவருடைய ஆற்றலும், கூர்மதியும், உயிர்த்துடிப்பும், கெட்டித்தனமும் புலப்பட்டன.'

ரசியப்பேரரசை அவர் மூன்று நிலைகளில் எதிர்கொண்டார்: (1) ரசியப் பேரரசரின் கொடுங்கோன்மைக்கு உள்ளாகிய ரசிய மக்களுக்காகவும், (2) ரசியப்பேரரசினால் அடக்கியாளப்பட்ட போலாந்து மக்களுக்காகவும், (3) ரசியப்பேரரசினால் அடக்கியொடுக்கப்பட்ட யூத மக்களுக்காகவும் அவர் போராடினார். அடக்கி ஒடுக்கப்படும் தரப்புகள் அனைத்துக்காகவும் அவர் குரல் கொடுத்தார். ஒரு தரப்புக்கு விழும் அடியை ஏனைய தரப்புகளுக்கு விழும் அடியாகவே அவர் எடுத்துக்கொண்டார்.

தனக்குரிய பாதையையும், அதற்கான வெளிச்சத்தையும் அவர் மார்க்சியத்தில் கண்டுகொண்டார். 'ஒவ்வொருவரும் முற்றுமுழுதாக, சுதந்திரமாக மேம்படுவதற்கு ஏதுவான ஆட்சிநெறி கொண்ட சமூகத்தை அமைப்பதே சமூகவுடைமையின் நோக்கம்' என்ற மார்க்சின் கூற்று அவரைப் பெரிதும் ஆட்கொண்டது. தொழிலாள இயக்கத்தின் வெற்றியூடாகவே பெண்களும், சிறுபான்மையோரும் விடுதலை பெறமுடியும் என்று அவர் திடமாக நம்பினார். 'மக்களே தமது வேலைத்தலங்களையும், சமூகங்களையும், அரசாங்கங்களையும் பொறுப்பேற்க வேண்டும், அனைவருக்கும் பேச்சுச் சுதந்திரம் அளிக்க வேண்டும், அனைவரும் ஆட்சி புரிவதில் பங்குபற்ற வேண்டும்' என்று அவர் முழங்கினார்.

ரோசா லக்சம்பேர்க்கின் உலகளாவிய கண்ணோட்டத்துக்கும், பரந்து விரிந்த இதயத்துக்கும், அவர் ஒரு தோழிக்கு எழுதிய மடல் சான்று பகர்கிறது: 'இந்த யூத மக்களின் வேதனை விசயத்தில் மட்டும் உனக்கு என்ன வேண்டிக் கிடக்கிறது? இறப்பர்த் தோட்டங்களில் வருந்தும் அப்பாவிகளும், ஆபிரிக்காவில் ஐரோப்பியருக்கு அடிமைப்பட்டு உழலும் கருப்பின மக்களும் எனக்கு மிகவும் நெருக்கமானவர்களே! யூத சமூகத்துக்காக மட்டும் நான் பரிந்துரைப்பவள் அல்ல. உலகில் எங்கெல்லாம் முகில்களும், பறவைகளும், மக்களின் கண்ணீரும் தென்படுகின்றனவோ அங்கெல்லாம் என் நெஞ்சம் நடமாடுகிறது.'

போலாந்தில் கூலி உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்த ரோசாவின் தோழர்கள் சிலர் கொல்லப்பட்டதை அடுத்து, அவர் ஒரு கத்தோலிக்க அடிகளிடம் சென்று, தான் ஒரு கத்தோலிக்க இளைஞனைக் காதலிப்பதாகவும், தாங்கள் இருவரும் மணம் புரிய விரும்புவதாகவும், தான் ஒரு யூதப் பெண் என்றபடியால், ஒரு கத்தோலிக்க தேவாலயத்தில் தீக்கை பெறவேண்டி உள்ளதாகவும், தான் மதம் மாறுவதற்கும், தன் காதலனைக் கைப்பிடிப்பதற்கும் தனது பெற்றோர் குறுக்கே நிற்பதாகவும், ஆதலால் சுவிற்சலாந்துக்குத் தப்பியோடி, அங்கு தீக்கை பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ரோசாவின் கதையை நம்பிய கத்தோலிக்க அடிகள், அவரை ஓர் உழவனின் வண்டியில் சுவிற்சலாந்துக்கு கடத்த ஒழுங்கு செய்தார். ஒரு வைக்கோல் கட்டின் அடியில் புதையுண்டு, நெடுந்தூரம் குலுக்குண்டு, மூர்ச்சித்துப் பயணித்த ரோசா, சுவிற்சலாந்தில் வெளிப்பட்டு, அரசியல் அகதியாகத் தன் போராட்ட வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

தன் வாழ்நாள் முழுவதும் உயிரினங்களாலும், மரஞ்செடிகொடிகளாலும் ஈர்க்கப்பட்ட ரோசா தனது பல்கலைக்கழகப் பாடங்களாக உயிரியலையும், கணிதவியலையும் தேர்ந்தெடுத்தார். அத்துடன் சட்டவியல், மெய்யியல், பொருளியல் பாடங்களையும் அவர் கற்றறிந்தார். வெளியுலகத் தொடர்பின்றிச் சிறையிருந்த வேளைகளில் பூச்சிபுழுக்கள், மரஞ்செடிகொடிகள் பற்றி ஆராய்வதில் மெய் மறந்தார். சிறையிலிருந்து அவர் எழுதிய மடல் ஒன்று: 'ஜேர்மனியில் இசைப்புள் மறைந்த காரணங்களை நேற்று நான் வாசித்தறிந்தேன். அறிவியலின் பாற்பட்ட காட்டியல், தோட்டச்செய்கை, பயிர்ச்செய்கையால் அவற்றின் கூடுகளும், உணவு வகைகளும் ஒழிந்துவிட்டன. நவீன முறைகளால் வெளிகளும், பொந்துமரங்களும், சுள்ளிகளும், இலைதழைகளும் அருகி வருகின்றன. இதை நினைந்து, உள்ளம் வெந்து புண்ணாகிறது.'

## தேசங்களின் விடுதலை, தேசிய முதலாளித்துவத்தின் விடுதலையாகவே அமையும், ஆகவே சமூகவுடைமைவாதிகள் தேசியக் கண்ணோட்டத்தை விடுத்து, சர்வதேசியக் கண்ணோட்டத்தையே பற்றிக்கொள்ள வேண்டும்.



ரசிய ஆளுகைக்கு உட்பட்ட போலாந்திலிருந்து சுவிற்சலாந்துக்குத் தப்பியோடிய அகதிகளுள் லியோ யோகிச்சஸ் என்ற யூதரும் ஒருவர். சமூகவுடைமைவாதத் தலைவர்களுள் ஒருவராகிய லியோ, போலாந்தில் இரு தடவைகள் சிறையிருந்தவர். மீண்டும் பிடிபடுந் தறுவாயில் சுவிற்சலாந்துக்குத் தப்பியோடியவர். இரகசிய செய்தித்தாள் அச்சடித்தல், கள்ளக் கடவுச்சீட்டு தயாரித்தல், தடை செய்யப் பட்ட நூல்களைத் தருவித்தல் ஆகியவற்றில் துறை போனவர். லியோவின் துணிவும், திறனும்,மதியும், நிதானமும், உறுதியும் ரோசாவை ஆட்கொண்டன. ரோசாவின் கூரிய மதியும், தீவிர நெஞ்சமும் லியோவைக் கவர்ந்தன. தவிர்க்கவியலாவாறு அவர்களிடையே காதலும், தோழமையும் ஓங்கியது.

1893ல் ரோசாவும், லியோவும் (போலாந்து மொழியில்) தொழிலாளர் குறிக்கோள் என்னும் செய்தித்தாளை வெளியிடத் தொடங்கினார்கள். முதலாளித்துவத்துக்கும், ரசியப் பேரரசுக்கும் எதிரான போராட்டத்தை அது ஆதரித்தது. உலகத் தொழிலாளிகளின் திண்மையை அது போதித்தது. சமூகவுடைமைவாதிகளிடையே உலகளாவிய ஒற்றுமைக்கு அது அழைப்பு விடுத்தது. அப்பொழுது ஜேர்மன் சமூக மக்களாட்சிக் கட்சியே உலகின் மிகப்பெரிய சமூகவுடைமைவாதக் கட்சியாக விளங்கியது. ஆதலால் ஜேர்மனிக்குச் சென்று, அந்தக் கட்சியில் சேர்ந்து போராட அவர் புறப்பட்டார்.

ஜேர்மன் சமூக மக்களாட்சிக் கட்சியில் ரோசாவுக்கும், எட்வேட் பேண்ஸ்டைன் என்ற பழம்பெரும் உறுப்பினருக்கும் இடையே இடம்பெற்ற கருத்துமோதல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது: 'மார்க்சியம் ஒரு நாட்பட்ட சித்தாந்தம்ஞ் புரட்சி இன்றியே சமூகவுடைமையை எய்த முடியும்; நாடாளுமன்றத்தின் ஊடாகவே சீர்திருத்தங்களைப் புகுத்த முடியும்; முதலாளித்துவம் வசப்படுத்தப் பட்டுவிட்டது; இனிமேல் பொருளாதார மந்தமோ நெருக்கடியோ ஏற்படாதுஞ் முதலாளித் துவத்தைச் சீர்திருத்துவதிலேயே எமது கட்சி ஈடுபட வேண்டும்; முதலாளித்துவத்தைக் கவிழ்ப்பதில் அது ஈடுபடக் கூடாது; எமது கட்சி ஒரு தற்காலக் கட்சியாகவும், நிகழ்வரத்துக்கு உகந்த கட்சியாகவும் மாற வேண்டும்; நாடாளுமன்றத்திலும், தொழிற் சங்கங்களிலும் அது புலனைச் செலுத்த வேண்டும். புரட்சி முழக்கங்களை அது கைவிட வேண்டும்' என்றார் பேண்ஸ்டைன்.

அதற்கு ரோசாவின் பதிலடி: 'பேண்ஸ்டைன் முன்வைத்த மாற்றுத் தெரிவுகள் பொய்யானவை. புரட்சியா, சீர்திருத்தமா? என்ற வினாவுக்கு அவர் பதிலிறுக்கவில்லை. சீர்திருத்தமும், புரட்சியும் சமூகவுடைமைக்கு மாற்று வழிகள் ஆகா. எமது குறிக்கோளை எய்துவதற்கு மிகவும் அமைதியான, தணிவான, மெதுவான வழியை அவர் நாடவில்லை வேறொரு குறிக்கோளை எய்துவதற்கே அத்தகைய வழியை அவர் நாடுகிறார். ஒரு புதிய சமூகத்தை அமைக்கும் நிலைப்பாட்டை விடுத்து, பழைய சமூகத்துக்குப் புறப்பூச்சிடும் நிலைப்பாட்டையே அவர் நாடுகிறார். தொழிலாள வர்க்கத்தின் வாழ்வை மேம்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தைப் பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால், முதலாளித்துவத்தைக் கவிழ்ப்பதற்கான, உடைமையாளர்களின் கைகளிலிருந்து தொழிற்சாலைகளை அகற்றுவதற்கான, தனியார் துறையினர் இலாபம் ஈட்டுவதை ஒழிப்பதற்கான சட்டங்களை நாடாளுமன்றம் நிறைவேற்றப் போவதில்லைஞ் அத்தகைய சட்டங்களை காவல்துறையினரும், படையினரும் நடைமுறைப்படுத்துவார்களா? ஒரு முதலாளித்துவ சமூகத்தில் சட்டம் என்றென்றும் ஆளும்வர்க்கத்தின் அதிகாரத்தையே நிலைநிறுத்தும் அல்லவா. முதலாளித்துவம் என்னும் அவலக் கடலினுள் சமூக சீர்திருத்தம் என்னும் எலுமிச்சம்பழக் கரைசலைச் சொட்டுச் சொட்டாக இட்டு, அதனை ஓர் இனிய சமூகவுடைமைக் கடலாக மாற்றலாம் என்று பேண்ஸ்டைன் கனவு காண்கிறார்" என்று சாடினார் ரோசா. ஈற்றில் ரோசாவின் நிலைப்பாட்டையே ஜேர்மன் சமூக மக்களாட்சிக் கட்சி ஏற்றுக்கொண்டது. அவர் தலையாய சமூகவுடைமைவாத சித்தாந்திகளுள் ஒருவராக எழுச்சி பெற்றார்.

1904ல் ஜேர்மன் பேரரசரை அவமதித்த குற்றத்துக்காக அவர் 6 கிழமைகள் சிறையிருந்தார். 1905ல் 2 இலட்சம் ரசியத் தொழிலாளிகள் 8 மணித்தியால வேலை, அடிப்படை உத்தரவாதக் கூலி, நாடாளுமன்ற அங்கத்துவம் கோரி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஒரு மதகுருவின் தலைமையில் முட்டுக்காலிலிருந்து தொழுத தொழிலாளிகளைப் படையினர் சுட்டுத் தள்ளினார்கள். 500 பேர் கொல்லப்பட்டார்கள். ஆயிரக் கணக்கானோர் காயப்பட்டார்கள்.

இரசிய சமூகவுடைமைவாதிகளைப் பின்பற்றி, ஜேர்மன் சமூக மக்களாட்சிக் கட்சியும் பாரிய வேலைநிறுத்தங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ரோசா வாதாடினார். ஆனால் அவர் சார்ந்த கட்சியோ அடக்கி வாசிக்கவே விரும்பியது. பொறுப்புணர்ச்சியின்றிப் புரளி கிளப்புபவர் என்று ரோசாவை அது கண்டித்தது. பழைமைவாத எதிர்க்கட்சியினரோ, அவரைக் கலகம் விளைவிக்கும் அந்நியர் என்றும், ஆட்சிகவிழ்க்கும் யூதர் என்றும், உன்மத்தம் கொண்ட பெண்மணி என்றும் சாடினார்கள். போலாந்துக்குத் திரும்பிப் போகும்படி அவரை நோக்கிக் கூச்சலிட்டார்கள். ரோசா போலாந்து திரும்பினார்.

ஓர் ஊடகர் போல் வேடம் பூண்டு, கள்ளக் கடவுச்சீட்டுடன், தாயகம் திரும்பும் வழியில், அங்கு இடம்பெற்ற வேலைநிறுத்தத்தால் அவருடைய தொடருந்துப் பயணம் தடைப்பட்டது. அதே வேலை நிறுத்தத்தை அடக்குவதற்காகப் படையினரை ஏற்றிச்சென்ற வேறொரு தொடருந்தில் தலைமறைவாக ஒரு பெண்மணி, அதுவும் ஒரு புரட்சிப் பெண்மணி பயணிப்பது அதே படையினருக்குத் தெரியாது! ஊர் திரும்பிய ரோசா தனது குடும்பத்தவரையும், ஏற்கெனவே ஊர் திரும்பிய லியோவையும் வார்சோவில் சந்தித்தார். ஊர் திரும்பிய கையோடு போலாந்தில் இடம்பெற்ற போராட்டத்தில் தன்னை முற்றுமுழுதாக அவர் ஈடுபடுத்திக்கொண்டார். 'மிகைபடுத்தாமல், முழு நேர்மையுடன் என்னால் ஓர் உண்மையை வலியுறுத்த முடியும்: என் வாழ்நாளில் இதுவே மிகமகிழ்ச்சியான காலகட்டம்' என்று ரோசாவின் மடல் ஒன்று கூறுகிறது. அப்பொழுது அவர் எழுதிய வேறு சில வரிகள்: 'சமூகவுடைமைக்கான போராட்டமே உலக வரலாறு கண்ட மாபெரும் உள்நாட்டுப் போர். தொழிலாளர்கள் தங்களைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்த வேண்டும். போராடாமல் சமூகவுடைமையை ஈட்ட முடியாது. வன்முறை ஓங்குதல் திண்ணம், குருதி சிந்துதல் திண்ணம், எனினும் ஒரு துளி குருதியும் வீணாகச் சிந்தக் கூடாது. முழு உலகத்தையும் கவிழ்க்க வேண்டும். ஆனால் தவிர்க்கப்படக் கூடிய கண்ணீர் ஒரு குற்றச்சாட்டுக்கு நிகரானது. ஒரு முக்கிய செயலைப் புரிய விரையும் ஒருவர், நினையாப் பிரகாரமாகவேனும் ஒரு புழுவை மிதிப்பது குற்றமாகும்.'

1906ல் ரசியப்படை, வேலைநிறுத்தத்தை ஒடுக்கிய பின்னர், காவல்துறையினர் ரோசாவையும், லியோவையும் படுக்கையில் வைத்து மடக்கிப் பிடித்தார்கள். சிறையிலிருந்து அவர் எழுதிய ஒரு மடலின்படி, 'அவர்கள் என்னை அலங்கோலமான நிலையில் வைத்துப் பிடித்தார்கள். ஒரு காட்டு விலங்கினைப் போல் அடைத்து வைத்தார்கள்.' உண்ணா நோன்பிருந்து, நோய்வாய்ப்பட்டு, விடுதலையான ரோசா, பின்லாந்து சென்று, லெனின் உட்படப் புலம்பெயர்ந்த மார்க்சிய

வாதிகளைச் சந்தித்தார். 'லெனினுடன் கதைப்பதே இன்பம். அவர் பலதிறப்பட்டவர். பரந்த அறிவு படைத்தவர். அவருடைய கடுத்த முகம் எனக்கு மிகவும் பிடித்தமானது' என்று ரோசா கருத்து ரைத்தார்.

எனினும், லெனினுக்கும் ரோசாவுக்கும் இடையே தேசியப் பிரச்சனை குறித்து காரசாரமான விவாதம் ஒன்று இடம்பெற்றது: (1) பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து அயர்லாந்தும், (2) ரசிய ஆதிக்கத்திலிருந்து போலாந் தும், பின்லாந்தும், (3) சுவீடிய ஆதிக்கத்திலிருந்து நோர்வேயும், (4) பால்க்கன் பேரரசிலிருந்து சேர்பியாவும், பல்கேரியாவும் விடுதலை பெறுவது, இந்நான்கு பேரரசுகளையும் நலிவுறுத்தும் என்றும், அதே வேளை அத்தகைய தேசங்களின் விடுதலை அங்கெல்லாம் முதலாளித்துவ வர்க்கம் ஓங்குவதற்கு வழிவகுப்பது தவிர்க்க முடியாதது என்றும், எனினும் அது மக்களாட்சிக்கும் புரட்சிக்கும் ஒரு படிக்கல் என்றும் வாதாடினார் லெனின்.

லெனினே ஒப்புக்கொண்டவாறு, அத்தகைய விடுதலை அங்கெல்லாம் முதலாளித்துவ வர்க்கம் ஓங்க வழிவகுக்கும் என்றபடியால், ரோசா அவற்றின் விடுதலையை வன்மையாக எதிர்த்தார்.

லெனினோ, அடக்கியொடுக்கப்பட்ட தேசங்கள் விடுதலை பெறுவதில் மக்களாட்சி விழுமியம் பொதிந்துள்ளது என்றும், ஆதலால் அது முதலாளித்துவத் தன்மை வாய்ந்ததாய் விளங்கினாலும், அதனை ஆதரிக்கவேண்டும் என்றும், சேர்பிய, பல்கேரிய தேசங்களின் விடுதலையால் பால்க்கன் பேரரசில் நிலையூன்றிய நிலமானியக் கட்டுக்கோப்பு தகர்க்கப்படும் என்றும், அங்கு ஓரளவு விடுதலைபெற்ற உழவர்களும், காணிச் சொந்தக்காரர்களும் மேலோங்குவார்கள் என்றும், அது மக்களாட்சிக்கு ஓர் ஏணிப்படி என்றும், ஆகவே அதனை ஆதரிக்க வேண்டும் என்றும் வாதாடினார்.

'பிரித்தானியப் பேரரசிலிருந்து அயர்லாந்து விடுதலை பெறும்வரை, பிரித்தானியத் தொழிலாளிகள் விடுதலை பெறமுடியாது' என்று மார்க்ஸ் இட்ட முழக்கத்துடன் லெனினுடைய நிலைப்பாடு உடன்படுவதும், ரோசாவின் நிலைப்பாடு முரண்படுவதும் கவனிக்கத் தக்கது.

தேசங்களின் விடுதலை, தேசிய முதலாளித்துவத்தின் விடுதலையாகவே அமையும், ஆகவே சமூகவுடைமைவாதிகள் தேசியக் கண்ணோட்டத்தை விடுத்து, சர்வதேசியக் கண்ணோட்டத்தையே பற்றிக்கொள்ள வேண்டும் என்பது ரோசாவின் வாதம்.

ரோசாவும், லியோவும் வெறுங் காதலர்களேயொழிய, வாழ்க்கைத் துணைவர்கள் அல்லர். 'எங்களுக்கு ஒரு பிள்ளை தேவை என்பதை நான் அடிக்கடி உணர்ந்துகொள்கிறேன். இந்தக் குறையை என்னால் தாங்க முடியவில்லை. வீட்டில் இருப்பது இன்பமே. ஆனால், பிள்ளைகள் இல்லாத வாழ்வு, வெறுமையும் மடைமையும் நிறைந்த வாழ்வு என்பது உனக்குப் புரியவில்லை' என்று பிரிவுத் துயரில் அவர் லியோவுக்கு எழுதியதுண்டு. ரோசாவுடன் குடும்பம் நடத்தும் மனநிலையில் லியோ இருக்கவில்லை. எனினும், ரோசாவை ஒரு புதிய காதலனுடன் கண்டபொழுது, லியோ பொறாமைப்பட்டு, ரோசாவை அச்சுறுத்தினான். ரோசா தற்பாதுகாப்புக்காக ஒரு கைத்துவக்கு வாங்கி வைத்திருந்தார்!

1907ல் ரோசா ஜேர்மனி திரும்பியபொழுது மக்கள் அவரை மொய்க்கவே, கிளர்ச்சியை விரும்பாத அவருடைய சமூக மக்களாட்சிக் கட்சியினர் மிகவும் சங்கடப்பட்டார்கள். அதேவேளை, பொறிபறக்கும் பேச்சாளரும் எழுத்தாளருமாகிய ரோசாவை அவர்களால் தட்டிக்கழிக்க முடியவில்லை. ஆதலால் கட்சிக் கல்லூரியில் அவரை ஒரு விரிவுரையாளராக அமர்த்தினார்கள்.

அதே ஆண்டில், ஸ்டட்கார்ட் என்ற ஜேர்மன் நகரில் கூடிய சர்வதேய சமூகவுடைமையாளர் பேரவையில் லெனினும் ரோசாவும் சேர்ந்து போருக்கு எதிராக முன்வைத்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது: 'படையாண்மைக்கு (இராணுவ தர்பாருக்கு) எதிரான போராட்டத்தை சமூகவுடைமை நோக்கிய வர்க்கப் போராட்டத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதுஞ் முதலாளித்துவ அரசுகளுக்கு இடையே நிகழும் போர்கள், உலக சந்தைகளைப் பற்றிகொள்வதற்கு அவை போட்டியிடுவதன் பெறுபேறே. அதில் அந்நிய மக்களும், அந்நிய தேசங்களும் அடிமை கொள்ளப் படுகின்றன. ஆதலால் போர்கள் முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த இயல்பாகும். முதலாளித்துவ பொருளாதாரம் ஒழிக்கப்பட்ட பின்னரே போர்கள் ஒழியும்ஞ் போர் மூள்வதைத் தடுப்பதற்கு இயன்றவரை பாடுபடுவதே உழைக்கும் வர்க்கத்தின், அவர்தம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் கடமைஞ் அதனை மீறிப் போர் மூண்டால், போரினால் ஏற்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி, மக்களைக் கிளர்ந்தெழச்செய்து, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை ஒழிப்பது அவர்தம் கடமை.'

1907ம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற தேர்தலில் சமூகமக்களாட்சிக் கட்சி 32 இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகளையும், 42 நாடாளுமன்ற இருக்கைகளையும் வென்றெடுத்து, இரண்டாவது பெரிய கட்சியாக ஓங்கியது. ஆதலால் அது சர்வதேய சமூகவுடைமை வாதத்தைத் துறந்து, தேசியவாதத்தைப் பற்றிக்கொண்டது. அதன் பயனாக 1912ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அது 110 இருக்கைகளுடன் முதலாவது பெரும் கட்சியாக மாறியது. இவ்வாறு (ரசிய போல்சிவிக் கட்சியைத் தவிர ஏனைய)ஐரோப்பிய சமூகவுடைமவாதக் கட்சிகள் அனைத்தும் தத்தம் நாடுகளின் போர் நடவடிக்கைகளை ஆதரிக்கலாயின.

போருக்கும், சமூக மக்களாட்சிக் கட்சிக்கும் எதிராக வெகுண்டெழுந்த ரோசா, மக்களைக் கிளர்ந்தெழும்படி பேசியும், எழுதியும் புரிந்த குற்றத்துக்காக 1915ல் அவருக்கு ஓராண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 1916ல் அவர் விடுதலையான பிறகு நிகழ்ந்த மே தினக் கொண்டாட்டத்தை ஒட்டி, அவரும் தோழர்களும் நடத்திய பேரணியில் 10,000 பேர் கலந்துகொண்டார்கள். 'அரசு வீழ்க! போர் ஒழிக!' என்று அவர்கள் அறைகூவினார்கள். ஆதலால் ரோசா மீண்டும் சிறைவைக்கப்பட்டார்.

படையினரின் கிழிந்த, குருதி தோய்ந்த சீருடைகள் வண்டி வண்டியாக அவருடைய சிறைச்சாலைக்கு வந்த வண்ணம் இருந்தன. பெண் கைதிகள் அவற்றைப் பொருத்துவார்கள். அப்பொழுது மிகுந்த சுமையுடன் ஒரு வண்டி வந்தது. அதனைச் செலுத்திவந்த படையாள், அவ்விரு எருமைகளுக்கும் விளாசி அடித்ததில், அவற்றின் வன்தோல் கிழிந்து, குருதி பாய்ந்தது. ரோசா அதனை ஒரு சக கைதியிடம் தெரிவித்தார். 'உனக்கு உயிர்கள்மீது இரக்கம் இல்லையா?' என்று அவனிடம் கேட்ட பொழுது, 'மனிதர்களாகிய எங்கள் மீது எவருக்காவது உள்ள இரக்கத்தை விட அதிக இரக்கம், எனக்கு இந்த எருமைகள்மீது இல்லை என்பது உண்மைதான்!' என்று பதிலிறுத்த படையாள், ஒரு கெட்ட முறுவலிப்புடன் மேலும் விளாசி அடித்தான். 'அப்பொழுது போரின் பயங்கரம் முழுவதும் என் கண்முன் தோன்றியது' என்று எழுதிச் சென்றுள்ளார் ரோசா.

1914 முதல் 1918 வரை இடம்பெற்ற முதலாம் உலகப் போரில் ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டது. ஜேர்மன் பேரரசர் நாட்டைவிட்டுத் தப்பியோடினார். நாடு முழுவதும் தொழிலாளர் மன்றங்களும், படையினர் மன்றங்களும் முளைவிட்டன. புரட்சியை ஆதரிப்பதா, தமது கட்சியை ஆதரிப்பதா என்று தெரியாமல் தொழிலாளர்கள் திண்டாடினார்கள். கலவரமடைந்த அரசாங்கம், ஆட்சியதிகாரத்தை சமூக மக்களாட்சிக் கட்சியிடம் ஒப்படைத்தது.

என்னவிதப்பட்டும் புரட்சியைத் தவிர்க்கவே சமூக மக்களாட்சிக் கட்சித் தலைவர்கள் விரும்பினார்கள். ஒரு புரட்சிக்கு இடம்கொடுத்தால், அதே புரட்சியால் தாங்கள் வாரிச்செல்லப்படுவோம் என்பதை நன்கறிந்தவர்கள் அவர்கள். ஆதலால் அவர்களுடைய கட்டளைப்படி தொழிலாளர் படையினர் மன்றத் தலைவர்கள் கைது செய்யப் பட்டார்கள். ஆர்ப்பாட்டம் செய்தோர் படையாட்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். எந்த சமூக மக்களாட்சிக் கட்சியில் ரோசா அங்கத்துவம் வகித்தாரோ, அந்தக் கட்சியின் அரசாங்கமே அவரைக் கொல்வதற்கு உத்தரவு பிறப்பித்தது. ரோசாவின் கொலஞர்களை அம்பலப்படுத்திய குற்றத்துக்காக, லியோவும் கையோடு கொல்லப்பட்டான். கொலைஞர்களுள் ஒருவன் தப்பிச்செல்ல அனுமதிக்கப்பட்டான். மற்றவன் ஈராண்டுச் சிறைவாசத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டான்.

சிவப்பு ரோசாவும் இனி இல்லையே
அவர் புதையுண்ட இடமும் புலப்படவில்லையே

■

இதழ் 34 இல் வெளியான து.குலசிங்கத்தின் நேர்காணலில் உள்ள இரண்டு விடயங்கள் பற்றி தெளிவுபடுத்த விரும்புகிறேன்; ஏனெனில், தரவுகள் சரிப்படுத்தப்படாவிட்டால் அவையே உண்மையென்றாகிவிடலாம்.

1. ஏற்கனவே, 'தெருத்தெருவாகச் சென்று கஷ்டப்பட்டு இதழ்களை விற்றே வளர்த்ததாக' ஓர் இதழாசிரியர் தெரிவித்த 'புனைவு', ஈழத்தில் இன்றும் பலரால் நம்பப்படுகிறது! 'அலை'யின் ஆரம்பநாள்களில், ஆசிரியர் குழுவிலிருந்த நால்வரும் சேர்ந்து ஒவ்வொரு இதழுக்கும் நூறு ரூபாவை சில இதழ்கள் வரை பங்களித்து வந்தோம். விளம்பரங்களின் மூலமும் பணம் சேர்த்தோம். பிரதிகளின் விற்பனைப் பணமும் கிடைத்தது.

பின்னர் பணம் பங்களிப்புச் செய்யவேண்டிய தேவை இருக்கவில்லை. 25 முதல் 35 ஆம் இதழ்வரை நான் தனியாக இயங்கிய போதுங்கூட! எனவே, 'எனக்குத் தெரியும், அ.யேசுராசா, அலை வெளியீடுகளை வெளியிட்டபோது பட்ட கஷ்டங்கள். தன் வருவாயில் பெரும் பகுதியை அவற்றிற்கே செலவிட்டார்' என்பது சரியல்ல.

2. 'இராமேஸ்வரம் வந்துவிட்டோம். துறைமுகத்துக்குள் பொதிகளைத் தூக்கிச்செல்லும் கூலிகளுக்கு கூலி கொடுப்பதற்கு எங்களிடம் பணம் இல்லை,' என்பதும் சரியானதல்ல.

எமது பயணம் முழுவதும் பத்மநாப ஐயரால் நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஒவ்வொருவரிடமும் தனியாகச் சொந்தப் பணமும் இருந்தது. நினைவுத் தவறுகாரணமாயே இவ்வாறு கூறப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறேன்.

அ. யேசுராசா

■

'காலம்' இதழ் 34 ஜனவரி மார்ச் 2010 ல் 'இரக்கமற்ற இரவுகளின் வலி' என்ற எனது கட்டுரை பிரசுரிக்கப்பட்ட விதம் மிகுந்த ஏமாற்றத்தினை அளித்தது. வழமையான எழுத்துப் பிழைகளிற்கு அப்பால், கட்டுரையின் நம்பகத் தன்மை அழிக்கப்பட்டுவிட்டதே! இறுதிப் பகுதியில் குறிப்பிடப்படும் மேற்கோள்களின் ஆதார நூலகள் பற்றிய விபரங்கள் கட்டுரையின் இறுதியில் குறிப்பிட்டிருந்தேன். அவற்றை நீக்குகையில் அவை கட்டுரைகளிற்குள் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். அக்கவனம் நிகழவில்லை.

உதாரணத்திற்கு பின்னரர் தனது நாடகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார் எனக் கூறி ஆதார நூலை அடிக்குறிப்பாக குறிப்பிட்டிருந்தேன். நீங்கள் ஆதார நூலை நீக்குவதாக இருந்தால், பின்னர் தனது ¿ªï èöê õ£ï ²öôù நாடகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார் எனக் குறிப்பிட்டிருக்கவேண்டும். இக்கவனம் கட்டுரை முழுவதிலும் கண்டு கொள்ளப்படவில்லை. பல்கேரியக் கவிதை பந்தியாகவே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் கவிதை வரிகளிற்கு இடையில் பிரிப்புக்களை உணர்த்தும் முன்சரிந்த கோடுகளையாவது போட்டிருக்க வேண்டாமா? இந்நிலை தொடராதிருக்க பிரசுரிப்பில் நீங்கள் கவனம் செலுத்தவும்.

அன்புடன்
மு.புஷ்பராஜன்


இனப்படுகொலைகளை, போர்க்குற்றங்களை, மனித உரிமைமீறல்களைத் தடுக்க
**நீங்கள் என்ன செய்ய வேண்டும்.**

இனப்படுகொலைக்கு, மனித உரிமை மீறல்களுக்கு
**எதிராகக் குரல் கொடுங்கள்.**

இனப்படுகொலையை, மனித உரிமை மீறல்களை
**ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்த உதவுங்கள்.**

மனித உரிமையை, நீதியை நிலைநாட்ட வேலை செய்யுங்கள்.

**மனித உரிமைகள்**
**மனிதர்கள் அனைவருக்கும் இயல்பாக இருக்கும் , விட்டுக்கொடுக்க முடியாத, மறுக்கமுடியாத , சட்ட அரசியல் வடிவங்கள் உடைய உரிமைகள் ஆகும்.**

நீங்கள் பேசாமல் இருந்து மனித உரிமைகளை வெல்ல முடியாது.

Centre for War Victims and Human Rights
705 Progress Avenue, Unit # 106 , Scarborough, Ontario M1H 2X1
infocanada@cwvhr.com
416-628-1408
www.cwvhr.org

[ வன்னி எலி ]

# ஒளியிழந்த நாட்டிலே

மு.புஷ்பராஜன்

முள்ளிவாய்க்கால் வீழ்ச்சிக்குப் பின்னர் வன்னியில் செய்த படுகொலைகளை, இலங்கை அரசு உலகின் கண்களுக்கு மறைத்து விட்டதாக குருட்டுத்தனமாக நம்பிக்கொண்டிருக்கிறது. வல்லாதிக்க அரசுகளுக்கு அங்கு என்ன நடைபெற்றது, என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி நன்றாகவே தெரியும். இந்தத் துருப்பச் சீட்டை தங்கள் நலன் சார்ந்து, தேவைக்கு ஏற்ற விதமாக அவர்கள் பாவிப்பார்கள். இவர்களை விடுத்து, சிங்கள அரசு, அதன் இராணுவம், பொலிஸ், இன்னும் நிர்வாக அதிகாரிகள் தமிழ் மக்கள் மீது எவ்வாறு நடந்துகொண்டார்கள், எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதில் அவர்கள் அனுபவ ரீதியான முடிவுகளைக் கண்டடைந்திருக்கிறார்கள். இந்த அனுபவம் பல தலைமுறைகளாகக் கண்டடைந்தவை. அற்புத நிகழ்வாக, இந்த அனுபவ முடிவுகளுக்கு மாற்றாக ஏதாவது நடைபெற்றிருந்தால், அல்லது நடைபெறுவதாக இருந்தால், அது சிங்கள அரச நலன் சார்ந்ததாகவே இருக்குமே தவிர, தமிழர்கள் சார்ந்ததாக இருக்காது. இன்று பல நாடுகள் சிங்கள அரசு பற்றிய நன்னடத்தைச் சான்றுகளை, தமது நலன் சார்ந்து, இலவசமாக நமக்கு வழங்கினாலும், அனுபவ முடிவுகளில் மாற்றங்கள் நிகழும் சாத்தியங்கள் தற்போதைக்கு இல்லை என்றே கருதலாம்.

முள்ளிவாய்க்காலின் கொடூரங்கள், அவலங்கள், ஓலங்கள், கண்ணீர்கள், பெருமூச்சுக்கள் எல்லாம் மண் மூடிப் போய்விட்டன என சிங்களம் நினைக்கின்றது. அனால், அவை வன்னியின் காற்றில் கலந்திருக்கின்றது. நதிகளின் மேல் தவழ்ந்து கொண்டிருக்கின்றது. அடர்ந்த மரக் காடுகளிடையே ஒளிரும் சூரிய ஒளியிலும், நிலவின் ஒளியிலும், மாரியில் இறங்கியிருக்கும் அடர்ந்த பனியிலும் கலந்திருக்கின்றது. இவைகள், வெற்றி மமதையில், எம் மண் மிதித்து நடந்து செல்லும் இராணுவத்துடன் மௌனமாக கூடவே தொடர்கின்றன.

வரலாற்றில் கைவிடப்பட்ட இந்த மக்களின் துயர்கள், படைப்பு ரீதியாக வெளிக்கொண்டு வரப்படவேண்டிய தேவையை பல ஈழத்து கலைஞர்கள் உணர்ந்துள்ளார்கள். அவர்களில் ஒருவராக தமிழியம் சுபாஸ் 'வன்னி எலி' என்ற குறும்படத்தின் மூலம் தம்மை உறுதிப்படுத்தியுள்ளார். கிட்டத்தட்ட பத்து நிமிடங்கள் வரை நீளும் 'வன்னி எலி' எழுப்பிய சோகம் பெருமூச்சாக வெளிவந்தது. உறைநிலையிலிருந்த சோகம் மீண்டும் அசைவுற்று மேலெழுந்தது.

இருள் இறங்கியிருக்கும் பின்னணி; பளிச்சிடும் முட்கம்பி; மணலில் சிதறிக் கிடக்கும் உலர்ந்த சருகுகள்; இப்போது நம் கண்முன்னால் இரு எலிகள். அச்சமும் கவனமும் கொண்டு அசைகின்றது. முள்கம்பிகளினூடாக உள்நுழைகின்றது. காட்டின் சூழலை எழுப்பும் ஓசைகள்; நாயின் ஊளையிடும் ஓசை. எலிகள் சிறிது தூரம் ஓடி சருகினுள் மறைந்துகொள்கிறது. சிலவேளை காட்டுச் சுள்ளிகளில் சிக்கிய பொலித்தீன் பையினுள்ளும் மறைந்துகொள்கின்றது. எலிகளின் நகர்வோடுதான் கமெரா நகர்கிறது. இப்போது ஒரு பாழடைந்த கட்டிடம். அதனைத் தொடர்ந்து ஒரு தறப்பாளினால் ஆன கூடாரம். கூடாரத்தின் அருகாக நகர்கிறது அந்த எலிகள். அப்போது ஒரு மழலையின் குரல்...

"அம்மா பசிக்குது."

"பொறம்மா நாளக் காலயில ஒம்பது மணிக்கத்தான் சாப்பாடு வரும். கொஞ்சம் பொறம்மா."

தொடர்ந்து எலிகளின் நகர்வில் வரும் இன்னொரு கூடாரத்திலிருந்து மீண்டும் ஒரு பிஞ்சுக் குரல்.

"நமோ நமோ நமோ நமோ தாயே சுந்தர ஸ்ரீவரணி..."

"அம்மா சுந்தர எண்டா என்ன?"

"சும்மா இரடி, கண்டறியாத சிங்களப் பாட்டு. அவங்க சொல்லிக் கொடுக்கினமாம். இவ சும்மா இருக்கேலாம... எவ்வளவு காலத்துக்குத் தான் இதுக்குள்ள குப்ப கொட்டுறதோ தெரியல."

தொடரும் எலிகளின் நகர்வோடு அடுத்த கூடாரத்திலிருந்து ஒரு பெண்ணின் குரல்.

"ஆக்களே இருக்கக் காணயில்... கட்டையில போற எலி வேற இதுக்க.... இப்பவே இப்பிடியெண்டா.. மாரி மழயிக்க இந்த குழந்த குஞ்சுகள வச்சுக்கொண்டு... என்ன செய்யப்போறமோ..."

இந்த மூன்று கூடாரங்களின் உரையாடல்கள் நமக்கு பல விடயங்களை உணர்த்துகிறது. முகாம்களில் வசிப்பவர்களுக்கு இரவுச் சாப்பாடு கொடுக்கப்படவில்லை. கொடுத்திருந்தால் அந்தப் பிஞ்சுக் குழந்தை தன் தாயிடம் பசிக்கிறது என ஏன் கோரப்போகிறது? பசியை அவர்கள் நாளைக் காலை வரை அடக்கிக் கொள்ளவேண்டியதுதான். பசிக்கின்றபோது சாப்பிடும் நிலைமாறி, கிடைக்கின்றபோது சாப்பிட்டாக வேண்டிய நிலை. தங்கள் உணவைத் தாங்களே தயாரிக்க அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்டிருந்தால் குழந்தைக்கு பசிக்கிற போதே தாயால் உணவளித்திருக்க முடியும். அவர்களுக்கு வேண்டிய போது சாப்பாடு கிடைக்காவிட்டாலும் சிங்களத்தின் தேசிய கீதம் கற்பிக்கப்படுகிறது; அதுவும் அவர்களுக்கு புரியாத மொழியில். எவ்வளவு காலத்துக்குத்தான் இதுக்குள்ள என்பதன் மூலம், அந்த முகாமிலிருந்து வெளியேறுவதைப் பற்றிய நிச்சயமற்ற எதிர்காலத்தின் குரலும், கோடை காலத்தில் எலிகளின் நடமாட்டத்தின் யதார்த்தத்தில் மாரிகாலத்தின் பயமும் எதிரொலிக்கும் சூழலை உணர்த்திவிடுகிறது.

தொடரும் நகர்வில் இறைவனை இறைஞ்சம் குரல். "இஸ்ரவேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து காத்ததுபோல் நீரே எமக்கு அரணும் கோட்டையுமாய் இருக்கிறீர்" என்பதான வேண்டுதல். இதுபோன்ற பிரார்த்தனைகள் அவரவர் மனம் சார்ந்து ஆறுதலையோ, சினத்தையோ எழுப்பியிருந்தாலும் அந்த துயர நிலையிலிருந்து மீட்கப் போவதில்லை. இந்த போதனைகளோ அல்லது வேண்டுதல்களோ ஒடுக்கப்படுபவர்களுக்கே அதிகம் சொல்லப்படுகிறது. உண்மையில், 'என் பிதாவே, என் பிதாவே, ஏன் என்னைக் (எம்மை) கைவிட்டீர்' என்றுதான் அலற வேண்டியிருக்கிறது. அத்தோடு சுதன் என்பவருக்கான இராணுவ அதிகாரி உசேனின் அறிவித்தல். இவை யார் அங்கு இராணுவ அதிகாரியாய் இருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**முள்ளிவாய்க்காலின் கொடுரங்கள், அவலங்கள், ஓலங்கள், கண்ணீர்கள், பெருமூச்சுக்கள் எல்லாம் மண் மூடிப் போய்விட்டன என சிங்களம் நினைக்கின்றது. அனால், அவை வன்னியின் காற்றில் கலந்திருக்கின்றது.**




தொடர்ந்து... கூடாரத்தினுள் ஆக்ரோஷத்துடன் கத்திக்கொண்டு தாக்கும் சிங்களக் குரலும் அடிபட்டு அவலமாய் குரலெழுப்பும் தமிழ் குரலும்

"டேய் நீ எல்.ரி.ரி. தானே; உண்மையைச் சொல்லடா, இல்லாடிக் கொண்டு போடுவன்."

"ஐயோ! மாத்தையா நானில்ல மாத்தையா."

ஆடி, உதை, ஆக்ரோஷக் குரல். அதனூடு அவலக்குரல். இவற்றினிடை ஒரு குரல் நிதானமாக, "இவங்க புலிகள் இல்ல..." என்ன சொல்லி என்ன பயன். ஒரு துப்பாக்கி வேட்டில் அந்த வேதனையின் குரல் அடங்கிப் போகிறது. தொடர்ந்த நகர்வில் வேட்டையாடப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் ஈனக் குரல் நெஞ்சைப் பிழிந்து எடுக்கிறது.

"ஐயோ! என்ன விட்டிருங்கடா... என்ன விட்டிருங்கடா... என்னால ஏலாதடா... விடுங்கடா... பிளீஸ்!"

இந்த தீராத அவமானத்திலும் வேதனையிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை அளித்தது பகைவனின் துப்பாக்கிக் குண்டுதான். இங்கும் ஒரு துப்பாக்கி வேட்டொலியில் அந்த அவலக் குரல் அடங்கியே போகிறது. வெற்றி கெண்டவர்களின் அதிகாரம் தோற்றவர்கான அனைத்தையும் தீர்மானிக்கின்றது. இதுதான், நம்பிக்கையற்ற நாட்டின், சீவர ஆடைக்குள் புதைந்திருக்கும் அந்தச் சுந்தர ஸ்ரீவரணியின் கருணை. ஆமென்.

கூடாரங்களில் உள்ள சிறிய வெளிச்சத்தின் பின்னணியில், இருள் கரிய திரையாய் இறங்கியிருக்க, நகரும் இக் குறும் படம், திரைப்பட சாதனத்தை, அதன் சட்டகத்தை, முழுமையாக புரிந்து உள்வாங்கிக் கொண்ட ஒருவரால் கையளப்படுகிறது என்ற புரிதலை ஏற்படுத்தி விடுகிறது. சுபாஸ் தன்னை அவ்வாறுதான் வெளிப்படுத்தியுள்ளார்.

உரையாடல்கள் ஒலிக்கும். உருவங்கள் இறுதி இரு காட்சியிலும்தான். அதுவும் நிழல் உருவங்கள். சிறிய ஒரு பொறிமூலம் பலதை உணர்த்தும் திறமை. உதாரணத்திற்கு சித்திரவதை செய்கையில் அலறும் ஆண் குரல் துப்பாக்கி வேட்டால் அடக்கப்பட்ட பின் இராணுவக் கால்கள் வெளிவருகின்றன. அந்த இராணுவக் குரல் சிங்களத்தில், "ஏ! சொல்லு... நீ... புலியில்ல... பின்ன எங்க போறாய்...?"

இது எலிக்குத்தான் கூறப்படுகிறது. இதை பார்வையாளர்கள்தான் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு சிங்கள அதிகாரியின் அதிகார வரம்புக்குள் எல்லோருமே புலிகள்தான்.

வன்னி மண்ணில் உதிர்ந்து கிடப்பதாகக் காட்டப்படும் சருகுகள்; வெளிநாடுகளில் அதிகம் காணப்படும் 'மப்பிள்' இலைச் சருகுகளே. இந்த இணையாமை கண்டுகொள்ளப்பட வேண்டியவையே. இதில் நீங்கலாக பார்வையாளர்களுக்கான வெளி அதிகம் நிறைந்துள்ளது இக்குறும்படம்.

பொதுவாகவே திரையில் தோன்றும் முகங்களே தங்கள் உணர்ச்சிகளை வெளியிடுதல் இயல்பு. இங்கு எந்தச் சோக முகங்களும், நீர் முட்டிய கண்களும் இல்லை. ஒலிக்கப்படும் உரையாடல்கள் வழியே பார்வையாளர்கள்தான் முகங்களின் துயரங்களையும் நீர் முட்டிய கண்களையும் தங்கள் மனதில் வடிவமைத்துக் கொள்ளவேண்டும். குறும்படம் என்ற வடிவ அமைப்பும் இவ்வகைச் சிறந்த வெளிப்பாட்டுக்கு வாய்ப்பாகவே உள்ளது.

சுபாசின் இந்த கூர்மையான, பார்வையாளர்களுக்கான வெளி, இவருக்குத் தற்செயலாக வாய்த்த ஒன்றல்ல என்பதை இவரது மற்றைய குறும்படமான, 'நான் ஒரு கனவு காணலாமா?' என்பது மிக அழுத்தமாகவே உறுதிப்படுத்துகின்றது.

■

[ புத்தகம் ]

# எஸ்.பொவின் 'சடங்கு': சில குறிப்புகள்


## செல்வா கனகநாயகம்


1966ஆம் ஆண்டு சுதந்திரன் பொங்கல் மலரிலே நீள்கதையாக ஆரம்பித்து 1971 ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்ற 'சடங்கு' என்னும் நாவலின் இறுதிப் பக்கத்தில் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

பருத்தித்துறையில் சடங்கு நடைபெறுகின்றது
செந்தில்நாதன் கொழும்பு நோக்கிப் பயணச்
சடங்கை மேற்கொள்ளுகின்றார் (192)

ஆசிரியர் குறிப்பிடும் இரண்டு வகையான சடங்குகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன. முதலாவது சடங்கு கிராமத்து மக்கள் யாவரையும் ஒன்றுகூட்டி, உணவும் பரிசுகளும் பரிமாறி, ஆடம்பரத்தோடு செய்யப்படும் சாமந்தியச் சடங்கு சமூகத்தை இணைத்து, வேறுபாடுகளை தற்காலிகமாக நீக்கி மரபுரீதியான செயல்களை உள்ளடக்கி நடத்தப்படுகின்ற காரணத்தால் இத்தகைய வைபவங்கள் சடங்குகளாக கருதப்படுகின்றன. ஏதாவது ஒரு மரபு சார்ந்த செயலை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி கொண்டாடுகின்ற காரணத்தால் இவை சடங்குகள் என்று பெயர் பெறுகின்றன.

இந்தச் சடங்கோடு ஒப்பிடும்போது செந்தில்நாதனின் பயணம் தனிப்பட்ட நிகழ்ச்சி கொழும்பில் வேலை செய்யும் செந்தில்நாதன் தன்னுடைய குடும்பத்தை பார்ப்பதற்காக யாழப்பாணத்திற்கு வந்து சில நாட்கள் தங்கிய பின் மீண்டும் கொழும்பிற்குச் செல்கின்றார். அவருடைய வாழ்க்கை ஒரு தனிமனிதனின் வாழ்க்கை தனித்துவத்தோடும், யதார்த்தத்தோடும் அவருடைய கதை நாவலில் கூறப்படுகின்றது.

இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இரண்டையும் சடங்கு என்று கூறும்பொழுது நாவலாசிரியர் எஸ். பொன்னுத்துரை தன்னுடைய படைப்பைப் பற்றி சில அடிப்படையான கேள்விகளை எழுப்புகின்றார். செந்தில்நாதனின் வாழ்க்கையும் ஒருவகையில் சடங்குதான் என்று கூறும்போது நாவலுக்கேயுரிய தனித்துவத்தையும் யதார்த்தத்தையும் நிராகரிக்கவில்லை. அதே நேரத்தில் மேலோட்டமாக இந்த நாவல் பல பொதுவான, நாளாந்தம் நடக்கின்ற விடயங்களையும் உள்ளடக்கின்றது என்று ஆசிரியர் கூறுகின்றார். நாவலைப் பற்றி பின் அட்டையில் எழுதும் வ.அ. இராசரத்தினம் பின்வருமாறு கூறுகின்றார்.

இன்னும் நூற்றாண்டு காலத்தில் நமது வாழ்க்கை நிலைகள் மாற்றமடையலாம் அப்பொழுது நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஒரு யாழ்பாணத்து Clerical servant எப்படி வாழ்ந்தான் என்று அறிய விரும்பும் சரித்திர மாணவன் ஒருவன் நிச்சயமாக எஸ்பொவின் சடங்கைப் படித்தே ஆக வேண்டும்

இவ்வாறு நோக்கும்போது இந்நாவலை 'சடங்கு' என்று அழைப்பதின் நியாயம் புரிகின்றது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், பின் காலனித்துவ பின்னணியில் யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகக் கொண்ட அரசாங்க ஊழியர் இவ்வாறு வாழ்ந்தனர் என்று கூறலாம். இதற்குப் பின்னர் கூட ஏறத்தாழ 1980ஆம் ஆண்டுவரை இந்த நிலைமையே நீடித்தது எனலாம். வெள்ளிக்கிழமை கொழும்பில் புகையிரத வண்டியில் ஏறி யாழ்ப்பாணம் சென்று குடும்பத்தோடு இரண்டு அல்லது மூன்று நாட்கள் வாழ்ந்து திங்கட்கிழமை மீண்டும் கொழும்பு திரும்பும் சடங்கே இந்த நாவலில் சித்தரிக்கப்படுகின்றது.

இத்தகைய வரம்பிற்குள் நாவலை அடக்கின்ற அதே வேளையில் 'சடங்கின்' தனித்துவத்தையும் புதுமையையும் மறந்துவிட முடியாது. புதுமையை பறைசாற்றாமல், அதே நேரத்தில் புதுமையான ஒரு நாவலை இயற்றியதே பொன்னுத்துரையின் சாதனை என்று கூறலாம். இலங்கையின் சமகால இலக்கிய வரலாற்றில் சடங்கு ஒரு முக்கிய சாதனை என்று கூறுவதற்கு அதன் சாதாரண 'போர்வை'யே காரணமென்று கூறலாம்.

அண்மையில் (டிசம்பர் 2009) ஞானம் என்னும் கலை இலக்கியச் சஞ்சிகை எஸ். பொன்னுத்துரை பற்றிய சிறப்பு மலரை வெளியிட்டது. இந்த மலரில் பல எழுத்தாளரும் அறிஞர்களும் எஸ். பொன்னுத்துரையின் இலக்கியப் படைப்புகள் பற்றி ஆழமாக ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். தேர் பற்றியும், மாயினி, மற்றும் தீ, வரலாற்றில் வாழ்தல் பற்றியும் தனிக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. சடங்கு ஒரு அற்புதமான நாவல் என்று ஆங்காங்கே பலர் குறிப்பிட்டுள்ளபோதும், அந்நாவலைப் பற்றி யாரும் ஒரு திறனாய்வை மேற்கொள்ளவில்லை. இதற்கு சடங்கின் வேறுபட்ட தன்மையும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பொதுவாகத் தமிழில் மட்டுமல்ல, பிற மொழிகளிலும் நாவலின் சரித்திரததைப் பார்க்கும்போது அடிப்படையில் ஒரு முரண்பாட்டை வைத்தே நாவல் உருவாகின்றது எனலாம். நாவல் எழுதப்படும் காலத்தைப் பொறுத்து முரண்பாட்டினை உருவாக்கும் கதாபாத்திரங்கள் இறுதியில் சமுதாயத்தின் அரவணைப்பிற்குள் வரலாம் அல்லது சமுதாயத்திலிருந்து விலகியே நிற்கலாம். ஆனால் முரண்பாடு இல்லாமல் நாவல்கள் உருவாகுவது கஷ்டம். முரண்பாட்டை அடித்தளமாகக் கொண்டே நாவலின் இயக்கம் அல்லது சந்தம் உருவாகின்றது. சடங்கு இந்த வரைவிலக்கணத்திற்கு அடங்காமலேசெயற்படுகின்றது என்று கூறலாம். செந்தில்நாதனின் வாழ்க்கையிலோ அன்னலட்சுமியின் வாழ்க்கையிலோ ஏதோ பெரிய மோதல் ஏற்படப் போகின்றது என்று வாசகர்கள் எதிர்பார்த்தால் அது நடைபெறுவதில்லை. நாளாந்தப் பிரச்சனைகளுக்கு அப்பால் நாவலில் ஒன்றும் நமது கவனத்தை ஈர்ப்பதில்லை. ஒரு சாதாரண நாவலின் அசாதாரணம் எவ்வாறு ஏற்படுகின்றது என்பது முக்கியமான கேள்வி.

ஒருவகையில் பார்க்கும்போது இந்தக் கேள்விக்கு ஆசிரியரே பதில் கொடுக்க முயற்சி செய்திருக்கின்றார் என்று கூறலாம். நூலிற்கு எழுதிய முன்னுரையில் எஸ். பொன்னுத்துரை இரண்டு மேல் நாட்டு உளவியல் நிபுணர்கள் மனித உட்கோளைப் பற்றிக்கூறிய மாறுபட்ட அபிப்பிராயங்களைப் பின்னணியாகக் கொள்கிறார். ரிக்மண்ட் பிராய்ட்டைப் பொறுத்தவரையில் அடைபட்ட உணர்ச்சிகளும் புலன் நுகர்ச்சியும் குழந்தை பருவத்திலேயே உருவாகின்றன. இதன் விளைவு பல வடிவங்களை பிற்காலத்தில் காணக் கூடிய

## நடுத்தரவர்க்கம் என்று கருதிக் கொண்ட இந்தச் சமுதாயம் தனது வாழ்க்கைமுறையை திடப்படுத்திக் கொள்ள முயற்சிக்கும்போது ஏற்படும் சிக்கல்களை யதார்த்தமாகச் சடங்கு பிரதிபலிக்கின்றது.

தாக இருக்கின்றது. இதற்கு மாறாக இயன் கூடி மனிதர் வாழும் சூழலும் பண்பாடுமே அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு அடித் தளமாக அமைகின்றன என்று விவாதிக்கின்றார். எஸ். பொன்னுத் துரையின் பார்வையில் இயன் கூடியே சரியென்று படுகின்றது. 'சடங்கில்' முக்கிய பங்கை வகிக்கும் மூன்று கதாபாத்திரங்களும், யாழ்ப்பாண நடுத்தர வகுப்பின பண்பாட்டால், மரபுகளால் உரு வாக்கப்பட்டவர்கள். எஸ். பொன்னுத்துரையின் அபிப்பிராயத்தில் இந்த எண்ணமே நாவலில் மேலோங்கி நிற்கின்றது.

மேலெழுந்தவாரியாக நோக்கும்போது இந்த அபிப்பிராயம் சரி யென்றே கூறவேண்டும். ஆனால் நாவலின் வெற்றிக்கு இந்தக் கருத்து மட்டும் காரணமல்ல. 'சடங்கு' எழுதப்பட்ட காலப்பிரிவில் உருவான நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் யாவுமே பல சமூக, அரசியல் பிரச்சனைகளை மையமாகவே வைத்து எழுதப்பட்டன. சாதி வேற்றுமைகள் முக்கியமாக கையாளப்பட்டன. இவை யாவுமே சடங்கில் ஆங்காங்கே எழுகின்ற பொழுதிலும் அவை முக்கியமான பிரச்சனைகளாக கையாளப்படுவதில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் ஆசிரி யர் தன்னையே கதாபாத்திரமாக்கி ஒதுக்கப்பட்டவர்களைப் பற்றி சில வார்த்தைகள் கூறுகின்ற பொழுதிலும், இதை மிகைப்படுத்தி ஆராயவில்லை. சுருங்கக் கூறினால், எண்ணங்களை அத்திவாரமாக வைத்து இந்த நாவல் எழுதப் படவில்லை.

கதைப் பின்னலைப் பார்க்கும்போது நாவலில் சாதாரண வாழ்க்கை அனுபவங்களுக்கு அப்பால் ஒன்றும் நடைபெறுவதில்லை. இக்காரணத் தால் வாசகர்கள் சில சமயங்களில் இந்நாவலை இருப்பியல்வாதத்திற்கு உதாரணமாகக் கொள்வதுண்டு. இருப்பியல்வாதம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில், சில சரித்திரப் போக்குகளின் விளைவாக ஐரோப்பா வில் உருவான இயக்கம் அந்த இயக்கத்தின் சில அம்சங்களை இந்த நாவலில் காண்பதால் இரண்டையும் முடிச்சுப் போடுதல் சரியல்ல. இருப்பியல்வாதத்தின் பின்னணி வேறு; சடங்கின் பின்னணி வேறு.

செந்தில்நாதனைப் பொறுத்தவரையில் அவருடைய பயணத்தின் முக்கிய காரணம் பாலுணர்ச்சி எனலாம். பல மாதங்கள் மனைவியோடு நெருங்கிய உறவு இல்லாத காரணத்தால் தன்னுடைய தேவைகளை திருப்தி பண்ணும் நோக்கத்தோடு அவர் யாழ்ப்பாணம் செல்கிறார். கடைசி வரையில் இந்த தேவை நிறைவேறாத ஏமாற்றம் நாவலை ஊடுருவிச் செல்கின்றது என்பது உண்மைதான். இந்த ஏமாற்றத்தை விரக்தியாகவோ, வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்பாகவோ கொள்ள முடியாது. நகைச்சுவையோடு கையாளப்படும் இந்த ஏமாற்றத்தை இருப்பியல்வாதத்தின் ஒரு பரிமாணமாகக் கொள்ள முடியாது. அது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கம் பாலுணர்ச்சியை அடக்கி வாழ்ந்தது என்ற பொதுவான முடிவிற்கு நாங்கள் வருவ தும் பொருத்தமானதல்ல.

சடங்கு யாழ்ப்பாண நடுத்தர வாழ்க்கையை எந்த வகையிலும் மிகைப் படுத்திக் கூறவில்லை. நவீனத்தின் விளைவாக, பிரித்தானிய ஆட்சியின் விளைவாக அரசாங்க உத்தியோகங்களைப் பெற்று தன்னை நடுத்தர வர்க்கம் என்று கருதிக் கொண்ட இந்தச் சமுதாயம் தனது வாழ்க்கை முறையை திடப்படுத்திக் கொள்ள முயற்சிக்கும்போது ஏற்படும் சிக்கல் களை யதார்த்தமாகச் சடங்கு பிரதிபலிக்கின்றது. செந்தில்நாதன் மட்டு மல்ல அவருடைய சுற்றத்தில் வாழ்கின்ற யாவருமே இந்த நடுத்தர வர்க்கம் என்ற வரம்பிற்குள் நிற்பதற்காக பல யுக்திகளை கையாளு கின்றனர். அவை யாவுமே இந்த நாவலுக்கு முக்கியமானவை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது நாவலின் நோக்கம் சிலேடை யல்ல. அதற்கு மாறாக இந்தச் சமுதாயத்தின் ஒருமைப்பாடு முக்கிய



அம்சமாக அமைகின்றது. பல அரசியல், சமூக பிரச்சனைகள் சமு தாயத்தை எதிர்நோக்கிய காலத்தில் சடங்கு சமூகத்தின் முழுமையை வெளிப்படுத்துகின்றது.

பொதுவாக யாழ்ப்பாணம் சம்பந்தமான நாவல்களில் சமயம் ஒரு முக்கிய பங்கை வகிப்பதைக் காணலாம். திருவிழா, விரதம், சமயச் சடங்கு ஆகியவை நாவல்களில் அடிக்கடி குறிப்பிடப்படுவதை காண லாம். சடங்கில் கோவிலோ, சமயமோ, கதையின் பின்னணியாக அமைவ தில்லை. கடற்கரையும், கடைத்தெருவும், வாசிக சாலையும் கதையோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நோக்கும்போது நாவலில் நாளாந்தா வாழ்க்கை கவனமாக உருவாக்கப்பட்டது என்பது தெளி வாகின்றது.

ஆசிரியரின் பார்வையிலும், நாவலின் கட்டமைப்பிலும் இடம் பெறும் நிகழ்ச்சிகள் காலத்தின் போக்கையும், காலத்திற்கு அப்பால் இயங்கும் வாழ்க்கை முறையையும் ஒருங்கிணைக்கின்றது எனலாம். நாவல் வெள்ளிக்கிழமை தொடங்கி புதன்கிழமை முடிவடைகின்ற தைப் பார்க்கும் போது காலம் மாறுவதைக் காணலாம். அதே சமயத்தில் கிராமத்தின் அமைப்பில் அதன் வழிமுறைகளில் மாற்றத் திற்கு அப்பாற்பட்ட தன்மையும் காணலாம். கொழும்பு வாழ்க்கையும், அரசியல் மாற்றங்களும் ஒருபுறத்தில் நடக்கின்றன. மறுபுறத்தில் யாழ்ப்பாணத்தில் ஊர் வாழ்க்கை அதற்கே உரிய பொறுப்புகளோடும், முறைகளோடும், உறவுகளோடும் நடைபெறுகின்றது. இந்த வாழ்க் கையில் குறைகளும், ஏற்றத்தாழ்வுகளும் இருக்கத்தான் செய்கின் றன. அவற்றிற்கு மேலாக ஒரு சமூகத்தின் இணைப்பும், வளமும் நாவலின் மூலமாகத் தென்படுகின்றது. சடங்கு ஆங்காங்கே கலிங் கத்துப்பரணி, கம்ப ராமாயணம் போன்ற இலக்கியங்களையும் நினைவுறுத்துகின்றது. அவ்வாறு செய்யும் போது, சடங்கு ஒரு ஆழ மான, வளமான இலக்கிய மரபில் உருவா இலக்கியப் படைப்பு என்பது புலனாகின்றது. கடந்த ஐம்பது ஆண்டு களில் ஏறத்தாழ 1,60,000 பிரதிகளை விற்ற இந்த நாவல் இலங்கையின் இலக்கிய வரலாற்றில் முக்கியமான மைல்கல்லாக அமைந்துள்ளது.

■

[ புத்தகம் ]

# உயிர் அறுபடும் வலி

## சித்தாந்தன்

**தீபச்செல்வன் கவிதைகள்**

படைப்பு மனநிலை என்பது எப்போதும் ஒரு படைப்பாளியுடன் கூட இருப்பதில்லை. அது புறத்தாக்கங்களாலும் அகத்தாக்கங்களாலும் விழைவது. சாதாரணமாக உன்னத படைப்புக்கள் என்பவை உன்னத மான படைப்பு மனத்தின் பிரதிபலிப்புக்கள்தான். உன்னதமென இங்கு குறிப்பிடப்படுவது 'புனிதம்' என்ற பொருளிலல்ல. படைப்பு+க்க மனநிலையையே. ஒரு படைப்பாளியின் மனதினுள் படைப்புக்கான அநுபவங்கள் பல இருக்கலாம். அவை எழுதப்படும் போது மிகச் சிறந்த படைப்புக்கான தருணங்களையும் இழந்துவிடலாம். வலிந்து புனையப்படும் பல படைப்புக்களின் தோல்விக்கு உந்துதலில்லாத மனநிலையும் ஒருவகைக் காரணிதான். தினமும் இணைய தளங்களில் காணக்கிடைக்கும் பல கவிதைகளும் பிற படைப்புக்களும் இந்த வகையிலேயே இருக்கின்றன. வலிந்து சொற்களால் கட்டப்படும் பல கவிதைகள் வாசக மனத்திற்கு சோர்வையளிக்கின்றன.

2000 ஆம் ஆண்டின் பின் கவிஞர்களாக அறியப்பட்டவர்களில் தீபச் செல்வனும் முக்கியமானவர். யுத்தகாலக் கொடூரத்தின் வலி களால் நெய்யப்பட்ட கவிதைகள் அவருடையவை. கடந்த காலத் துயரின் பிரதி விம்பங்களாயிருக்கும் தீபச்செல்வனின் கவிதைகள் வாசக மனதின் உள்ளடுக்குகளுக்குள்; மாபெரும் மனிதத் துயராய்க் கவிகின்றன.

துரத்திக்கொண்டிருக்கும் யுத்தத்தின் கோர முகத்தையும் அதனால் ஏற்பட்ட வேதனைகளையும் இயல்பான மொழியில் தீபச்செல்வன் எழுது கின்றார். சிதிலங்களிலிருந்து மீளவும் கட்டியெழுப்ப முடியாத உள் மனக் குமுறலாய் அவரின் கவிதைகளிருக்கின்றன. தீபச்செல்வனின் கவிதைகளின் இரண்டாவது தொகுப்பான 'ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்' உயிர்மை வெளியீடாக வந்துள்ளது. ஏற்கனவே காலச் சுவடு வெளியீடாகப் 'பாதுங்குகுழியில் பிறந்த குழந்தை' என்னும் தொகுப்பு வெளிவந்திருக்கின்றது.

பொதுவாக ஈழக் கவிதைகளின் திருப்புமுனைக்காலமாக எண்பது களைச் சொல்லலாம். அரசியல் ரீதியான மாறுதல்களும் பேரினவாதச் சிந்தனைகளும் தமிழ்த் தேசிய உணர்வு+ட்டமும் இக்காலத்திலேயே தீவிரம் பெற்றன. 83 இல் ஏற்பட்ட இனக்கலவரம் ஏற்படுத்திய மோச மான பாதிப்புக்கள் தமிழர்களின் மனங்களிலில் இன்னும் விலக்க முடியாத வடுக்களாகவே இருக்கின்றன. இந்தக் காலகட்டத்தின் கவிதை கள் சமகாலத்தின் வன்முறை வடுக்களின் நேரடியான பிரதிபலிப்புக் களாகவிருந்தன. காட்சி விபரிப்புக்களாகவும் விபரணத் தன்மை கொண்டவையாகவும் பெரும்பாலான கவிதைகள் எழுதப்பட்டன. இயல்பு குலையாத யதார்த்தச் சித்திரிப்பு அநேக கவிதைகளிலும் காணப் பட்டன. எண்பதுகளில் நிகழ்ந்த வன்முறைகளின் சாட்சியங்களாகவும் ஆவண இலக்கியங்களாகவும் இக்கால கட்டக் கவிதைகள் முக்கியம் பெறுகின்றன.

தொண்ணூறுகளின் பின் எழுதப்பட்ட கவிதைகளிலேயே பூடகமான மொழி ஈழக்கவிதைகளில் முக்கியம் பெறுகின்றது. யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புக்களால்; நிகழ்த்தப்பட்ட கொடுமைகளையும் அரசியற்படுகொலை களையும் மனிதவுரிமை மீறல்களையும் வெளிப்படுத்த பூடகமான மொழி கவிஞனுக்கு தேவையானது. ஏனெனில் யுத்தத்திலீடுபடுபவர்களின் ஜனநாயக மறுப்புக் கொள்கை உயிர் அச்சுறுத்தலாக எப்போதுமிருந்து கொண்டேயிருந்தது. இதனால் கவிதைகள் ஒருவித இருண்மைத்தன்மை யை நோக்கிச் சென்றன. உணர்வுபூர்வமான மொழிக்கு அப்பால் அறி வின் கூறுகளையும் கவிதை தனக்கானதாகக் கொள்ளத் தொடங்கியது. இத்தொடர்ச்சி இன்று வரையிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தீபச்செல்வனின் கவிதைகள் எண்பதுகளின் சாயல்களுடனும் அதே வேளை தொண்ணூறுகளின் கவிதைப் போக்கையும் உள்வாங்கியிருக் கின்றன. காட்சி விபரிப்புக்களாகவும் கதை கூறலாகவும் சம்பவச் சித்திரிப்புக்களாகவும் விபரண மொழிதலாகவும் தீபச்செல்வனின் கவிதை களிருக்கின்றன. யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலத்தின் அநேக நிகழ்வுகளை அவரின் கவிதைகள் பதிவு செய்திருக்கின்றன. ஒரு கவிஞனுக்கான தார்மீகக் கடமையும் ஒரு வரலாற்றுப் பதி வாளனுக்கான பொறுப்பையும் அவர் தன்னுடையதாகக் கொள்ளு கின்றார். இதனாலத்தான் சொற்களின் நீட்சி மிகைத்ததாய் கவிதைகளிருக் கின்றன. புற நிகழ்வுகளின் தாக்கங்களால் விளையும் மனச்சஞ் சலங்களின் தார்மீக உணர்வுநிலை அவரை எழுதத் தூண்டுகின்றது. கவிதையின் வடிவம், நேர்த்தி சார்ந்து காட்டும் அக்கறையிலும் பார்க்க உணர்வின் வலிமையிலேயே அதிகமும் பிரக்ஞை கொள்ளுகின்றார்.

தீபச்செல்வன், தன்னை யுத்தத்தின் குழந்தையாகக் காணுகின்றார். யுத்த காலத்தில் பிறந்த குழந்தை எதிர்கொள்ளும் துயரங்களும் நிச்சயமின்மை களும் இழப்புக்களும் அவரையும் வதைக்கின்றன. பதுங்குகுழியின்; வெம் மையில் கருகும் அவரது மனம், விடுதலையை அவாவி நிற்கின்றது.

'ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்' என்னும் தீபச்செல்வனின் இரண் டாவது தொகுதிக் கவிதைகள், யுத்தத்தின் முகங்களையும் அது தருகின்ற நீக்க முடியாத துயரங்களையும் பேசுகின்றன. முழுமையும் யுத்தத் தால் சிதறடிக்கப்பட்ட மனநிலையின்பால் இயங்கும் இக் கவிதை களின் மையத்தில் நிராதரவாக்கப்பட் கவிமனம் தொங்கிக் கொண்டி ருக்கின்றது. மீளமீள கவியும் யுத்தத்தின் மீது வெறுப்பும் அதே நேரம் அதைவிட்டு விலகமுடியாமலிருப்பதன் வலியும் வெளிப்படுகின்றன. யுத்தம், ஒரு பூதாகாரப்பண்டமாக எல்லோர் கைகளிலும் திணிக்கப் பட்டிருப்பதை தீபச்செல்வன் எழுதுகின்றார். அவகாசங்கள் எதுவும் இல்லாமல் போர் தொடர்ந்து கொண்டிருந்த காலத்தின் கவிதைகளாக இத்தொகுப்பின் கவிதைகளுள்ளன.

மூன்றாவது போர் முடிந்த பொழுது
எழுப்பப்பட்ட மாளிகைகளில்

## சுகுமாரன் குறிப்பிடுவதைப்போல தீபச்செல்வனின் கவிதைகள் இருண்ட நாட்களின் நாட்குறிப்புக்களாகவுள்ளன எனச்சொல்லலாம்.

மீண்டும் தகர்ப்பதற்கான
நாலாவது போர்; ஒளிந்திருந்தது

என 'அழிப்பதற்கு பிரகடனம் செய்யப்பட்ட நகரத்தின் கதிரைகள்' என்னும் கவிதையில் எழுதுகின்றார். போர் என்பதை வெறும் புறக் காட்சி அனுபவமாகக் கொள்ளாது அகத்திலும் அது படிய வைத் திருக்கும் காட்சிகள் எவ்வளவு கொடுமையானவை என்பது பரிந்து கொள்ளத்தக்கதே. போர்க்காலம் என்பது எந்த நம்பிக்கைகளையும் தந்துவிடாத சூழலில் யுத்தத்தின் பொய்யான நியாயப்படுத்தல்களும் உலர்ந்துபோய்விடுகின்றன.

இரவுகளும் பகல்களும் யுத்தத்தின் வெம்மையில் கருகி மணக்கின்ற போது கவிஞனின் குரலில் அவநம்பிக்கைகளும் துயரமும் இயல் பாகவே படிந்துபோய்விடுகின்றது. இரவுகளை கொண்டாடும் மன நிலை அறுந்துபோய் அச்சத்தை கொண்டுவரும் வாயில்களாக இரவு கள் மாறிவிடுகின்றன. 'பெருங்கிடங்குகளில் புதைபடுகிற கால்கள்' என்னும் கவிதையில்

செய்திகள் சனங்களைத் தின்னுகிற இரவில்
ஒலிபடாத குரல் பாம்புப் பெட்டியில் அடைபடுகிறது

என எழுதுகின்றார். சாவுச்செய்திகளால் அந்த இரவுகள் நிறைந்தி ருக்கின்றன. பிள்ளைகளை போருக்குக் கொடுத்த தாய்மாரின் மனங்களில் வெறும் பிரார்த்தனைகள் நிரம்பிவழிகின்றன. பிள்ளை களைக் குரல்கள் எட்டாத போதும் அவர்களின் துயர அழுகை தொடர்ந்துகொண்டேயிருக்கின்றது. இன்னொரு கவிதையில்

எல்லாவற்றையும் இழந்து
ஓடிவருகிற இரவு
மிருகத்தின் வாயில் சிக்குண்டுவிடுகிறது.

என்கின்றார். இங்கு ஆறுதல் தரும் இரவே பறிபோய்விடுகின்ற துயரத்தை எழுதுகின்றார். தினமும் யுத்தத்தின் அதிர்வுகளால் சிதறடிக்கப்படும் மனத்தினை எதனால்த்தான் ஆறுதல்ப்படுத்த முடி யும்? 'இரவு மரம்' என்னும் கவிதையும் விமானங்களால் சிதறடிக்கப் படுகின்ற இரவு பற்றிய கவிதையாகும்.

அச்சுறுத்தல்களால் நிரம்பிய நாட்களை தன் கவிதைகளில் தீபச் செல்வன் எழுதுகின்றார். காரணங்கள் தெரியாமலே மனிதர்கள் கொல்லப்படுவது சாதாரணமாகிவிட்ட நாட்களில் மரணம் ஒரு பிசாசாகி ஊரெங்கும் நகரமெங்கும் அலைந்து திரிவதையும் அதனால் ஏற்படும் அச்சவுணர்வினையும் 'வற்றாத காலையில் வருகிற அச்சுறுத்தல்' என்ற கவிதையில்,

தூக்கம் குழம்பிய காலையில்
துப்பாக்கியால்
எழுதப்பட்ட சுவரொட்டி
அறையின் கதவினை
தட்டிக்கொண்டிருந்தது' எனவும்

'பேய்கள் ஓட்டுகிற
மோட்டார் சைக்கிள் என்னைப்
பின்தொடருகிற
மாலைக்கும் இரவுக்கும்
இடையில்
நான் மறுநாட் காலையை இழந்தேன்

எனவும் எழுதுகின்றார். சாவுகளாலும் எச்சரிக்கைகளாலும் அச்சுறுத்தப் படுகின்ற பொழுதுகளில் எல்லாமே மரணத்தை நினைவுறுத்துகின்றன. மரணம் பற்றிய பீதி எல்லாவற்றையும் இழந்தவிடச் செய்கின்றது. எங்கும் மரணமே பேருருக்கொண்டுவிடுகிறது.

தீபச்செல்வனின் கவிதைகள் ஒரு மையத்தை சுற்றி எழுதப்படுகின்ற வெவ்வேறான கவிதைகள்தான். எல்லாக்கவிதைகளின் மையமும் இழப்பி னையே பெரும் பொருளாகக் கொண்டிருக்கின்றன. நிலங்கள் ஆக்கிர மிக்கப் படும்போதும் நண்பர்களை உறவினர்களை உடைமைகளைப் பறிகொடுக்கும் போதும் அவரின் மனம் இழப்பின் எல்லையில் நின்று கதறுகின்றது.

இத்தொகுப்பின் பெரும்பான்மையான கவிதைகளும் சம்பவங்களை விவரிப்பனவாகக் காணப்படுகின்றன. கவிதைகளுக்கு இடப்பட்டிருக்கும் அடிக்குறிப்புக்களும் திகதிகளும் இதனைச் சுட்டுகின்றன. யுத்தத்தில் இடங்கள் பறிபோவதையும் தன் தாயும் சகோதரியும் இடம் பெயர் வதையும் எனப் பலவற்றை கவிதைகளின் அடிக்குறிப்பக்களாக் காணக் கடக்கின்றன. இது வரலாற்றுப் பதிவுக்கான அடிப்டையாக இருந்தா லும் கவிதை வாசிப்பில் ஒற்றைப்படையான புரிதலையே நிகழ்த் தும் சாத்தியங்களை ஏற்படுத்துகின்றது. தீபச்செல்வன் கூறக் கருதியி ருக்கும் விடயங்களுக்கு அப்பால் வாசகனின் மனம் பயணிப்பதற்கான எந்த விதமான வாசல்களையும் கவிதைகள் கொண்டிருக்கவில்லை என்பது வாசகனுக்கு இடராகவே அமையும் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். 'யாருமற்ற தெருவினை மிதிக்கிற கொடு நிழல், பெருங்கிடங்குகளில் புதைபடுகிற கால்கள், நெருப்புத் தின்று விட்டிருக்கிற சாம்பல், ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்,நிலம் பெயர்த்தலையைவந்துவிடு எனப்பலகவிதைகளும் அடிக்குறிப்பிடப்பட்ட கவிதைகளாகவேயுள்ளன. சம்பவங்களை மையப்படுத்தி கவிதைகள் எழுதும் முறை காணப்படுகின்றதுதான். ஈழத்திலும் அவ்வாற பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஒரு தொகுப்பில் அடிக் குறிப்புக்களோடு அநேக கவிதைகள் காணப்படுகின்றமை கவிதைப் புரிதல் மீது நெருடலை ஏற்படுத்துகின்றது. முன்னுரையில் சுகுமாரன் குறிப்பிடுவதைப்போல தீபச்செல்வனின் கவிதைகள் இருண்ட நாட் களின் நாட்குறிப்புக்களாகவுள்ளன எனச்சொல்லலாம்.

பொதுவாக, படைப்புக்கள் என்பவை மொழியினால் கட்டமைக்கப் படும் ஆக்கச்செயற்பாடுதான். எனினும் தேவையற்ற சொல்லாடல் களும் பொருத்தமற்ற அவற்றின் அமைவிடங்களும் நல்ல பொருளாழ மிக்க கவிதைகளையே நீர்த்துப்போகச் செய்யும் சாத்தியங்கள் இருக்கின் றன. தீபச்செல்வன் கவிதைகளிலும் இத்தகைய நிலையைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பல கவிதைகள் நீண்ட கவிதைகளாக இருப்ப தற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். முழுமையும் உணர்வுகளால் கொட்டப்பட்டிருக்கின்ற இந்தக் கவிதைகள் வாசகனோடான நேரடி யான அனுபவப்பிணைப்னை ஏற்படுத்துகின்றன. தன் துயரங்களைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த வடிகாலாகவே தீபச்செல்வன் கவிதை களைக் கருதுகின்றார். இதனால்த்தான் கவிதை அறிவம் உணர்வும் கலந்துருவாகும் வடிவம் என்பதனைவிடவும் உணர்வனின் வடிவ மாகவே கொள்ளுகின்றார். இதனால் கவிதை மொழியின் முக்கியத் துவம் பற்றியும் இறுக்கம் பற்றியும் அதிகளாவான முக்கியத்துவத்தைக் கொடுக்காதவராகக் காணப்படுகின்றார்.

'தாகம் காய்கிற நதிக்கான கனவு' என்ற கவிதையின் இறுதிவரிகளை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம்.

தண்ணீருக்கான வழிகள்
அடைபட்டடிருக்க

வாழ்வின் கனவின் நதி இனியொரு இரவில்
முற்றுகை அதிகரித்த காட்டினுள்
மீளப் பெயர்ந்து பாய்கிறது.

இவ்வரிகளில்'இனி' என்றசொல்எதிர்காலத்தைசுட்டிவருகிறது.ஆனால் கவிதை 'பாய்கிறது' என நிகழ்காலத்தில் முடிகிறது. இவ்வாறமைவது சொற்களின் அர்த்தத்தைச் சிதைத்துவிடுவதாகவுள்ளது. 'இனியொரு' என்ற சொல்லை நீக்கிவிட்டு கவிதையை வாசிப்பின் வாசிப்புக்கு எவ்வித இடையு+றும் ஏற்றபடவில்லை. அல்லது அச்சொல் 'இன்னொரு' என அமைந்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

இதனைவிட 'பயங்காவாதிகளும் பதுங்குகுழிகளும்' என்ற கவிதையில்,
நமது ஓலங்களிற்குள்
பெருகும் குருதி ஆறுகளிற்குள்
சந்தைகள் பரவி நிகழ்ந்தன."

என வருகின்றது. இந்த வரிகள் பொருட் குழப்பம் தருகின்ற வரிகளாகவுள்ளன. 'சந்தைகள் பரவி நிகழ்ந்தன' என அதன் முடிவு முன்னைய வரிகளுடன் எவ்விதத்திலும் ஒட்டாது விலகியே நிற்கின்றது. 'நிகழ்ந்தன' என்னும் சொல் 'நின்றன' என அமைந்திருப்பின் பொருட் புலப்பாட்டுக்கு ஓரளவாவது இடையூறாக அமைந்திருக்காது. இத்தகைய சிக்கல்கள் பல கவிதைகளில் காணப்படுவதால் சொற்களை நேர்த்திப் படுத்தி கவிதைகளைச் செம்மைப்படுத்த வேண்டிய தேவை அவருக்கிருக்கின்றது. அவ்வாறு இல்லாதுவிடின் வாசகனே சொற்களை ஒழுங்கு படுத்தி வாசிக்க வேண்டிய தேவையை கவிதைகள் ஏற்படுத்தும் நிலையேயிருக்கின்றது.

தீபச்செல்வன் கவிதைகள் பலவற்றில் கவித்துத்தன்மையில்லாத வரிகள் பலவற்றைக்காணமுடிகின்றது.சாதாரணமாகப்புளக்கத்திலுள்ளசொற்களைக் கவிதைக்காக உடைத்துடைத்துப் போட்டு கவிதையென்னும் புனைவுருவை ஏற்படுத்துகின்றார். இதற்கு உதாரணமாக 'கிளிநொச்சி' என்னும் கவிதையினைக் குறிப்பிடலாம். யுத்தத்தால் எப்போதும் தாக்கப் பட்டுக்கொண்டிருந்த நகரம் என்பதால் அந்த நகரத்துக்கு வரலாற்றடிப் படையிலான முக்கியத்துவங்கள் பல காணப்படுகின்றன. தீபச்செல்வனின் கவிதையும் அம்முக்கியத்துவத்திற்கான காரணங்களை கோவைப்படுத்துகின்றன. இவ்வடிப்படையில் இக்கவிதையின் பரிமாணம் முக்கியத்துவமானதுதான். எனினும் கவிதையாக அதனை எழுதும்போது கவித்துவத்தினை எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாததே. அவரின் நகரங்கள் சார்ந்த அனுபவப்பகிர்வுகள் மிக முக்கியமானவை. முதற்தொகுதியான 'பதுங்குகுழியில் பிறந்த குழந்தை' தொகுப்பில் 'யாழ் நகரம்' என்னும் சிறந்த கவிதையினை எழுதியிருக்கின்றார். இக்கவிதை யுத்தத்தாலும் மரணங்களாலும் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்தின் நெருக்கடிமிக்க காலத்தை உணர்வோட்டத்துடன் பிரதிபலிக்கின்றதுயாழ்பாணம் பற்றிய அப்போதைய நிலையை,

ஒரு கொத்துரொட்டிக்கடை
இனந்தெரியாத பிணம்
நீளும் அமைதி: யாழ். நகரம்..

எனச் செறிவடர்த்தி மிக்க வரிகளால் படிமப்படுத்துகின்றார். மனிதர்கள் இனங்காணப்படாதவர்களால் கொல்லப்படுவதும் சடலங்கள் இனங் காணப்படாமல் தெருக்களில் இருப்பதையும், கொல்லப்பட்டவனின் சடலம் மீது ஆயிரம் கதைகள் கட்டப்படுவதையும்,

எனது பிணத்தில்
எத்தனை கேள்வியிருக்கிறது
எப்பொழுது நான்
இனங்காணப்படுவேன்?

இவன் ஏன் சுடப்பட்டான்
என்பது பற்றிக்கூட
நீங்கள் சிந்திக்க மாட்டீர்கள்
உங்களால் தொடர்ந்து
சாப்பிட முடியும்
நாளைக்கு வெடிக்கப்போகிற
வன்முறைகளுக்கு
ஊரடங்கு அமுலுக்கு
நீங்கள் தயாராகுவீர்கள்' (பதுங்குகுழியில் பிறந்த குழந்தை)

எனப்பதிவுசெய்வதோடு மக்கள் உணவுப்பொருட்களுக்காக அல்லாடித் திரிந்த அந்த நாட்களின் அவலங்களையும் ஆயுதங்களால் குரலறுக்கப் பட்ட மக்களின் பெருந்துயரையும் மிக பிரக்ஞைபூர்வமாக எழுதியிருக்கின்றார். ஆனால் 'கிளிநொச்சி' நகரம் பற்றிய கவிதையில் உணர்வு பூர்வமான சொல்லாட்சி காணப்படவில்லை. மாறாக வெற்று வரிகளே பெரிதும் நிறைந்திருக்கின்றன,

இப்பொழுது
சைக்கிளை
மெதுவாக ஓட்டியபடி போகிறோம்
எங்கள் மோட்டார்சைக்கிள்
வீட்டில் நிற்கிறது.
இனி நடந்தும் போகவேண்டி இருக்கும்'

'பிரகாசின் அம்மா
புற்றுநோயில்
இறந்துவிட்டாள்
பாதை பு+ட்டியிருந்ததால்
அவளுக்கான வைத்தியங்கள்
தவறிவிட்டன.
கடைசி நாட்களில்
நல்ல சாப்பாடுகளைக்கூட
பிரகாசு
வாங்கிக் கொடுக்க முடியவில்லை

இவ்வரிகள் கவிதைக்கான மொழியாகப் பரிமாணம் பெறாது வெற்றுச் சொற்களாகவே எஞ்சி நிற்கின்றன. வெறும் சம்பவங்களின் கோர்வையாகக் கவிதையாகிவிடுகின்றது.

இத்தொகுப்பில் பல நல்ல கவிதைகளாகவும் கவித்துச்செழுமையை கொண்டுள்ள கவிதைகளாகவும் சிலவற்றைக் குறிப்பிடலாம். 'துண்டிக்கப் பட்ட சொற்கள், வற்றாத காலையில் வருகிற அச்சுறுத்தல், அழிப்பதற்குப் பிரகடனம் செய்யப்பட்ட நகரத்தின் கதிரைகள், பாம்புகள் பரிசளித்த சவப்பெட்டிகள், இரவு மரம், நிலம் பெயர்ந்தலைய வந்துவிடு, பயங்கர வாதிகளும் பதுங்குகுழிகளும்' இவ்வாறாகக் கொள்ளலாம்.

ஒரு காலகட்டத்தின் மாபெரும் மனிதத்துயரைப் பதிவு செய்திருக்கின்றன என்ற சிறப்பும் முக்கியத்துவமும் தீபச்செல்வனுக்கும் அவரது கவிதைகளுக்கும் உண்டு. ஆயினும் வெளிவந்திருக்கும் அவரின் இரண்டு கவிதைத்தொகுதிக் கவிதைகளும் வெளிப்பாட்டு முறையில் ஒத்தேயியங்குகின்றன. இத்தகைய முறையிலான கவிதை கூறல்முறையிலிருந்து மாற வேண்டிய தேவை அவருக்கிருக்கின்றது. அம்மாற்றம் தீபச்செல்வனின் கவிதைகளுக்கு மேலும் செழுமையையும் முக்கியத்துவத்தினையும் ஏற் படுத்தும் என நம்புகின்றேன்.

■

[ கவிதை ]

# முகம் பற்றிய மூன்று கவிதைகள்

அ. யேசுராஜா

## கடலோடி

1 இருந்தேன் இல்லையாகினேன்
சந்திப்பு
கூட்டங்கள்
சூழலுக்கிசைந்து மாறும்
'வேசையர் குழாமின்' இலக்கியச்சூழல்
பணிவாய்க் கைகட்டித்
தலைசாய்த்து
'சொல்லுங்க ஸேர்!' எனக்கேட்கும்
தகவல் திரட்டிகளாய்
இரட்டை முக 'வளர குஞ்சுகள்'

ஏமாற்றம் வெறுமை
வெறுப்பு
காணாமற்போனேன்
நானே

அடையாளம் அழித்து
'எப்பிடி இருக்கீங்க?
பரிவும் துயரும் பிணைந்து
மனவெளியில்
தொலைதூர அவளின் முகமும் குரலும்!'

துருவப் பனிக்கட்டி உடைந்து உருக
தூரட்டிக்கொண்டேன் என்னை.

மீண்டும் இருக்கிறேன்!

2

இலங்கை வங்கிக் கதவைத்
திறந்து உள்ளே
போகிறேன்
எதிரே,
விருதுகள் வாங்கிய எழுத்தாளர்
முகந்திருப்பி
என்னை அவர் கடக்கிறார்;ஞ
நன்கு தெரிந்தவர்;தான்
ஆனால்
'தகுதிக்கு மீறிய விருதுகள்'
என்றேன்
சில நாளின் முன்பு.

விமர்சனம் உறவை முறிக்கிறது
அவர்
என்னைக் கடக்கிறார்
நானும் அவரைக்
கடந்துசெல்கிறேன்!

3

சிரித்தவாறு பதாகையில்
மரத்தில் தொங்குகிறார் அவர்
'நானுங்கள் சொந்தக்காரன்'
வாசகத்தையும்
கண்களில் பட வீசுகிறார்!

புல்குழல் றொக்ஸ்கற்;
ஆட்டிலறி எறிகணைகள்
கொத்துக்குண்டுகள்
கிபிர்களின் பேரிரைச்சல்
எல்லாம்
நினைவில் பயங்கரமாய் வெடித்துப்
புகைக்கக்க
மூச்சுத் திணறுகிறேன்

கசப்பு இயலாமை நிறைந்து
வெறிதானதாய்ச் சிரிப்பு
இடம்மாறி விடுகிறது இப்போ
எனது முகத்தில்!



[ அஞ்சலி ]

# விட்டுப் போச்சுது

அ.முத்துலிங்கம்

கலாநிதி செவாலியர் அடைக்கலமுத்து ஐயா அவர்கள் சில வருடங்களுக்கு முன்னர் ரொறொன்ரோ வந்திருந்த போது அவரைச் சென்று சந்தித்தேன். அந்தச் சந்திப்பு எனக்கு மறக்க முடியாத ஒன்றாக அமைந்தது. அதைத் தொடர்ந்து ஐயா எழுதிய, 'இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்' நூலினை படித்து அனுபவித்தேன். சென்ற மாதம் அவர் இறந்து போனது தமிழுக்கு பெரும் இழப்பு. அவர் ஞாபகமாக இந்தப் பதிவு.

அடைக்கலமுத்து ஐயாவை சந்தித்தபோது அவர் முந்தைய யாழ்ப்பாணத்தை அப்படியே என் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தினார். அவர் படித்த பள்ளிக்கூடத்தில் அவரைப் படிப்பித்த ஆசிரியர்களில் சிலர் மோசமானவர்கள். எடுத்தவுடன் அடித்துவிட்டுத்தான் விசாரிப்பார்கள். யார் முதலில் முறைப்பாடு கொடுக்கிறாரோ அவர் பக்கமே தீர்ப்பு இருக்கும். அடைக்கலமுத்து கெட்டிக்காரன் என்றபடியால் அவருக்கு படிப்பு விசயத்தில் அடி கிடைத்ததில்லை; ஆனால், அவருடன் படிக்கும் மாணவர்களின் சதியில் சில சமயம் மாட்டுப்பட்டு அடி வாங்குவார். முதல் முறை அடி விழுந்தபோது தாங்கிக் கொண்டார். இரண்டாவது முறை பள்ளிக்கூடத்தை விட்டே ஓடவேண்டி நேர்ந்தது.

சண்முகம் இவருடன் படித்த மாணவன். தினமும் வண்டிலில் மணல் ஏற்றிப் பறித்துவிட்டு வருவதால் நேரம் பிந்தியே வருவான். ஆனால், புத்திசாலி; ஒவ்வொரு நாளும் புதிதாக ஏதாவது சாட்டு தயாரித்து ஆசிரியரை சமாளிப்பான். அவனுடைய பட்டப் பெயர் 'சாலக்கார சண்முகம்'. அவனுக்கு புகையிலை போடும் பழக்கம் இருந்தது. ஆசிரியர் அவனுடைய மடியை அடிக்கடி சோதித்துப் பார்ப்பதால் அடைக்கல முத்துவிடம் புகையிலையைக் கொடுத்து பத்திரமாக வைத்திருப்பது அவன் வழக்கம்.

ஒருநாள் 'சாலக்கார சண்முகம்' வீட்டுக் கணக்கு போடவில்லை. ஆசிரியர் அவனை அடிக்கப்போகிற சமயம் அவரை திசை திருப்புவதற்காக அடைக்கலமுத்து மடியில் புகையிலை ஒளித்து வைத்திருக்கும் விசயத்தை சொல்லிவிடுகிறான். ஆசிரியர் அடைக்கலமுத்துவின் மடியை சோதித்துப் பார்த்து நல்ல அடி கொடுக்கிறார். அந்தச் சம்பவத்துக்கு பிறகு அடைக்கலமுத்து எச்சரிக்கையாக இருக்க பழகிக்கொண்டார். அப்படியும் விதிவசத்தால் இரண்டாவது தடவையும் ஒரு சதியில் மாட்டினார். அது அவருடைய வாழ்க்கையையே மாற்றியது.

அடைக்கலமுத்து கணிதத்தில் வலு கெட்டிக்காரர். விஞ்ஞானியாக வேண்டும் என்று நினைத்தார். இவரோடு படித்த சிவராசனுக்கு கணக்கு ஓடாது. ஒவ்வொரு நாளும் இவர் கொண்டுவரும் வீட்டுக் கணக்கை கொப்பியடித்து சிவராசனும் தப்பிக்கொண்டு வந்தான். ஒரு நாள் ஆசிரியர் வகுப்பில் முதல் கெட்டிக்காரன் அடைக்கலமுத்து என்றும் இரண்டாவது கெட்டிக்காரன் சிவராசன் என்றும் சொல்லி விட்டார்.

அன்றிலிருந்து அடைக்கலமுத்து சிவராசானுக்கு கொப்பி காட்ட மறுத்தார். சிவராசானுக்கு கறுவம். எப்படியும் அடைக்கலமுத்துவை பழி வாங்க நினைத்தான். ஒரு நாள் அடைக்கலமுத்துவை ஆசிரியர் அழைத்து ஒரு சதம் காசு கொடுத்து அதற்கு இரண்டு சூப்புத்தடி வாங்கிவரும் படி பணித்தார். அடைக்கலமுத்து திரும்பி வரும் வழியில் ஒரு சூப்புத்தடியை நக்கிப் பார்த்து, துடைத்துவிட்டு ஆசிரியரிடம் கொடுத்தார். சிவராசன் அடைக்கலமுத்து நக்கியதைக் கண்டு பிடித்து அதை ஆசிரியரிடம் சொல்லிவிட்டான். அன்று அடைக்கலமுத்துவுக்கு கிடைத்த அடியில் சதை உரிந்து பள்ளிக்கூடம் போவதையே நிறுத்திவிட்டார். தகப்பன் எவ்வளவு வற்புறுத்தியும் அசையவில்லை. கடைசியில் அடைக்கல முத்துவின் விருப்பப்படி அவரை ஒரு தமிழ் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். உலகம் ஒரு தமிழறிஞரைப் பெற்றது; விஞ்ஞானியை இழந்தது.

ஈழத்திலே வாழ்ந்த தமிழறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையைப் பற்றி அடைக்கலமுத்து தன் நூலிலே சொல்கிறார். அவரிடம்தான் அடைக்கலமுத்து தமிழ் படித்தவர். அன்று அவருக்கு முதல் நாள், முதல் வகுப்பு. பண்டிதமணியிடம் கலிங்கத்துப்பரணி பாடலை விளக்கம் கேட்டது, தன் வாழ்நாளில் முக்கியமான நிகழ்வு என்று கூறுகிறார், அடைக்கலமுத்து. பணம் இல்லாதவனுக்கு திடீரென்று பெரும் திரவியம் கிடைத்தால் என்ன செய்வான்? ஆருமில்லாத நேரம், அங்குமிங்கும் பார்த்துவிட்டு பணத்தை எண்ணிப் பார்த்து திரும்பவும் பூட்டிவைப்பான்.

கணவன் அவளுடைய முலையிலே பதித்த கைவிரல் நக அடையாளம் நாணயக்குத்திபோல பதிந்துகிடக்கிறது. ஒருதரும் காணாத இடத்திலே

**மார்க்கோ போலா என்பவர், தான் சீனாவுக்கு போய் வந்த வரலாற்றை பெரிய புத்தகமாக எழுதினார். இறக்கும்போது தான் பார்த்ததில் பாதியைத் தான் எழுதியதாகக் கூறினார். மீதி விட்டுப்போச்சுது.**

போய் மெல்லத் தாவணியைக் கழற்றி நெஞ்சிலே பதிந்திருக்கும் அடையாளத்தை பார்ப்பாள். அது முந்திப் பிந்தி பணத்தைக் காணாதவர் கண்டதுபோல சந்தோசமாயிருக்கும். அது அழியக் கூடாது என்று நினைத்து அவசர அவசரமாக சீலையினாலே மூடிவைப்பாள். முலை மீது கொழுநர் கைநகம் மேவு குறியை / முன் செல்வம் இல்லாதவர் பெற்ற நிதிபோல் / கலைமீது எடா(து) யாரும் இல்லாத இடத்தே / கண்ணுற்று நெஞ்சகம் களிப்பீர்கள் திறமின். எப்பொழுது கலிங்கத்துப் பரணியை கையிலே எடுத்தாலும் தனக்கு பண்டிதமணியின் ஞாபகம் வராமல் போகாது என்று கூறுகிறார் அடைக்கலமுத்து.

பாலசுப்பிரமணியம் என்ற பெயரை இளமுருகன் என்று மாற்றிய புலவர் மணி ஈழத்திலே வாழ்ந்தார். தனித்தமிழ் ஆர்வத்தினால் தன்னுடைய பெயரை மாத்திரமில்லாமல் 'நாராயணன்' என்ற தன்னுடைய வேலைக்காரனுடைய பெயரையும் 'நடுவிலான்' என்று மாற்றியவர். இவர் அடைக்கலமுத்துவின் குரு. ஒருநாள் நடுவானத்தை நோக்கி சூரியன் ஏறிக் கொண்டிருந்தான். இவருடைய குரு களைப்போடு வீதியிலே பேருந்துக்காக காத்து நின்றார். அடைக்கலமுத்து அவசர அவசரமாக அவருக்கு தன்னுடைய மகன் மூலம் பால், பழம், கசுக்கொட்டை, முந்திரிய வத்தல் போன்றவற்றை அனுப்பி வைத்தார். குரு நெகிழ்ந்து போனார். உடனேயே பக்கத்திலே சுருட்டி வைத்திருந்த வீரகேசரிப் பேப்பரின் விளிம்பிலே ஒரு வெண்பா எழுதி அனுப்பினார். அதன் பொருள் இதுதான்:

முன்னொரு காலத்திலே அவ்வை, விநாயகரிடம் நாலு தந்து மூன்றைக் கேட்டாள். அதாவது பால், தேன், பாகு, பருப்பு இவற்றைக் கொடுத்து, அதற்கு பிரதியுபகாரமாக சங்கத் தமிழ் மூன்றையும் கேட்டாள். முருகனிடம் கேட்கவில்லை; கேட்டால் அது கிடைக்காதென்று அவளுக்கு தெரியும். அப்படியிருக்க, நீரோ இளமுருகனான எனக்கு நாலு தந்து என்ன பயன்? ஒன்றும் பிரயோசனமில்லை, என்றாலும் நல்லாயிரும். 'நாலு கொடுத்தவ்வை மூன்று வரங்கேட்டாள் / வேலவற் கீந்திட்டால் வீணென்றே மேலும் / இளமுருகற் கீந்தால் என்ன பயன், என்னமுதே / வளம் பெருகி நீடூழி வாழ்'.

புத்தகத்தில் ஓர் இடத்தில் அடைக்கலமுத்து யாழ்ப்பாணத்துக்கு கல்கி ஆசிரியர் வந்து போனதை பற்றியும் குறிப்பிடுகிறார். கூட்டத்தில் ஒருவர் கல்கியிடம் ஒரு கேள்வி கேட்கிறார். 'வடக்கே இந்தியும் தெற்கே சிங்களமும் நசிக்கும்போது தமிழின் எதிர்காலம் என்ன?'

கல்கியின் பதில் இப்படி இருந்தது: 'எனக்கு நன்கு அறிமுகமான ஒரு நண்பர் இருக்கிறார். அவர் ஒரு சிவபக்தர். தனது அருமை மகனுக்கு மிக நீளமான ஒரு பெயரை வைத்திருந்தார். சிவநாராயண பழனிவேல். இவ்வளவு நீண்ட பெயரை ஏன் வைத்தீர்கள் எனக் கேட்டேன். நாராயணனை இந்தப் பக்கம் சிவனும் அந்தப் பக்கம் பழனிவேலனும் நசுக்கவேண்டும். அதற்காகத்தான் இந்தப் பெயரைத் தெரிந்துகொண்டேன் என்றார். எப்படி நசுக்கினும் நாராயணன் நசுங்கி விடப்போவதில்லை. தமிழ் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக எத்தனையோ இடர்ப்பாடுகளிலே தழைத்திருக்கிறது. அதற்கு ஆபத்து வந்து விடாது.'

'ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கல்கி கூறிய பதில் இன்றைக்கும் பொருத்தமானதாகத்தான் இருக்கிறது' என்றார் அடைக்கலமுத்து.

பேராசிரியர் செல்வநாயகத்திடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அடைக்கலமுத்து இலக்கிய நலனாய்தல் படித்தார். அந்தக் காலத்தில் ரா.பி.சேதுப்பிள்ளை போல எழுதுவது 'ஃபாஷனாக' இருந்தது. 'நாடு நீங்கிக் காடு புகச் சென்ற கோதையாகிய சீதை' என்று யாராவது எழுதினால், அது என்ன 'கோதையாகிய சீதை' என்று பேராசிரியர் கிண்டல் செய்வார். 'ஓசை செவியில் கேட்டு' என்று எழுதினால் போச்சு; குறுக்காக வெட்டிவிட்டு, 'ஓசை வேறு எங்கே கேட்கும், கண்ணிலா?' என்று புன்னகைப்பார். ஒரு நாள் வகுப்பில் பாரதியாருடைய 'திக்குத் தெரியாத காட்டில்' பாடல் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது அடைக்கலமுத்து எழுந்து நின்று, 'பாரதியார் நினைத்த கருத்துக்கு பாடல் வரிகள் ஒத்துப்போகவில்லை' என்றார். வகுப்பில் ஒரே அமைதி. 'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்றார் பேராசிரியர்.



'திக்குத் தெரியாத காட்டில் கண்ணனைக் காணத் தவிக்கிறாள் காதலி. அவனைத் தேடித் தேடி அலைகிறாள். ஆனால் அவளுக்கு என்ன தெரிகிறது? மிக்க நலமுடைய மரங்கள், விந்தைச் சுவையுள்ள கனிகள், மலைகள், நதிகள், நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள், நீளக் கிடக்கும் இலைக் கடல்கள், சுனைகள், முட்கள், புதர்கள். இவற்றிலே அவள் மனதைப் பறிகொடுக்கிறாள், ஒரு சுற்றுலாப் பயணி போல. கண்ணன் தோன்றுவானா? இதுதான் கண்ணனைக் கண்டடையும் முறையா?' பேராசிரியர் மடிப்புச் சால்வையை இழுத்துப் போட்டபடி அடைக்கல முத்துவை அன்று பாராட்டினார்.

புலவர்களையும் பேராசிரியர்களையும் மட்டுமல்லாமல் தன் இளவயது நண்பர்களைப் பற்றிய குறிப்புகளையும் அடைக்கலமுத்து தருகிறார். இவரோடு படித்த கேசவன் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவன். அவனுக்கு படிப்பு ஏறாதபடியால் ஒரு சாப்பாட்டுக் கடையில் வேலை பார்த்தான். இவர் தன் நண்பனை பார்க்கப் போனபோது, அவன் அளவில்லா மகிழ்ச்சியில் குதித்தான். அதுவே கேடாகவும் அமைந்து விட்டது.

அன்று அவனுக்கு வேலை முடிந்ததும் இருவரும் திரைப்படம் பார்க்கப் போவதென்று தீர்மானித்தார்கள். அவன் அவசர அவசரமாக தோசை மாவை அரைத்து அண்டாவில் கலக்கி வைத்துவிட்டு, இரண்டாவது ஆட்டத்துக்கு புறப்பட்டான். அவசரத்தில் வந்தவன் அண்டாவை மூட மறந்துவிட்டான். அடுத்த நாள் காலை தோசை சாப்பிடுவதற்கு ஒருவர் கடை திறந்ததும் வந்து சேர்ந்தார். அவர் தோசையை பிய்த்து வாயில் வைத்தால் மயிர் மயிராக வருகிறது. 'என்ன முதலாளி தோசைக்கு மசிர் இருக்கா?' என்றார். பார்த்தால் தோசைப் பானைக்குள் இரவு

ஒரு பூனை விழுந்துபோய் கிடந்தது. கேசவனுக்கு வேலை போய் விட்டது. இருந்த ஒரு வேலையையும் தொலைத்த கேசவன் ஆடிப் போகவில்லை, 'மசிர் வேலை' என்றான்.

ஒரு காலத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப்பாணத்துக்கு குட்டி ராசா போல இருந்தார். காங்கிரஸ் கட்சியின் தலைவர். அடைக்கலமுத்து காங்கிரஸ் கட்சி கூட்டங்களில் எல்லாம் பேசுவார். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் பெருமதிப்பு வைத்திருந்தார்கள். ஜீ.ஜீ. ஒரு புகழ்பெற்ற நியாயதுரந்தர். (பயப்படவேண்டாம், இந்தக் காலத்து தமிழில் வழக்கறிஞர்.) இவர் வாதாடி வென்ற வழக்குகள் பற்றி ஒரு புத்தகம் எழுதலாம். அதிலே இலங்கை முழுக்க பேசிய வழக்கு என்று ஒன்று இருந்தால் அது, 'யானை மார்க் தீப்பெட்டி' வழக்குத்தான். ஒரு கடைக்காரரை,தீப்பெட்டி அரைச்சதம்கூட்டி விற்றார் என்றுபொலீஸ் பிடித்துவிட்டது. அரசாங்க தரப்பு வழக்கறிஞர், கடைக்காரர் 'ஒரு யானைப்பெட்டியை' அரசாங்கம் நிர்ணயித்த விலையிலும் பார்க்க அதிகவிலையில் விற்றுவிட்டதாககுற்றம்சாட்டினார். ஜீ.ஜீ.பொன்னம் பலம், நீதவானுக்கு தீப்பெட்டியை தூக்கி காட்டி அதில் இரண்டு யானைகள் படம் போட்டிருப்பதாகவும், அது 'ஒரு யானைப்பெட்டி' அல்ல என்றும் வாதாடி வழக்கை வென்றுவிட்டார்.

இப்படி பல ருசிகரமான தகவல்கள் கிடைத்தாலும் இது வெறும் சம்பவங்களின் தொகுப்பு அல்ல; அதைச் சொன்ன விதம் இலக்கியத் தரமாக அமைந்திருந்தது. வர்ணனைகளும் உவமைகளும் வாசிப்பு இன்பத்தைக் கூட்டின. உதாரணத்துக்கு சில:

'சூரிய உதயத்தை எதிர்பார்க்கும் இரா காவல்காரனைப் போல...'

'இனிப்பு போத்தல்களின் மேலால் முதலாளியின் முகம் தெரிந்தது.'

'என் இருதயத்தின் எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிந்தன.'

'கமக்கட்டுக்கு மேலே தொங்கிய சட்டையோடு வந்த மகளை...'

'எழுதி இலேசாக அழிந்த கரும்பலகை போல தலைமயிர் நரையும் கருமையும் கலந்திருக்கிறது.'

நான் புத்தகத்தை வாசித்து முடித்ததும் லண்டனில் இருக்கும் அடைக்கலமுத்து ஐயாவை தொலைபேசியில் அழைத்து, என் பாராட் டைத் தெரிவித்துவிட்டு, 'என்ன ஐயா, இப்படிச் செய்துவிட்டீர்கள்?' என்றேன். அவர், "ஏன்?, ஏன்?" என்றார். 'நீங்கள் என்னிடம் சொன்ன சுவையான சம்பவங்கள் சில விட்டுப் போச்சுதே?' அவர், 'அப்படியா, என்ன?' என்றார். நான் ஒன்றுக்கு மேல் ஒன்றாகச் சொன்னேன். 'இவை உங்கள் வாழ்க்கையையே மாற்றிய சம்பவங் கள், மிக முக்கியமானவை' என்றேன். சிறிது நேர மௌனத்திற்கு பிறகு சன்னமான குரலில், 'விட்டுப் போச்சுது' என்றார் துயரத் தோடு.

மார்க்கோ போலா என்பவர், தான் சீனாவுக்கு போய் வந்த வரலாற் றை பெரிய புத்தகமாக எழுதினார். இறக்கும்போது தான் பார்த்ததில் பாதியைத் தான் எழுதியதாகக் கூறினார். மீதி விட்டுப்போச்சுது. ஜெய மோகன் சமீபத்தில் சு.ரா.வைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினார். அது எழுதி வெளிவந்த சில நாட்களில் பேசும்போது பல சம் பவங்கள் விடுபட்டுவிட்டதாக அவரே என்னிடம் சொன்னார்.

நான் அடைக்கலமுத்து ஐயாவை சமாதானப்படுத்தினேன். 'இது எழுத் தாளர் எல்லோருக்கும் நடப்பதுதான். ஐயா, யோசிக்காதையுங்கோ. விடுபட்ட எல்லா சம்பவங்களையும் தொகுத்து இன்னொரு புத்தக மாகப் போடலாம்' என்றேன்.

அவர் சிரித்தார். அந்த 85 வயது சிரிப்பு அட்லாண்டிக் சமுத்திரத்தை கடந்து என்னிடம் வந்தது.

■


Supercare Pharmacy

3228 Eglinton Ave. East
Scarborough ON M1J 2H6
Tel : 416 298 3784
Fax : 416 298 3052

PharmaGrace Drug Mart

3850 Finch Ave. East
Scarborough ON M1T 3J6
Tel : 416 267 9900
Fax : 416 267 1800

Contact: RAM, Pharmacist

[ சிறுகதை ]

# வங்கணத்தின் நன்று வலிய பகை

## நாஞ்சில் நாடன்

கும்பமுனியைத் தொடர்பு கொள்வதற்கான ஒரே வழி நேரில் போவது தான். அஞ்சல் முகவரி உண்டு; கடிதம் போய்ச் சேரும்; வாசிக்கவும் செய்வார். ஆனால், மறுமொழி எழுதுவார் என்பதற்கு எந்த உத்திர வாதமும் இல்லை. சமீப காலமாய் அவருக்கு ஒரு கேள்வியும் உண்டு, கடிதங்களே எதற்குத்தான் எழுதப்படுகின்றன என்று. கடிதம் எழுதும் பழக்கமும் சென்று தேய்ந்து இறும் பருவ காலத்தில் உள்ளது. மாய்ந்து மாய்ந்து அஞ்சலட்டை எழுதிய அவரது மூத்தார் சிலரிடம் கும்பமுனிக்கு அனுதாபம் உண்டு. 'வேலையும் சோலியும் அத்தவனுக' என முனகுவார். முன்பெல்லாம் பத்துக்கு மூன்று எனும் விகிதத்தில் பதில் எழுதுவார். அது சீட்டுக் குலுக்கிப் போட்டு பரிசு விழுவது போல. சம்பளத்துக்கு ஆள் வைத்து, வந்த கடிதங்களுக்கெல்லாம் தட்டச்சு செய்து பதில் போடும் எழுத்தாளர் சிலரையும் அவருக்குத் தெரியும். பதில் எழுதிய நகலும், வந்த கடிதமும், ஆண்டு வாரியாகக் கோப்புக்களில் சேமிக்கப்படுவதும் தெரியும்.

அவசரமாகவும் திட்டமிட்டும் புகழ் பெற்று ஏதும் ஆகப் போவதில்லை என்பதும் அறிவார். "உண்பது நாழி உடுப்பதுவும் இரண்டு முழம்! இதில் எந்தப் பெயர்? இரண்டு மூன்று இரங்கல் கட்டுரைகள் தாண்டி யார் சினைத்துப் பார்ப்பார்கள்! செத்துப் போவதுதான் தமிழ் எழுத் தாளனுக்கு அட்டைப் படத்தில் இடம்பெற கடைசி வாய்ப்பு. அத்தோடு சரி. 'நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே!'

மேலும், உள்நாட்டுத் தபாலுக்கு நான்கு ரூபாயும் கவருக்கு ஐந்து ரூபா யும் விற்கும் விலைக்கு, மாதம் வருகின்ற இருநூற்றுச் சொச்ச கடிதங் களுக்குப் பதில் எழுதுவது என்பது கும்பமுனிக்கும் தவசிப் பிள்ளைக் கும் ஒரு மாதத்துக்கான பலவெஞ்சணச் செலவு. மீதிச் செலவுக்கு புதுமைப்பித்தன் சொன்னது போல், ஓய்ந்த பொழுதில் எழுத்து விபசாரம் செய்யலாம். சீனி, தேத்தூள், பாலுக்கு ஆச்சு.

சரி, கடிதம் தான் வேண்டாம்; செல்போன், தொலைபேசி, இமெயில் என்று இல்லையா என்று கேட்கலாம். 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்' என்பதவர் கருதுகோள். கணினியே கிடையாது; ஃப்ளாக் எங்கே எழுதுவார். வேலை அற்ற நாவிதன் கழுதைக்குச் சிரைத்தது போல, எப்படியோ சிலர் கும்பமுனியைத் தேடியும் வந்து விடுவார்கள்.

அப்படித்தான் அன்றொருபதிப்பாளர்வந்தார்,இடலாக்குடியில் இருந்து. எண் சுவடி போல, இரண்டு பாரம் மூன்று பாரங்களில் ஏழெட்டுப் புத்தகங்கள் போட்டிருந்தார். முத்தாரம்மன் பக்தி மணி மாலை போட்டி ருந்தார். முத்தாரம்மன் பக்தி மணி மாலை, மாவீரன் பாடகலிங்கம், கூப்பிட்ட குரல் கேட்கும் குமரித் தெய்வம், மோசஸ் ஞானபுஷ்பம் தூமணிமாலை எனச் சில.

பூமுகத்தில் ஏறி வந்து உட்கார்ந்து, ஜிப்பாவின் கீழ்முந்தியால் விசிறிக் கொண்டவரைப் பார்த்து கும்பமுனி கேட்டார்: 'என்னடே? பொய்தகக் கச்சவசம் எல்லாம் எப்பிடிப் போகு?'

'ஒண்ணும் புண்ணியமில்லே பாத்துக்கிடும். பதிப்பாளரா இருக்கணும் ணா ஒண்ணு செட்டியாராட்டு இருக்கணும், இல்லாட்டா ஐய்யராட்டு இருக்கணும். ரெண்டும் இல்லாட்டா மெட்ராஸ்லயாவது இருக்க ணும்.'

'ஏம்டே? சாதி பாத்தா பொஸ்தகம் வேண்டுகானுவோ? சுற்றுலாத்துறை, தமிழ் வளர்ச்சித் துறை, கல்லூரி முதல்வர், பல்கலைக்கழகத் தமிழ்த் துறைன்னு முக்கியமான ஆளுகள் புடி வேணும்.... அது நம்மட்ட இல்லேல்லா? இந்த கடசிக் கோடியிலே இருந்து கிட்டு வேற என்ன ஈரமண்ணைச் செய்ய முடியும்? பின்னே சுசீந்திரம் தேரோட்டம், மண்டைக்காட்டுக் கோயிலு கொடை, சவுரியார் கோயிலு திருநாளு, நாகரம்மன் கோயில் ஆவணி ஞாயிறுண்ணா ரோட்டோரம் சாக்கு விரிச்சு பொஸ்தகம் பரத்திப் போட்டா கொஞ்சம் விக்கும். அதுல இந்த மகமைக்காரன், திருவிழாக் கமிட்டி, போலீஸ்காரன் அடாவடி எல்லாம் போகச் செள்ளம் காசு கிடைக்கும்...'

'அம்புட்டு கஷ்டப்பட்டு என்னத்துக்கு இந்தத் தொழிலு செய் யேரு? வடசேரி கனக மூலம் சந்தையிலே வெள்ளிரிக்கா விக்கப் போலாம்லா?'

'அதுக்குத்தான் ஒரு வழி ஆலோசிச்சு வச்சிருக்கேன். உம்மைப் பாக்க வந்ததே அதுக்காச்சுட்டிதான்.'

'நம்மூர்லே கொஞ்சம் பேரு, பங்குனி சித்திரையிலே' என்றார் தவசிப் பிள்ளை.

'இவன் ஒருத்தன். ஞானி மடம்ணா யோனிமடம்பான்; நீரு சொல்லும் பேரப்புள்ளே.'

'இப்பிடி பொஸ்தகம் வித்துப் பொழைக்க முடியாது.'

'அதுக்கு நீரு, வேற ஒரு வழி ஆலோசிக்கணும். இண்ணைக்கு பொரிகடலை, உப்புக்கடலை, ட்'ட்டாணிக் கடலை மாதிரி விக்கப்பட்ட எழுத்தாளன் யாரு?'

'அது கொறயப் பேரு உண்டும்லா?'

'அதுலே ரெண்டு பேரு சொல்லும்.'

'கல்கி, சாண்டில்யன், சுஜாதா, சிவசங்கரிக்குப் பொறவு இப்பம் சித்தர் செல்வகுமாரன் விக்கும். பின்னே கவிப்பூ கம்பர் தவசிமுத்து விக்கும். கொஞ்சம் கூடக் கொறைய பானுமதி சுந்தரம் விக்கும்.'

'அவ்வோ பொஸ்தகத்தை நீரு அடிச்சு வில்லும்.'

'அது எப்பிடிப் பாட்டா? என்னைக் கோணயம்னு நினைச்சுப் போட்டேரா? அததுக்குண்ணு பதிப்பாளர், ராயல்படி ஒப்பந்தம் எல்லாம் இருக்குல்லா?'

'இது தாம்டே நம்ம ஆளுகள்ளே பெரிய சீண்ட்றம்... அவனவன் தன்னை ரொம்ப யோக்கியம்னு நெனச்சு வச்சிருக்காம்... மண்டையிலே ஒரு சுக்கும் கெடையாது, ஆயிரம் பேருக்கு ஆலோசனை சொல்லுவார்.'

'சரி நீரு சொல்ல வந்ததைச் சொல்லி முடியும்!'

'அந்த ரைட்டர்ஸ் எல்லாம் எந்தப் பதிப்பகம் போடுகுண்ணு பாரும்... அதே அட்டை, அதே எழுத்து, அதே தாள், அதே பைண்டிங், நீரு அடிச்சு எறக்கும்... யாரு கேக்கா?'

'அதே பதிப்பகம் பேர்லே?' - தவசிப்பிள்ளை.

'ஆமடே.... உமக்கு எல்லாம் புட்டுப்புட்டு வய்க்கணும்... அப்பிடித்தாம்வே நெறையப் பேரு ஆளாகது! தமிழ் நாட்டுக்கு நல்லது தானே! கூடுதல் கொஞ்சம் பேரு படிச்சு அறிவாளி ஆயிட்டா ஒமக்கு என்ன நட்டம்? வெலை அதே வெல வச்சு முப்பது சதமானம் கழிவுண்ணு தள்ளி விடு மக்கா... விக்கா இல்லியா பாரும்.... டிஸ்கவுண்ட் குடுத்தா, அரச்சுத் தேச்சா முடிவளரும்னு, களுதை விட்டையைக் கூட வித்தியலாம் பாத்துக்கிடும்.'

'பதிப்பகத்துக்காரன் கேஸ் போட மாட்டானா?'

"யாரு மேலே கேஸ் போடுவான்? பொஸ்தகத்திலே உம்ம பேரு, வீட்டு முகவரி, பேன் கார்டு நம்பர் எல்லாம் யாரு போடச் சொல்லுகா.... போவும்வே, போயி பதிப்பு மேருமலைண்ணு பட்டம் வாங்கதுக்குள்ள வழியைப் பாரும்.'

'எண்ணாலும் பாட்டா..."

'ரொம்பப் பயப்பட்டா எப்பிடிவே பணம் சம்பாரிப்பே? பின்ன லீகலாட்டு தப்பிக்கதுக்கும் செல வழிமுறை உண்டும் பாத்துக்கிடும். அதே பொஸ்தகத்தை, அதே பதிப்பகத்திலே அம்பது காப்பி ரொக்கம் குடுத்து, பில் போட்டு வாங்கி வச்சுக் கிடணும். பில்லு ரொம்ப முக்கியம். எவனாம் வந்து கேட்டாம்ணா, அந்த பில்லிலே வாங்கினது தான் இதுண்ணு சொல்லணும்... மனசிலாச்சா? என்னா அண்டி ஒறப்பிருக்கா...'

'பாட்டாக்கு முளைச்ச மயிரெல்லாம் கள்ள மயிராட்டு இருக்கும் போல.' - தவசிப்பிள்ளை.

'வேணும்னா இன்னும் ஒரு ஐடியா சொல்லித் தாறன்.... நமக்கு நீரு பீஸ் ஒண்ணும் தராண்டாம்..'

'பாட்டாக்கு ஐடியா தீராது... போல்ருக்கு?' - தவசிப்பிள்ளை.

'மேம்படியான் பதிப்பகத்து பொஸ்தகம் எந்தப் பிரஸ்லே அடிக்காம்னு கண்டு பிடிக்கணும்.'

'கண்டுபிடிச்சு?'

'அதே அச்சக மொதலாளிகிட்டே ஒரு டீல்...'

'என்னண்ணு?'

'மேப்படியான் ஐயாயிரம் காப்பி அடிக்காம்னு வையும், சேத்து உமக்கும் ஐந்நூறு காப்பி அடிச்சு வேண்டீரணும். அட்டை, தாளு, டைப்செட்டு, அச்சுக்கூலி எல்லாம் தோராய்மா!ப் பேசி, கறட்டு வழக்கு புடிக்காம ரெடிக் கேஷாட்டு குடுத்துப் போடணும். உமக்கு தனி லாரிப் பார்சல்லே தவசி முத்து வந்திருவாரு..'

திகைத்துப் போய்க் கேட்டார் பதிப்பாளர், 'பாட்டா?"

'போவும்வே, போயிச் செய்து பாரும். அடுத்த முறை என்னப் பாக்கதுக்கு சைக்கிள்ளே வரமாட்டேரு, பாத்துக்கிடும்..'

'கப்பல்லே வருவாரா?' - தவசிப்பிள்ளே.

'நீரு செவனேண்ணு கெடயும்.. பேரப்பிள்ளை ஏசி கார்லே வராட்டா எம்பேரை மாத்திக் கூப்பிடும்..'

'ரொம்ப ஆச காட்டுக்கு நீரு.' - தவசிப்பிள்ளை.

'வே, ஒண்ணு தெரிஞ்சுக்கிடும். இந்த நாட்டலே பதிப்பாளன் எல்லாரும் கார்லே போறான். எழுத்தாளன் எல்லாம் டவுண் பஸ்லே போறேன். இதான் இலக்கியத்துக்கும் யாவாரத்துக்கும் உள்ள வித்தியாசம். இலக்கியத்திலே ஏமாத்த முடியாது. யாவாரம்னா அது பேத்துமாத்துண்ணு ஆகிப்போச்சு இண்ணைக்கு... நம்மளை மதிச்சு ஒரு பதிப்பாளர் வந்து ஆலோசனை கேட்டா, நம்மால முடிஞ்சதைச் செய்யணும். பின்னே நடக்குமாவே? போட்டுப் பேசுதேரே...'

'நான் வேற ஒரு ஐடியாவோடயாக்கும் வந்தேன்' என்றார் பதிப்பாளர்.

'ஏன்? சார்வாள் பொஸ்தகம் அடிச்சு வித்து ஆளாயிரலாம்ணா?' என்றார் தவசிப்பிள்ளை.

'வேய், நீரு வாயிலே மண்ண வாரிப் போட்டுக்கிட்டு கெடயும்.... நீ சொல்லு மக்கா, வளரக்கூடிய பிள்ளை!'

தவசிப்பிள்ளை, கும்பமுனியைப் பார்த்து இளக்காரமாகச் சிரித்தார். கும்பமுனி அப்படியெல்லாம் பதிலுக்குச் சிரித்து விடக்கூடாது என்று பிடிவாதமாக இருந்தார்.

வெயில் கொஞ்சம் மேலே ஏறி வந்தது.

'ஏ, கோலப்பொடி மாவு... கோலப் பொடி வேணுமா? ஏ கோலப்பொடி மாவு' கூவிப் போனாள் தெருவில். உற்றுப் பார்த்த கும்பமுனியைத் திட்டுவது போல் முணுமுணுப்பது தெரிந்தது.

'தவசிப்பிள்ளை, அவ ஏம்டே உம்மளப் பாத்து வேவலாதிப் படுகா?'

'பின்னே படமாட்டாளா? முப்பது வருசமா அவளும் செமையாச் செமந்து நடக்கா... நீரு இதுவரைக்கும் காப்பக்கா கோலப்பொடி வாங்கீருப்பேரா?'

'இது நல்ல கூத்தாட்டுல்லா இருக்கு? காலம்பற நான் எந்திச்சு, வாசத் தொளிச்சு, வேட்டியை மடிச்சுக் கெட்டீட்டு, வெதக்கொட்ட தொங்க தேருக்கோலம் போடணுமாக்கும்?'

'அவ வயித்தெரிச்சலு, அவ பொலம்புகா.... நீரு என்னத்துக்கு கூட்டாக்கு தேரு? சரி, என்னத்துக்கு வெட்டிப் பேச்சு? பதிப்பாளரு, ஒம்ம ஐடியாவைப் பாட்டாட்ட சொல்லும்....?'

'பாட்டா, சரோஜா தேவி கேட்டிருக்கேரா?'

'என்னது, கேட்டிருக்கேராவா? சார்வாள் கொஞ்ச நாளாட்டு பைத்திய மாட்டுல்லா அலஞ்சா... ஒரு எம்.ஜி.ஆர். படத்திலே, பொறக்காட்டி மாடிப்படி ஏறுவா பாத்தேளா? அதுக்காகவே ஏழு திருப்பு பாத்திருக்கா... அந்த சீன் முடிஞ்சதும் எந்திருச்சு வந்திருவா?' - தவசிப் பிள்ளை.

'அவ பேர்லே கொஞ்சம் பொஸ்தகம் வருகு'

'அவ கன்னடத்துக் கிளியில்லா? தமிள்ளே பொஸ்தகம் வேறா எழுதுகாளா? ஏன் எழுதப் பிடாது? தமிள் அன்னைக்கு ஒரு அடிப்பாவாடை தச்சுப் போட்டா வேண்டாம்ணா இருக்கு. எல்லாரும் காலுக்கு செலம்பு, கைக்கு வளையாபதி, காதுக்கு குண்டலம், இடுப்புக்கு மணி மேகலை, பின்னே சிந்தாமணி - அதை எங்கடே போடுகது - செஞ்சு போட்டாச்சு. நமக்குள்ள ஐவேஜிக்குத் தக்கன நாமும் என்னமாம் செய்து போடணும்லா?'

'இது அந்த சரோஜா தேவி இல்லே!' - பதிப்பாளர்.

'பின்னே?' - தவசிப்பிள்ளை.

'கெவர்ண்மெண்டு சாணித்தாள்லே, இருட்டா பொம்பளப் படம் அம்மணங் குண்டியா போட்டு, முப்பத்திரண்டு பக்கத்திலே, வாயிலே ரெண்டு பின் அடிச்சு பொஸ்தகம் வருகில்லா?'

'அது என்னவே தவசிப்பிள்ளே?'

'நீரு அதையெல்லாம் என்னத்தைக் கண்டேரு? காஞ்சனாவின் மாணவன், மாமனார் - மருமகள் தேன்நிலவு அப்பிடீண்ணு இந்த காலேஜ் பயக்கோ எல்லாம் வாங்கிப் படிப்பானுகோ! பாத்தா தங்கம் தியேட்டர் வாசல்ல கெடக்கப்பட்ட சினிமாப் பாட்டுப் பொஸ்தகம் மாரி இருக்கும். ஆனா முப்பது ரூவா வெல வச்சிருப்பான்...?'

## உரையாடலின் போக்குப் புரியாமல், மஞ்சணத்தி மரத்தில் ஏறத்தொடங்கிக் களைப்பாற்றிக் கொண்டிருந்த ஓணானை வெட்டாங்கல்லைத் தூக்கி வீழ்த்தலாமா என யோசித்துக் கொண்டிருந்தார் பதிப்பாளர்

'நீரு அதையெல்லாம் எங்க பாத்தேரு?'

'ஓமக்கு கால்லே நீரு கெடக்குண்ணு அரச்சுப் பத்துப் போடதுக்கு ஒரு நா கெருடக்கொடி தேடீட்டுப் போனம்லா? பூவத்தான் தோப்புலே நாலஞ்சு கொல்லாமாவு கவிஞ்சு கெடக்கும், பாத்திருக்கேரா? அதுல அஞ்சாறு பயக்கோ சுத்தி உக்காந்து ஒருத்தன் வாசிக்கான், மத்த பயக்கோ கேட்டுக்கிட்டிருக்கான்!'

'என்ன வாசிச்சுக்கிட்டிருந்தான்?' - கும்பமுனி.

'அதெல்லாம் சொன்னா உமக்கு மனசிலாகாது பாட்டா. அவ்வளவும் காலேஜ் பயக்கோ... படிக்கப் படிக்க பயக்கோ நெளிஞ்சு விடுகான்; உடம்பை முறிக்கான்... ஆனா சும்மா சொல்லப்பிடாது! நயினார் நோம்பு அண்ணைக்கு அம்மன் கோயில்லே சித்திர குப்த நயினார் கத வாசிக்கக் கூப்பிட்டு ஒரு பய வரமாட்டம்ங்கான்... என்ன குரல் தெளிச்சலு? என்ன சொல்லு சுத்தம்? கம்பராமாயணம் வாசிக்கப்பட்ட புலவரு பரமார்த்தலிங்கம் பிள்ளை தோத்துப் போனாரு...'

'அப்பிடி என்னதாம்டே வாசிச்சானுகோ?'

'அது ஓமக்கு மனசிலாகாதுண்ணு சொன்னம்லா? கடைசியிலே கொஞ்ச நேரம் வாசிச்சான் பாரும்... பத்துத் தண்ணியுமா தட்டத்திலே கஞ்சி ஊத்தி வச்சா நாய் நக்கிக் குடிக்கச்சிலே ஒரு சத்தம் கேக்கும் பாத்தேரா?'

'ஆமா தான்! எழுத்தாளர்னா சும்மயா? அதுலே ஒரு பய கேக்கான்... எலே எத்தனை பக்கத்துக்கு இன்னும் இந்த சவுண்டு இருக்குண்ணு... இன்னும் எட்டுப் பக்கம்ங்கான் வாசிக்கப் பட்டவன்... சவத்தைத் தள்ளீட்டு மேட்டருக்கு வாண்ணு சத்தம் போடுகான் ஒருத்தன்...'

'தாய்ளி என்னெல்லாம் வியாக்யானம் குடுக்கான் பாரும்? பேசாம திருக்குறளுக்கு நீரும் ஒரு உரை எழுதலாம்வே. இருக்கப்பட்ட இரு நூற்றுப் பத்தொன்பது உரையிலேயும் மனசிலாகல்லேண்ணா உம்ம உரையைப் படிச்சுத் தெரிஞ்சுக்கிருவான்... அன்னா இருக்கப்பட்ட சித்தர் பாடல் பொஸ்தகத்தை எடும்னா, எனக்குத் தெரியாது. சரோஜா தேவிக்கு என்னா? அதுக்கு வாரும்...

உரையாடலின் போக்குப் புரியாமல், மஞ்சணத்தி மரத்தில் ஏறத் தொடங்கிக் களைப்பாற்றிக் கொண்டிருந்த ஓணானை வெட்டாங் கல்லைத் தூக்கி வீழ்த்தலாமா என யோசித்துக் கொண்டிருந்த பதிப்பாளர், திடுக்கென நிமிர்ந்து குறுக்கிட்டார்.

'அந்த மாரி பொஸ்தகம் நெறைய விக்கு பாத்துக்கிடும்... வெத்தல பாக்குக் கடையிலே தொங்கப்போட்டு விக்கான். கடன் கிடையாது... ரொக்கக் கச்சவடம்... நாலு பொஸ்தகம் போட்டா ஒரு அள்ளு அள்ளீர லாம்.'

'அதுக்கென்னா? போட்டு, வித்து அள்ளும்... அள்ளதுக்குப் பனை யோலைக் கடவம் கையோட கொண்டுக்கிட்டுப் போவும்.'

'அதுக்குத் தான் ஓம்மைப் பாக்க வந்தேன்.'

'அதுக்கு இங்க, பனையோலைக் கடவம் நாங்க எங்க மொடையம்?' - தவசிப்பிள்ளை.

'நீரு செத்த சும்ம இருக்கேரா? பதிப்பாளர் வரப்பட்ட பாயிண்டு மனசிலாக்காமப் பேசாதேயும்.'

'எளுதிக் குடுத்தா பொஸ்தகத்துக்கு மூனாயிரம் ரூவா குடுத்திரு வேன்.'

'நெல்லு விக்கப்பட்ட வெலைக்கு அஞ்சு கோட்ட நெல்லு.' - தவசிப்



பிள்ளை.

'மாசம் ஒண்ணு எளுதினாப் போரும்.... கையினால முப்பத்திரெண்டு பக்கம் எளுதுகது உம்மைப் போல பேரு கேட்ட எளுத்தாளனுக்குப் பெரிய மலையா? மொத்தம் முப்பத்திரெண்டு பக்கம். அதுலே படம் நாலு பக்கம்...'

'நாய் தண்ணி குடிக்கப்பட்ட சத்தம் எட்டுப்பக்கம்.' - தவசிப் பிள்ளை.

'அப்பம் இருவது பக்கத்துக்கு மூவாயிரம் ரூவா; பக்கத்துக்கு நூத்தம்பது ரூவா... முழுத்தாள்ளே முப்பது வரி வச்சுக்கோ, கண்ணுவிள்ளே, வரிக்கு அஞ்சு ரூவா வருகு. வரிக்கு அஞ்சு வார்த்தை நிக்குமா? அப்பம் வார்த்தைக்கு ஒரு ரூவா... எழுத்தெண்ணி சன்மானம் வாங்குகது இதுதான் பாத்துக்கிடும்.'

'அட்ச்சர லெச்சம்ங்காள்ளா, அதமாரி, நீரு கூட ஒரு கத சொல்வே ருல்லா பாட்டா... கம்பன் ராமாயணம் பாடச்சிலே சோழமன்னன் பாட்டுக்கு ஒரு தங்கத் தேங்கா உருட்டி விட்டாம்ணு... நலுங்கு உருட்டுக மாதிரி... மாசத்துக்கு என்னா, வாரா வாரம் நீரு ஒண்ணு எழுதலாம் பாட்டா...'

பதிப்பாளர், முன்னாள் முதலமைச்சர் ஒருவர் சிலையாய் நிற்கும் போது இடது கையில் வைத்திருந்ததைப் போன்றதோர் ரெக்சின் பையைத் திறந்து, உள்ளே கைவிட்டு, நூறு ரூபாய்த் தாட்களாகப் பத்து எண்ணினார். தவசிப்பிள்ளை, கண்ணுபிள்ளையைப் பாத்து, 'ஒரு

சின்னத் தாம்பாளம் கொண்டாரும்' என்றார்.

தவசிப்பிள்ளை ஓடிப்போய், கழுவிக் கவிழ்ந்து வைத்திருந்த வெற்றிலைத் தட்டத்தை எடுத்து, மேல் துண்டால் துடைத்து நீட்டினார். பதிப்பாளர், பையினுள் கைவிட்டு, ஒரு கட்டு ஆரங்குடி வெற்றிலை, பழுத்த ஐந்து பாக்கு, பத்து நூறு ரூபாய்த் தாட்கள் எல்லாம் முறையே அடுக்கி, தாள் பறந்து விடாமல் மறுகையால் அமிழ்த்திப் பிடித்து நீட்டினார்.

தவசிப்பிள்ளை கைநீட்டி வாங்கினார்.

'சரி, அடுத்தவாரம் வந்து வாங்கிக்கிடும். தவசிப்பிள்ளை எழுதிக் குடுத்திருவாரு...'

'பாட்டா..' என்றார் தவசிப்பிள்ளை பதைத்து.

'ஆமடே! கை நீட்டிப் பணம் வாங்கியாச்சுல்லா? இனி மாட்டம்னு சொல்ல முடியுமா? பயக்க வாசிச்சுக் கேட்ட அனுபவம் வேற இருக்கு!'

'நான்... வந்து...?'

'ஏம்லே மயிராண்டி? அவர் தாலம் கேட்டாம்னு எடுக்க ஓடுனயே! எங்கிட்டே ஒரு வார்த்தை கேட்டையா? தல இருக்கச்சிலே வாலு ஆடப்பிடாது என்னா? வே, பதிப்பாளரே, எனக்க பொஸ்தகம் என்னமாம் படிச்சிருக்கேரா?'

'இல்ல பாட்டா! குடுங்க படிச்சுக்கிட்டுத் தாறன்.'

'பின்னே என்ன நெனப்பிலே எங்கிட்டே வந்தேரு?'

'நாஞ்சில் வெளக்கு ஆசிரியர் பண்டாரம் பிள்ளைதான் சொன்னாரு!'

'அவுரு ஆரு ஒமக்கு?'

'எனக்க அண்ணனுக்கு மகள அவருக்கு மச்சினனுக்கு தம்பீல்லா கெட்டி இருக்கான்!'

'அப்பம் ஒண்ணுக்குள்ள ஒண்ணுண்ணு சொல்லும். அவன் ஒரு போஞ்சு கொள்ளி... அவன் சொன்னாம்னு நீரும் வந்திருக்கேரு! அவன் படிச்சிருப்பானாவே எம் பொஸ்தகம்? அவன் அப்பன் பாட்டன் படிச்சு மனசிலாகுமா? எலே, என்னண்ணு நெனச்சுப் போட்டயோ? சரஸ்வதியே இது! சரஸ்வதி. சரஸ்வதியாக்கும் கூட இருக்கப்பட்டது. கும்பாட்டம் ஆடப்பட்ட குட்டிண்ணு நெனச்சியா? முன்னயும் பின்னயும் குலுக்கிக் குலுக்கி ஆட்டுகதுக்கு...'

கும்பமுனி, பொரிந்து தள்ளிவிட்டு, கண்ணுபிள்ளையைத் திரும்பிப் பார்த்தார்.

'ஒய், உள்ளே போயி, ஒரு ரூவாத்துட்டு ஒண்ணு எடுத்துக்கிட்டு வாரும்.'

'என்னத்துக்குப் பாட்டா?'

'ம்..... என் நெத்தியிலே வச்சு ஒட்டி, பாடையிலே கெட்டித் தூக்கதுக்கு. சொன்னதைச் செய்யும்வே.'

ஒரு ரூபாய் நாணயம் எடுத்து வந்தார்.

'அந்தத் தட்டத்திலே வையும்..'

'இன்னா வச்சாச்சு.'

'இதைப் புடியும், பதிப்புத் தாடகை மலை... உம்ம அச்சாரம் நான் வேண்டியாச்சு.. இந்த ஆயிரத்தியோரு ரூவா அச்சாரம் நீரு வேண்டிக்கிடும்.'

பதிப்பாளர் எதுவும் புரியாமல், 'எனக்கு என்னத்துக்கு இப்பம் அச்சாரம்?'

'எனக்கு இந்த சரோஜா தேவி பொஸ்தகம் எழுதுகதுக்கு அனுபவம் கெடையாது. வயசு ஆயாச்சே தவிர, இதுவரைக்கும் பொம்பிளையைத் தொட்டதில்லேண்ணா நீரு நம்புவேரா? பின்னே இந்த நாயி தண்ணி குடிக்கப்பட்ட சத்தத்துக்கு நான் எங்க போக? எழுதுகதுக்கு முன்னாடி அது என்ன, ஏதுண்ணு தெரிஞ்சுகிடணும் பாத்தேரா?'

'அதுக்கு?'

'அதுக்குத்தான் இந்த அச்சாரம். நாளைக்குச் சாயங்காலம், குளிச்சு, பட்டுடுத்து, தலை நெறையப் பூ வச்சு, நல்ல குட்டியாட்டு ஒண்ணு கூட்டீட்டு வாரும்.'

பதிப்பாளர் சடாரெனெ நாற்காலியைப் பின்னால் உதைத்துத் தள்ளி எழுந்து நின்னார். முகம் ரௌத்திரம் பழகி இராதது. ஒரு தினுசில் கோணியது. குரல் உடைத்து அறுபட்டு, திக்கி வந்தது.

'ஒய், என்ன நெனச்சுப் போட்டேரு? மரியாதை கெட்டிரும் பாத்துக் கிடும். நான் என்ன தேவ்டியாக்குடி நடத்துகனா; இல்லை மாமா வேலை பாக்கனா? நீரெல்லாம் ஒரு எளுத்தாளம்ணு படியேறி வந்து கேட்டேன் பாரும். என்ன பேச்சுப் பேசுருக்கு? வயசாச்சேண்ணு பாக்கேன், இல்லேண்ணா புடுக்கைக் கடிச்சுத் துப்பீருவேன் பாத்துக்கிடும்.'

'அது இருக்குண்ணு உமக்குத் தெரியுமா?' - தவசிப்பிள்ளை.

'நீரு சலம்பாமக் கெடயும் வே கண்ணுவிள்ளே... இப்பிடி பெடங்கி அடிச்சுக்கிட்டு வாறேரே! நீரு என்ன நெனப்பிலேவே, என்னப் பாத்து பொஸ்தகம் எழுதச் சொன்னேரு? என்னைத் தேவ்டியாக்குடி நாயிண்ணு நெனச்சேரா? கெடந்து வெப்ராளப் படுகேரே! ஒமக்க அம்மையை, பொண்டாட்டியைக் கூட்டீட்டு வரச் சொன்னமாரி!'

'ரூவா கெடைக்கும்ணு தான்.'

'ரூவா கெடைக்குமா? நாய்க்குப் பூழல்லே தேனிருந்தா போய் நக்குவேரா ஓய்? பொறப்பிட்டு வந்திருக்கானுகோ! பொஸ்தகம் போடதுக்கு! புதுமைப்பித்தன் கேட்டிருக்கோரா? சினிமாவுக்குப் பாட்டு எழுதுனவரு இல்லே, புதுமைப்பித்தன். எத்தனையோ பேருண்டு இந்தத் தொழில் செய்ய என்னை அழைக்காதீர்!'

பணத்தையும் வெற்றிலைப் பாக்கையும் பைக்குள் நுழைத்துக்கொண்டு, தாம்பாளத்தை மட்டும் கீழே எறியாத குறையாக வைத்துக்கொண்டு புறப்பட்டார்.

'அந்த ஒத்த ரூவாயைக் கீழ வச்சுக்கிட்டுப் போவும். இல்லாட்டா அச்சாரமாட்டு ஆயிரும் பாத்துக்கிடும். அந்த பண்டாரம் பிள்ளையைப் பாத்தா நான் தேடினேன்ணு சொல்லும். செறுக்கிவிள்ளைட்ட ரெண்டு கேள்வி கேக்கணும்.'

தவசிப்பிள்ளை கண்ணுபிள்ளை, கண்களில் சிரிப்புப் பொங்க கும்ப முனியைப் பார்த்தார்.

'போயி ஒரு கட்டன் போடும் ஓய்... தாயோளி நாயி தண்ணி குடிக்கப் பட்ட கதை சொல்ல வந்திட்டான்... கெட்ட வார்த்தைக்குப் பொறந்த பய..'

'ஆனாலும் நீரு அவனை அந்த வார்த்தை கேட்டிருக்கப் பிடாது... எனக்கே ச்சீண்ணு ஆயிப்போச்சு. ஒரு மொறா வேண்டாமா. வயசு மட்டும் ஆனாப் போராது பாத்துக்கிடும்.'

'என்னவே மொற? அவன் ஒரு தேவ்டியா மவன்னா நீரு வேற ஒரு தேவ்டியாமவன். அவ்வையாருசும்மையாசொன்னா,வங்கணத்தின் நன்று வலிய பகை அட்டீண்ணு.'

'ஆமா...மா... நீரு மட்டும் பார்வதிக்குப் பாலுசங்கிலே வாங்கிக் குடிச்ச ஆவுடையப்பன்!'

'ஆவுடையப்பன் இல்லவே சவமே! ஆளுடைய பிள்ளை.'

தவசிப்பிள்ளை கட்டன் சாயா போட அடுக்களைக்குள் புகுந்தார், சாரைப் பாம்பு போல் விரைந்து.

■

[ சிறுகதை ]

# சிலுவை

## கனிமொழி

இடம்: புது மாத்தளன்காலம்: 21.04.2009 காலை 6.00 மணிமாடுகள் வண்டியை இழுப்பதுதான் வழமை. ஆனால் இங்கே வண்டியில் மாட்டை ஏற்றி அந்த மனிதன் இழுத்துக் கொண்டிருந்தார். எல்லாம் தலைகீழாக மாறிவிட்ட ஒரு இனத்தின் கடைசி நாட்கள் அவை மலங்களுக்கு மேலும் பிணங்களின் புதை மேட்டுக்கு இடையேயும் மனிதர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அந்த இடத்தில் இப்படி எத்தனையோ தலைகீழ் மாற்றங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. பேரவலம் நிறைந்த அந்த மண்ணில் வண்டில்கார கிழவாஜீன் கண்ணீரும் துயரமும் அலைகளுக்குள் அடங்கிப் போகும் மீனின் அழுகையாய் தொலைந்து போயின. முறுக்கேறிய அவரது உடல் வியர்த்துப் போயிருந்தது. மேல் சட்டை மூடாத அந்த மேனியில் மண்ணும் குருதிச் சேறும் ஒட்டியிருந்தன. கலைந்து போயிருக்கும் முடியும் சவரம் செய்யப்படாத கன்னமும் வன்னித் தமிழனின் அடையாளமாய்த் தொஜீந்ததுஅது மாத்தளன் பகுதி. ஒரு பக்கம் கடல் நீரோஜீ, மறு பக்கம் வங்கப் பெருங்கடலும் நாக்கும் ஒடுங்கிய சிறிய மணல்வெளி. மனிதர்கள் வாழ்வதற்குப் பொருத்தமே இல்லாத தரை அமைப்பு. மூன்று மாவட்டங்களில் பரந்த சிறகு விலீஜீத்து உலவிய சுதந்திர மனிதர்களை தன்னகத்தே கொண்டு தவளை விழுங்கிய சாரைப் பாம்பாய் இயல்பிழந்து திணறியது அந்தக் கடற்கரைக் கிராமம்.இந்தப் பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் போக்குவரத்துக்கு ஒரே ஒரு கிரவல் பாதை மட்டுமே உயிர் நாடியாய் இருந்தது. அதன் வழியேதான் மனித பேரவலமாக இன்று அதிகாலையிலிருந்து காயமடைந்தவர்களும் பிணங்களும் போய்க்கொண்டு இருந்தன. வழமையிலேயே நெருக்கடி நிறைந்த அந்த வழி இன்று அதிகாலை நிவாரணத்துக்கு நிரையில் நின்ற மக்கள்மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலுக்குப் பின்னர் இன்னும் மோசமான நிலையை அடைந்தது.இரத்தம் வழிந்தபடி காயக்காரர்களும் சண்டை அணிகளும் வெடி பொருட்களும் இடம் பெயர்ந்த மக்களும் நகர்ந்து கொண்டிருந்த நொஜீசலுக்குள்ளால்தான் வண்டியில் மாட்டை ஏற்றி இழுத்துக் கொண்டிருக்கும் கிழவரும் சென்று கொண்டிருந்தார். அனந்தபுரம் மந்துவில் பக்கம் கடுமையான துப்பாக்கி வெடியோசைகள் கேட்டுக் கொண்டிருந்தன. இவர்களின் தலைகளுக்கு மேலாக ரவைகளும் கனோன் செல்களும் சீறிப்பாய்ந்தன. பச்சைப் புல்மோட்டைப் பக்கம் புகை மண்டலமாகவே காட்சி அளித்தது. கிழவர் குரலைச் செருமியபடி கெஞ்சலாகக் 'கொஞ்சம் வழி விடுங்கோவன்' என்றார். 'சனம் படுகிற அவலத்துக்குள்ள இந்தாள் என்ன செய்யுது'கத்தியபடி ஒருவன் முறைத்தான். அவனது தோள்களில் காயப்பட்ட ஒரு மூதாட்டி முனகிக் கொண்டிருந்தாள். 'ஐயோ என்ர பிள்ளைகள், ஐயோ என்ர குஞ்சுகள். எங்களுக்குக் கொஞ்சம் வழி விடுங்கோவன்" தந்தையும் தாயும் காயப்பட்ட பிள்ளைகளை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும் என்று பதறினார்கள். சிலர் தங்கள் காயத்துக்குக்கட்டுப் போட்டுவிட்டுத் தாமாகவே மருத்துவமனையை நோக்கி நடந்துகொண்டிருந்தனர்."ஆராவது இந்தச் சனங்களை ஒழுங்கு படுத்துங்கோவன்... அவன் துலைவானுக்கு ஈவிரக்கமில்லாமல் குஞ்சு குரும்பன் என்று கூடப் பார்க்காமல் எல்லோரையும் கொல்லப் போறான்' பாட்டியின் அழுகையில் கோபம் தொஜீந்தது. அங்கே இப்போது எல்லாமும் எல்லோரும் நிலை குலைந்து போயிருந்தனர். மீட்பு அணிகள் களைப்பாலும் சலிப்பாலும் குழம்பிப் போயிருந்தனர். சிறு துயரத்தைத் தாங்குவதற்குச் சிரமப்படும் கிழவாஜீன் கண்களில்; இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. 'பசி பட்டினியோட செத்துப் போச்சுதுகள் பாவம்' ஆழமாக ஒரு மூச்சு விட்டார். 'ஐயாவுக்கு ஆரும் உதவுங்கோவன்' என்று சொல்லியபடி ஒருவன் கிழவனின் வண்டியை நகர்த்துவதற்கு உதவி செய்தான். வண்டிவைத்திய சாலை வாசலில் வந்து நின்றது. சத்திர சிகிச்சைக் கூடமோ விடுதி வசதியோ இல்லாத சிறிய கிராம வைத்தியசாலை மட்டும்தான் இப்போது வன்னி மக்களின் உயிர் காக்கும் இடம். வாசல் ஓரமாக நின்ற மரத்தடியில் வண்டியை நிறுத்திவிட்டு மருத்துவமனைக்குள் நுழைந்தார் கிழவர். மருத்துவமனை முற்றத்தில் படங்கள் விரிக்கப்பட்டு பிணங்கள்குவிக்கப்பட்டிருந்தன. உருக்குலைந்த சிலைகளாய்க் கிடக்கும் அந்தச் சடலங்கள் மீது தேன் வதையில் மொய்க்கும் தேனீக்களாய் ஈக்கள் மொய்த்துக் 'கொண்டிருந்தன. 'எல்லாம் மண்ணாய்ப் போச்சு' என்று அழுதபடி மகளின் முகத்தில் ஒட்டியிருக்கும் மண்ணைத் தட்டிக் கொண்டிருந்தார் ஒரு தந்தை. செத்துப் போய்க்கிடக்கும் தன் கணவனுக்காய் அழுவதா? காயப்பட்டுக் கிடக்கும் பிள்ளைகளுக்கு அருகில் இருப்பதா? என்று தொஜீயாமல் தலை அறுந்த கோழியாய் துடித்துக் கொண்டிருந்தாள் ஒரு அம்மா. காயப்பட்டவர்களுக்கு மருந்திடுவதில் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு தாதியை நோக்கி நகர்ந்தார் கிழவர். அவள் உடையில் இரத்தக்கறைகள் பட்டிருந்தன. நீண்ட நேரமாக ஓய்வில்லாமல் பணியாற்றிக்கொண்டிருக்கின்றாள் என்பதை அவளது செயல்களிலிருந்து புரிந்து கொண்டார். 'பிள்ளை ஒருக்கா என்னோட வாசலடிக்கு..' அவர் முடிப்பதற்குள் 'என்ன அவசரம் என்றாலும் அந்தப் படங்கில் கொண்டு வந்து வளத்துங்கோ. தப்பும் என்றால்தான் மருந்து கட்டுவம்' கிழவாஜீடம் இருந்து பதிலை எதிர்பார்க்காமல் 'உங்களுக்கு என்ன?' காயப்பட்ட குழந்தையை கையில் ஏந்தியபடி அழுது கொண்டிருந்த இளம் பெண்ணைக் கேட்டாள். 'என்ர... என்ர மனிசன் இன்னும் சாகேல்ல. ஆனா..' குரல் கரகரத்தது. 'செத்தாக்களோட போட்டிருக்கினம்...மூச்சு வருது' தாதி அவளையும் அழைத்துச் சென்று குற்றுயிராய்க் கிடந்த கணவனுக்கு வெறும் பஞ்சை மட்டும் வைத்துக் கட்டினாள். கிழவர் மறுபடியும் தனது வேண்டுதலைத் தொஜீவித்தார். தாதி வாசலை எட்டிப் பார்த்தாள்.

வண்டிலில்மாடுகிடந்தது. ‘என்னையாவிளையாடுகிறீர்களா?’ தாதியின்
கோபம் குரலில் தொஜீந்தது. ‘மனித உயிருக்கே மருந்தில்லாமல்
சாகுதுகள். நீங்கள் போய் மாட்டைக் கொண்டு வந்திருக்கிறியள்.’
‘பிள்ளை அதை மாடு என்று மட்டும் சொல்லாதை’ கிழவருக்குக்
கோபம் வந்தது. அந்தக் கோபத்தில் நியாயம் இல்லை என்பது கிழ
வருக்கும் தொஜீயும். ஆனாலும் ‘பாலன்’ மீது கொண்ட பாசம்
அவரது அறிவையும் தாண்டி உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்க
வைத்தது. ‘சின்னக் காயம் என்றால் நானே கைம்மருந்து போட்டி
ருப்பன். இது கால்த்தசை பொஜீதாய்க் கிழிந்து போய்க் கிடக்கு.
தையல் போட வேணும் பிள்ளை.’ கெஞ்சும் தொனியில் சொல்லி
விட்டுத் தாதியைப் பார்த்தார். இவரது குரல் கேட்காத தொலைவில்
ஒரு சிறுவனுக்கு மருந்து கட்டிக் கொண்டிருந்தாள்.கிழவருக்கு என்ன
செய்வது என்று தொஜீயவில்லை. தலை சுற்றியதுபோல் இருந்தது.
வண்டியை நோக்கி நடந்தார். வண்டிலில் பாலன் முனகிக் கொண்டு
கிடந்தான். கழுத்தை தடவிக் கொடுத்தார். அவனும் அவரது
கைகளை நக்கினான். ‘ஓ என்ர ராசாவே! உன்னை எப்படிக் காப்
பாற்றப் போறன்’ தந்தையின் மனசாய்ப் பதறியது உள்ளம். பசிக்களை
யும் இரத்த வாடையும் கிழவருக்குச் சத்தி வருவதுபோல் இருந்தது
பாலனின் காயத்தை மொய்த்த ஈக்களை விரட்டி உரப்பையால் மூடி
னார். அவரது வாழ்க்கையில் பாலன் மூத்த பிள்ளை.ஒரு நத்தார்
நாளன்று இரவு கடும் மழை. எல்லா இடங்களாலும் வெள்ளம்
பெருக்கெடுத்தோடியது. மாட்டுக் கொட்டிலுக்குள் வெள்ளம்
வராமல் கிழவரும் அவரது மனைவி கனியம்மாவும் நனைந்தபடி
அணை போட்டுக் கொண்டிருந்தனர். கொட்டும் மழைக்குள் இடிச்
சத்தங்கள் நடுவே கன்றொன்றை ஈனுவதற்காய் கொம்பி பசு முனகிக்
கொண்டு கிடந்தாள்.நிலத்தில் வைக்கோலைப் பரவி சுகமாகக் கன்று
ஈனுவதற்குக் கனியம்மா ஏற்பாடுகள் செய்தாள். கறுப்பு நிறத்தில்
கொம்பி பசு ஈன்ற கன்று இலாம்பு வெளிச்சத்தில் அழகாய்த்
தெரிந்தது. அந்தக் கன்று நாம்பன் என்பதை கிழவர் அடையாளம்
கண்டு கொண்டார். அவர்களின் ஆனந்தம் அதிகமானது. ஏனென்
றால் அவர்களின் நீண்ட நாள் கனவு அங்கு நிறைவேறி இருந்தது.
மழை சற்று ஓய்ந்திருந்தது. குழந்தை யேசுகோவிலின் நள்ளிரவு
நேரப் பூசை மணியோசை கேட்டது. ‘அப்பா இவனுக்குப் பாலன்
என்று பெயர் வைப்பம். யேசு பாலன்போல பிறந்திருக்கிறான்“
கிழவர் நினைத்ததை அப்படியே கனியம்மா சொன்னாள். கிழவருக்கு
ஒரு ஆண் குழந்தை பிறந்த புழுகம். கனியம்மாவை இழுத்து
அணைத்து முத்தமிட்டார். முதல் முத்தம் ஒன்றைப் பெற்றதுபோல்
பரவசப்பட்டாள். வெகுநேரம் அந்தத் தொழுவத்திலேயே இரண்டு
பெரும் பொழுதைக் கழித்தனர்.அதிகாலையில் நத்தார் பாஜீசாகக்
கிடைத்த பாலனைப் பிள்ளைகளுக்குக் காட்டுவதற்காகத் தொழு
வத்துக்குச் சென்றபோது கொம்பி மாடு செத்துப்போய்க் கிடந்தாள்.
தாய் மாட்டை இழந்த பாலன் வீட்டினுள் வந்தான். கடைசி மகளின்
பால் புட்டியில் கனியம்மா கஞ்சி, பால்மா என்பனவற்றைத் தாய்போல
நேரம் தவறாமல் ஊட்டினாள். இரவில் கிழவாஜீன் உடற்கூட்டோடு
படுப்பான். அடுப்படி தொடக்கம் படுக்கை அறைவரை அவன் காலடி
படாத இடமே கிடையாது. ‘ஐயா ஏன் இதில இருக்கிறியள்.
இவடத்துக்கு ஆர்.பி.ஜி அடிக்கிறவன். சிலவேளை சினேப் பண்ணி
றவன்’ ஒரு போராளிப் பொடியன் சொன்னான். நீரோஜீக்கு அப்
பால் இராணுவத்தினாஜீன் காவலரண்களும் மறைப்பு வேலிகளும்
தெரிந்தன. ‘என்ர பிள்ளையைக் காப்பாற்ற ஏலாதாம். நான் இனி
இருந்தென்ன செத்தென்ன’ தனக்குள்ளே முணுமுணுத்தபடிவைத்திய
சாலையைப் பார்த்தார். இன்னும் பரபரப்பாகவே இருந்தது அந்தச்
சூழல். கடற்கரைப் பக்கம் ‘மல்லீஜீயும்’ ‘கொத்துக்குண்டு’ அடித்துப்
போட்டாங்கள் என்று இன்னுமொரு தொகைக் காயக்காரர்களும்
வந்து குவிந்துகொண்டு இருந்தார்கள். கிழவருக்கு கோபத்தால் கண்
கள் சிவந்திருந்தன. அவரது அரசியல் பார்வை வித்தியாசமானது.
அவையின்ர பக்கம் இவையின்ர பக்கம் என்றில்லாமல் உயிர்கள்
மதிக்கப்பட வேண்டும். அதை இரண்டு பகுதியும் செய்யத் தவறி
விட்டினம் என்ற வருத்தம் அவருக்குள் இருந்தது. ஆனாலும் ஆயு
தம் ஏந்தியதால்தான் இத்தனை அழிவுகளும் பிரச்சனைகளும் என்ற
கருத்தோடு உடன்பட்டவரல்லர். பிரச்சனையால் தான் நாங்கள்
ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம் என்பது அவருக்கு நன்கே
தெரியும். அரச பதவியொன்றிலிருந்து தனிச்சிங்களச் சட்டத்தை
எதிர்த்துத் தனது பதவியைக்கூடத் தூக்கி எறிந்தவர். அன்றிலிருந்து
அதே துடிப்பும் கோபமும் இன்றும் இருந்தது கிழவருக்கு.
கனியம்மாவோடும்பாலனோடும்தான் அவரது வெளிப்பாடுகள். ‘இஞ்
சரப்பா என்னவாம் சொல்லினம்’ கனியம்மாவும் இரண்டு பிள்ளை
களும் வண்டிலுக்குள் இருந்த பாலனைப் பரிவோடு பார்த்தார்கள்.
எந்த முயற்சிகளும் கைகூடவில்லை என்பதைக் கண்டபோது அழுகை
வந்தது. ‘மனிசரே மருந்துகள் இல்லாமல் அநியாயமாகச் செத்துப்
போகுதுகள்’ கிழவாஜீன் குரல் தளதளத்தது. ‘நீங்கள் இரவும் சாப்பி
டேல்லை’ என்றபடி கொண்டு வந்த கஞ்சியை நீட்டினாள். இதுவரை
நேரம் தனக்குள்ளே அடக்கி வைத்திருந்த அழுகையை அடக்க முடி
யாமல் அழத் தொடங்கினார். கனியம்மாவாலும் ஆறுதல் சொல்ல
முடியவில்லை. அவளும் பிள்ளைகளும் சேர்ந்தே அழுதார்கள். வண்
டிக்கு கீழே கனியம்மா. அவளது மடியில் கடைசி மகள் படுத்திருந்தாள்.
மூத்தவள் சற்று தள்ளியிருந்தாள். கிழவர் அங்கும் இங்கும் நடந்து
கொண்டிருந்தார். கிழவரின் நிலை கனியம்மாவுக்குப் புரிந்தது. கனி
யம்மாவின் மனசில் பாலன் சிறு கன்றுக் குட்டியாய் துள்ளினான்.
அவர்களின் குடும்பத்தின் ஓர் அங்கத்துவனாய் மாறிவிட்ட பாலனை
நினைக்கும்போது பெருமையாகவும் கவலையாகவும் இருந்தது. விஸ்வ
மடுவில் இருக்கும்போது பிள்ளையார் கோவில் திருவிழாவில் சுவாமி
ஊர்வலம் வருகின்றபோது பாலன்தான் வண்டி இழுப்பான்.
கொம்புக்கு வர்ணம்பூசி, குஞ்சங்கள் தொங்கவிடப்பட்டு, முதுகில்
பட்டுத்துணி போட்டு அவன் நடந்து வரும் அழகே தனி. ஆனால்
இடம் பெயர ஆரம்பித்ததில் இருந்து வீட்டின் முழுச் சுமையும்
அவனது தோள்களில்தான். உடமைகளில் இருந்து உணவுப் பொருட்
கள் வரை ஒவ்வொரு இடமாக மாறும் போதும் அவனே காவினான்.
இரணைப்பாலைக்குப் பின்னரோ பிணங்களைக்கூட ஏற்றி இறக்கும்
வேலையைச் செய்தான். அன்று காலை ஒரு பத்து மணி இருக்கும்.
இரவு முழுவதும் எறிகணைகள் மேய்ந்த ஊர் பிணங்களால் நிரம்பிப்
போயிருந்தது. மூன்று வயதுக் குழந்தையை சுமந்தபடி ஒரு அப்பாவி
அழுதபடி வந்தான். ‘எல்லாம் முடிஞ்சு போச்சு. அம்மா, அப்பா,
மனிசி,பிள்ளைகள் எல்லாம் சாஜீ. நான் ஆஸ்பத்திரியில இருந்து
இப்பத்தான் வாரன்’ என்று கதறினான். அவனது காலிலும்கைகளிலும்
காயங்களுக்குக் கட்டுப்போடப்பட்டிருந்தன. ‘நீங்கள் ஒருக்கா வண்
டில் ஓட வரோனும்’ அவனின் கண்ணீரின் கனதி கிழவரைக்
கரைத்தது. இதுவரை அப்படி அனுபவம் ஏற்படாமையினால் கிழவர்
யோசித்தார். குழந்தைக்கும் சொந்தங்களைத் தொலைத்த அந்த அப்
பாவிக்கும் கனியம்மா தேனீர் கொடுத்தாள். ‘என்ன யோசிக்கிறியள்
இதுகளும் தெய்வங்கள்தான்’ கிழவாஜீன் குழப்பத்துக்குத் கனியம்மா
பதில் சொன்னாள். ‘ஓ... அந்தந்தப்படி விட்டுப்போட்டு வேற இடம்
தேடிப்போற நேரத்தில அதுகள அடக்கம் பண்ணோனும் என்று
நினைக்கிறான்.’ படங்கை எடுத்து வண்டியினுள் போட்டுக் கொண்டு
புறப்பட்டார். அன்று தொடங்கிய அந்தப் பணி தொடர்ந்தது.
போரின் விகாரமான முகத்தைப் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போனார்.
சிலுவையாகக் கனத்தது வன்னியின் அவலம். பாலனே அதைச்
சுமக்க வேண்டியிருந்தது. இரணைப்பாலையில் இருந்து மாத்தளன்
வந்தபோது பாலன் முன்னர்போல உலவித்திரிய முடியாமல் போனது.
மேய்வதற்கு சிறு புல் தரைகூட மிச்சம் இல்லாமல் கூடாரக் காடாய்
காட்சி அளிக்கும் அந்த மணத்தரை. அவனும் ஒரு மண் அணையினுள்
பாதுகாப்பாய் இருக்க வேண்டி இருந்தது. ஒரு நாள் இரவு பாலனைக்
காணவில்லை. கிழவர் காலடித்தடம் தொடர்ந்தார். பச்சை புல்
மோட்டைப் பக்கமாய் யாரோ அவிழ்த்துச் சென்றிருக்கிறார்கள்.
அந்தப் பக்கம் என்றால் நடக்கப் போகும் விபாறிதத்தினைப் புலீஜீந்து
கொண்டு விரைந்தார்.வாழ்வதற்குச் சாத்தியமற்ற அந்தச் சதுப்பு நிலப்
பகுதியில்தான் மலம் கழிப்பது, மனிதர்களைப் புதைப்பது, இறைச்சிக்
காக மாடுகளைக் கொல்வது. கிழவர் எறிகணைகள் விழுந்த கிடங்கு
களில் கால் இடறினாலும் ஓடினார். பருப்பைத் தவிர வேறு எதுவும்
இல்லாத நிலையில் உழவு மாடுகள், வண்டில் மாடுகளைக்கூட மனி
தர்கள் கறியாக்கிக் கொண்டிருந்தார்கள். மனிதர்களின் நண்பனாக
சூரியனுக்கு அடுத்த இடத்தில் வைத்து மாஜீயாதை செய்யும் எருத்து
மாடுகளுக்கு இந்த நிலை என்றால் போரின் கொடூரம் நர மாமிசத்தை
உண்ணும் நிலைக்கு தள்ளிவிடுமாப்போல் இருக்கிறது. கிழவர்
பச்சைப் புல்மோட்டையை வந்தடைந்தார்.அனந்தபுரம், வட்டுவாகல்.
சாலை மூன்று முனைகளில் இருந்தும் வெளிச்சக் குண்டுகள் வீசிக்
கொண்டிருந்தார்கள். அந்த வெளிச்சத்தில் உலீஜீத்துப் போட்டிருந்த
தோல்களைப் பார்த்தார். சற்று தொலைவில் கண்டல் பற்றை மறை
வில் பெருமூச்சு சத்தம் கேட்டது. அது பாலன்தான் கிழவருக்குப்
போன உயிர் திரும்பி வந்தது. மனிதர்களுக்கு மட்டுமல்ல அங்கு

**போரின் விகாரமான முகத்தைப் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போனார். சிலுவையாகக் கனத்தது வன்னியின் அவலம். பாலனே அதைச் சுமக்க வேண்டியிருந்தது. இரணைப்பாலையில் இருந்து மாத்தளன் வந்தபோது பாலன் முன்னர்போல உலவித்திரிய முடியாமல் போனது.**



உணவுப் பஞ்சம். கால் நடைகளுக்கும்தான். வெற்றிலைக்குப் பதிலாக பாலைக் குருத்தையும் நாயுண்ணி (கடுவல் நாவல்) இலையையும் இது வரை சாப்பிடாத ஆணைத் திருக்கை, பேத்தை போன்ற கடல் உயிரினங்களைக்கூட உண்ண ஆரம்பித்திருந்தார்கள். பாலனை மீட்ட திருப்தியோடு கிழவர் வீடு வந்து சேர்ந்தார்.கனியம்மா எழுந்து கிழவரைப் பார்த்தார். கிழவர் மரத்தடியில் நித்திரையாகி இருந்தார் எல்லா இடமும்; இருள் சூழ்ந்து போயிருந்தது. மூன்று பக்கங்களாலும் பரா வெளிச்சம் தெரிந்து கொண்டிருந்தது. கனியம்மா கஞ்சிப் பாத்திரத்தை எடுத்து பாலனுக்கு ஊட்டிவிட நினைத்தாள். அவனால் சாப்பிட முடியவில்லை. பாலனுக்குப் பசி என்றால் கிழவர் தாங்க மாட்டார். இவ்வளவு நெருக்கடிக்குள்ளும் ஓலை, நொங்கு, குரும்பை என்று ஒவ்வொரு நாளும் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு வந்து விடுவார். ஒரு நாள் எதுவும் கிடைக்கவில்லை என்று இருநூறு ரூபாய்ப்படி கீரைப்பிடி வாங்கி உண்ணக் கொடுத்தார். அவன் பசி தாங்க மாட்டான் என்று கிழவருக்குத் தெரியும். இத்தனை நாளும் எத்தனையோ நெருக்கடிக்குள்ளாலும் பாதுகாத்த பாலனை இன்று அதிகாலை விழுந்த எறிகணையில் இருந்து காப்பாற்ற முடியவில்லை. பதுங்கு குழிக்கு அருகாக அது வீழ்ந்து வெடித்திருந்தது. கால்களில் பொஜீய காயம்.கிழவர் எழுந்து வந்தார். கனியம்மாவும் பிள்ளைகளும் ஆழ்ந்துறங்கினார்கள். இரட்டை வாய்கால் பக்கம் எறிகணைகளும் துப்பாக்கி வெடியோசைகளும் கேட்டுக் கொண்டிருந்தன. நிலம் பளபளவென்று வெளிக்கத் தொடங்கியது. வழமைக்கு மாறாக எறிகணைகள் சற்று அதிகமாக வந்து விழுந்தன.கிழவர் கனியம்மாவையும் இரண்டு பிள்ளைகளையும் அருகில் இருந்த 'ஐ' பங்கருக்குள் பாதுகாப்பாக இறக்கினார். அவர் வண்டிலுக்குக் கீழே தரையோடு ஒட்டிய படி படுத்திருந்தார். வெடியோசைகள் ஓய நிரோரி கடந்து படையினர் அவர்கள் இருந்த இடம் நோக்கி வருவது தெரிந்தது. மக்கள் செய்வதறியாது அங்கும் இங்கும் ஓடித்திரிந்தனர். மிக வேகமாகவும்

நிதானமாகவும் படையினர் செயற்பட்டனர். மக்களின் பாதுகாப்பில் அதிக அக்கறை எடுத்துச் செயற்பட்டார்கள். பயந்தவர்களுக்கும் 'பயம் வேணாம்' என்று ஆறுதல் சொன்னார்கள்.கிழவருக்கு வியப்பாக இருந்தது. சற்று நேரத்துக்கு முன்வரை துப்பாக்கிகளால் சுட்டும்எறிகணை வீசியும் மக்களைக் கொன்று குவித்தது இவர்கள்தானா? அவர்களின் சுடுகுழலுக்கு எதிரே இருக்கும் வரை நாமெலாம் எதிலீஜீ நாட்டுக்காரர். இப்போது படையினரின் காலடியில் பணித்தபோது இலங்கை மக்கள். அதுதான் இந்தக் கரிசனை. தேநீருக்கே ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்குப் பால் லீறி, மைலோ பால், சோடா கொடுத்தார்கள். பாண், பணிஸ், சுவையாகச் சமைத்த உணவு எல்லாம் நட்போடும் சகோதர உணர்வோடும் அள்ளி வழங்கினார்கள். சிறுவர்களையும் முதியவர்களையும் தங்கள் தோள்களில் தாங்கினார்கள். காயப்பட்டவர்களுக்கு மருந்து கட்டினார்கள். 'அடித்தவனே அடிபட்டவனுக்கு மருந்திடுவதுபோல் இருந்தது.' கிழவருக்குச் சிரிப்பு வந்தது. இதுவரை நிகழ்ந்த அனர்த்தத்துக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லாததுபோல நடந்து கொள்ளும் அவர்களின் கபடத்தனம் கிழவருக்கு கோபத்தை ஏற்படுத்தியது. 'இவங்கள்தானே உணவைத் தடுத்து மருந்தை அனுப்பாமல் செல்லாலையும் விமானத்தாலையும் சனங்களைக் கொண்டவங்கள்.' கிழவரின் கோபக்குரல் அவங்களுக்கு கேட்டு விடும் என்ற அச்சத்தில் 'கொஞ்சம் சும்மா இருக்கிறியளே அப்பா' என்றாள் கடைசி மகள். எல்லோரும் கவச வாகனத்தில் ஏற்றப்பட்டார்கள். இதுவரை கால உழைப்பு, உழைத்தவர்கள் எல்லாவற்றையும் இழந்து சிறு கைப்பையுடன் கவச வாகனங்களில் ஏறிக் கொண்டிருந்தார்கள். கனியம்மாவும் பிள்ளைகளும் ஏறி விட்டார்கள். 'நான் பாலனை விட்டு விட்டு வரன்' கிழவர் வண்டிலை நோக்கி நடந்தார். படைச் சிப்பாய் 'மாடு ஏத்தேலாது நீங்க மட்டும் வாங்க' என்றான் கொச்சைத் தமிழில். 'ஓ மனிசரையே மாடாடுபோல நடத்திற நிங்கள் மாடாடுகளை என்னண்டு புரிந்து கொள்ளுவியள்' படைச்சிப்பாயின் கையை விலக்கிவிட்டு கிழவர் வேகமாக நடந்தார். நிறைந்த சனத்தோடு கவச வாகனம் புறப்பட்டது. கனியம்மா கிழவரைப் பார்த்து கதறினாள். அவர் வண்டிலுக்கு அருகாக அமர்ந்திருந்தார். கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. 'நான் உன்னை விட்டிட்டுப் போகமாட்டேன்டா? புகையும் பிணங்களும் நிறைந்திருந்த அந்தப் போர்க்களப் பூமியில் கிழவரும் பாலனும் புள்ளியாக மறைந்தார்கள்.ஒரு மாதத்தின் பின்நலன்புரி நிலையத்தில் அடைக்கப் பட்டிருக்கும் கனியம்மாவும் பிள்ளைகளும் இன்றும் கிழவரைத்தேடிக் கொண்டே இருக்கின்றார்கள். பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்ட தங்கள் தாயைப் பராமாரிப்பதற்காகவும் தந்தையைத் தேடுவதற்காகவும் தங்கள் பல்கலைக்கழகப் படிப்பையும் நிறுத்திவிட்டு முகாம்களுக்குள் வாடியபடி தேடிக்கொண்டிருக்கின்றார்கள். தேடல்தொடர்கின்றது. முற்றும் இடரும் உறவும் வே. தில்லைநாதன், திருகோணமலைகிழவரை இயங்க வைப்பது ஒரே ஓர் ஆசை மட்டுமே. வன்னிப் போர்ப் பகுதியிலிருந்து வெளியேறியபோது வழியில் பிரிக்கப்பட்டு விட்ட அவரது மனைவியை எப்படியாவது சந்தித்து விட வேணடுமென்ற துடிப்பே அவரை வாழ வைக்கிறது. ஆசையும் துடிப்பும் தவிப்பாக மலர்ந்து இப் பொழுது வெறியாகி அவரை அலைத்துக் கொண்டிருக்கிறது.வன்னியில் அவர் காண நேர்ந்த கொடூரங்களால் மரத்துப்போயிருந்த மனசு வெறியாட்டம் போடுவது நல்ல அறிகுறியே என்றாலும் மனத்தின் வேகத்துக்கு ஈடு கொடுக்க உடல் மறுக்கிறது. உடல் நலிவுற்று முன்னர் அவரை அணுக அஞ்சிய நோய்கள் இப்பொழுது அவரை மெது மெதுவாக எட்டிப் பார்க்க ஆரம்பித்திருக்கின்றன. கரங்கள் நடுங்குகின்றன. பித்துப் பிடித்தாற் போல அவரது மனம் மனைவி யையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தாலும் அகதி முகாமில் அவர் இயந்திரகதியில் இயங்கிக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது யார் பேச்சுமே காதில் விழாது சூனியத்தை நோக்கி வெறித்த பார்வையுடன் அவர் இருந்தாலும் திடீர் திடீர் என்று அவர் நிஜ உலகத்துக்குத் திரும்பி அவாரிலும் மோசமான நிலையிலிருப்பவர்க்கும் தன்னாலான உதவிகளைச் செய்தே வருகிறார். ஆனாலும் அவரது மௌனம் மற்றவர்களை அச்சுறுத்துகிறது. வெகு வசதியாக வாழ்ந்த அவரை அகதி முகாமின் தற்போதைய அவல வாழ்வுகூடப் பாதிக்காத அளவு அவர் விரக்தியுற்றிருக்கிறார். ஒரு நீண்ட மண்டபத்தைத் தட்டிகளால் தடுத்து ஏற்படுத்தப்பட்ட 'வதிவிடங்கள்.' அவற்றுள் ஒன்றில் மூன்று குடும்பங்களும், தனியாளான அவரும், தனியாளான அவரிலும் வயது முதிர்ந்த இன்னொரு பெண்ணும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பாலகாரிலிருந்து படுகிழம்வரை ஆண் பெண் என்ற பாகுபாடின்றி அடைக்கப்பட்டிருந்த அந்தமுகாம் வாழ்க்கை பற்றி அவர் நொந்து கொள்வதில்லை. உணவு பற்றி, நீர்த் தட்டுப்பாடுபற்றி, கழிவறை என்ற பெயாஜீல் மறைப்புப் போடப்பட்ட குழிகளுக்கருகே கால் கடுக்க உடல் உபாதையுடன் காத்திருக்க வேண்டிய கொடுமை பற்றி எல்லாம் அவர் எதையும் பேசுவதில்லை. அவர் சுருண்டு படுத்திருக்கும் இடத்துக்கு மிக அருகில் ஒரு குழந்தை மலங் கழித்திருப்பது கண்டோ அதில் மொய்க்கும் ஈக்களைப் பார்த்தோ அவர் முகம் சுழிப்பதில்லை. கிழவர் யாருடனும் அதிகமாக வார்த்தையாடுவது இல்லை. அவர் துறவியா பைத்தியமா என்பது யாருக்கும் புரிவதுமில்லை. யாரும் அவரைச் சட்டை செய்வதுமில்லை. அவர் எங்கேயோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருப்பார். சிலவேளைகளில் தனக்குத்தானே எதையாவது முணுமுணுப் பார். எப்போ வழங்கப்படும் உணவைப் பெற்றுக் கொள்வார், எப்போ பட்டினி கிடப்பார் என்பதும் சொல்ல முடியாது. சமையல் வேலைகளுக்காக என ஒதுக்கப்பட்ட ஒரு கூடாரத்தில் முகாமில்; இருப்பவர்கள் தங்கள் முறை வரும்போது சமையல் வேலைகளில் ஈடுபட வேண்டும். கிழவரை மட்டும் அவர் போக்கிலேயே விட்டு விடுவார்கள். யாராவது பார்வையாளர்கள் வந்துவிட்டால் போதும் அவரது மௌனம் கலைந்துவிடும். பாய்ந்து சென்று தனது மனைவி பற்றிய விபரங்களைக் கொடுத்து அவளைப் பற்றி ஏதாவது தகவல் பெற முடியுமா என்று பரபரத்துத் திலீஜீவார். அங்கே சிறிது காலம் இருந்த எண்பது வயதைத் தாண்டிய ஒரு மூதாட்டியின் நிலை காரணமாக அவாஜீடம் சில மாற்றங்கள் தெரிகின்றன. அப்பெண்மணி குடும்பத்தாருடன் வந்து கொண்டிருக்கையில் அவளது இயலாமை காரணமாக இராணுவத்தினரால் பொறுப்பேற்கப்பட்டு அந்த முகாமுக்கு அழைத்துவரப்பட்டிருந்தாள். எனினும் அவளது குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்தாள் நிர்க்கதிக்காளான அம்மூதாட்டி ஓரளவுக்கு நடந்து திரியக் கூடியவளாயிருந்தும் பல விடயங்களில் அவளுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. கவனிப்பாரின்றி அவள் அதிகமான சமயங்களில் பட்டினியும் இருக்க நேர்ந்தது. கிழவர் அவள்மேல் கழிவிரக்கப்பட்டு அவளது பராமாஜீப்பைத் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டிருந்தார்.

மூதாட்டிக்கு உணவெடுத்துக் கொடுப்பது, அவளுக்கு நோய் கண்டபோது சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்வது போன்ற உதவிகள் செய்ததன் மூலம் அவளுக்கு அவர் ஆதரவாக இருந்ததோடு அவர் மனதிலும் அவரை அறியாமலே சில மாற்றங்கள் ஏற்பட்டதை அவரே உணர்ந்து மிருக்கலாம். அவள் உணவுண்ட போதெல்லாம் அவரும் பசி ஆற முடிந்தது.அந்த முதியவள் ஒரு வகையில் அவருக்கு நேர்மாறானவளாக இருந்தாள். அவள் வாய் ஓயாமல் எதை யாவது சொல்லிக் கொண்டே இருப்பாள். பேச்சைத் துறந்த அவரிடம் அவள் தான் சீரும் சிறப்புமாக இருந்ததை எல்லாம் சொல்லிப் புலம்பிக் கொண்டிருப்பாள். அவரும் அதைப் பொருட்படுத்தியதில்லை. முதல் தடவையாக அவர் அவளைச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல முயன்றபோது அவள் பிடிவாதமாக மறுத்துவிட்டாள். 'சீ! இந்த உடுப்போடையா? அவமானம்... நான் இங்கையே கிடந்து சாகிறன்! போ' என்று கத்தினாள். அவள் உடுக்க மாற்று உடுப்பின்றி இருந்தபோது ஏதோ ஒரு தர்ம ஸ்தாபனம் வழங்கியிருந்த சட்டைகள் அவருக்கும் கிடைத்தன. வாழ்நாளில் சேலையைத் தவிர ஏதும் உடுத்தறியாத அவள் கூச்சத்துடனேயே சட்டையைப் பெற்று அணிந்திருந்தாள். அவளின் பிடிவாதம் அவரைப் பேசவும் வைத்தது. 'நீ இப்ப ஆஸ்பத்திரிக்கு வராவிட்டால் உன்ரை சீவிய காலத்திலை எப்பவுமே பிள்ளையளைக் காணமாட்டாய். அது மட்டுமில்லை; நான் உன்னை இனித் திரும்பியும் பார்க்க மாட்டன். எனக்கேன் சம்பளமில்லாத உத்தியோகம். எக்கேடா வது கெட்டுப் போ' என்று கிழவர் மிகக் கடுமையாக நடந்தே அவளை அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. சட்டையைப் போட்டுக் கொண்டு அந்த மூதாட்டி நாணிக்கோணி அடிமேல் அடி வைத்து வெளியே வந்தபோது பல நாட்களுக்குப் பின்னர் அவர் முகத்தில் சிரிப்புத் தெரிந்தது. சிகிச்சை நிலையத்தை நம்பிப் போக முடியாது. சிலவேளைகளில் வைத்தியரைக் காண்பது சிரமம். சிலசமையம் பூட்டிய கதவே அவர்களை வரவேற்கும் என அவர் கவலையிலாழ்ந்திருந்தபோது அவள் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றிப் பினாத்திக் கொண்டே இருந்தாள்.

தங்களது வயல் புலங்கள், மாடு கன்றுகள் பற்றி, மாளிகை போன்ற வீட்டைப் பற்றி, வாகனங்கள், உழவு இயந்திரங்கள் பற்றி, பிள்ளைகளின் செல்வம் செல்வாக்குப் பற்றி எல்லாம் அவள் சொல்லிச்

**மனைவியின் கரத்தை இறுகப் பற்றியபடி மார்பளவு நீரிலும் சேற்றிலும் பிணங்களுக்கு மேலாகவும் தட்டுத் தடுமாறி வந்த நினைவுகளும் அவர் கண் முன்னால் விரிந்து அவரைச் சித்திரவதைக்குள்ளாக்கின.**

சொல்லி மாய்ந்துகொண்டிருந்தாள். 'இப்ப எல்லாமே போச்சு கடைசியாப் பிள்ளையளையும் பிரிச்சுப் போட்டாங்கள். நான் செத்தா எனக்குக் கொள்ளி வைக்கக்கூட ஒருத்தனும் பக்கத்திலை இல்லை. கடவுளே ஏன் எங்களை இப்படிச் சோதிக்கிறாய்?' என அவள் பிரலாபித்துக் கொண்டிருந்தாள். கிழவர் பதில் பேசாவிட்டாலும் அவர் கண்ட எத்தனையோ அநாதரவான பிணங்களின் ஞாபகமும் அவரை வதைத்தது. குழந்தைகள், இளசுகள், கிழடுகள் என உயிரற்றுக் கிடந்த சடலங்களும் குற்றுயிராகக் கிடந்தவர்களும் கவனிப்பாரற்று வலி வேதனையினால் அலறித்துடிதுடித்து காயப்பட்டவர்களுமென வெவ்வேறு இடங்களில் அவர் கண்ட காட்சிகளும் இறுதியாக மனைவியின் கரத்தை இறுகப் பற்றியபடி மார்பளவு நீரிலும் சேற்றிலும் பிணங்களுக்கு மேலாகவும் தட்டுத் தடுமாறி வந்த நினைவுகளும் அவர் கண் முன்னால் விரிந்து அவரைச் சித்திரவதைக்குள்ளாக்கின. 'உனக்குக் கொள்ளி கேக்குதா கொள்ளி' என ஒரு கணம் அவர் குமுறினாலும் மறுகணம் கிழவி மேல் பரிதாப உணர்வு மேலோங்கியது.

இந்தத் தள்ளாத வயதிலும் இவளைப்போல எத்தனையோ பேர் இதையெல்லாம் அனுபவிக்க நேர்ந்ததும் கவனிப்பாரின்றி முகாம்களில் முடங்கிக் கிடப்பதும் அவரை வேதனைப்படுத்த மீண்டும் மனைவியின் நினைவு அவரைத் தாக்கியது. அவள் தன்னைத்தானே பார்த்துக் கொள்ளக்கூடிய திடகாத்திரமானவளே என்றாலும் அவள் எப்படி இருக்கிறாளோ? ஏதும் நோய்களுக்காளாகி இருக்கிறாளோ? என அவரது மனம் அலைபாய்ந்தது. 'ஏனப்பா உன்ரை பேரைச் சொல்லிறாயில்லை?' முதியவளின் குரல் அவரது எண்ணச் சங்கிலியை உடைத்தது. 'நானும் எத்தனையோ தரம் கேட்டிட்டன் உன்ர பேர் என்ன அவ்வளவு பெரிய திரவியமே' அவளது நையாண்டி அவரைப் பொறுத்தளவில் தாமரை இலைத் தண்ணீர்தான்.

'அம்மா, எத்தினை முகந் தெரியாத, பேர் தெரியாத ஆக்கள் எத்தினை முகாம்களுக்கை அடைபட்டுக் கிடக்கினம். முகந்தெரியாத லட்சக் கணக்கான அம்மக்களுக்கு அடையாளத்தைத் துலைச்ச ஒருத்தனா நானும் இருந்திட்டுப் போறன். என்ரை பேரை அறிஞ்சு என்னம்மா செய்யப் போறியள்?' என அவர் தன்னை மறந்து கூறியபோது அவரைப் பேச வைத்த சுகானுபவம் அவளது கவலைகளை மறக்க வைத்தது. 'நீ பேர் சொல்லாட்டிப்போ. நான் உன்னைத் தறுமு எண்டு தான் கூப்பிடப்போறன்' முதியவள் கூறினாள். 'ஏன் தறுமு எண்டு கூப்பிடப் போறியள்? அந்தப் பெயரிலை என்ன விசேஷம்?'

'அது எப்பவோ தவறிப்போன என்ரை மூத்தவன்ரை பேர். அவன் இப்ப இருந்தா உன்ரை வயசுதான் இருக்கும். அவனுக்குப் பேர் தர்ம லிங்கம்' அவரைப் போலவே உறவைத் தேடியலையும் அந்த மூதாட்டியின் நெஞ்சம் கிழவரின் மனதை நெகிழ வைத்தது. அதிர்ட்டவசமாக அன்று அவர்களுக்கு மருந்தெடுக்கும் வாய்ப்புக்கிட்டியிருந்தது. திரும்பி வரும்போதும் அந்த முதியவள் சம்பந்தா சம்பந்தமின்றி எதை யெதையோ உளறிக் கொண்டே வந்தாள். 'உனக்குத் தெரியுமே தறுமு என்ரை பொடியன் ஒருத்தன் கடைசி நேரத்திலை தன்ரை ஆட்டோவைக் குடுத்து மூண்டு தேங்காய் வாங்கினவன்', திடீரென்று அவள் கேள்வி எழுப்பினாள். வன்னியில் உச்சக்கட்டப் போர்தொடங்கிய பின்னர் பொருட்கள் ஆனை விலை, குதிரை விலைக்கு விற்கப்பட்டது அவருக்கும் தெரியாமல் இருக்க நியாயமில்லை என அறியும் நிலையில் இல்லாது அவள் பேசினாலும் ஒருவகையில் அவளது வார்த்தைகள் அவரைத் தனது மனநிலை குறித்துச் சிந்திக்க வைத்தது. கிழவரது மனம் சில வேளைகளில தெளிவாக இருக்கும். சில சமயங்களில் குழப்பமடைந்து காணப்படும். இருந்தாற்போலிருந்து மற்றவர்களின் பார்வையில் தோற்றமளிப்பது போலத் தனக்குப் புத்தி பேதலித்து விட்டதோ என்ற சந்தேகம் அவருக்குத் தோன்றும். மனைவியைச் சந்தித்து விட்டால் தனது பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என அத்தகைய தருணங்களில் அவர் தன்னைத்தானே தேற்றிக் கொள்வார். அவர் வாழ்ந்த பதியை யுத்தம் அண்மித்த நிலையில் ஏற்றக் கூடிய பொருட்களை எல்லாம் ஒரு வாகனத்தில் ஏற்றி அவ்வாகனத்தின் பின்னால் தனது மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் சென்று அக்கால கட்டத்தில் பாதுகாப்பானதாக அவர் கருதிய இடத்தில் தனது அசையும் சொத்துகளில் ஒரு பகுதியைக் கொண்டு சேர்த்ததும் பின்னர் அங்குமிருக்க முடியாத சூழ்நிலையில் மோட்டார் சைக்கிளை மட்டுமே எடுத்துக் கொண்டு மனைவியுடன் இடத்துக்கிடம் அலைந்ததும் அவ்வப்போது அவரது ஞாபகத்துக்கு வரும். மோட்டார் சைக்கிளிலேயே போர்ப் பிரதேசத்தை விட்டு அவர் நீங்க முயன்றதும் போராளிகள் அவர்களைத் தடுத்ததும் அவர் அவர்களோடு பிணக்குற்றதும் கூட அவரது ஞாபகத்துக்கு வரும். அவர் திரிந்த இடங்கள், சந்தித்த மனிதர்கள், காண நேர்ந்த கொடூரங்கள் பற்றிய நினைவுகள் திடீர் திடீரென அவர் மனதில் நிழலாடும். சில வேளைகளில் ஒன்றுமேதோன்றாது. எப்போதாவது அவர் மிகத்தெளிவாகப் பேசுவார். அருமையாக அவர் பேசுவது யாருக்குமே புரிவதில்லை. அவருக்கே புரிகிறதா என்ற சந்தேகமும் மற்றவர்களுக்கு எழும். முதியவள் அவருக்கு வைத்த பெயர் முகாமில் நிலைத்து விட்டது. சற்றே எட்ட நின்று சிலர் தறுமண்ணை, தறுமு அங்கிள் என அழைத்து எதை யாவது கேட்பர். சிலவேளைகளில் அவர் தெளிவாகவே பதிலிறுப்பார். சில வேளைகளில் மௌனமே பதிலாக இருக்கும். அவருக்குத் தர்மமாகக் கிடைத்த பெயரை யாரும் பயன்படுத்துவதை அவர் ஆட்சேபிப்பதில்லை. தனக்குள்ளேயே சிரித்துக்கொள்வார். அறுபது வயதைத் தாண்டியோர் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவர் என்ற சலுகையைப் பயன்படுத்தி அவர் பாதுகாப்பிலிருந்த மூதாட்டியை யாரோ வந்து அழைத்துச் சென்றனர். புறப்படுவதற்கு முன்னர் கிழவி அவரது கைகளை இறுகப் பற்றியபடி, 'நீ செய்த உதவியளை நான் எப்பவும் மறக்கமாட்டன் மோனை. நீ என்ன உதவி வேணுமெண்டாலும் கேள். உனக்கும் அறுபது வயது வந்திட்டுதுதானே? உன்னை வெளியிலை எடுப்பிக்க வேணுமெண்டால் சொல்லு. நான் எப்பிடியும் எடுப்பிக்கிறன்' என்று கண்ணீர் மல்கக் கூறினாள். கிழவர் மிகத் தெளிவாகவே. 'இல்லையம்மா, என்ரை பெண்சாதிக்கு இப்ப அம்பத்தஞ்சு வயசுதான். அவளை விடமாட்டினம். நான் தனிச்சிடுவன். முதலிலை நான் அவளோடை சேரவேணும். பிறகுதான் வெளியிலை போறதைப் பற்றி யோசிக்க வேணும்' எனக் கூறியவர் பழக்கப்படி வந்தவரிடம் தனது மனைவி பற்றிய விபரங்களைக் கொடுத்து, 'எப்படியாவது அவளைப் பற்றி அறிஞ்சு சொன்னியளெண்டால் பெரிய உதவியாயிருக்கும் செய்வியளா?' எனக் கைகூப்பினார். அந்த மனிதரும் தன்னால் இயன்றளவு உதவுவதாகத் திரும்பத் திரும்ப வாக்களித்துச் செல்லவே கிழவாஜீன் முகம் பிரகாசித்தது.

முகாமிலிருக்கும் சிலர் திடீர் திடீரெனக் காணாமல்போவதும் முகாமுக்குள் அது குறித்துப் பல வதந்திகள் உலவுவதும் வழக்கம். சுகவீனம் என ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்கிருந்து சிலர் இலஞ்சம் கொடுத்துத் தப்பிவிடுகிறார்களென்றும் இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் முகாமிலிருந்து கடத்தப்பட்டுப் பரலோகம் அனுப்பப்படுகிறார்களென்றும் பரவிய குசுகுசுப்பு களின் உண்மைத்தன்மையை அறியும் மார்க்கம் முகாம் வாசிகளுக்கு இருப்பதில்லை. முகாமில் அரச உளவாளிகள் இருப்பதாக அங்கே ஓர் அபிப்பிராயம் நிலவியது. அதனால் அக்கம் பக்கம் பார்த்து மிக்க அவதானத்துடன் அடங்கிய குரலிலேயே அங்கே சரத்துகள் வெளிப் படுத்தப்படும். கிழவரும் ஓர் உளவாளியாக இருப்பாரோ என்ற ஐயம்

அங்கே நிலவியதும் அவருக்குத் தெரியாது. அச்சந்தேகத்தின் பலனாக அரசு சார்பான கருத்துகளை மட்டுமே அவரருகே வெளிப்படுத்தவும் சிலர் முயன்றனர். ஒருநாள் ஒருவர் சொன்னார், 'இது வெல்ல முடியாத யுத்தம் எண்டு சிலபேர் சொன்னாங்கள். சில வெளிநாட்டுக் காறங்களும் ஒத்தூதினாங்கள். அவங்கள் அடிச்சுத்தானே போட்டாங்கள். இப்ப என்ன சொல்லப் போகினம்?' எது நடந்தாலும் என்ன சொல்லப்பட்டாலும் அலட்டிக் கொள்ளாத மௌன சாமியாராக இருக்கும் கிழவர் யாருமே சற்றேனும் எதிர்பாராத விதமாக ஆவேசமடைந்து சொன்னார், '¾hïô h¬õ ®ïöø õ£ï ®ïõ' அவங்கள் ஃபவுலடி அடிச்சவங்கள். யுத்தம் செய்யிறதுக்கு அரசாங்கத்துக்கு இருக்கிற உரிமையை நான் நிராகாஜீக்கேல்லை. ஆனால் அவங்கள் பொது சனங்களை அழிச்சிருக்கிறாங்கள்.

பொதுமக்கள் அவஸ்தைப்படேக்கை 'நீங்கள் கவலைப்பட வேண்டாம் நாங்கள்தான் உங்கடை மீட்பர்கள் எண்டு அபயக்கரம் நீட்டியிருக்கிறாங்கள். நடந்த அட்டூழியத்தை எல்லாம் நீங்கள் கண்டனீங்கள்தானே? இப்ப எங்களைத் திறந்த வெளிச் சிறைச்சாலையில் வைச்சிருக்கினம். வடக்கு கிழக்கு முழுதையும் திறந்தவெளிச் சிறைச்சாலை ஆக்கிறதுதானே அவங்கடை நோக்கம்.' எவ்வித அச்ச உணர்வுமின்றி அவர் மேடைப் பேச்சு நிகழ்த்தி ஓய அருகிலிருந்தவர்கள் அவரை அதிசயத்துடன் நோக்கினர். அவரது கிறுக்குத்தனம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டு விட்டதாகவே அவர்கள் கருதினர். கிறுக்குத்தனமில்லை யேல் வாய்க்கு வந்தபடி பேசி ஆபத்தை விலை கொடுத்து வாங்கியிருக்கமாட்டார். 'ஏன் பொடியள் மட்டும் என்னவாம்? சனங்களைப் பணயக் கைதியளாத்தானே வைச்சிருந்தவை?' என ஒருவர் கேட்க அங்கே வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. 'இரண்டு பக்கமும் மக்களைப் பகடைக் காயளாத்தான் பாவிச்சவை. சாவுக்கு இரண்டு பக்கமுந்தான் காரணம்' இன்னொருவர் கூறினார். கிழவரோ மீண்டும் மௌனசாமியாகி வெறித்த பார்வையுடன் ஒன்றுமே நடக்காததுபோல இருந்தார். கிழவரை அவரது வார்த்தைகளே அதிர வைத்தன. அந்த வார்த்தைகள் அவருக்குச் சொந்தமானவையல்ல் இரவல் வார்த்தைகள். அவரது மனைவிக்குச் சொந்தமானவை அவை. அவர் சற்று முன்னதாக எதைச் சொன்னாரோ அதற்கெதிரான நிலைப்பாட்டையே எப்போதும் கொண்டிருந்தவர். வழி நெடுகிலும் மனைவியோடு மல்லுக்கட்டியவர். தன்னில் ஏற்பட்ட மாற்றத்தை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது தற்காலிக மாற்றமா அலலது நிரந்தரமானதா? அவள் எட்ட இருந்தே அவர்மீது செல்வாக்குச் செலுத்துகிறாளா? எதுவுமே புரியவில்லை அவருக்கு.

மிகுந்த அன்னியோன்னியமான தம்பதிகளான கிழவருக்கும் மனைவிக்கும் வாழ்வின் பிற்பகுதியில் ஏற்பட்டுவிட்ட பிணக்கு அவர்களது இடப்பெயர்வின் பின்னர் அரசியல் மோதலாகப் பாஜீணாமம் அடைந்தது. அவள் போராளிகளுக்கு ஆதரவாகவும் அவர் எதிராகவும் எடுத்த நிலைப்பாடு அவர்களிடையே மோதலை வளர்த்தது. ஆயினும் அவர்களது நாகாறிகமான மோதல் அவர்களது தனிப்பட்ட பிணைப்புக்கு உரமூட்டியதே தவிர எவ்வித பங்கத்தையும் ஏற்படுத்தவில்லை. கிழவரது மனைவி ஆசிரியையாகவும் அவர் அரச சேவையாளராகவும் அவரது விவசாய முயற்சிகளிலும் சேர்த்த ஏராளமான சொத்தை ஆண்டனுபவிக்க அவர்களுக்குக் குழந்தைப்பேறு இருக்கவில்லை. மலட்டுச் சொத்து அவரது உறவினர்களுக்குப் போக வேண்டுமா அல்லது அவளது உறவினரைச் சேர வேண்டுமா என்பதில் அவர்களுக்கிடையே இருந்த முரண்பாடு வரவரத் தீவிரமடைந்து வந்தது. அவர்களது மண வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் நல்ல நிலையிலிருந்த அவரது உறவினர்கள் தன்னை மதிக்கவில்லை என்ற குறை அவளுக்கிருந்தது. அவளது உறவினர்க்கு அவள்மீது பற்றோ பாசமோ இல்லையென்றும் அகப்பட்டதைப் பிடுங்குவதிலேயே கண்ணாக இருந்தார்களென்றும் அவர் அவளைச் சீண்டிக் கொண்டே இருப்பார். மோதல் முற்றி வெடிப்பதற்கு முன்னரே வெடிச் சத்தங்கள் அவர்கள் பகுதியை அதிரவைக்க ஆரம்பித்துவிடவே அவர்கள் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு வெளியேற வேண்டியதாயிற்று.

அகதி முகாமில் கிழவர் ஒரு பைத்தியம் என அவரிடமிருந்து ஒதுங்கியிருந்தவர்களில் பலர் அவரது அண்மைய துணிவான நிலைப்பாட்டுக்குப் பின்னர் இரகசியமாகவேனும் மேலும் அவருடன் உறவு கொண்டாடத் துணிகிறபோதும் அவரிடம் பெரிதாக மாற்றம் எதுவும் தெரியவில்லை. அதே வெறித்த பார்வையுடன் தன்னுள் ஒடுங்கிக் கொள்கிறார். தம்மை அணுகுபவர்களைப் பார்த்து ஒரு புன்முறுவலோடு நின்றுவிடுகிறார். வார்த்தைப் பரிமாற்றத்தை இயன்றளவு தவிர்த்தேவருகிறார். மனைவியோடு மட்டும் மானசீகமாக உறவைப் பேணி வருகிறார். கிழவருக்கும் மனைவிக்கும் இழந்த சொத்து மீண்டும் கிடைக்குமா என்ற தெளிவில்லாத நிலையில் சொத்துப் பிரச்சினை போய் அவர்களது மோதல்களுக்கு இயல்பாகவே போராளிகள் இலக்காகினர். 'இவங்களாலை தானே எல்லாம் வந்தது', என அவர் புறுபுறுத்துக் கொண்டே இருப்பார். அவள் அவருக்கெதிராக வார்த்தையாடுவாள். 'அவங்கள் செய்தது எல்லாத்தையும் நான் சரி எண்டு சொல்லேல்லை. அவங்கள் என்ன காரணத்தைச் சொன்னாலும் முஸ்லிம்களை வெளியேற்றினது, ஆயுத மேந்தாத அப்பாவியளைக் கொலை செய்யிறது மாதிரியான விசயங்களை நான் எப்பவும் மன்னிக்கத் தயாராயில்லை. ஆனாலும்..' என்று அவள் மேலே பேசுவதற்குள் அவர் குறுக்கிட்டுச் சத்தமிட்டு அவள் வாயை அடைத்துவிடுவார்.

அவருக்கு இயக்கத்தின்மீது சில தனிப்பட்ட கோபங்களுமிருந்தன. பிரதானமாக அவரது வீடொன்று வசிப்பாரற்றிருந்தபோது அது அபகாரிக்கப்பட்டது. அவர் நீண்ட நாட்களாகப் போராடியே அதை மீட்கவேண்டியிருந்தது. அதைப்பற்றி அவர் பேச்செடுத்தபோதெல்லாம் அவள் மௌனம் சாதித்து முடியாமல் ஒரு தடவை, 'அவங்களுக்கு எத்தினையோ கண்ணுக்குத் தெரியாத எதிரியள். அதுவும் அந்த வீடு இருந்த இடம் ஒரு கேந்திர முக்கியத்துவமான இடம். அப்ப அவங்கள் தங்கடை பாதுகாப்புக்காக அதை எடுத்தாங்கள்', என்று சொன்னாள். அதன் பின்னர் வீட்டைப் பற்றி அவர் எப்போதும் பேச்செடுத்ததில்லை. யுத்தம் தீவிரமடைய அடைய அவரது திட்டுதலும் தீவிரமடையத் தொடங்கியது. பலம் பொருந்திய நாடொன்றைப் பகைத்த பின்னர் அவர்கள் எப்படியும் பதிலடி கொடுப்பார்களென்று தெரிந்தும் பெரிய ஒரு இராணுவத்தைத் தோற்கடித்து விட்டதாக அவர்கள் வாய்ப்பந்தல் போட்டதாகவும் சில பொருளாதாரப் பலப்புமிக்க நாடுகள் மத்தியஸ்தம் வகிக்க முயன்றபோது இராச தந்திர நோக்கில் செயல்படாது அந்த நாடுகளைத் துச்சமென மதித்தமையால் அவை போராளிகளுக்கு எதிராகச் செயற்பட்டு அவர்களது ஆயுத பலத்தைக் குறைத்து விட்டதாகவும் பொருமுவார். அந்நிய சக்திகள் பற்றிப் பேச்சு வரும்போது அவளுக்கு அதில் போதிய விளக்கமின்மையால் அவள் பொஜீதாக வார்த்தையாடாவிட்டாலும் தனக்குப் புரிந்தளவில் எதையாவது சொல்லி அவரை வம்புக்கிழுப்பாள்.

'தங்கடை தேவைக்காக மக்களை உசுப்பி விட்டிட்டு பாராளுமன்றக் கதிரையளைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டு உருப்படியா எதுவுஞ் செய்யாத எம்.பீ மாரை வெறுத்துத்தானே பொடியள் கிளம்பினவங்கள். தங்கடை பாதுகாப்புக்காக இங்கை அநீதி நடக்குதெண்ட போர்வையிலை அவங்களை ஆதாஜீச்ச பலமான அயல் நாடு சனங்களின்ரை விருப்பத்தை நாடிபிடிச்சுப் பார்க்காமல் தங்கடை கைப்பொம்மையளை இங்கை கொண்டு வந்து வைச்சு சகோதரச் சண்டையை மூட்டினதை நீங்கள் மறந்திட்டியளாக்கும்" என அவள் வாதிடுவாள்.

'அவனவன் அவனவனுக்காகத்தான் வாழுறான். நீ தொஜீயாத விசயங்களிலை தலைப்போடாதை' என அவர் கத்துவார். போர் மேலும் உக்கிரமடைந்து மக்களும் போர்ப் பிரதேசங்களில் சிக்கிக் கொள்ளவே தம்பதிச் சண்டை ஓய்ந்து அவர்கள் உணவையும் பாதுகாப்பையும் தப்பும் மார்க்கத்தையும் தேடி அலைய வேண்டி இருந்தது. கிழவர் இரண்டு மூன்று தடவை தனது மோட்டார் சைக்கிளில் மனைவியுடன் தப்ப முயன்றும் போராளிகளினால் முரட்டுத்தனமாகத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். அதுவும் அவர்கள்மீது அவருக்கிருந்த வெறுப்பை அதிகரித்தது. போராளிகளை நம்பிக்கும்பல்கும்பலாக அவர்களிடம் தஞ்சமடைந்த மக்கள் மத்தியில் சீறி வந்த ஷெல்களுக்கும் குண்டுகளுக்கும் உயிரைப் பலி கொடுத்து அங்கங்களைப் பறிகொடுத்து உணவும் வைத்திய வசதிகளும் பாதுகாப்பும் மறுக்கப்பட்ட நிலையில் ஆங்காங்கு போராளிகளுக்கெதிரான சில எதிர்ப்புணர்வுகள் தோன்றியதையும் கிழவர் அவதானிக்கத் தவறவில்லை. அதை மனைவிக்குச் சுட்டிக்காட்ட மறக்கவுமில்லை. முகாமுக்கு வந்த பின்னர் அவர் காண நேர்ந்த காட்சி ஒன்று அவ்வப்போது அவரது மனக்கண்ணில் தோன்றும். முகாமுக்கருகாமையிலுள்ள ஒரு சிறு ஆற்றை மறித்து யாரும் தப்பிவிடாதபடி முட்கம்பி வேலியால் தடுக்கப்பட்ட ஒரு சிறு இடத்தில் முகாம் வாசிகள் பலர் சேர்ந்து ஒரே நேரத்தில் அழுக்கு நீரில் நீராட வேண்டியிருந்தது. அப்போது ஒரு பெண் ஆவேசமாக

**கிழவர் போர்ப் பிரதேசத்தை விட்டு நீங்குவதற்கு முன்பதாக அவர் கண்ட சில கோரக் காட்சிகள், கேட்ட ஓலங்கள் பற்றிய நினைவுகள் இப்பொழுதும் அவ்வப்போது அவர் மனதைச் சித்திரவதை செய்கின்றன.**



அவரை கடந்து சென்று கையிலிருந்த வாளியால் குளித்துக் கொண்டிருந்த ஒருவனது முகத்தில் ஓங்கி அடித்தாள். அவன் பல்லுப்பறந்து இரத்தம் ஒழுக நின்றபோது அவள் கத்தினாள். 'நீதானெடா கடைசி நேரத்திலை பிள்ளையளைப் பிடிச்சுக் குடுத்தது. பங்கருக்குள்ளை நான் உன்னை எவ்வளவு கெஞ்சினன் முதலிலை ஒரு பிள்ளைபோட்டுது இவளையாவது விடு எண்டு. நீ கேட்டியா? இப்ப வந்து பாரடா அவள் கால் இல்லாமல் கிடக்கிறதை' போலீஜீல் குருதி சிந்திய சாதாரண மக்களின் அழுகுரல் எப்படி அவர் மனதை உருக்கியதோ அவ்வாறே இந்தக் கதறலும் அவர் மனதைப் பதற வைத்தது.

கிழவர் போர்ப் பிரதேசத்தை விட்டு நீங்குவதற்கு முன்பதாக அவர்கள் கண்ட சில கோரக் காட்சிகள், கேட்ட ஓலங்கள் பற்றிய நினைவுகள் இப்பொழுதும் அவ்வப்போது அவர் மனதைச் சித்திரவதை செய்கின்றன. உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக வாஜீசையில் நின்ற பலர் ஸீல்பட்டு உடல் சிதறிக் கிடந்த காட்சி, அதில் இடுப்புக்குக் கீழே உடல் சிதறி இறந்து கிடந்த ஒரு சிறுமியின் வாயில் கடித்தபடி இருந்த தின்பண்டம், அவருக்கும் மனைவிக்கும் புகலிடம் கொடுத்த வீட்டுக்காரர் அத்தனை பேரும் அவர்களிருவரும் வெளியே சென்றிருந்த நேரம் குண்டு வீச்சில் மாண்டு போனது, ஒரு பகுதி வீடுகள் அப்படியே குண்டு வீச்சில் எரிந்து கொண்டிருந்த அவலம் போன்ற அவர் தூக்கத்தைக் கெடுக்கும் காட்சிகள் சிதைக்க முடியாத சித்திரங்களாக அவர் மனதில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தத் தாக்கங்கள் எல்லாம் சேர்ந்துதான் அவரை ஃபவுலடி என்று கத்த வைத்திருக்க வேண்டுமென்று அவருக்குத் தோன்றுகிறது. கிழவர் மௌனமாக இருந்து அவதானித்தளவில் இத்தனை துன்பங்கள், துயரங்கள் மத்தியிலும் முகாமிலுள்ள பலாஜீன் மனங்களில் தமக்காகப் போராடிய ஒரு சக்தியை இழந்துவிட்ட ஓர் ஊமைக் காயம், ஒரு வெறுமை, இன்னுமொரு தலைமைத்துவம் எப்படியும் தோன்றிவிடுமென நீறு பூத்த நெருப்பாக இருக்கும் ஆசை என்பன முகாம்வாசிகளின் மனங்களில் வியாபித்திருப்பது தெரிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இன்னமும் ஒரு பகுதியினரிடம் இயக்கம் அழிக்கப்பட்டு விட்டது என்பதை ஏற்க மறுக்கிற ஒரு மனோபாவம் இருப்பது கண்டு அவர் வியப்படைகிறார். கிழவர் என்றைக்கும் போராளிகளை மனந் திறந்து பாராட்டியதில்லை. ஆயினும் தனிநாடு என்ற எண்ணக் கருவை அவர் ஏற்காவிடினும் போராளிகள் அரசை ஆட்டங்காண வைத்த, உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு பலம் பொருந்திய சக்தியாக விளங்கியதை மனைவியிடம் அவர் ஏற்றுக் கொள்ள மறுத்ததுமில்லை. அவர்கள் விட்ட தவறுகள் அவர்களது பலத்தைச் சிதைத்திருந்தாலும் அவர்களது வீரமும் தியாகமும் விதைத்த விதைகள் மக்கள் மனங்களில் விருட்சங்களாக வளர்ந்திருப்பது அவருக்குத் தெரி

கிறது. அந்த விருட்சங்களின் அசைவில் எழும் காற்று ஏதோ ஒரு வகையிலான எதிர்காலப் போராட்டத்துக்குக் கட்டியம் கூறுவது அவரது இரு மனங்களுக்குமே புரிகிறது.

மற்றவர்கள் கண்களிலே கிழவர் மனைவியைத் தேடி வெறி கொண்டலையும் ஓர் அரைப் பைத்தியமாகவே தென்படுகிறார். அதில் உண்மை இல்லாமல் இல்லை. அந்த வெறித்தனந்தான் அவரை இயங்க வைக்கிறது.... கிழவர் இவ்வாறு இரு வேறு உலகங்களில் அல்லாடிக் கொண்டிருக்கையில் அவருக்கு மிகவும் உவப்பான ஒரு செய்தி வருகிறது. கிழவர் இருக்கும் முகாமிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் இன்னொரு முகாமில் அவள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறாள். அவர் ஆனந்தக் கூத்தாடுகிறார். அங்கே செல்ல அவருக்கு அனுமதி இல்லை. எனினும் ஆவேசத்தால் உந்தப்படுகிற கிழவருக்கு முட்கம்பி வேலி ஒரு தடையாகத் தெரியவில்லை. திடீரெனப் பாய்ந்து வேலியை நோக்கி ஓடுகிறார். 'வேண்டாம் தறுமண்ணை சுட்டுப் போடுவாங்கள், திரும்பி வாருங்கோ', என ஒரு குரல் எழுகிறது. அவர் அதைச் சட்டை செய்யாது முட்கம்பிக் கூடாக நுழைந்து கீறல் காயங்களிலிருந்து குருதி கொட்டுவது கூடத் தெரியாது ஓடிக் கொண்டிருக்கிறார்.

ஆகாயத்தை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்படு கின்றன. கிழவர் கரங்களை உயர்த்த வேண்டுமென்றோ, குப்புறப்படுக்க வேண்டுமென்றொ பிரக்ஞையின்றி மனவேகத்துக்கடிபணிந்து கால்களின் வேகத்தை அதிகரிக்க முயற்சிக்கிறார். துப்பாக்கி அவர் பக்கம் நீள்கிறது. 'எயா மோட மனுயெக். எயாட்ட வெடி தியன்ட எப்பா' என யாரோ ஒருவர் கத்துகிறார். சீருடை தரித்தவன் என்ன நினைத்தானோ துப்பாக்கியைத் தாழ்த்தி விசில் ஓசை எழுப்புகிறான். கிழவர் குறுக்கிட்ட வேலிகளையும் கம்பிச் சுருள்களையும் கடந்து தகவல் தந்தவர் சொன்ன குறிப்புகளைச் சரியாக மனத்திலிருத்தி மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க ஒருவாறு இலக்கை அடைந்து விடுகிறார். தேடல் முடியும் வரை ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகக் கழிய நெஞ்சு படபடக்க அவர் ஆவலோடு காத்திருக்கிறார். சின்னம்மைத் தழும்புகள் கண்ட முகத்தோடு ஒரு மெலிந்த பெண்ணுருவம் சிரமத்துடன் அவரை நோக்கி அடிமேல் அடியெடுத்து வைத்து வருகிறது. ஏமாற்றமடைந்த கிழவர் எரிச்சலுடன் அப்பெண்ணிடம் தன் மனைவியின் பெயரையும் அங்க அடையாளங்களையும் கூறுகிறார். தாடியுடன் இருக்கும் அவரது கண்களை அவள் சற்று நேரம் உற்றுப் பார்க்கிறாள். அடுத்த கணம் எப்போதுமே அவரைப் பரவசப்படுத்தும் 'என்னடா கிழவா' என்ற வார்த்தைகள் அவளது உதட்டிலிருந்து உதிர்கின்றன. 'ஏய் செல்வி' என அவர் கண்ணீர் மல்க அவளது கரங்களைப் பற்றுகிறார். அவள் விம்முகிறாள். தாரை தாரையாக வழியும் கண்ணீர் அவரது காயங்களைப் பார்க்க விடாது அவளது கண்களை மறைக்கிறது. கிழவாஜீன் மனதிலிருந்த பாரம் இறங்குகிறது. குழப்பம் நீங்கி இருமனம் மீண்டும் ஒரு மனமாகிறது. அவர்கள் பேச முடியாமல் திணறிக் கொண்டிருக்க ஒரு சிறுவன் ஓடிவந்து, 'அம்மா' என்றழைத்து அவளது காலைக் கட்டிப் பிடிக்கிறான். அவளது கரங்கள் ஆதரவுடன் அவனை அணைக்கின்றன. அச்சிறுவனது முகத்திலும் தழும்புகள் தெரிகின்றன. 'கொப்புளிப்பான் எல்லாரையும் உலுக்கிப் போட்டுது' என்று கூறிய அவள், 'இவன்ரை அப்பாவும் அம்மாவும் வழியிலையே போயிட்டினம்' எனக் கைகளை மேல் நோக்கி உயர்த்துகிறாள். 'அவன் என்னோடை ஒட்டிக்கொண்டிட்டான்' 'உன்ரை சொந்தக்காறர் ஆரும் வந்தவையே?' கிழவர் கேட்கிறார். இல்லையென அவள் தலையசைக்கிறாள். 'உங்களுக்கு?' என அவள் வினவ 'ஆர் வரப்போறான்?' என அவர் விரக்தியுடன் கூறுகிறார்.

'அவங்களுக்குத் தான் ஒரு பிரச்சனையுமில்லையே' இந்த உறவுகளுக்காகவா நாங்கள் மோதிக் கொண்டோம் என்று கேட்பதுபோல ஒருவரை ஒருவர் பார்க்கும் பார்வை ஒன்றாகச் சங்கமித்து அவள் காலடியில் நிற்கும் சிறுவன்மேல் பதிகிறபோது அவர்களது வாழ்க்கையில் ஒளிவீசப்போகும் நம்பிக்கை நட்சத்திரமாக அவன் தெரிகிறான். தற்காலிகமாக அடையாளத்தைத் தொலைத்து நம்பிக்கை இழந்து சிறைப்பட்டிருக்கும் மக்களின் விடிவும் அவனது தலைமுறையைச் சேர்ந்தவர்களின் கைகளில் தங்கியிருப்பதாகவே கிழவருக்குத் தோன்றுகிறது. அவரைத் தேடி வரவிருக்கும் இராணுவத்தினருக்காக அவர் காத்திருக்கிறார். அவர் மனம் அமைதி கண்டிருக்கிறது.

■




[ நேர்முகம் ]

# எஸ்.எல்.எம்.ஹனீபா

## உமா வரதராஜன் | அனார் | அறபாத்

64 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் எஸ்.எல்.எம். ஹனீபா, ஈழத் தமிழிலக்கியத்தின் முக்கிய ஆளுமையாளர்களில் ஒருவர் இன்னமும் மூப்படையாத மனது. அவருடனான சம்பாசனைகள் அதை நிரூபிக்கும். ஊர்ப் பெண்டுகளின் நளினத்துடனும், லாவகத்துடனும் குரலின் ஏற்ற இறக்கங்களுடனும் அமையும் அவருடைய பேச்சை ரசித்துக் கொண்டேயிருக்கலாம். எம்.ஆர். ராதாவை நினைவுபடுத்தும் இரட்டைக் குரல். சீராகப் பேசிக் கொண்டே வந்து இறுதியில் தொனியைத் தாழ்த்தி, ரகசியமாக முடிக்கையில் பட்டாசு ஒன்று வெடிக்கும்.

அவருடைய சிறுகதைகளின் தொகுப்புகள் 'மக்கத்துச் சால்வை' என்ற தலைப்பில் 1992இலும், 'அவளும் ஒரு பாற்கடல்' என்ற தலைப்பில் 2007 இலும் வெளியாகின. தனது படைப்புகளுக்காக 1992இல் கோவை லில்லி தேவசிகாமணி விருதும், 1993இல் இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதும் பெற்றவர் அவருடைய பெரும்பாலான படைப்புகளில் அவர் புழங்கிய கிராமங்களின் குறுக்கு வெட்டுமுகங்களைக் காணலாம். கற்பனைப் புழுதியில் புரண்டு கொண்டிருந்த அருடைய சமகாலத்து மட்டக்களப்பு எழுத்தாளர்களுக்கு கிட்டாத வரம் இது. கிணற்றுக்கு வெளியே வந்து, பல நூறு நவீன இலக்கிய நூல்கள் நடுவே அவர் நின்றியற்றிய, தவத்துக்குக் கிடைத்த வரம். லா.சா.ரா ஒரு தேவி உபாசகர் எனச் சொன்னால் எஸ்.எல்.எம். ஹனீபாவை லா.சா.ரா வின் உபாசகர் எனலாம். அவருடைய உரையாடல்களில் லா.சா.ரா வும், ஜெயகாந்தனும் தவிர்க்க முடியாத பெயர்கள்.

எஸ்.எல்.எம். ஹனீபாவிடம் எந்த ஓர் இளம் எழுத்தாளனும் இடைவெளியை உணரமாட்டான். அவருடைய ரசனை உலகில், ஒரு பெரிய விருட்சமும் உண்டு. நாலு இலைகள் விட்ட செடிக்கும் அங்கே இடமுண்டு. அவர் ஒரு காலத்தில் அதுவும் இன அரசியல் நெருக்கடி உக்கிரமடைந்திருந்த கால கட்டத்தில், வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினராக இருந்தவர் இலக்கிய உலகைப் போன்றே அனைத்துக் கட்சியினரையும் சமாளித்துச் சென்ற சுவாரஸ்யமான ஓர் உறுப்பினராக அவர் அப்போது இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

அவர் எழுத்தாளர் மட்டுமல்ல. எஸ்.பொ. வுக்குப் பின்னர் இலக்கிய அரங்குகளைக் கலகலப்பாக்கும் ஒரு பேச்சாளர் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் விவசாயி. ஒரு காலத்தில் கால்நடைகள் அபிவிருத்திப் போதனாசிரியர் சில நாட்களின் முன்னர் உள்ளூர் வானொலியொன்றில் தினசரி இரவுகளில் உரையாற்றினார். இந்தப் பேட்டியைப் படிக்கப் போகின்றவர்கள் அவருடைய உரையின் நவீனத்துவத்தைப் பற்றியா அல்லது மாய யதார்த்தம் குறித்தா அமைந்திருந்தது என அறிய ஆவலாயிருப்பார்கள். ஆனால் அங்கு அவர் பேசியது கால்நடை வளர்ப்பு குறித்து. சுவாரஸ்யம் நிறைந்த எஸ்.எல்.எம். ஹனீபாவின் உலகில் அதற்கும் முக்கிய இடமுண்டு.

**உமாவரதராஜன் அனார் அறபாத்**

அறபாத்: உங்கள் பால்ய கால நினைவுகளோடு நமது உரையாடலைத் தொடரலாமே.

எஸ்.எல்.எம்.: பால்ய காலம் ஒவ்வொரு மனிதனுக்கும் பவித்ரமானது. எனது பால்ய காலம் எனும் பொக்கிசத்தை நான் பொத்திப் பொத்திப் பாதுகாத்து வந்துள்ளேன்.

அறுபதாண்டுகளுக்கு முன்னம் பத்துப்போர் கொண்ட ஒரு குடும்பத்தைப்போசிப்பதென்பது லேசுப்பட்ட காரியமல்ல.

வாப்பா பெரும் உழைப்பாளி. வெள்ளாப்பில் எழும்பி விடுவார். ஊரிலிருந்து அய்ந்து மைல்களுக்கப்பால் பூலோகத்தின் சொர்க்கம் என்று இன்று கொண்டாடப்படும் கற்குடா பாசிக்குடா கடற்கரைகள்.அங்கேதான் வாப்பா மீன் வாங்கி வரப்போவார். சனி ஞாயிறுகளில் எனது சொர்க்கமும் அந்தக்கடற்கரைகள்தான்.

வாப்பாவின் தோளில் கமுகு வைரத்தில் காத்தாடி. அதன் இரு முனையிலும் கயிற்று உறியில் மீன் கூடைகள் தொங்கும். 'கிறீச் கிறீச் என்ற ஓசையுடன் தோளில் கிடக்கும் காத்தாடியின் கூடைகளிரண்டும் கூத்துப்போடும். கூடைக்குள் பொன்னிவாகை இலையை நீக்குப் பார்த்தால்.. வெள்ளித்துண்டுகளாக மீன்கள் மினுமினுக்கும். எங்கள் ஊரில் அந்தக்காலத்தில் அஞ்சாப்பு வரை படித்த நான்கைந்து பேரில் வாப்பாவும் ஒருவர். அவர் கை எழுத்து குண்டு குண்டாக அழகாக இருக்கும் .நாள் தவறாமல் பத்திரிகை படிப்பார். அவர் மடியில் நான். வாசலில் தென்னைகள் காற்றில் கலையும் ஓலைக் கீற்றுகளுக்குமிடையில் துண்டு துண்டாகத் தோட்டுப்பாயில் கோலம் போடும். சீறாப் புராணம், முகைதீன் மாலை, ராஜநாயகம், பெண் புத்தி மாலை, நல்ல தங்காள் காதை என்றெல்லாம் வாப்பா ராக மெடுத்துப் படிப்பார். வாப்பாவைச் சுற்றிப் பொண்டுகள் வட்ட மிட்டிருப்பர். வாப்பாவிலும் பார்க்க அதிகமாக வாசிக்கும் பழக்கம் வாப்பாவிட மிருந்துதான் தொற்றிக்கொண்டது.

அறபாத்: 1968, 1975 காலப்பகுதியில் இன்ஸான், இளம்பிறை வீரகேசரியில் நிறைய எழுதியிருக்கிறீர்கள் அந்த அனுபவங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்.?

எஸ்.எல்.எம்.: 1968 விருந்து 75 வரையில் எனது அனேகமான கதைகள் இந்தப்பத்திரிகையில்தான் பிரசுரமாகின. என்னுடன் தெற்கிலிருந்து திக்குவல்லைக்கமால் பாணந்துறை மொயின் சமீன், எம்.எச்.எம். சம்ஸ், மன்னாரிலிருந்து கலைவாதி கலீலும், மலையகத்திலிருந்து மாத்தளை வடிவேலன், மலரன்பன், கார்த்திகேசு போன்றோரும், மட்டக்களப்பில் ஆரையம்பதி ஆ. தங்கராசா, அமிர்தகழி செ. குணரத்தினம், எஸ்.ஜோன் ராஜன், எஸ் முத்துமீரானுடன் இங்கு எனது

உயிர் நண்பன் வை. அஹ்மத் போன்றோரும் எழுதினார்கள். .அந்தக் காலகட்டத்தில்யாழ்ப்பாணத்திலிருந்து எழுதியவர்களுடன் எனக்குத் தொடர்பு இருக்கவில்லை.

வீரகேசரி வார வெளியீட்டின் ஆசிரியர் திரு பொன். இராஜகோபால் அவர்கள் வருடத்திற்கு இரண்டு கதைகளைப்பிரசுரித்து உற்சாகப் படுத்தினார்.அடுத்து வரும் தலைமுறையினர் இவர்கள்தான் என்று உணர்ந்து செயற்பட்டார். ஈழத்து தமிழ்இலக்கிய உலகம் இவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது, தினகரன் சிவகுருநாதனோ நேர் மாறானவர்.

1967ம் ஆண்டு என நினைக்கின்றேன்.அப்பொழுது கொழும்பு சாஹிரா‌க் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய திரு.கந்தையா மாஸ்டர் அவர்களின் சிபாரிசுக் கடிதத்துடன் நானும் அவரின் மகன் நவேந்திரனும் தினகரன் ஆசிரியரைக் காண கதையுடன் சென்றோம். கதையை வாங்கிக்கொண்ட சிவ குருநாதன் அவர்கள் பெருநாள் கதையாக காரியப்பர் எம்.பியின் உறவினர் ஒருவரின் கதையை போடவிருக்கிறேன். பின்னர் உங்கள் கதையைப் பார்க்கலாம் என்றார். பெருநாள் கதையாக பிரசுரம் பெறுவதென்பது அந்த நாட்களில் பெரும் புகழுக்குரிய விசயம்.

தற்செயலாக அவர் மேசையில் கிடந்த ஒரு போஸ்ட் கார்ட்டை எனது கண்கள் மேய்ந்தது. மருதூர்கனி எழுதியிருந்தார். தனது 'சோறும் கறியும்' அனுப்பி ஆறு மாதங்களாகியும் பிரசுரமாகவில்லை எனக் காலைப் பிடித்துக் கெஞ்சும் கடிதம். நான் எனது கதையைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டேன். இடையில் இருபத்தைந்து வருடங்கள். சந்திரிகா அரசு சிவகுருநாதன் ஏரிக்கரையிலிருந்து தூக்கப்பட்டார். அமைச்சர் அஸ்ரபின் பங்களா வாசலில் சிவகுருநாதன் என்னைப் பார்த்துஞ் இதற்கு மேல் எதுவும் சொல்ல வேண்டாம்..

அறபாத்: முஸ்லிம் அரசியல் கிழக்கில் மிகைத்திருக்கின்றது என்ற மாயை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவரான தாங்கள் இதை சமகால அரசியலுடன் பொருந்திப் பார்க்கிற போது என்ன தோன்றுகிறது?

எஸ்.எல்.எம்.: அரசியலில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்றெல்லாம் இல்லை. அரசியல் செய்பவர்களுக்கு எது வசதியாகப்படுகிறதோ அதற்கான 'அழைப்புமணியை' அழுத்துவார்கள். அதில் முஸ்லிம் அரசியல் என்பது அஸ்ரப் காலமானாலும், ஹக்கீம் காலமானாலும், அதாவுல்லாஹ் காலமானாலும் அதை விவாதிக்கும் மனோ நிலையோ தீவிரமோ இன்று கிடையாது. எல்லாமே புகழ்ச்சி, தற்புகழ்ச்சி, வசை. அரசியல்வாதிகளை மகாயோக்யர்களாகப் பார்க்கும் சாமான்யர்கள்தான் எண்ணிக்கையில் மிகமிக அதிகம். இந்த மக்கள்தான் நாட்டை தொடர்ந்தும் ஜனநாயக வழியில் (?) இட்டுச் செல்பவர்கள். நாம் கொஞ்சப்பேர் எதையும் சாதிக்க முடியாது.

துப்பாக்கி. பணம். அதிகாரம்..

இன்றைய நாட்களில் இந்த உலகமய சூழலில் அதிகாரமும் பணமும் ஊடகமும்தான் உலகை வழி நடாத்துகின்றது. நாம் மக்கள் இழுபட்டுச் செல்கிறோம். இவைகளுக்கு முன்னால் இலட்சியம் தாக்குப் பிடிக்காது. பிரபாகரன் உயிருடன் இருக்கும் வரையில்தான் பொதுவாக சிறுபான்மை மக்களினதும் குறிப்பாக முஸ்லிம்களினது அரசியலும் சூடு பிடித்திருந்தது. பிரபாகரன் தமிழர்களுக்காக தனி ஈழத்தை வேண்டி நின்றார். நாம் முஸ்லிம்களுக்காக தனி மாகாணத் தைக் கோரினோம். அவர் தமிழ் இளைஞர்களை மாவீரர்களாக்கி மன நிறைவு கண்டார். நமது தலைவர்கள் நமது இளைஞர்களை போராளிகளாக விளித்து புளகாங்கிதம் அடைந்தார்கள். பிரபாகரனின் மறைவோடு இவையெல்லாம் இன்று வெற்றுக்கோசமாகிப்போனது.

அறபாத்: நீங்கள் ஓர் பன்முக அனுபவம் வாய்ந்தவர். விளையாட்டு, விவசாயம், மிருக வைத்தியம், சொற்பொழிவு, அரசியல் எழுத்து என்று ஓர் '»ìì ²öó ªùïê' உங்களுக்கு பூரண திருப்தி தந்த துறை பற்றியும் அதன் அனுபவங்கள் குறித்தும்.

எஸ்.எல்.எம்.: எனது பதிமூன்றாவது, பதிநான்காவது வயதுகளில் 1963களில் இப்பிரதேசத்தின் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவனாகத் திகழ்ந்தேன். 1961இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் Â¬÷õêiàõ áhòÜp¬ön ஆனேன். அப்பொழுது மட்டக்களப்பு மாவட்டம் என்பது திருகோணமலையும் அம்பாறையும் இணைந்தது .திருகோணமலையிலிருந்து தமிழ் மாணவர்கள் புகைவண்டியிலும் (கரிக்கோச்சி) அம்பாறையிலிருந்து சிங்கள மாணவர்கள் பஸ் வண்டியிலும் வருவார்கள். மட்டக் களப்பு தலை நகரம், கச்சேரி பெரியாஸ்பத்திரியெல்லாம்... அங்கே தான். மாலையில் போட்டி முடிந்ததும் தமிழ் மத்தியஸ்தர்கள் சிங்கள மாணவர்களுக்கு அநீதி இழைத்துவிட்டதாக கூச்சல் போடு வார்கள். அதே ஆண்டில் »ìì ä÷ìòªù Àpöêõ÷ Ýïïõõ, நூறு மீற்றர், இருநூறு மீட்டர் போட்டிகளில் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றேன். என்னுடன் போட்டிக்கு வந்த மாணவர்கள் என்னை விட உயரமாகவும், வாளிப்பாகவுமிருந்தார்கள். கொழும்பின் செல்வச் செழிப்பு. அன்று ஓவல் மைதானம் என்றழைக்கப்பட்ட சரவணமுத்து ஸ்டேடியத்தில்தான் போட்டி நிகழ்ந்தது. அது தான் எனது முதல் கொழும்பு பயணம். எங்களின் Àõòêõïê ஒரு பொலிஸ் மா அதிபர். சிங்களத்தில் Àõòêõ சொல்ல வடக்கிலும் கிழக்கிலும் இருந்து வந்தவர்கள் திகைத்தோம். ஏதோ வெடிச்சத்தம் கேட்டதும் ஓடினோம். இப்பொழுது தமிழ் மாணவர்களுக்கு சிங்களவர் அநீதி செய்ததாக குசுகுசுப்பு.

நான் ஓடி முடிந்ததும் மைதானத்தில் இன்னொரு பகுதியில் கிரிக்கெற் விளையாடிக்கொண்டிருந்த ஒருவர் ஓடிவந்து கை கொடுத்து ஆங்கிலத்தில் ஏதோ சொன்னார். இதைக் கவனித்துக்கொண்டிருந்த ஆசிரியர் 'ஹனீபா இவர்தான் னுச.என்.எம். பெரோரா. கிரிக்கற் சபையின் தலைவர்' என்றார். பின்னர் அவ்வாண்டின் தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்று áhê¬÷õ¬òn áöìììõï ºööõï யில் நிகழ்ந்தது. யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரியிலிருந்து உயரம் பாய்தல் பயிற்சிக்கு இளஞ்செனி என்பவரும் குறுந்தூர ஓட்டங்களுக்கு நானும் (இரண்டு தமிழ் பேசும் மாணவர்கள்) பயிற்சி பெற்றோம். எம்முடன் பின்னாளில் ஆசிய, ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்ற பலருமிருந்தார்கள் அவர்களில் விஜயதாச, பத்ரா, லக்ஸ்மன்டி அல்விஸ் (200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தலில் அகில இலங்கை சாதனையாளர், அமைச்சர் பர்ணாந்து பிள்ளையுடன் கொல்லப்பட்டவர்.) எங்களுக்கு நாகலிங்கம் எதிர்வீரசிங்கம், யு.ளு.ஆ.கான், ஒலிம்பிக் முதல் பதக்கம் வென்ற டங்கன் வைற் போன்றோர் பயிற்சி அளித்தார்கள். கரப்பந்தாட்டம் ஆடுவதிலும் நான் மகா சுழியன். விளையாட்டில் நான் பெற்ற இன்பம். வாழ்வின் வெற்றி தோல்விகளை மனமுவந்து ஏற்கும் பக்குவம். அதற்கு நிகர் அதுதான்.

எழுத்து ஏனைய துறைகளெல்லாம் அதற்குப் பின்னால் தான் இது பற்றிப் பேச வந்தால் காலத்தின் பக்கங்கள் எனக்குக் காணாது.

அனார் : என்னை என்னிலிருந்து மீட்டுத்தந்தவர் எஸ்.பொ.என்கிறீர்கள் பின்னாளில் பேராசிரியர் கா.சிவத்தம்பியுடனும் பெரும் நட்புக்கொண்டிருந்தீர்கள்?

எஸ்.எல்.எம்.: இது ஒரு பிரச்சினையே இல்லை. எஸ்.பொ வை நான் சந்திக்காமல் இருந்தால் சிறுகதை எழுதியிருக்கவேமாட்டேன். அதே போல் புதுமைப்பித்தனைப் படிக்காமல் இருந்தால் பேனாவை தூக்கியிருக்கவேமாட்டேன். பதினைந்தாவது வயதில் எஸ்.பொ.வையும் ஐம்பதாவது வயதில் பேராசிரியரையும் சந்தித்திருக்கிறேன். நான் எழுத வந்த நாட்களில் முற்போக்கு இலக்கிய அணியின் பிதாமகராக பேராசிரியரும், அவருக்குப் பக்கபலமாக ஏ.இக்பால், எம்.எச்.எம்.சம்ஸ், டொமினிக் ஜீவா போன்றோரும்.. எஸ்.பொ.அணியில் இரசிகமணி கனக செந்திநாதனும் வ.அ. இராசரத்தினம் போன்றோரும் இவர்களுக்குப் பக்க பலமாக இருந்தனர்.

அனார் : அந்தக்கால கட்டத்தில் கைலாசபதி அவர்களின் செயல்பாடுகள் குறித்து உங்களுக்குத் தெரியுமா?

எஸ்.எல்.எம்.: அது பற்றி ஞாபகமில்லை. எனக்கு வேறு வேறு சோலிகள்.. மூஃடு படித்து விட்டு உடுப்புத் தேய்க்க ஒரு துண்டு உப்புச் சவக்காரத்திற்கும் உம்மா வாப்பாவின் கையை எதிர்பார்த்த நாட்கள் இந்தப் போக்குகள் பற்றிய அறிவும் அக்கறையுமில்லாத நாட்கள்.. இந்த முரண்பாடுகளையெல்லாம் விஞ்சியது இவர்களுடனான வாஞ்சையும் உறவின் நெருக்கமும். ஒரு தடவை ஜெயகாந்தனோடு உரையாடிக்கொண்டிருக்கும்போது இப்படிச்சொன்னார். 'எதிரியிருக்கனும். அவன் எதிரியாகவே இருக்கக் கூடாது. பகைமை தீர்ந்திடனும். பகைவனும் நண்பனாகிடனும்,' என்றார். இவர்களெல்லாம்

**எஸ்.பொ.வை நான் சந்திக்காமல் இருந்தால் சிறுகதை எழுதியிருக்கவேமாட்டேன். அதே போல் புதுமைப்பித்தனைப் படிக்காமல் இருந்தால் பேனாவை தூக்கியிருக்கவே மாட்டேன். பதினைந்தாவது வயதில் எஸ்.பொ.வையும் ஐம்பதாவது வயதில் பேராசிரியரையும் சந்தித்திருக்கிறேன்.**



எத்துனை பெரிய ஆத்மாக்கள். இவர்களுடனான உறவுதான் எனது இலக்கிய வாழ்வின் தேறிய சாரம் என்பேன்.

எந்தப் பெரிய சபையாக இருந்தாலும் எழுந்து நின்று எனது கருத்தைச் சொல்லும் ஓர்மத்தை பதினெட்டாவது வயதிலே எஸ்.பொ. விடமிருந்துதான் பெற்றுக்கொண்டேன்.

அதே நேரம் என்னாம் பெரிய கொம்பனாக இருந்தாலும் வாழ்வின் அர்த்தமே அன்பு செலுத்துவதும் அன்பைப் பெறுவதும்தான், கை குலுக்கி கைதூக்கி களிப்படைவது தான் மனிதம், மனிதன் என்பதை பேராசிரியர் சிவத்தம்பியிடமிருந்து நான் தெளிந்துகொண்டேன்.

அறபாத்! உனது நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக ஓட்டமாவடிக்கு அழைத்துவந்து அரங்கம் நிரம்பிய இலக்கிய ஆர்வலர்களுக்கு மத்தியில் அவர் ஆற்றிய உரையின் சாரமும் அதுதான். இவர்களைப் பற்றி நினைவு கூர எனது வாழ்வில் எத்தனையோ தருணங்கள் தவம் கிடக்கிறது.

அறபாத்.: மட்டக்களப்பின் நவீன தமிழிலைக்கியம் பற்றிய பேச்சு வரும் போதெல்லாம் ஆனந்தன் என்று ஒருவரை பிரஸ்தாபிப்பீர்கள். யார் அந்த ஆனந்தன்?

எஸ்.எல்.எம்.: ஆனந்தன் என்பவன் என்னைப் பொறுத்தவரையிலும் தனிமனிதனல்ல,ஓர் இயக்கம். அவனுடைய அனைத்துச்செயற்பாடுகளிலும் ஆத்மார்த்தம் துலங்கும். அடிப்படையில் அவன் ஓர் மார்க்ஸிஸ்ட் ஆனாலும் அவனிடம் குழுவாதமிருக்கவில்லை எல்லா நல்ல எழுத்துக்களையும் வாசிப்பான் படித்ததை எங்களோடு பகிர்ந்து கொள்வான் வைக்கம் முகம்மது பஷீரை அவன்தான் எனக்கு அறிமுகம் செய்தான். மலையாள மொழியை சுயமாகப் படித்து மலையாளத்திலிருந்து கதைகளை தமிழுக்கு மொழிமாற்றம் செய்தான் நாட்டாரியலிலும் பெரும் ஈடுபாடுகொண்டவன். அவனுடையமேடைப்பேச்சு அங்கேகலக்காரனாக காட்சி தருவான். ஒரு விடயம் அவன் பார்வையோ பல கோணங்களை நமக்கு காட்சிப்படுத்தும்.

கல்லடியில் விழிப்புலனற்றோர் (தரிசனம்) பாடசாலையின் ஆரம்ப கர்த்தாக்களிள் இவன் முக்கியமானவன். கதை,கவிதை,பத்தி,விமர்சனம் என்றெல்லாம் நாங்கள் அவனை அடையாளம் கண்டாலும் அவனுடைய ஆளுமை இவையெல்லாம் கடந்தது நீண்ட காலமாக எனது குடும்ப உறவினனாக இருந்தான்.

எஸ்.பொ, எம்.எ.நுஃமான், உமாவரதராஜன், சண்முகம் சிவலிங்கம், சோலைக்கிளி, மருதூர் கொத்தன் எல்லோரும் இவனுடைய விசிறிகள்.

05.12.1995இல் புதுக்குடியிருப்பில் ஒரு பஸ்ஸில் பயணித்த அனைவரும் துப்பாக்கிதாரிகளால் கொல்லப்பட்டார்கள். அதில் அவனும் காவு கொள்ளப்பட்டான்.

மட்டக்களப்பு வாசகர் வட்டத்தினர் ஆனந்தனின் கவிதைகளில் கணிசமானவற்றை தொகுதியாக கொண்டு வந்தனர் அந்தத் தொகுதிக்கு எம்.எ.நுஃமான் எழுதிய முன்னுரை ஆனந்தனை நம் மனத்தில் காலாதி காலத்திற்கும் வாழ வைக்கும்.

இத்தனைக்கும் அவனை எனது வீட்டிற்கு சிவராம்தான் அழைத்து வந்து அறிமுகம் செய்வித்தான். நீண்டநாள் நான் தேடிய ஓர் மனிதன் ஆனந்தன் உருவில் எனக்கு தரிசனம் தந்தான்.

அறபாத்.: நீங்கள் வாசிப்பில் ஈடுபாடுகாட்டிய அந்த நாள்களில் மட்டக்களப்பின் இலக்கியப்போக்கு எப்படியிருந்தது?

எஸ்.எல்.எம்.: இந்தக்கேள்விக்கு ஒரு வரலாற்று வீறிதியான முழுமையான பதிலை என்னால் தரமுடியாவிட்டாலும் நினைவில் நிற்பதை சொல்கிறேன். கவிஞர் சுபத்திரனை முன்னிறுத்தி மௌனகுரு, சாருமதி போன்றவர்கள் (இடதுசாரி) செயற்பட்டார்கள்.

அன்புமணி, நவம், திமிலைத்துமிலன் போன்றவர்கள் ஒரு மிதவாத

அல்லது ஜனரஞ்சக எழுத்தை முன்னெடுத்தார்கள். எஸ்.பொ பித்தன் போன்றவர்கள் கலை ஆளுமை, மொழிச் செழுமை, அழகியல் என்று இயங்கினார்கள். இவர்கள் எல்லோரும் எனக்கு இனியவர்களே.

அனார்: அதே காலப்பகுதியில், இங்கே தென் கிழக்கின் இலக்கிய நில}வரம் எப்படியிருந்தது.?

எஸ்.எல்.எம்.: நீலாவணனின் தலைமையில் நவீன இலக்கியத்துடனான தொடர்பில் பலரும் களமிறங்கியிருந்தார்கள். இவர்களில் மருதூர்க் கொத்தன்,சண்முகம் சிவலிங்கம்,எம்.ஏ.நுஃமான்,மூவரும் முக்கியமான வர்கள். 1969இல் தொழில் நிமித்தம் நான் அக்கரைப்பற்றுக்குச் செல்கி றேன். மாலை நேரங்களில் நான் அக்கரைப்பற்றிலிருந்து கல்முனைக்கு வருவேன். கல்முனைக்கடற்கரையில் மாலை வேளையில் இலக்கிய சதஸ் கூடும். சண்முகம் சிவலிங்கம் நடுநாயகமாக வீற்றிருப்பார், அவரைச் சுற்றி எம்.ஏ.நுஃமான், அன்புமுகையதீன், சடாட்சரம், என்று பலருமிருப் பார்கள். நான் கொஞ்சம் தள்ளியிருந்து இவர்களின் உரை யாடல் களுக்கு காது கொடுப்பேன். வெங்கட் சாமிநாதனுக்கும், நுஃமானுக்கு மிடையில் அந்த நாட்களில்தான் பெரும் சர்ச்சை மூண்டது. நடை, இதழ்கள் நுஃமான் மூலம் படிக்கக்கிட்டியதும் அங்குதான். அதே ஆண்டில் எம்.ஏ.நுஃமானை ஆசிரியராகக் கொண்டு கவிதைக்கான காலாண்டிதழாக 'கவிஞன்' வெளிவருகிறது. பத்து இதழ்களை நான் பொறுப்பேற்று விற்றுக் கொடுக்கிறேன். இதழின் விலை ஒரு ரூபா. கவிதை தொடர்பில் நுஃமானும், சண்முகம் சிவலிங்கமும் எழுதி யவைகளுக்கு நிகரான கட்டுரைகளை இற்றை நாள் வரை யாரும் எழுதியதாக எனக்குத் தெரியவில்லை. அத்தகைய ஆளுமை மிகு படைப்புலகம் கல்முனையில் காலூன்றியிருந்தது.

அறபாத்: தமிழகஈழத்துப்பெண் கவிஞர்களின் படைப்புமொழி உடல்மொழி மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றிப் பேச முடியுமா?

எஸ்.எல்.எம்.: முதலிலேயே சொல்லி விடுகிறேன். தமிழகம், ஈழம், மலேசியா, சிங்கப்பூர், புலம் பெயர் நாடுகள் என்ற பார்வையில் எனக்கு உவப்பில்லை. ஒட்டு மொத்த தமிழ் எழுத்து இங்கும் ஆண் மொழி பெண் மொழி எனக்குப் புரியவில்லை. நேரடியாக விடயத்திற்குப் போவம்.. குட்டி ரேவதி தனது தொகுதிக்கு 'முலைகள்' எனப் பெயரிட்டதும், சுகிர்தராணியின் 'தவய செய்து தப்பார்த்தம் பண்ணாதே புணர்ச்சிக்கு அழைக்கிறேன்' என்ற 'இரவு மிருகமும்' 'எல்லா அறிதல்களோடும்' என்ற சல்மாவின் வரிகளும் அங்கு மட்டு மல்ல நமது கவிதை மயில்களும் கிளிகளும் கூட நிலை குலைந்த அரங்கங்களையும் நாம் இருவரும் அனுபவித்தவர்கள்.

இன்னும் மாலதி மைத்திரி போன்றவர்களின் எழுத்துக்கு தளமாவ தன் மூலம் திரௌபதியும் தீட்டுப்பட்டு விடுகிறது என ஒரு பெண் வாசகர் தீராநதியில் கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நான்கு கவிஞர்களையும் கடந்து போகும்போது
என் முன்தான் நிகழ்கின்றது
என் மீதான கொலை என்கிறார் அனார்.

காலாதி காலமாக என்னில் பாதி என்ற பகட்டு வார்த்தைகளால் பெண்களின் உடலைக் கொண்டாடினோம். எல்லாமே அதற்குத்தான் என்பதை இன்று பெண் புரிந்துகொண்டாள். அந்தப்புரிதலில் பிறந்தது தான் இவர்களின் எழுத்துக்கள். இவர்களின் எழுத்துக்களில் தீட்டல்ல, நமது மனத்தில்தான் தூமை உறைந்து கிடக்கிறது.

அறபாத்.: நமது சூழலில் வாசிப்பு என்ற தளத்தில் உமா வரதராஜனும் நீங்களும் பெரும் போட்டியாளர்கள். அன்றைய ஆரம்பம் அந்த நீண்ட பயணத்தின் இன்றைய நிலை பற்றிச் சொல்ல முடியுமா?

எஸ்.எல்.எம்.: 1960களின் ஆரம்ப நாள்கள். நான் கலைமகள் வெளியீடாக வந்து கொண்டிருந்த 'கண்ணன்' இதழின் தீவிர வாசகன். 'கண்ணன்' சஞ்சிகை இளம் படைப்பாளிகளுக்கான நாவல் போட்டி யை நடத் தியது. அதில் அம்பையின் 'நந்திமலைச்சாரலிலே.' நாவலுக்கு முதல் பரிசு! அது தான் நான் படித்த முதல் தொடர்கதை. அம்பையின் முதல் படைப்பும் அதுதான்.

கண்ணன் இதழின் விலை அய்ந்து சதம். இந்தியாவிலும் இலங்கை யிலும் ஒரே விலை. இன்று இருபது ரூபா காலச்சுவடு நூறு ரூபா கொடுத்து வாங்குகிறோம். திருச்சியைச் சேர்ந்த யு.ஆ. இராஜேந்திரன் அண்ணன் அவர்கள் தமிழகத்தின் பெரும்பாலான சஞ்சிகைகளின் ஏக விநியோகஸ்தராக வாழைச்சேனையில் திகழ்ந்தார். அவருடைய அலமாரியில் கல்கி, ஆனந்த விகடன், கலைமகள், கல்கண்டு, குமுதம், கண்ணன், மஞ்சரி, தீபம், அம்புலிமாமா, பேசும் படம், என்று அழகாக அடுக்கி வைத்திருப்பார். அவரும் ஒரு தேர்ந்த வாசகன்தான். எந்த நேரமும் வாசித்துக்கொண்டிருப்பார். இத்தனைக்கும் மூல வியாதிக்கு மருந்து செய்யும் நாட்டு வைத்தியர்.

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்னம் இந்தச்சூழலில் அய்ம்பது வாசகர் களாவது காசி கொடுத்து புத்தகம், சஞ்சிகைகள் வாங்கிப் படிப்பவர் களாக இருந்தார்கள். என் போன்ற இளைஞர்களுக்கு வாசிப்பு ஒரு போதையாக விருந்தது. இந்தப் போதை மற்றப் போதைகளைப் போலல்ல.. அறிவின் ஒளியையும் அலாதியான அனுபவங்களையும் ஊட்டி வளர்த்த போதை.. இன்றைய வாலிபனுக்கு 'பன்பராக்', நிஜாம்பாக்கு போல. அன்று வாசிப்புஎமக்கு விட்டுப் பிரியாத காதலி போல.. நமக்கான காதல் கடிதங்களை நாம் ஊன் உருக படிப்ப தில் கிட்டும் அதே சுகம்.. அதே பரவசம்.. நான் தமிழில் வார்த்தை யின்றி முட்டுப்படுகிறேன். இன்று எல்லா சுகங்களையும் கம்ப்யூட்டர் வழங்குமாம்..

ஒரு குழந்தையை கையில் எடுப்பதைப் போல.. புத்தகத்தை எடுத்து அதன் பக்கங்களைப் புரட்டிப் புரட்டித் தடவித் தடவி .. அதுவும் நமக்குப் பிடித்த எழுத்தாளன் என்றால்.. அது வேறு சுகம். நமது முத்துலிங்கத்தின் கதைகள்(தமிழினி) எத்தனை தடவைகள் கையி லெடுத்து மகிழ்ந்திருப்பேன். புத்தகங்களையும் இலக்கிய சுகமாக ஆக்கும் வல்லமையில் வசந்தகுமாருக்கு நிகர் வசந்தகுமார்தான்.

இன்று போல் அன்று ஊருக்கு ஒரு வாசிகசாலை இல்லை. இங் கிருந்து இருபது மைல் பஸ்ஸில் போய் மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான நூலகத்திலிருந்து இரவல் பெற்று படித்து வந்தேன். பத்துச்சதம் முற்பணம் செலுத்தி புதிதாக வெளிவரவிருக்கும் நூல்களை முன் கூட்டியே பதிவு செய்து படிப்போம். தகழியின் செம்மீன், சுராவின் புளியமரத்தின் கதை வெளிவந்த அந்தந்த மாதங்களிலேயே கண்டு பிடித்துப் படித்து விடுவேன்.

இன்றும் இந்த ஆர்வம் அடங்கவில்லை. புதிதாக எழுத வருபவர் களின் எழுத்துக்கள் பிடிக்காத தருணங்களிலெல்லாம் நான் மீண் டும் மீண்டும் புதுமைப்பித்தனிடமும், சுந்தர ராமசாமியிடமும் லாசா ராவிடமும் தஞ்சமடைந்துவிடுவேன். இவர்களோடுசேர்த்து முத்துலிங் கத்தின் எழுத்துக்கள்தான்; இந்தப் பிரபஞ்சத்தின் வண்ணங்களையும், வாழ்வின் கோலங்களையும் எனக்குத் தமிழில் காட்டின. எனது நீண்ட வாசிப்பு அனுபவத்தில் முத்துலிங்கம் ஒருவரே ஓர் சிறிலங் கனாக... ஆசிய நாட்டவனாக.. சர்வ தேச மனிதனாக தனது எழுத்துக் கள் மூலம் தரிசனம் தருகிறார்.

அறபாத்: சமகாலத்தில் சிறுகதைப்படைப்பாளர்களில் உங்களுக்கு நம் பிக்கையூட்டுபவர்கள் பற்றி பேசலாமா?

எஸ்.எல்.எம்.: நிச்சயமாக, மருதமுனை றியாஸ் அஹமட் (அம்ரிதா யெம்) அவரின் விலங்குகள் தொகுதி (மூன்றாவது மனிதன் வெளியீடு) மஜீதின் கதை ஆண்டி, எம்.ஐ.எம்.றவூபின் கனவும் மனிதன், ஏறாவூர் சபீரின் ஆற்றங்கரை தொகுதி மலர்செல்வனின் பெரிய எழுத்து திசேராவின் கபாலபதி, ஓட்டமாவடி அறபாத்தின் உடைந்த கண் ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி (அடையாளம் வெளியீடு)இவர் களெல்லாம் நமது வாழ்வை அச்சொட்டாக கலாபூர்வமாக காட்சிப் படுத்தியவர்கள். இவர்கள்தான் நமது எழுத்தை அடுத்த கால கட்டத் திற்கு முன்னெடுத்துச் செல்லும் ஆளுமைகள். ஆனாலும் நாம் ஒரு வரின் எழுத்தை மனம் திறந்து பேசுவதில்லை. நமது அரசியல் நமது பார்வைகளை மறைத்து விடும். நமக்கு உவப்பானவர்களை மட்டும் அங்கீகரிப்பது. நமது மூக்குகளுக்கு முற்றத்து மல்லிகை மணப்ப தில்லை.

லாசரா என்னிடம் இப்படிச்சொன்னார். 'எழுத்தை வேசியென்பேன். உயிரையே குடிக்கும் வேசியென்பேன். இன்று எழுத்தாளனே வேசி யாய்ப் போய்ட்டான். மனசு பொறுக்க முடியல்ல' இதுதான் நமது நிலையும்.

அனார் : நமது சிறுகதைகள் பற்றிச் சிலாகிக்கும் உங்களுக்கு நமது நாவல் கள் பற்றிய அபிப்பிராயம் மாறுபடுகிறதே.

**நாம் ஒருவரின் எழுத்தை மனம் திறந்து பேசுவதில்லை. நமது அரசியல் நமது பார்வைகளை மறைத்துவிடும். நமக்கு உவப்பானவர்களை மட்டும் அங்கீகரிப்பது. நமது மூக்குகளுக்கு முற்றத்து மல்லிகை மணப்பதில்லை.**

எஸ்.எல்.எம்.: நிச்சயமாக சித்தி லெப்பையின் 'அசன் பேசரித்திரத்' துடன் ஆரம்பமாகும் நமது நாவல் இலக்கியம் நூற்றாண்டுகளைக் கடந்த போதும் பெரிதாக ஒன்றையும் நாம் சாதிக்கவில்லை. ஏற்றுக் கொள்வதும் விட்டு விடுவதும் அவரவர் தர்மம். சு.ரா.விடம் ஒரு தடவை உரையாடிக் கொண்டிருக்கையில் 'உலக மொழிகள் சிலவற்றில் மகத்தான சில படைப்புக்கள் வெளிவரக் காரணமான போரும் அது சார்ந்த வாழ்வின் பெருந்துயர அனுபவங்களும் ஈழத் தமிழ் படைப்பாளிகளுக்கு, வாய்த்திருந்தும் அங்கிருந்து தமிழ் படைப்புலகில் பெரும் பாய்ச்சலொன்றை எதிர்பார்த்தேன். ஆனாலும் அது தூரப்பட்டுக்கொண்டே செல்கிறது' என்றார். சு.ரா.வின் இந்தப் பார்வையையும் நாம் கவனப்படுத்த வேண்டும்.

சில வருடங்களுக்கு முதல் எனது நேர்காணல் தினகரனில் வெளியான போது தமிழின் மிகச்சிறந்த பத்து நாவல்களைக் குறிப்பிட்டிருந்தேன். இன்றும் அதே கருத்தில்தான் நிற்கிறேன். இமையத்தின் கோவேறு கழுதைகளை படித்து முடித்தபோது நமது டானியல் அல்லவா அதை எழுதியிருக்க வேண்டும் என்ற ஆதங்கம் எழும்புவதை தவிர்க்க முடியவில்லையே! கடந்த நாற்பதாண்டுகளாக பால மனோகரனின் 'நிலக்கிளி'யிடம் கதை கேட்டுக் கேட்டு அலுத்துப்போனதல்லவா ?

நமது கவிதை, நமது சிறுகதை வளம் பெற்றிருக்கும் நிலையில் நமது நாவல் என்று பெருமை பேசுமளவிற்கு எதுவுமில்லை. சிறுகதை, கவிதை என்ற நமது ஈடுபாடு நாவலில் முனைப்புக் கொள்ளவில்லை. நூற்றாண்டு கால பௌத்த மேலாதிக்கம், அதற்கிணையான சிங்கள தமிழ் முஸ்லிம் இனவாத அரசியல், சமூக பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் முப்பதாண்டுகால யுத்தங்கள்,அவை தந்த துயரங்கள், நெருக்கடி நிலைகள் இன்னமும் முடிவுக்குவராத அவசர காலச்சட்டங்களுக்கான வாக்கெடுப்புகள் என்றோ தொலைந்துபோன பல நூறு மனிதர்கள்; வீடு திரும்பாத பொழுதுகள் காயடிக்கப்பட்ட நமது பாரம்பரிய விவசாயங்கள் என்ற எதுவுமே கலாபூர்வமாகப்பதிவு செய்யப் படவில்லையே..

இதற்குள் நமது விடுதலை இயக்கங்களின் உள்ளார்ந்த செயல்பாடுகளையும் முரண்களையும் ஓரளவு நடு நிலையுடன் கூறும் 'போர் உலா' கூட ஒரு தொடக்கத்தின் முதல் அடியே. அதை எழுதினார் என்பதற்காகவே அவரும்கொல்லப்பட்டார்.என்பதையும்நமது கவனத்தில் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு பெரும் நாவலுக்கான பாரிய உழைப்பையும் அதற்கான தேடலையும்மேற்கொள்ள நாம் இன்னமும் ஆயத்தமாகவில்லை. என்ற குற்றச்சாட்டுகளுக்கு முன்னால் நமது போர்க்கால சூழலில் அன்றும் அதற்கான ஆசீர்வாதம் சம்பந்தப் பட்டவர்களிடமிருந்து கிட்டவில்லை. என்பது எவ்வளவு பெரிய உண்மையோ அதை விடப்பெரிய உண்மை இன்று போர் ஓய்ந்து ஜனநாயகம் மலர்ந்த போதும்(?) நமது கனவு சாத்தியமாகும் என்ற நம்பிக்கை சு.ரா சொன்னது போல் தூரப்பட்டுக்கொண்டே செல்கிறது.

அறபாத். சென்ற வருடம் வெளிவந்த முத்துலிங்கத்தின் 'உண்மை கலந்த நாட் குறிப்புகள்' நாவல் கூட உங்களுக்குத்திருப்தி தரவில்லையா?

எஸ்.எல்.எம்.: திருப்தி என்ற வார்த்தை எனக்கு நிறைவைத்தரவில்லை. இது ஒரு வகை இலக்கியம் செழுமை மிகு இலக்கியம் என்பதில் சந்தேகமே இல்லை. எஸ்.பொவின் நனவிடை தோய்தல் அழகிய பெரிய நாயகி அம்மாளின் 'என்கதை' இவைகளுடன் இதையும் சேர்க்கலாம். இத்தகைய எழுத்துகளுக்குநாம் தமிழில் புதியபெயர் ஒன்றை கொண்டு வர வேண்டும்

அனார்: தொடர்ந்த வாசிப்பு, பல் துறை ஈடுபாடு போர்க்கால வாழ்வின் தேறிய அனுபவங்களின் சாட்சியம் என்றெல்லாம் உங்களிடம் மையம் கொண்டுள்ளது ஏன் நீங்கள் ஒரு நாவலை எழுதும் முயற்சியில் இறங்கக் கூடாது?

எஸ்.எல்.எம்.: நான் எழுதிய கதைகளில் முக்கால்வாசி கதைகளும் நாவல்களுக்காக பரந்துபட்ட பகைப்புலத்தில் இருந்துதான் வெளிவந்திருக்கின்றது. எனது பெரும்பாலான கதைகள் இந்தப் பகைப்புலத்தின் பாரத்தால் அமுங்கிப் போனதையும் இன்று உணர்கிறேன். ஈவிரக்கமற்ற என்னுடைய இந்தப்பார்வைதான். நாவல் எழுதும் எனது எண்ணத்தை தூரப்படுத்துகின்றது. அல்லது பயம் காட்டுகிறது. எத்தனையோ பக்கங்களில் எழுதி எழுதி கிழித்திருக்கிறேன். அதிகமாக வாசித்ததின் விளைவுகளில் ஒன்றுதான் இந்தப் பயம். சின்ன வயதில் வாப்பாவுடனான கடற்கரை காட்சிகள். வகை தொகையான மீன்கள் கரை தட்டும்போது 'மடி' வெடித்து மீண்டும் கடலுக்குள் அள்ளுண்டு போகும் தருணம், மீனவர்களின் மீன் நெடியும் சாராயமும் கலந்த மணம். வுலைவாடி. முதலாளிகளின் சிங்களத்தமிழ், என்றெல்லாம் மனசின் மடியில் நிறைந்து கிடந்தாலும் சில வருடங்களுக்கு முதல் ஜோ.டி. குரூஸ் எழுதிய 'ஆழி சூழ் உலகு' படித்த போது நான் அசந்து போனேன். அத்தகைய பாரிய உழைப்பையும், காலத்தையும் என்னால் வழங்க முடியுமா? முப்பது வயதில் குரூஸ் எழுதிப் போட்டானே.. அவனுக்கு வாய்த்த தருணம் எனக்குக் கிட்டவில்லையே என்ற ஆதங்கம் மேலெழ.. எனது கற்பனை வாலை சுருட்டிக்கொள்ள.. நான் வாசிப்பில் மூழ்கி விடுவேன் எழுதுவது பாரச்சுமை வாசிப்பது பரம சுகமே!

அறபாத்: இப்படிச்சொல்லும் நீங்கள் எழுதத்திட்டமிட்ட சின்னப் பணிக்கன் கதை என்னவாயிற்று ?

எஸ்.எல்.எம்.: எனது மூதாதையர்கள் யானைக் குட்டிகளைப் பிடித்து வெள்ளைக்கார துரைமார்களுக்கும் கோயில்களுக்கும் விற்ற பாவப்பட்டவர்கள். சோலைக்காட்டில் யானைக்குட்டிகள் பிடிப்பதை வாப்பா கதை கதையாக சொல்வார். சின்ன வயதில் எனது மனச்சோலையில் குட்டியாக வலம் வந்த சின்னப் பணிக்கன் இத்தனை ஆண்டுகளில் தனித்தலையும் கொம்பனாகி நிற்கிறான். அந்த அனுபவங்களை நினைத்தாலே மனம் எழுச்சிபெற்று அலை மோத நான் அள்ளுண்டு போவேன். சோலைக்காட்டில் எனது சின்னவரோடு நானும் காணாமல் போய்விடுவேன். எனது குடும்பத்தில் சின்னவரென்று சாச்சா இருந்தார். எனது பால்ய வயதில் அவர் பிடித்த யானைக்குட்டியில் என்னை அமர்த்தி எங்களூரைச்சுற்றி வருவார். யானைக்குட்டி வரும் ஒவ்வொரு தெருவிலும் பெண்டுகள் வட்டமாக நின்று குரவை ஒலி எழுப்பி கொண்டாடுவார்கள் பலாக்கொத்துகளையும் குருத்தோலைகளையும் வெட்டி வெட்டி போடுவார்கள்.

ஒருநாள் அந்தச்சின்னவர் யானைக்குட்டி பிடிக்கசோலைக்குள் புகுந்தவர் காணாமல் போனார். பெரும் சோலையாகவும் வெட்டவெளிச் சூன்யமாகவும் திகழும் நிலம். அன்று காணாமல் போனவரை தேடிய பயணம்தான் அந்தக்கதை. இந்த உரையாடலை இத்துடன் முடித்துக்கொள்வோமா?..

■

[ கவிதை ]

# மிருதுவான அதிகாலை

## ரிஸ்மினி

### மிருதுவான அதிகாலை

மௌனம் கசியும் உன் விழிகளில்
நான் தேடும் சுகந்தம்
இன்னும் கிடைத்ததாயில்லை

வெறுமையாய் காய்ந்து கிடக்கும்
நிலம் போல
நீ இருந்தாலும்,
ரகசியப் புதயல்களாய் எவ்வளவோ
உன்னில் புதைக்கப்பட்டுள்ளன.

பளிச்சிடும் உன் உணர்வுகளை
நீயே வெறுக்கிறாய்,
கண்ணீர் ஆற்றில் கனவுகளாகி
நனைந்து போகிறாய்,
வீணாகிப் போகும்
வாழ்க்கையின் நிழல் மீது
நிஜத்தை காண்கிறாய்

உனக்குத் தெரிவதில்லை,
உனக்குள்ளிருக்கும் மிருதுவான கனவுகள்
பத்திரமாய் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும்
கற்பனைச் சிகரங்கள் பற்றி
இன்னும், வாழ்க்கை
உன்னை அழைத்துக் கொண்டிருப்பது பற்றி...

தூங்கிக் கொண்டே எப்போதுமிருக்கும்
பூமி போல
இன்னும் இவையெல்லாம் உனக்குள்
துயிலெலும்பாமலே உள்ளன

மௌனம் கலந்த உனது விழிகளை
நிழலாகிய உன் வாழ்க்கையை
மறைத்து விடு அல்லது மறந்து விடு

அதிகாலை போன்று மிருதுவாய் மலர்ந்திரு
உன்னிலே தன் எதிர்பார்ப்புக்களைக்
கொண்டிருக்கும்
அந்த இரவுக்காகவாவது...

### கனவுகளைத் திருடிக் கொண்டிருப்பவன்

என் கோலத்தை அமைத்துக்
கொள்வதற்கான
முதற் புள்ளி
வைக்கப்பட்டாயிற்று.
யாவுமே ஒரு சூனியவெளியாய்
மாறித் தோன்றுகிறது.

என் நிகழ்காலத்தின் சேமிப்பு
மாலை நேர நிழலாய்
மெல்லக் கரைந்து போகிறது.
கண்ணிமைக்கும் பொழுதிலும்
அவனை என்னருகிலேயே
உணர ஆரம்பித்திருக்கிறேன்.

என்னுள் ஒளிந்திருக்கும்
அவனது கண்கள்
அந்தரங்கமான
எனக்கே மட்டும் உரித்தான
என் கனவுகளனைத்தையும்
எப்போதும்
உற்று நோக்கிய படியே
திருடிக் கொள்கின்றன.

அனுமதியின்றி என்னுள்
உள் நுழையும்
காற்றுச் சுமந்து வரும்
அவனின் சுவாசம்
என்னைத் தீண்டிச் செல்கையில்
தூங்கிக் கொண்டேயிருக்கும்,
என் பெண்மை மெல்ல
விழிப்புக் கொள்கிறது.

[ சிறுகதை ]

# கடும்சொற்கள்

## ஹஸீன்




‘இப்படியெல்லாம் பண்ணினால் வெளுத்துப்போட்டு போயிருவேன்,’ என்று தான் அடித்தவர்கள் பட்டியலைச் சொல்லிக்கொண்டு வந்தார் வாப்பா.

‘கொஞ்சம் இறங்குங்கோ’ எனச் சொல்லி இறக்கிவிட்டுப் போய் விடலாம் என்று தோன்றியது. அப்படிச் செய்தால் திரும்பவும் என் அறைக்கு வந்து சேர வாப்பாவால் முடியாது. இலங்கை சிம்கார்ட் இங்கே வேலை செய்யவில்லை என்பதால் போனை வீட்டில் வைத்து விட்டார். எந்த தொலைபேசி இலக்கமும் கடைசி மூன்று இலக்கம் தான் அவர் மனதில் நின்றது. அப்படி அவரை விட்டால் என்னால் கூட திரும்பவும் கண்டுபிடிக்க முடியாதபடி தொலைந்துவிடக்கூடும். பதினைந்து வருடம் தனியாக அரேபியாவில் வாழ்ந்தவரை, அங்கேயும் நல்ல டிரைவராக இருந்தவரை, ஹஜ்ஜுக்கு போகின்றவர்களை எல்லாம் சந்தித்து உபசரித்து காரில் சுற்றிக் காண்பித்து, வழியனுப்பி வைத்தவரை அரேபியா சென்றபோது கனவிலும் நினைவிலும் உறங்குவதுபோல் இருந்த கடைசிமகன். இந்த அடிமைவேலையை விட்டு கடல் இல்லையென்றால் நடந்துவந்து விடுவேன் என்று சொன்ன தகப்பனை சென்னையில் தொலைத்துவிட முடியுமா?

இவ்வளவு அன்பு கொண்ட அந்த மனிதரையும் அந்த மண் துரத்தியது. எவ்வளவு உழைத்தாலும் போதாததாலும், அரசாங்க பஸ்கள் தெருவில் கொளுத்தப்பட்டதாலும், அந்த வேலையை விட்டார் அவர். அவர் ஓடிய பஸ் எரிந்தபோது, உலோகங்கள் உருகிய பாளங்களைக் கொண்டு வந்து கண்கலங்கினார். அதன்பின் இந்த மண் வாழத் தகுந்ததில்லை என்று வயல்நிலத்தைக் குத்தகைக்கு விட்டு அரேபியாவுக்குச் சென்ற பின்னர், அந்த நிலம் வெள்ளமடித்து போர்நிலமாகி, புகமுடியாத காடாக மாறியது.

டைகர் பாம் வாங்கணும் என்று சொல்லிக்கொண்டே இருந்த வாப்பா, மெடிக்கல் ஷாப்பைப் பார்த்ததும் இங்கே டைகர் பாம் வாங்கலாம் என்றார்.

‘இப்ப என்ன அவசரம், கொஞ்சம் பொறுங்களேன்’

அவரை ஒரு பாய்ச்சல் பாய்ந்து விட்டேன். இப்படி பாயும்போது, என் முகம் அடையும் கசப்பையும் வன்மத்தையும் என்முகம் எங்குதான் மறைத்து வைத்திருக்கிறதோ! என் அப்பனுக்கும் புரிவதில்லை. வேறு யாருக்கும் புரிவதில்லை. எனக்கு எல்லாவற்றைப் பற்றியும் ஒரு உறுதியான முடிவு இருக்கிறது. அது சரியா தவறா என்று எனக்கு தெரியாது. அதற்கு மாற்றான அல்லது விருப்பமில்லாத விஷயங்களைக் கூட பொறுத்துக் கொள்ள முடிகிறது. அப்படித்தான் அவர் விமானத்தில் இருந்து இறங்கியது முதல் பொறுத்துக் கொண்டிருந்தேன். அவர் இறங்கியபோது பார்த்தேன். முன்னர்போல் உடுத்தியிருக்கவில்லை. உம்மா நன்றாகத்தான் உடுத்திருந்தார். அப்பாவுக்கு என்ன ஆச்சு என்று கேள்வி எழுந்தது. தடிமனாக அழகாக மீசை வைத்திருந்தவர், மெலிதாகப் பென்சிலால் வரைந்தது போல் ஒரு மீசை. மெலிந்து வளைந்து போயிருந்தார். கடுமையாக குடிப்பவர்கள் போல் தோற்றம் அளித்தார். ஒரே ஆறுதல், முடிக்கு டை அடிக்க ஆரம்பித்ததை மாத்திரம் விட்டுவிட்டார். ரொம்பவும் நல்ல பிள்ளையாட்டம் அவர் இலங்கைப்பணத்தை டாலராக மாற்றியதை முழுவதுமாக என்னிடம் ஒப்படைத்தார். இது அம்மாவின் அல்லது அக்காவின் எச்சரிக்கையாக இருக்கும். அதுவும் ஒரு தந்திரம் என்று மாத்திரம் தோன்றியது. அவர் அவிழ்த்த பட்டியலில் தெரிந்தது, அவை யாவும் டிராக்டர் உதிரிப்பாகம் வாங்குவதற்காக கொண்டு வந்த பணம். அவர்கள் நான்கு நாள் தங்குவதற்கான பணம்கூட. அவர்கள் அதை வாங்கி விட்டால் அவர்களிடம் கஷ்டம்தான். அம்மாவின் மருந்துச்சாமானை வாங்கினால், உடனே திரும்பிவிடவேண்டியதுதான். ஆனால் சமைப்பதற்கு மாட்டிறைச்சி காயவைத்ததும் ஆத்துமீன் கருவாடும் மசாலா தூள் முதல் கொண்டு வந்திருந்தார்கள். வந்த அன்று மாலையிலிருந்து சமையல் ஆரம்பம். என் நிலைமை தெரிந்து வந்தவர், இப்படி வந்தது ஏமாற்றத்தை உண்டுபண்ணியது. அக்கினி வெயில் அடிக்கிறது என்பதையும் பொருட்படுத்தவில்லை. எல்லாவற்றையும் சேர்த்துவைத்திருந்தேன். கடைசியாக சிந்தாதிரிப் பேட்டைக்கு அவருடைய உதிரிப்பாகம் வாங்கிவந்து அவர் சொல்படியே கேட்டு அதை எல்லாவற்றையும் ஒரே நாளில் வாங்கியதைப் பார்த்தால் தன் காரியங்களை முடித்துக் கிளம்பிப் போய்விடுவார் போல தோன்றியது.

தன் காரியங்களை நோக்கி வேகமாக இந்த அறுபது வயதில், ஒருவர் வியூகங்கள் அமைப்பதை கண்கூடாக தெரிய இறுதியில் நண்பன் ஊரில் கேட்ட டைகர் பாமையும், அப்போதே முடித்துக்கொண்டு செல்ல நினைத்தேன். அவரை இனியும் பொறுக்க முடியாமல் தான் பாய்ந்தேன். அதற்குப்பிறகு, இரண்டுபேருமாக மெடிக்கல் ஷாப்புக்குப் போய், கேட்டதும் அவன் ஒண்ணே ஒண்ணுதான் இருப்பதாகச் சொன்னான். வீட்டுக்குப் பக்கத்தில் கடை இருக்கு, அங்கேயே வாங்கிக்கலாம் என்று சொல்லிப் புறப்பட்டுவிட்டோம்.

■

[ மதிப்புரை ]

# தவறான காலத்தில் வந்து சேர்ந்த துக்கம்



## ராஜகோபால்

You can always count on a murderer for a fancy prose style - Vladimir Nabokov

அது மழைக்குப் பிந்திய காலைப்பொழுது. சீதோசனம் ரம்மியமாக இருந்தது. திருமணமான எனது நண்பன், புறநகர்ப் பகுதியிலிருந்து நகரத்தின் மையப்பகுதிக்குப் பேருந்தில் பயணித்துக்கொண்டிருந்தான். அவனுடைய இருக்கைக்கு அருகில் ஒரு பெதும்பை நின்றுகொண்டிருந்தாள். பேருந்தின் தள்ளாட்டத்திற்கு இடையிலும் அவள் வசீகரமாக இருந்தாள். அவளுடைய ஆள்காட்டி விரலை என் நண்பன் பற்றினான். அவள் ஆட்சேபிக்கவில்லை. கண்கள் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தன. பேருந்திலிருந்து இறங்கும்வரை அவள் விரலை அவன் பற்றிக் கொண்டே இருந்தான். பின்னாட்களில் அதை நினைவு கூரும்போது, புணர்ச்சியின்போது கூட அடைய முடியாத கிளர்ச்சியை அவள் எனக்கு அளித்தாள் என்றான் அவன். ஒரு நவீனத்துவ மனம் எளிதில் இதை ஆபாசம் என்றும் வக்கிரம் என்றும் வரையறுத்து விடும். முற்போக்காளர்களோ மோசடி, சுரண்டல், வன்புணர்ச்சி போன்ற பெரிய வார்த்தைகளை வீசி எறியவும் குற்றஞ் சாட்டுவதற்கும் இச்சூழலை நன்கு பயன்படுத்திக்கொள்ளலாம். எனினும், சமூக விளக்கங்களுக்கு அப்பால் மிதந்துகொண்டிருக்கிறது புரிந்துகொள்ள முடியாமையின் ஒரு வெளி. தொடுகைக்கும் அனுமதிக்கும் இடையில் அமர்ந்திருக்கிறது ஒரு புதிர். இப்பிரதேசத்தில் தான் மூன்றாம் சிலுவையும் நடமாடுகிறது.

காமத்தின் தன்னிச்சையான வல்லமைக்கும் சமூக நெறிகளுக்கும் இடையேயான நுட்பமான மோதலை, அன்பிற்கும் காமத்திற்கும் நடுவிலுள்ள நுட்பமான சிக்கலை, காமத்திற்கும் குரோதத்திற்கும் இடையேயான மெல்லிய உருமாற்றத்தை தமிழ்ப் படைப்பு மனம் வெற்றிகரமாகவே சித்தரித்துக் காட்டியுள்ளது. காமத்தின் பல்வேறு பரிமாணங்களை கு.பா.ராவில் தொடங்கி, தி.ஜானகிராமன், கரிச்சான் குஞ்சு, லா.ச.ரா, ஜெயகாந்தன், கி.ரா, ஆதவன், வண்ணநிலவன், ராஜேந்திர சோழன், திலீப் குமார், லக்ஷ்மி மணிவண்ணன், ஜே.பி. சாணக்கியா என்ற பல படைப்பாளிகள் வழியாகவும் நாம் அறிந்து கொள்ள முடியும். உமா வரதராஜன் இம்மாபெரும் தொடர்ச்சியில் மற்றொரு கண்ணி.

இலங்கையிலும் இப்பாரம்பரியத்தை எஸ்.பொ, மு.தளையசிங்கம், குமார்மூர்த்தி, இன்றைய ஷோபாசக்தி, அரவி, இளங்கோ (ஓரிரு கதைகள்) போன்றோரிடமும் நாம் பார்க்க முடியும். ஷோபா சக்தியிடமும் இளங்கோவிடமும் உள்ள விஷேசம் இவர்கள் காமத்தின் அரசியலையும், அரசியலில் பொதிந்திருக்கும் காமத்தையும் சித்திரிக்க முயலுபவர்கள்.

'மூன்றாம் சிலுவை' ஒரு வயோதிகருக்கும் ஒரு இளம்பெண்ணுக்கும் இடையேயான உறவை, காமத்தைப் பற்றிப் பேச முயலுகிறது. இந்நாவலைப் பற்றிப் பேசுவதில் நிறைய அசௌகரியங்கள் இருக்கின்றன. நிறைய இடர்களும் இருக்கின்றன. 'லோலித்தா'வை டெக்ரானில் வாசிப்பது எத்தனை அசௌகரியமோ அத்தனை அசௌகரியம் 'மூன்றாம் சிலுவை'யை இலங்கையில் வாசிக்க முயல்வது. முதலாவது, இந்நாவலையோ இதன் ஆசிரியரையோ மிக எளிதாகக் குற்றம் சாட்டிவிட முடியும். இரண்டாவது, நாவலின் பின்புலமும் மிகுந்த பிரச்னைக்குரியது. இந்நூற்றாண்டின் மிகப் பெரிய பேரழிவுகளும் அழித்தொழிப்புகளும் நிகழ்ந்துகொண்டிருக்கும் பிரதேசம் அது. நாவல் இந்த அவலங்களைப் பற்றியோ அதன் பிரச்னைப்பாடுகள் குறித்தோ மௌனம் கொண்டிருப்பது மிகுந்த வருத்தத்துக்குரியது; மற்றும் சர்சைக்குரியது. இந்த ஒரு காரணத்தை முன்னிட்டே நாவலைப் பலர் நிராகரிக்கக்கூடும் அல்லது தட்டையாகப் புரிந்துகொள்ளவும் கூடும். என்றுமே ஒன்றை நிராகரிப்பது எளிது, புரிந்துகொள்வது கடினம். மற்றொன்று, ஒரு நாகரிக சமூகத்தில் ஒருவர் எதை எதைப் பற்றியெல்லாம் பேசவேண்டும் என்று மற்றொருவர் நிர்பந்திக்க முடியாது. எனினும், 'தவறான காலத்தில் வந்து சேர்ந்து விட்ட இந்த துக்கத்தை' (நன்றி: சுந்தர ராமசாமி) புரிந்து கொள்வது முக்கியம்.

நாவல் சிறு சிறு அத்தியாயங்களாகப் பிரிந்து பதினாறு அத்தியாயங்களில் ஒரு வயோதிக தன்னிலையின் வேட்கையை, உடைமை மனோபாவத்தை சித்தரிக்க முயலுகிறது. விஜயராகவனுக்கு ஐம்பத்திரண்டு வயது. இருமுறை திருமணமானவர். மூன்று பிள்ளைகள். எவரிடமும் சுமுகமான உறவில்லை. மனக்கசப்பு. சொந்த வீட்டிற்கே ஏதோ அந்நியன் போல,ஏதோ வருகையாளன் போல சென்று வருபவர். அலுவலகத்தில் பணிபுரியும் ஜூலியோடு ஒரு உறவு வாய்க்கிறது. உறவு காமத்தைப் பகிர்ந்துகொள்ளும் அளவிற்கு முன்னேறுகிறது. எட்டாண்டுகள் தொடரும் உறவில் காளான்கள் பூக்கத் தொடங்குகின்றன. ஜூலி, 'என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?' எனக் கேட்கிறாள். பதிலற்ற இக்கேள்வி ஜூலியை வேறு பாதையை நோக்கி உந்தித் தள்ளுகிறது. சமூக நெறிகளும் காமமும் விஜயராகவனை அலைக்கழிக்கிறது. விஜயராகவனின் உடமை மனோபாவமும் ஜூலியை பீதி கொள்ளச் செய்கிறது. நாவலில் இது வெளிப்படையாக சித்தரிக்கப்படவில்லை. ஜூலியின் விலகலும் விஜயராகவனின் வேட்கை மிகுந்த பேதமையும் துயரமும் பிதற்றலும் தான் பின்வரும் பக்கங்கள். நாவலின் பிற்பகுதி - குறிப்பாக பதினான்காவது அத்தியாயத்திற்கு பிறகான பக்கங்கள் - மிகுந்த பல

**ஆஸ்திரிய படைப்பாளியான ஹெர்மன் ப்ரோச் நாவலை இவ்வாறு வரையறுக்கிறார்: நாவலின் முக்கிய பண்புகளில் ஒன்று மனிதனின் இருப்பு குறித்த ஞானம். எந்த படைப்பொன்று இதை வெளிப்படுத்த தவறுகிறதோ, அது நெறி பிறழ்ந்த படைப்பு; அதை நாவல் என்று அழைக்க முடியாது.**

வீனமானவை. நாவலில் பெரும்பாலான மனிதர்கள் எதிர்மறையாகத் தான் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். நாவல் கைக்கொண்டுள்ள எள்ளல் தொனி, அங்கதம் அல்ல, எள்ளல் தொனியே இதற்குக் காரணம். விஜயராகவனின் நண்பர்களான காட்டுப்புலி, செந்தூரன், ஞான சம்பந்தன் போன்றோர் பற்றிய குறிப்புகளை இதற்கு உதாரணமாக சொல்ல முடியும். நாவலில் பெண்கள் பற்றிய சித்தரிப்புகள் மிகுந்த ஆண் மையப் பார்வையும் தட்டையான புரிதலும் கொண்டவை. குறிப்பாக, தாதி மனோன்மணியைப் பற்றிய கதைசொல்லியின் சித்திரிப்புகள் ஆபாசத்தின் எல்லைக்குச் சென்று மீளுபவை.

நாவலின் சுவாரஸ்யமான விடயங்களில் ஒன்று, சமீபத்திய தமிழ்த் திரைப்படங்களை அது உவமானமாக பயன்படுத்திக்கொள்ளும் விதம். கதைசொல்லி மருத்துவமனை வாயிற்காப்போனிடம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இடம் அதற்கு சிறந்த உதாரணம். (அவளுடைய தலையிலிருக்கும் விக்கைக் கழற்றி விடுவேன் எனச் சொல்லு என இந்த வேலுநாயக்கர் கூறத் தயங்கவில்லை). எரிச்சலின்போதும், துயரத்தின்போதும், ஏமாற்றத்தின் போதும் கூட தமிழ்த் திரைப்படங்கள் பிரக்ஞையற்று உவமானங்களாக வெளிப்படுவது சமூகவியல் ஆய்வுக்குரியது.

நாவலின் மற்றொரு சுவாரஸ்யம் மிகுந்த பகுதிகளில் ஒன்று ஜூலியின் தமக்கையான ஜெனிக்கும் அவளுடைய மாணவனான ஜோதிக்கும் இடையேயான உறவு. நாவலின் மையப்பாத்திரம் எதிர்கொள்ளும் அதே பிரச்னையைத்தான் ஜோதியும் எதிர்கொள்கிறான். எனினும், அந்த உறவைப் பற்றிய கதைசொல்லியின் பார்வை மிகுந்த ஏளனம் கொண்டது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

நாவலின் கவித்துவமான பக்கங்கள் என ஜூலியின் பாட்டியை முதியோர் விடுதிக்கு அழைத்து செல்லும் பகுதியைப் பற்றி சொல்லலாம். அப்பக்கங்களில் செயல்படும் மனம் நாவல் எங்கும் பரவி இருந்திருந்தால் இந்நாவல் மிக முக்கியமான படைப்புகளில் ஒன்றாக மாறியிருக்கும். கதைசொல்லியின் தோழியான ஜினோவை பற்றிய பகுதிகளும் கவித்துவமானவை. ஜினோவின் தரப்பை புரிந்து கொள்ளும் மனம், பாட்டியை சகஜமாக உணரும் மனம் பிற தன்னிலைகளைப் பற்றிய புரிதலற்று இருப்பது வினோதமானதே.

நாவல் என்பது பல்வேறு தரப்புகள் அல்லது பல்வேறு நியாயங்கள் மோதும் களம். பன்முகத்தன்மையை வலியுறுத்தும் இலக்கிய வடிவம். பல்வேறு ஊடுபாவுகளின் வழியாக மனிதனின் இருத்தல் குறித்த வளர்சிதை மாற்றத்தை பதிவு செய்யும் இலக்கிய ஆக்கம். தரிசனத்தை அல்ல இருத்தல் குறித்த ஞானத்தை கண்டுபிடிப்பது தான் நாவலின் கடமை.. ஆஸ்திரிய படைப்பாளியான ஹெர்மன் ப்ரோச் நாவலை இவ்வாறு வரையறுக்கிறார்: நாவலின் முக்கிய பண்புகளில் ஒன்று மனிதனின் இருப்பு குறித்த ஞானம். எந்த படைப்பொன்று இதை வெளிப்படுத்த தவறுகிறதோ, அது நெறி பிறழ்ந்த படைப்பு; அதை நாவல் என்று அழைக்க முடியாது.

ஒருமுறை பிரென்ஞ் விமர்சகரான செயிண்ட் ப்யூவ் ஃப்ளாபெர்டின் மேடம் போவரியைப் பற்றி இவ்வாறு கூறினார்: இந்த புத்தகத்தைப் பற்றிய என்னுடைய விமர்சனம் என்பது நல்லது என்ற அம்சம் மிக குறைவாக இதில் இடம்பெற்றுள்ளது. ஏன் ஒரு புத்தகம் ஆறுதல் தரும் விதத்தில் இருக்கக்கூடாது, வாழ்க்கையை முன்னேற்றும் விதத்தில் இருக்கக்கூடாது என்று வினவினார். ஃப்ளாபெர்ட் இதற்கு, தான் நாவல் எழுதுவது தன்னுடைய அபிப்பிராயங்களை நிறுவுவதற்கு அல்ல; விஷயங்களின் ஆன்மாவிற்குள் ஊடுறுவதற்கு என்று பதிலளித்தார். ஃப்ளாபெர்ட்டிம் பதில் மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் ஒரு நாவலாசிரியனின் பணியை நினைவூட்டுகிறது. ஒரு கதாபாத்திரம் மீதான அதிருப்தி அல்லது விருப்பு வெறுப்புகள் அல்ல இங்கு பிரச்னை. ஒரு கதாபாத்திரம் குரூரமானவனா அல்லது கருணைமிகுந்தவன என்பதும் இங்கு பிரச்னை அல்ல. ஒரு கதாபாத்திரத்திற்குள் அதன் ஆன்மாவிற்குள் ஒரு நாவலாசிரியன் எவ்வளவு தூரம் ஊடுறுவியுள்ளான் என்பதே ஒரு நாவலாசிரியனின் தலையான பிரச்னை.

மூன்றாம் சிலுவையை இப்பின்னணியில் வைத்து பார்க்கும்போது பலவீனமான படைப்பு என்றே ஒருவர் மதிப்பிட்டுவார். எனினும், மூன்றாம் சிலுவையின் சாதகமான அம்சம் அதன் ஆற்றொழுக்கான மொழி நடையிலும், மைய கதாபாத்திரத்தின் வேட்கை பற்றிய அதன் பதிவில் அடங்கியுள்ளது.

இன்று எல்லா தரப்புகளும் எதிர் தரப்பின் குரல்களையே பாவனையாக பேசி எதிர் தரப்பை மழுங்கடித்துகொண்டிருக்கும் வேளையில் மூன்றாம் சிலுவை போலியான பாவானையை கைக்கொள்ளாமல் கதாபாத்திரத்தின் பிரச்னையை அதன் அழுக்குகளோடும் அதன் பலவீனங்களோடும் பதிவு செய்ய முயன்றிருப்பது அதன் சிறப்பம்சம். காமத்தின், சுயநலத்தின் கரிய சித்திரத்தை முன் வைக்கும் இந்நாவலின் நோக்கம் தான் என்ன? என்று எண்ணும்போது நபக்வோவின் 'லோலித்தா'வின் நினைவு தவிர்க்க முடியாமல் எழுகிறது. லோலித்தாவில் வெளிப்படும் தீமையின், வேட்கையின் அகண்ட சித்திரம் மூன்றாம் சிலுவையில் வெளிப்படவில்லை என்ற போதும் மூன்றாம் சிலுவையை லோலித்தாவின் தூரத்து உறவு அல்லது நகல் என்று நாம் அழைக்கலாம் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால், மூன்றாம் சிலுவை லோலித்தாவின் பாரம்பரியத்தைச் சேர்ந்த படைப்பு என்றும் சொல்லலாம்.

லோலித்தாவைப் பற்றி நபக்கோவிடம் உங்கள் நாவலின் நோக்கம் தான் என்ன? என்று விமர்சகர்கள் கேட்டபோது நபக்கோ, ஒரு திரிந்த மனம் குறித்த உளவியல் ஆய்வுக்கு தேவையான பல தகவல்கள் இப்படைப்பில் உள்ளபோதும் என்னுடைய நோக்கம் ஒரு பிறழ்வை முன்வைப்பதல்ல. ஒரு படைப்பை எழுத தொடங்கும் போது அதை என்னிலிருந்து வெளியேற்றுவதை தவிர வேறு எந்த நோக்கமுமில்லை என்றார். மூன்றாம் சிலுவையும் அப்பாரம்பரியத்தை சேர்ந்தது தான். உமா வரதராஜன் மூன்றாம் சிலுவையை தன்னிலிருந்து வெளியேற்ற முயன்றிருக்கிறார். ஆதலால் தான் அதன் கரிய சித்திரம் அதிர்ச்சியும் ஆபாசத்தையும் ஏற்படுத்துகிறது. புரிந்து கொள்ளலின் சிக்கலை நம் முன் சுமத்துகிறது.

பாலுணர்வுகள்மீது பலவகையான பாசாங்குகள் நிரம்பிய நம் கலாச்சாரச் சூழலில் பாலுணர்வும் வன்முறையும் மனதின் அடியோட்டமாக ஓடுவதின் சித்திரத்தை அளிப்பதன் வழியாக மூன்றாம் சிலுவை கவனத்துக்குரிய படைப்பாக தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. மூன்றாம் சிலுவை காமத்தின் எளிய கரிய சித்திரம்.

■

[ கட்டுரை ]

# தாயக இலட்சியத்தின் இறுதி மூச்சும் பா.உ.சிறிதரனின் கன்னிப் பேச்சும்

## சிறீஸ்கந்தன்

'தாயே! என்ன பிழை செய்தோமடி தாயே...' என்ற பாடல் போலத்தான் எம் வாழ்வும். உண்மையில் என்ன நடந்தது என்று தெரியாமலே ஒரு வருடம் ஓடிப்போயிற்று. இந்தத் தோல்வியை, ஏமாற்றத்தை, வெட்கத்தை எம் மக்கள் எவ்வாறு எதிர்கொண்டனர் என்பது ஆச்சரியமான விடயமாக இருக்கின்றது.

சங்கிலியன், பண்டாரவன்னியன் தோற்றபோதும், எல்லாளன் கொல்லப்பட்ட போதும் இப்படித்தான் அந்நாளில் அம்மக்கள் இருந்தனரா என்பதை அறிய முடியவில்லை. வரலாற்று ஆசிரியர்கள் அது பற்றியெல்லாம் எழுதவில்லை. ஆனால், சங்கிலியன் ஏன் தோற்றான் என்பதற்குப் பதில்கள் உண்டு.

இதே போல விடுதலைப் புலிகள் எங்கு பிழைகள் விட்டார்கள் என்பதற்குப் பட்டியல் போடுகின்றார்கள். குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. மரணித்த மாவீரர்களைக் கொச்சைப்படுத்தும் விடயங்களும் நடக்கின்றன. இருக்கட்டும்.

சத்தியம் என்னவெனில், தமது இலட்சியத்துக்காக முள்ளிவாய்க்கால் வரை மூர்க்கத்தனமாக விடுதலைப் புலிகள் போராடி மடிந்தனர் என்பதே. இவ்வாறு அவர்கள் தமது இலட்சியத்தில் உறுதியாக இல்லாது இருந்திருந்தால் ஒரு வேளை எமக்கு ஏதாவதொரு தீர்வு கிட்டியிருக்கலாம். அது வேறு விடயம்.

இம்முறை வழமையாக இறுதியில் உபயோகிக்கின்ற யுத்த தந்திரங்கள் எதனையும் அவர்கள் செய்யவில்லை என்பதை நாம் நினைவில் நிறுத்தவேண்டும். நடந்த குருசேத்திர யுத்தத்தில் கண்ணன் தம் பக்கம் இல்லை என்பதை நன்றாக அறிந்திருந்தார்கள். சக்கர வியூகத்தில் தங்கள் படை சிக்கிய போது அமெரிக்கா ஈராக்கிலும், ரைசியா செச்னியாவிலும் வீசிய நச்சுப்புகை அக்காற்றில் கலந்திருந்தது. ஆயினும் தான் ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடுகிற இயக்கமே தவிர பயங்கரவாத இயக்கமல்ல என்பதை சர்வதேசத்துக்கு உணர்த்த இறுதிக் காலத்தில் நிறையவே போராடினர். சர்வதேசமும் மௌனித்து இருந்தது.

ஒருவேளை எங்கள் இனத்தின் விடுதலைக்கு, பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டப்பட்ட தாமே தடையாக இருப்பதாக சர்வதேசம் நினைப்பதால், தம்மையே முற்றாக அழித்துக்கொள்ள விடுதலைப் புலிகள் முடிவு செய்தார்களா என்பதை இனியாரும் அறிந்துகொள்வதற்குச் சாத்தியங்கள் இல்லை.

ஆனால், ஒன்றும் மட்டும் உறுதியாகச் சொல்லலாம். ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு அழிப்பதற்குத் துணை போன நாடுகள், அழித்த அரசாங்கம் அந்த இனத்தின் சுபீட்சத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது வெற்றிப் பெருமிதத்தில் கொக்கரித்துத் திரிவதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. ஏனெனில், உலகில் விடுதலைக்காகப் போராடும் இனங்களை அழிப்பதற்கு நந்திக் கடல் அகோரம் ஒரு முன்மாதிரியாக அமைந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் அக்கறையாக இருப்பது தெரிகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாடுகளை அமெரிக்கா தனது மண்ணில் அனுமதித்திருப்பது, பரித்தானிய வெளி விவகார அமைச்சின் அறிக்கைகள், சனல்4 இல் வெளியாகும் போர்க்குற்ற ஆதாரங்கள் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ் இனங்களைச் சார்ந்த இளைஞர்கள் பல்கலைக்கழக அனுமதி, வேலைவாய்ப்பின்மை போன்ற காரணங்களுக்காகவும், தமிழினம் மேலதிகமாக இன அடக்கு முறைக்கு எதிராகவும் போராடினார்கள்.

பெரும்பான்மை இனத்து இளைஞர்களின் கிளர்ச்சி சில நாட்களிலேயே அடக்கப்பட்டது. இருபது ஆயிரத்துக்குக்கு மேற்பட்ட தமது இளைஞர்களையும், கைது செய்யப்பட்ட பெரும் தலைவர்கள் கமநாயக்கா, ரோகன விஜயவீரா போன்றவர்களையும் கொன்று குவித்த இனம், எமது போராளிகளையும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரையும் என்ன செய்திருப்பார்கள் என்பதை நினைத்தும் பார்க்க முடியாது.

எங்கள் வீழ்ச்சிக்கு கருணாநிதியோ, சோனியா காந்தியோ, சீனாவோ அல்லது வேறெந்த நாடுகளோ காரணம் அல்ல. எமது அழிவுக்கு முழுப் பொறுப்பும் நாமே தான். தந்தை செல்வா தீர்க்கதரிசனத்துடன் 'தமிழினத்தை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்று அன்றே சொன்னார். மரணித்த மாவீரர்களையும் பொதுமக்களையும் முத்துக்குமார் போன்ற தமிழ் மறவர்களையும் என்றும் நாம் நினைவில் நிறுத்துவோம்.

■

தற்போதைய சராசரி ஈழத்தமிழனின் மனநிலையை விளக்குமாற் போல் அமைந்திருந்தது, வன்னிப்பகுதியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவான சிறிதரனின் கன்னிப்பேச்சு. யதார்த்தமான சிந்தனையுடன் கூடிய இந்தப் பாராளுமன்ற உரையை வாசித்த போது 18ஆம் நூற்றாண்டில் செவ்விந்தியர்களின் தலைவன் சியாட்டில் தோல்வியின் விளிம்பில் நின்று ஆற்றிய வரலாற்றுப் புகழ்வாய்ந்த உரை ஞாபகத்துக்கு வரும். "தங்கள் தந்தையர் தோல்வியுறச் செய்யப்பட்டு, அடிபணிய வைக்கப் பட்டுள்ளதை எங்கள் பிள்ளைகள் கண்டுள்ளார்கள். எங்கள் போராளிகள் வெட்கித் தலைகுனிந்து நிற்கின்றார்கள். உங்கள் பிள்ளைகள் மிதிக்கும் நிலம் எங்கள் பாட்டன்மார்களின் சாம்பலே என்பதை உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் புகட்டவேண்டும். இந்த நிலத்தை அவர்கள் மதிக்கும் வண்ணம், இது எங்கள் மக்களின் வாழ்வினால் நிறைந்த நிலம் என்பதை அவர்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். நிலம்

**ஒரு தேசமோ ஒரு இனமோ இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டு பேரழிவுகளுக்கு முகங்கொடுக்கும்போது மீளெழுவதற்கு இன்னுமொரு பாதை உண்டு என்பதை ஜப்பானியர்களும் உரோமானியர்களும் இன்று முழு உலகத்திற்கும் நிரூபித்துவிட்டனர்.**

எங்கள் தாய் என்று எங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் புகட்டியதை உங்கள் பிள்ளைகளுக்கும் நீங்கள் புகட்டுங்கள். நிலத்துக்கு நேர்வதே நிலத்தின் புதல்வர்களும் நேரும்..." - சியாட்டிலின் உரையிலிருந்து.

இனி சிறிதரனின் உரையில் இருந்து..

கௌரவ சபாநாயகர் அவர்களே! மதிப்பிற்குரிய சக உறுப்பினர்களே! என்னை தங்கள் பிரதிநிதியாக உங்கள் முன் அனுப்பி இருக்கும் எமது மக்களின் சார்பிலும் எனது சார்பிலும் எனது வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் முதலில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறந்துபோன உறவுகளின் எலும்புத்துண்டங்கள் என் பாதங்களை முத்தமிட அழிந்துபோன எம் தேசத்தின் சாம்பல் மேட்டிலிருந்து எனது மக்களின் நிரந்தர பூர்வீக வாழ்வியல் உரிமைக்கான அங்கீகாரம் மக்களின் அங்கீகாரத்தோடு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தமது கௌரவமிக்க உயிரினும் மேலான உரிமைக்காக காலமெல்லாம் போராடி தவமிருக்கும் தமிழ்பேசும் மக்களிடமிருந்து வருகின்றேன்.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடையும் தறுவாயில் முற்றுமுழுதாக தோற்கடிக்கப்பட்டு சரணடையும் நிலையிலிருந்த போதிலும் அணுகுண்டு வீச்சுக்குட்படுத்தப்பட்டு இரு பெரும் நகரங்களையும் இரண்டு லட்சம் மக்களையும் இழந்து இன்றுவரை கதிர்வீச்சு தாக்கத்தில் இருந்து முழுமையாக விடுபடாத போதிலும் மீண்டுமொரு பொருளாதார வல்லரசாக இடிச்சு பெருப்பித்திருக்கும் இரசாயன தேசத்தின் அன்பளிப்பான இக்கட்டிடத்தொகுதியில் இருந்து என் கன்னி உரையை எதிர்காலம் பற்றிய உயர்வான நம்பிக்கையுடன் ஆரம்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

தோற்கடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் தோற்றுப்போனவர்கள் அல்லர். அழிக்கப்பட்டவர்கள் எல்லோரும் அழிந்துபோனவர்களும் அல்லர் என்பதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உண்டு.

துருக்கிய பேரரசாலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளாலும் காலத்திற்கு காலம் அழிக்கப்பட்டு வெறும் கற்குவியலாக்கப்பட்ட உரோமானிய தேசம். அந்தக் கற்களையே தம் மூலதனமாக்கி சீமெந்து உற்பத்தியில் பெரும் சாதனையீட்டி இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. அந்தக் கற்களில் எழுதப்பட்ட சோக காவியங்கள் இன்று வசந்த கீதங்களாக மாற்றப்பட்டுவிட்டன.

ஒரு தேசமோ, ஒரு இனமோ இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டு பேரழிவுகளுக்கு முகங்கொடுக்கும்போது மீளெழுவதற்கு இன்னுமொரு பாதை உண்டு என்பதை ஜப்பானியர்களும் உரோமானியர்களும் இன்று முழு உலகத்திற்கும் நிரூபித்துவிட்டனர்.

நாம் பயங்கரவாதிகளாக பட்டம் சூட்டப்பட்டோம். உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் எமது இராணுவ பலத்தையும் எமது சந்ததியையும் அழிப்பதற்கு உரிய நியாயப்பாட்டை எம்மை பயங்கரவாத பட்டியலில் சேர்த்துக்கொண்டதன் மூலம் ஏற்படுத்திக்கொண்டன. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தமிழ் மக்களுக்கெதிராக ஒரு பெரும் யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

பல்லாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இன்னும் பல ஆயிரமவர் ஊனமாக்கப்பட்டனர், காணாமல் போனோரின் தொகை இன்னமும் கணக்கிடப்படவில்லை, பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சூறையாடப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக வெறுங்கைகளுடன் முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டோர் தொகை லட்சங்களாக உயர்ந்தது.

இப்பேரழிவின் பின்னால், இலங்கை அரசுக்கு உலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் மறைமுகமாகவும் நேரடியாகவும் பெரும் பங்களிப்பை வழங்கின. இன்று இப்போரின் எம்மீது போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதாகவும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும் குற்றம் சுமத்தி சிங்கள தேசத்தின் கழுத்தை நெரிக்க, வல்லரசுகள் தங்கள் கரங்களை நீட்டுகின்றன. அதாவது எங்களை அழிக்க உங்களுக்கு தோள்கொடுத்தவர்கள் இன்று உங்களை அடிமைப்படுத்த எங்களைப் பாவிக்கின்றனர்.

மதிப்பிற்குரிய எங்கள் சகோதரர்களே! எங்களுக்கெதிராக உங்களையும் உங்களுக்கெதிராக எங்களையும் பாவித்து எங்கள் எல்லோரையும் அடிமைகொள்ள முயலும் இவர்களின் வழியில் நாம் தொடர்ந்து விழத்தான் வேண்டுமா?

நாம் ஒரு தேசத்தின் இரு தேசிய இனங்களாக அங்கீகரிக்கப்பட்டதுண்டு. நாங்கள் எங்களையும் எங்கள் தேசத்தையும் தற்காத்துக்கொள்ள வேண்டாமா? இரு இனங்களுக்குமிடையேயான புரிந்துணர்வும் நல்லடக்கமும் இப்போது அவசியம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நமது இராணுவ வலிமை அழிக்கப்பட்ட பின்பு, எமது உரிமைகளுக்கான போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்பு, எங்கள் பலவீனமான நிலைமையை மீறி மேலாதிக்கம் செலுத்துவதன் மூலம் ஒரு ஐக்கியத்தை உருவாக்கிவிட முடியும் என்ற ஒரு தவறான பார்வை உங்கள் மீது திணிக்கப்பட்டிருக்கலாம்.

இத்தகையதோர் பார்வையும் அதன் வேர்களில் இருந்து எழுந்த சிந்தனைப்போக்குமே நமது அறுபது வருட போராட்டத்திற்கும் முப்பது வருட ஆயுதப் போராட்டத்திற்கும் அடிப்படை என்ற உண்மையை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய காலமிது. மீண்டும் குருதி சிந்தும் நாட்களை உருவாக்கும் காரணிகளை தயவுசெய்து உங்கள் எண்ணங்களிலிருந்து தூக்கி தூர வீசிவிடுங்கள். அடக்குபவர்களுக்கும் அடக்கப்படுபவர்களுக்கும் இடையே ஐக்கியம் நிலவியதாக வரலாறு இல்லை. நிம்மதி கிடைத்ததாக உதாரணங்கள் இல்லை. நாங்கள் நாங்களாகவும் நீங்கள் நீங்களாகவும் கரங்கோத்து நின்று எங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவோம்.

எங்கள் கழுத்தை உங்கள் கரங்கள் நெரிக்கவேண்டாம். உங்கள் கரங்களை எங்கள் பற்கள் காயப்படுத்த வேண்டாம். உங்களுக்கென ஒரு பாரம்பரிய வாழ் நிலம், மொழி, பொருளாதாரம், தனித்துவமான கலாசாரம் உண்டு. எமக்கும் இவை அனைத்தும் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

அன்புக்குரியவர்களே! இலங்கை மக்களாகிய நாங்களும் நீங்களும் பேரழிவுகளைச் சந்தித்த அதேவேளையில் அந்நிய ஆயுத வியாபாரிகளும் தரகர்களும் கோடிகோடியாக இலாபம் வைத்து எம்மைக் கொள்ளையடித்தார்கள். இதுமட்டுமா போரின்போதும் அதன்பின்பும் எமக்குப் பலவித நெருக்கடிகளைக் கொடுத்து எமது மூலவளங்களையும் மனித உழைப்பையும் கொள்ளையிடுகின்றார்கள்.

புல்மோட்டையில் இல்மனைட் வளமும் கொள்ளையடிக்கப்படுகின்றது. வடக்கின் சுண்ணக்கல் வளமும் எண்ணெய் வளமும் இந்தியாவால் அபகரிக்கப்பட திட்டம் தீட்டப்பட்டுவிட்டன. இன்னொருபுறம் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிட ரஷ்யா ஒப்பந்தம் எழுதிவிட்டது. சேது சமுத்திர திட்ட மூலம் எமது கடல்வாழ் உயிரினங்களின் வளம் அழிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் கரங்களுக்கு போய்விட்டது. சுதந்திர வர்த்தக வலயம் அந்நிய முதலீடுகளைக் கவர்தல் என்ற பெயரில் எமது மக்களின் மனித உழைப்பு மலிவான விலையில் கொள்ளையிடப்படுகின்றது.

இலங்கை 'பெண்களின் சொர்க்கம்' என்ற விளம்பரம் செய்யப்படும் அளவிற்கு உல்லாசப் பயணத்துறை என்ற பெயரில் கலாசார பாரம் பரியமுட்டல்களால் பெண்கள் கேவலப்படுத்தப்படுகின்றனர். பதினான் காயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் வெளிநாட்டவரின் பாலியல் வக்கிரத்திற்கு பலியாகி எதிர்காலத்தை இழக்கின்றார்கள்.

ஆம், எங்கள் மூலவளங்களும் மனித உழைப்பும் கொள்ளையிடப்பட்டு எமது தேசம் ஒட்டாண்டி நிலைக்கு தள்ளப்படுகின்றது. இப்பேராபத் தில் இருந்து எம்மை நாம் மீட்க நாம் உரிமை கொண்டு ஐக்கியப் பட்டு எழுச்சிபெற வேண்டும். இந்நாட்டில் பெரும்பான்மை சிறு பான்மை என எதுவுமில்லை என்பது வெறும் வெற்றுக்கோசமாக இருந்துவிடக்கூடாது. இனியும் அடக்குபவர்களோ, அடக்கபடுபவர் களோ இல்லை என மிளிரப்படவேண்டும் என்பதே நமது அவாவா கும்.

நிற்க, இப்படியான ஒரு புறச்சூழலில் இப்போரின் கொடுமைகளை யும் அதன் பின்னரான காலத்தின் கொடுமைகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களின் இடர் களை கவனித்து களைவதில் முக்கிய பணி எனக்கு அதிகமாக உள்ள தாகவே நான் உணர்கின்றேன்.

நாம் போருக்கு நேரடியாகவே முகங்கொடுத்தவர்கள். இந்த போர் விமானங்கள் எங்கள் மீது குண்டுகளை வீசியது, எறிகணைகள் எங்கள் உடல்களை துளைத்தன. துப்பாக்கி வேட்டுக்கள் எங்களை துளை போட்டன. மரணம் எங்களை விரட்ட விரட்ட இடம்பெயர்ந்து இடம் பெயர்ந்துஓடினோம்.போகுமிடம்தெரியாமலேயேவெட்டவெளிகளில் வீதியோரங்களிலும் கூடார வாழ்க்கையை ஏற்றோம். மீண்டும் மீண்டும் போர் எங்களை துரத்திய போதும் ஓடினோம். இருப்பினும் மரணங்களைத் தவிர்க்க முடியவில்லை. உடலுறுப்புக்கள் இழப்பதை தவிர்க்க முடியவில்லை. இறந்த உடல்களை எடுத்து புதைக்கவும் வழியின்றி ஓடினோம். உணவில்லை, குடிக்க நீரில்லை, இயற்கை கடன்களை கழிக்க இடமில்லை, அடுத்த நிமிட உயிர்வாழ்வு பற்றிய நம்பிக்கைக்கு இடமில்லை, முள்ளிவாய்க்காலுக்குள் மூன்றரை லட்சத்திற்கு மேற்பட்டோர் முடக்கப்பட்டோம்.

உலகின் நற்பண்புகளுக்கும் மனிதாபிமானமாக காட்டப்பட்ட நட வடிக்கைகள் எங்களை மரணக்குழிகளுக்குள் தள்ளின. இறந்தவர் போக எஞ்சியோர் நந்திக்கடல் தாண்டினோம். வவுனியாவில் அகதி முகாமுக்குள் எங்கள் வாழ்வு முடக்கப்பட்டது. உணவுக்களஞ்சியமான வன்னி மண்ணில் உற்பத்தியைப் பெருக்கி மற்றவருக்கு உண்டி கொடுத்த நாம் ஒருபிடி சோற்றுக்கு கையேந்தி வரிசையில் நின்றோம். இன்று எம்மில் ஒரு பகுதியினர், ஆறு தகரங்களுடனும் ஆறுமாத நிவாரண பொருட்களுடனும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டோம். ஏனையோர் இன்னும் முகாம்களில்.

போர் முடிந்து ஓர் வருடம் ஓடிப்போய்விட்டது. எம் துயரங்கள் முடிய இன்னும் எத்தனை வருடங்கள் போகும் என்பது எமக்குள்ள கேள்வி. போராளிகள் என்ற பெயரில் இன்னமும் பல ஆயிரமவர் தடுப்பு முகாம் அவலங்களுக்குள் தவிக்கின்றனர். பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பார்த்துவிட மணிக்கணக்காக மழையிலும் வெயிலி லும் காத்துநிற்கின்றனர். இன்னும் எத்தனையோ பெண்களும் பிள்ளை களும் எங்கேயென்று அறியமுடியாது உறவினர் அலைந்து திரிகின்ற னர். ஒவ்வொரு நாளும் காயப்பட்டு சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி யில் ஏற்றப்பட்ட எத்தனையோ பேரை தேடி விளம்பரங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன.

இச்சபையின் பெருமைக்குரிய உறுப்பினர்களே! ஒரு ஜனநாயக தேசத் தில் இதுதான் எங்கள் வாழ்வு. இதிலிருந்து நாம் மீளெழ வேண்டும். அந்நிய தேசங்கள் நமது நாட்டின் மூலவளங்களையும் மனித வளங்களையும் கொள்ளையடிப்பதுடன், எமது இறைமையை நிறை வேற்றுவதுடன், பாதுகாக்கவும் நாம் உங்களுடன் ஒன்றிணைய காத்திருக்கின்றோம். ஆனால், நாம் மனிதர்களாக வாழும்போது மட்டும்தான் அது சாத்தியப்படும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நாம் எல்லோரும் இந்நாட்டு மக்களென மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் வார்த்தைகளை நேசிக்க முயலுங்கள். உரிமை பறிக்கப்பட்டவர்களும் உரிமை பறிப்பவர்களும் ஒரே சகோதரர்களாக எப்படி வாழமுடியும்? எங்கள் சகோதரர்களே! மக்கள் சார்பில் மீண்டும் நான் உங்களைக் கேட்பது, மீண்டும் எங்கள் வாழ்வை ஆரம்பிக்க எமக்கு வழிவிடுங்கள். உருளும் உலகப்பந்தின் இந்த அழகிய மாங்கனித் தீவிலே கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால வரலாற்று சிந்தனையை கைவிட்டு, இருபத்தோராம் நூற்றாண்டுக்குரிய நவீன சிந்தனையின்படி இனப் பிரச்சினையை அணுகவேண்டும். சிங்கள மக்களும் தமிழ்பேசும் மக்களும் இலங்கைத் தீவின் இணை உரிமை யாளர்களும் இணைப் பங்காளர்களும் என்ற மனப்பாங்குடன் ஒரு புதிய அரசியலை அணுக அரசாங்கம் தயாராக வேண்டும்.

தற்போது சிங்கள மக்களிடம் தமிழரை வெற்றிகொண்ட மனப் பாங்கும், தமிழரிடம் வேதனையும் வெறுப்பும் நிறைந்த நிலையும் காணப்படுகின்றது. ஒரே நாடு ஒரே மக்கள் என்று சொல்லிக்கொண்டே பூநகரி வெற்றி விழாவையும், கிளிநொச்சி வெற்றி விழாவையும், முள்ளிவாய்க்கால் வெற்றி விழாவையும் கொண்டாடிய தினமும், இனிவரும் நாட்களில் மே மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை கொண்டாடப்படவுள்ள இராணுவ வெற்றிவிழாவும், தமிழர்களின் மனங்களை எப்படி உடைத்து சிதறடிக்கப்போகின்றது என்பதை சிந்தியுங்கள். இராணுவத்தால் தீவு நிரம்பி வழிந்து ஒன்றுபட்டது போல் காணப்பட்டாலும், மனத்தால் தீவு இரண்டுபட்டே இருக்கின்றது. புத்தபகவான் பரிநிர்வாணம் அடைவதற்காக தவமிருந்தார் என்ற மகிமை சிங்கள மக்களுக்கு தெரியும்.

சுதந்திர இலங்கையில் இதுவரை இரண்டரை லட்சத்திற்கும் மேலான உயிர்களை இழந்து தமிழ் மக்கள் தமது உரிமைக்காக தவமிருக்கின் றார்கள் என்ற உண்மையை சிங்கள சகோதரர்களும் இந்த உலகமும் புரியும் நாள் வந்திருக்கின்றது. தன் சொந்த சகோதர இனத்துடன் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ள தயாரில்லாமல், அந்நிய நாடுகளிடம் கையேந்தி தனது சொந்த தமிழ் மக்களுக்கெதிரான அரசி யலை வலைவீசி வரும் அரசாங்கங்கள் நடத்தியதன் விளைவாய் இலங்கைத் தீவை அந்நிய அரசுகளின் காலடிக்குள் சிக்குண்டிருப்ப தையும் ஆட்சியாளர்கள் உணர இன்னும் எவ்வளவு காலம் எடுக்கு மோ தெரியாது.

ஒரு இனத்தை எந்த இனம் ஒடுக்குகின்றதோ அந்த இனமும் அமைதி யாக இருக்க முடியாது. அந்த நாடும் சுபீட்சம் அடைய முடியாது. அத்துடன் எம் ஓரினத்தை ஒடுக்க எடுத்த நடிவடிக்கைகளின் விளைவால் அந்நிய தேசங்களிடம் அடிமைப்பட்டு போகவும் நேரும். சுதந்திரமும் சுபீட்சமும் நிறைந்த இலங்கையை கட்டியெழுப்ப வேண்டு மென்றால், அது ஏனைய இனங்களின் தனித்துவ உரிமைகளை அங்கீ கரிப்பதிலும் அவர்களுடன் அதிகாரங்களை பங்கிட்டுக்கொள்வதிலுமே அதனை ஆரம்பிக்க வேண்டும். அதற்கான துணிச்சலையும் தூரப் பார்வையையும், இன்றைய அரசாங்கம் முன்னெடுக்குமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

முதிர்ந்த அரசியல் அனுபவமிக்க சம்பந்தர் ஐயா தலைமையில் இதற் கான வாய்ப்பை அளிக்க எமது கட்சி தயாராக உள்ளது. இத்த கைய அரிய வரலாற்று வாய்ப்பை பயன்படுத்தி தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல தீர்வை ஏற்படுத்தி, புதிய இலங்கையை கட்டி யெழுப்ப அரசாங்கம் தயாராக வேண்டும். இதனை தவறவிட்டால், வரலாறு தான் விரும்பும் இன்னொரு திசைக்கு தீர்வை இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

சுனாமியாலும் யுத்தத்தாலும் அழிந்து சின்னாபின்னப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்களின் மனங்களைப் புரிந்து அவர்களின் துன்பங் களைப் பகிர்ந்து அவர்களின் தனித்துவமான உரிமைகளை புரிந்து அதற்கேற்ப நியாய பூர்வமானதும் நீதியானதுமான தீர்வை காண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. நாம் இரு சுதந்திரமான தேசிய இனங்களாக ஒரு நாட்டின் மக்களாக ஒன்றிணைந்து நம் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற பிரகடனத்தை மனமுவந்து நாம் அனைவரும் நினைப்போம் என்று கூறி என் கன்னி உரையை நிறைவு செய்கின்றேன்.

■

[ இயல் விருது ]

# ஞானிக்கு இயல் விருது

## ஜெயமோகன்



2009 ஆம் வருடத்துக்கான கனடாவின் 'இயல்' விருது கோவை ஞானிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இன்றுவரை குறிப்பிடத்தக்க இலக்கிய விருதுகள் எதையும் பெறாத ஞானியை கௌரவப்படுத்தியிருப்பதன் மூலம் இயல் தன்னையும் கௌரவப்படுத்தியிருக்கிறது. அதன் கடந்தகால பிழைகளில் இருந்து அது வெளிவர இது ஒரு வாய்ப்பாக அமையட்டும். ஞானிக்கு என் வாழ்த்துக்கள், வணக்கங்கள்.

கி.பழனிச்சாமி என்ற ஞானி ஒரு தமிழாசிரியர். எழுபதுகளில் திரண்டெழுந்த தீவிர இடதுசாரி அமைப்புகளில் இருந்து உருவாகி வந்தவர். புரட்சிகர மார்க்ஸிய சிந்தனையாளரான எஸ்.என். நாகராஜனுடன் இணைந்து 'புதிய தலைமுறை' என்ற கோட்பாட்டுச் சிற்றிதழை நடத்தினார். இக்காலகட்டத்தில் வானம்பாடி இலக்கியக் குழுவுடனும் ஞானிக்கு நெருக்கமான உறவிருந்தது. அவர்களுடன் முரண்பட்டு விவாதிக்கவும் செய்தார்.

அதன்பின் தொடர்ச்சியாக மார்க்ஸிய விமரிசனக் கருத்துக்களை எழுதி வந்தார் ஞானி. 'நிகழ்' என்ற சிற்றிதழை பதினைந்தாண்டுகளுக்கும் மேலாக தமிழில் புதிய இலக்கியத்திற்கான களமாக நடத்தி வந்தார். என்னுடைய ஆரம்பகாலக் கதைகள் பல அதில் வெளிவந்தவையே. 'போதி', 'படுகை' போன்றவை நிகழில் வெளிவந்தமை என்னை இலக்கிய உலகுக்கு சரியாக அறிமுகம் செய்தது.

ஞானி மார்க்ஸியத்திலிருந்து கொஞ்சம் வழிவிலகி இன்று தமிழியக் கோட்பாட்டாளராக இருக்கிறார். அதற்காக 'தமிழ்நேயம்' என்ற சிற்றிதழை நடத்தி வருகிறார். மார்க்ஸிய அடிப்படையிலான ஒரு தமிழ்த் தேசியத்தை முன்வைத்து வருகிறார்.

ஞானி முதன்மையாக ஒரு இலக்கிய திறனாய்வாளர். கோட்பாட்டாளர். 'மார்க்ஸியமும் தமிழும்', 'கடவுள் இன்னும் ஏன் சாகவில்லை' போன்றவை குறிப்பிடத்தக்க நூல்கள். 'கல்லிகை' போன்ற நீள்கவிதைகளையும் எழுதியிருக்கிறார்.

தமிழிலக்கியத்திற்கும் சிந்தனைக்கும் ஞானியின் பங்களிப்பு என்ன? சுருக்கமாக இவ்வாறு வகுத்துரைக்கலாம். ஞானி நாகராஜனின் சிந்தனைகளில் இருந்து தன்னை உருவாக்கிக் கொண்டவர். இந்தத் தரப்பு மார்க்ஸியத்தை பண்பாட்டுத்தளத்திலும் வைத்து ஆராய்கிறது. பண்பாட்டுப் பிரச்சினைகளில் மார்க்ஸியத்தை பயன்படுத்த முனைகிறது என்று இன்னமும் சுருக்கமாகச் சொல்லலாம். ஞானியை 'மார்க்ஸியப் பண்பாட்டு ஆய்வாளார்' என்று கூறலாம்.

தமிழில் அதுவரை பேசப்பட்ட மார்க்ஸியக் கோட்பாடுகளை செவ்வி

யல் மார்க்ஸியம் என்று சொல்லலாம். ஐரோப்பிய மார்க்ஸியச் செயல்த் திட்டத்தை அப்படியே அடியொற்றி உருவாக்கப்பட்டது அது. அதன் படி உற்பத்தி, வினியோகம், உற்பத்தி உறவுகள் ஆகிய மூன்றும் சமூகக் கட்டுமானத்தின் அடித்தளமாக அமைபவை. சமூகம், அரசாங்கம், பண்பாடு, ஆன்மீகம் அனைத்தும் அதன் மேற்கட்டுமானங்கள். ஒரு மார்க்ஸியர் அடித்தளத்தை ஆராய்ச்சிசெய்து அதை மாற்றுவதற்கு போராட வேண்டும். அடித்தளம் மாறினால் மேற்கட்டுமானமும் மாறியாக வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில ஐரோப்பிய சிந்தனையாளர்கள் பண்பாடு என்பது வெறுமே பொருளியல்செயல்பாடுகளின் நுரை மட்டுமல்ல என்று சொல்ல முனைந்தார்கள். அவர்களில் முக்கிய மானவர் அண்டோனியோ கிராம்ஷி. இவர் இத்தாலிய சிந்தனையாளர். இவரது சிந்தனைகள் எழுபதுகளில்தான் ஐரோப்பிய மொழிகளில் பரவலாகப் பேசப்பட்டன. இந்தியாவில் எண்பதுகளில் பேசு பொருளாயின. ஆனால் நாகராஜனும் ஞானியும் சமகாலத்திலேயே அவற்றை முன்வைத்தவர்கள். அவ்வகையில் கிராம்ஷியை ஒரு தீவிர உரையாடலுக்குக் கொண்டுவந்த ஆரம்பகட்ட இந்திய மார்க்ஸியர்கள் இவர்களே.

பண்பாடு பொருளியல் அமைப்பின் நேர்விளைவு அல்ல அதற்கு சிக்கலான ஒரு தன்னியக்கம் உண்டு என்று இவர்கள் வாதிட்டார்கள். ஆகவே கலையிலக்கியங்களை அவற்றின் பொருளியல் உள்ளடக்கம் சார்ந்து மட்டுமே மதிப்பிடுவதென்பது மேலோட்டமான பார்வை என்றார்கள். உற்பத்தி உறவுகள் பண்பாட்டை தீர்மானிப்பதில்லை பண்பாடும் உற்பத்தி உறவுகளை தீர்மானிக்கக் கூடும். மக்கள் போராட்டத்தின் அடிப்படைகளாக பண்பாட்டு விழுமியங்களே அமைய இயலும். சேவை, அன்பு போன்ற மானுட விழுமியங்கள், மொழிப்பற்று போன்ற பாரம்பரிய விழுமியங்கள் மக்களை ஒருங்கிணைக்கவும் போராடவும் செய்யக்கூடியவை; மேலான உற்பத்தி உறவுகளை உருவாக்கக்கூடியவை என்றார்கள். இவர்களுக்கும் மரபான மார்க்ஸியர்களுக்கும் இடையே விவாதங்கள் நிகழ்ந்தன.

கார்ல்மார்க்ஸின் இளமையில் அவரிடம் ஹெகலின் பாதிப்பு நேரடியானதாக இருந்தது. அப்போது அவர் பொருளியல் அடிப்படைகள் அளவுக்கே பண்பாட்டுப் பிரச்னைகளையும் கணக்கிலெடுத்து பேசுபவராக இருந்தார். ஒரு ஆதிப்பழங்குடி வாழ்க்கையில் உழைப்பாளிக்கு உழைப்பு ஒரு கொண்டாட்டமாக இருந்தது. நிலப்பிரபுத்துவ வாழ்க்கையில் அவன் தன் கைகளால் ஒன்றை உருவாக்குவதன் நிறைவு இருந்தது. ஆனால் முதலாளித்துவத்தில் அவன் உற்பத்தியின் ஒரு கருவியாக மாற்றப்பட்டுவிட்டான் அவனுக்கு படைப்பாளனின் இன்பம் இல்லாமலாகிறது. ஆகவே அவன் உழைப்பில் இருந்து அன்னியப் படுகிறான். விளைவாக பலவகையான பண்பாட்டுத் திரிபுகளுக்கும் உளச் சிக்கல்களுக்கும் ஆன்மீக நெருக்கடிகளுக்கும் ஆளாகிறான். இந்த நிலையை 'அன்னியமாதல்' என்று சொல்லி ஒரு முக்கியமான மானுடச்சிக்கலாக இளம் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்

பின்னாளில் மார்க்ஸியத்தை ஒரு நடைமுறைவாதமாக ஆக்கிய அரசியல் புரட்சியாளர்கள் இந்த பிரச்சினையை மார்க்ஸ் அவரது முதிரா இளமையில் முன்னிறுத்தினார் என்றும் இது மார்க்ஸியத்தில் முக்கியமல்ல என்றும் சொன்னார்கள். மார்க்ஸேகூட அதை அதிகமாக முன்வைக்கவுமில்லை. ஆனால் பிற்பாடு அல்தூஸர் முதலியோர் இதை விரிவாக மேலெடுத்துப் பேசியிருக்கிறார்கள்.

இளம் மார்க்சின் நோக்குகள் சரியே என்று சொல்லி அந்தக் கோணத்தில் உழைப்பாளியின் அன்னியமாதலை அடிப்படையாகக் கொண்டு சமகாலத்துப் பண்பாட்டுப் பிரச்சினைகளை பேசியவர்கள் நாகராஜனும் ஞானியும். இலக்கியம் மதம் ஆன்மீகம் அனைத்தையும் இந்தக் கோணத்திலேயே புரிந்துகொள்ள முடியும் என்றும் இயந்திரத்தனமாக பொருளியல்வாதத்தை பேசலாகாது என்றும் சொன் னார்கள். தமிழகத்தின் மார்க்ஸிய விவாதங்களில் இது ஒரு பெரிய திருப்பு முனை என்றே சொல்லலாம். மிக செயற்கையாக 'இது தொழிலாளி வர்க்க எழுத்தா முதலாளித்துவ எழுத்தா?' என்று கட்சி கட்டி பேசிக் கொண்டிருந்த தமிழ்ச்சூழலில் இந்த விவாதம் இலக்கியத்தை மேலும் நுட்பமாக அணுகும் ஒரு கருவியாக அமைந்தது. இவர்களில் எஸ்.என் நாகராஜனுக்கு நுட்பமான இலக்கிய உணர்வு கிடையாது. ஞானி நுண்ணிய ருசிகளும் மேலும் திறந்த மனமும் கொண்டவர். ஆகவே மார்க்ஸிய நோக்கில் ஒரு புதிய வழியைத் திறக்க அவரால் முடிந்தது.

தமிழின் மார்க்ஸிய இலக்கிய விமரிசகர்களான கைலாபதி, நா.வானமாமலை, சிவத்தம்பி, தோதாத்ரி போன்றவர்களில் அதிகமான படைப் பூக்கத்துடன் இலக்கியத்தை அணுகியவர் ஞானிதான். அவருக்கு மட்டுமே கலையை புரிந்துகொள்ளும் உணர்கொம்புகள் இருந்தன. முதலாளித்துவ திரிபுகள் என்று முத்திரை குத்தப்பட்டு நிராகரிக்கப் பட்ட பல நவீன ஆக்கங்களை புதிய நோக்கில் ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவத்தை முன்வைத்தார் ஞானி. பலநூறு பக்கங்கள் வழியாக தமிழின் நவீன இலக்கியங்களை அவர் மார்க்ஸிய நோக்கில் ஆராய்ந்திருக்கிறார். இன்றும் முக்கியமாக இருக்கும் அவரது பங்களிப்பு என்பது இதுவே.

ஞானி அவரது பண்பாட்டு மார்க்ஸிய நோக்கை தமிழ்த்தேசியம் நோக்கிக் கொண்டு சென்றார். மார்க்ஸிய சர்வதேசிய வாதத்துக்கு இனிமேல் இடமில்லை என்றும், தனிப் பண்பாடுகள் தனித் தேசியங்களாகவே நீடிக்க முடியும் என்றும், பண்பாடுகள் தேசியங்களாக திரள்வது என்பது இன்றியமையாத சமகாலத்தேவை என்றும் அவர் நினைக்கிறார். மக்கள் தங்கள் இயற்கையை காக்கவும் உரிமைக்காக போராடவும் அந்த தனிப்பண்பாட்டை ஓர் ஆயுதமாக பயன்படுத்த வேண்டும் என்கிறார். தேசியம் குறித்த மார்க்ஸின் கருத்துக்கள் ஐரோப்பாவில் இருந்த சுரண்டல் நோக்குள்ள தேசிய அமைப்புகளுக்கு எதிரானவை என்றும், இன்றைய சூழலில் சர்வதேசியம் என்பதுதான் சுரண்டலாக உள்ளது என்றும் சொல்லும் ஞானி தனித்தேசிய போராட்டங்கள்தான் இனிமேல் மார்க்ஸிய போராட்டத்தின் தொடக்கமாக இருக்கும் என்கிறார்.

இந்த அடிப்படையில்தான் ஞானி ஈவேரா அவர்களிடம் வந்து சேர்கிறார். ஞானியின் நோக்கில் ஈவேரா தமிழில் உள்ளார்ந்து இருக்கும் போராடும் மனநிலையின் வெளிப்பாடு. அவ்வகையில் ஈவேராவை தமிழ் சித்தர் மரபின் நீட்சியாகவே ஞானி காண்கிறார். ஈவேராவை தமிழின் முதன்மையான சிந்தனையாளராக காணும் ஞானி ஈவேரா அவர்களின் எல்லா கருத்துக்களையும் ஆதிக்க எதிர்ப்பு என்ற நிலை பாட்டில் இருந்தே புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார். தனித்துவம் கொண்ட ஒரு பண்பாடு தன் தனித்துவம் தாக்கப்படும்போது அளிக்கும் எதிர்வினையே ஈவேரா. இன்றைய காலகட்டத்தில் தமிழ் நிலமும் மனமும் புறவுலகின் பெருஞ்சக்திகளால் உலகமயமாக்கம் என்ற பேரில் தாக்கப்படும்போது ஈவேராவின் கருத்தியல் ஒரு பெரும் ஆயுதமாக அமையமுடியும் என்கிறார். ஈவேராவின் சுயமரியாதைத் நோக்கும் மார்க்ஸியமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல என்று ஞானி நினைக்கிறார். பண்பாட்டுப் பிரச்சினைகளை வெறுமே மேல் கட்டுமானச் சிக்கல்களாக காணும் மார்க்ஸியர்களின் நோக்கு அது. ஈவேரா பேசியது பண்பாட்டுத் தளத்தில் உள்ள சுரண்டலுக்கு எதிராக. ஆகவே அவர் மார்க்ஸியர்களுக்கு தோழராக அமைய முடியும். ஈவேராவை உள்ளிழுத்துக்கொள்ளும் விரிவான மார்க்சிய கோட்பாடு தேவை என்று ஞானி நினைக்கிறார்.

ஞானியின் பெரும்பாலான கருத்துக்களுடன் நான் எப்போதுமே உடன்பட்டதில்லை. அவரைச் சந்திக்கும்போதெல்லாம் அவருடன் உக்கிரமாக விவாதிப்பவனாகவே இருந்திருக்கிறேன். ஆரம்ப நாட்களில் மட்டுமல்ல சமீபத்திலும் அவருடன் மனக்கசப்பு உருவாகும் எல்லை வரை மறுத்துவாதிட்டிருக்கிறேன். ஆனால் என்னுடைய சிந்தனைகளின் உருவாக்கத்தில் அவர் பெரும் பங்காற்றியவர். அவரது நிதானமும் பொறுமையும் எனக்கு பெரிதும் கற்பித்திருக்கின்றன. அவரை என் நல்லாசிரியராகவே எண்ணுகிறேன். கருத்துப் பூசல்கள் படைப்பூக்கத்தை நோக்கி நகர முடியும் என்பதற்கும் மாறுபடும் கருத்து கொண்டவர்கள் மாற்றாராக இருக்க வேண்டியதில்லை என்பதற்கும் வாழும் உதாரணம் அவர்.

எத்தனை திரிபுபட்டிருந்தாலும் எத்தனை தூரம் மரபிலிருந்து அன்னியப்பட்டிருந்தாலும் தமிழகம் அதன் அனைத்துத்தளங்களிலும் எப்போதும் சான்றோர்களை உருவாக்குவதாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஞானி அந்த தமிழ் மரபின் நீட்சி. ஞானிக்கு பாதம் பணிந்து வணக்கம்.

■

[ நேர்காணல் ]

# கோவை ஞானி

## கோவை வாணன்

கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டாரம் சோமனூரில் 1.7.1935இல் திரு.கிருஷ்ணசாமி திருமதி. மாரியம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்த இவர் கோவையில் ஊயர்பள்ளிக் கல்வி முடித்தபிறகு ஆண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் கற்றார். கோவையில் ஒரு புகழ் பெற்ற பள்ளியில் 28 இண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். மார்க்சிய நெறியில் தமிழ் இலக்கிய இய்வை மேற்கொண்டார். வானம்பாடி இயக்கத்திலும் பங்கு பெற்றார். 1988இல் கண்பார்வையை இழந்த நிலையில் விருப்ப ஒய்வுபெற்று வீட்டிலேயே தொடர்ந்து ஊதவியாளரை வைத்துக் கொண்டு படிப்பதும் எழுதுவதுமாக இன்றுவரை இடைபறாது செயல்படுகிறார். புதிய தலைமுறை (1968 - 70) ஆசிரியர் குழுவில் இருந்தார். பரிமாணம் (1979 - 83) நிகழ் (1983 - 96) ஆகிய சிற்றிதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1998 முதல் இன்றுவரை தமிழ்நேயம் இதழைச் சிறப்பாக நடத்தி வருகிறார். தமிழ் இலக்கியம், மார்க்சியம் குறித்து 25க்கும் மேற்பட்ட திறனாய்வு நூல்களை வெளியிட்டுள்ளார். 11 பெண் எழுத்தாளர் சிறுகதைத் தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். சிற்றிதழ் இயக்கத்தோடு மட்டுமல்லாமல் இயற்கை வேளாண்மை, விடுதலை இறையியல், மனித ஊரிமை முதலி யவற்றிலும் உடுபாடு கொண்டவர். வரலாறு, மெய்யியல், இலக்கியம் இகியவற்றில் இவரது படிப்பறிவு விரிவானது.

விளக்கு விருது, தமிழ்த் தேசியச்செம்மல், தமிழ்த் தேசியத் திறனாய்வாளர், செம்மொழி ஞாயிறு விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது திறனாய்வுக் கட்டுரைகள் ஆடங்கிய நான்கு பெருந்தொகுப்புகளைக் காவ்யா இதுவரை வெளியிட்டுள்ளது. ஆண்மையில் 1000 பக்க ஆளவிலான நிகழ் கட்டுரைக் களஞ்சியம் ஏன்ற பெருந்தொகுப்பைக் காவ்யா வெளியிட்டு ஊள்ளது. துணைவியாரோடும் இரண்டு மக்களோடும் இவர் வாழ்ந்து வருகிறார். கனடா இலக்கியத் தோட்டம் ஆமைப்பினர் வாழ்நாள் சாதனையாளர் ஏன்ற முறையில் தெரிவு செய்து இவருக்கு இயல் விருது வழங்கும் இத்தருணத்தில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

**கோவை வாணன்**

**நீங்கள் தமிழாசிரியராக இருந்து பணி செய்ததோடு மார்க்சியராகவும் இருந்திருக்கிறீர்கள். மார்க்சியத்திற்கு நீங்கள் எப்படி வந்து சேர்ந்தீர்கள். இதற்கான உங்கள் அனுபவம் என்ன?**

அறுபதுகளின் தொடக்கத்தில் கோவையில் கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கியது. புலவர் இதி, தா.வே. வீராசாமி முதலிய நண்பர்களோடு நெருங்கிப் பழகினேன். இவர்கள் மார்க்சியத்தோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தார்கள். நான் பிறந்த கிராமத்தில் வாழ்ந்த காலத்திலேயே தொழிற்சங்கம் சார்ந்த மார்க்சிய உரைகளைக் கேட்டிருக்கிறேன். மார்க்சியத்தோடு எனக்கு முரண்பாடு இல்லையென்றாலும் அன்றைய நிலையில் நான் மார்க்சியனாக இல்லை.

நான் பிறந்து வளர்ந்த கிராமச் சூழலில் உழவர்கள் நெசவாளர்கள் குடும்பங்களுக்கு இடையில் வாழ்ந்தேன். 1946, 47 காலத்தில் கொடுமையான பஞ்சம் எல்லோரையும் பாதித்தது. எங்கள் வாழ்க்கையும் சொல்லும்படியாக இல்லை. விடுதலைக்குப் பிறகேனும் இந்த மக்கள் வாழ்க்கை மேம்படும் என்ற நம்பிக்கையும் மிக விரைவில் பொய்த்துப் போனது. சில அண்டுகளுக்குப் பிறகு நான் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டதற்கு இதுவரை நான் சொன்ன வாழ்க்கைச் சூழல் ஒரு முக்கியக் காரணம். எல்லோருக்குமான நல்வாழ்க்கை வேண்டும். இதுதான் எனக்குள் இருந்த பெருவிருப்பம்.

பள்ளிக் கல்வி முடிந்தபிறகு கல்லூரியில் தமிழ் இலக்கியக் கல்வியை நான் தெரிவு செய்தேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தொடர்ந்து படித்தேன். இளமையிலிருந்தே கடவுள் நம்பிக்கையோடுதான் நான் வளர்ந்தேன். கடவுள் நம்பிக்கையை என் ஆசிரியர் முதலியவர்களும் தீவிரமாகக் கற்பித்தார்கள். கடவுளைக் காண வேண்டுமென்பது என் பேராசை. கடவுளைக் கண்டு விட்டால் என் துயரங்கள் முற்றாக நீங்கிவிடும் என நம்பினேன். சிறுவயதிலேயே தாகூர், விவேகானந்தர் என்னை ஈர்த்தனர். கடவுள் என்றால் ஒருவராகத்தான் இருக்கமுடியும். கடவுள்தான் இந்த உலகத்தைப் படைத்தார் என்றால் அவரும் உலகமும் வேறுவேறாக இருக்கமுடியாது. விவேகானந்தர், வழியே எனக்குள் அத்வைதம் என்ற நம்பிக்கைதான் அறிவுசார்ந்த நம்பிக்கையாக இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தனியறையில் தியானம் மேற்கொண்டேன். இந்த அனுபவங்கள் மிக விரிவானவை. மூன்று மாதத்திற்குள் தியானத்தின்போது என்னை நானே பிரம்மம் என்று உணர்ந்தேன். நானும் என்னைச் சூழ உள்ள எல்லாமும் பிரம்மம். எனக்குள் பலநாள் நீடித்த பரவசத்திற்கு அளவில்லை. ஒருநாள் சிதம்பரம் கோவிலில் சிவனுக்கு முன் நின்ற நிலையில் சிவனும் நானும் ஒன்று. என்னை நானே எப்படி வழிபட முடியும் என்ற உணர்வு ஏற்பட்டது. உண்ணும்போது நானும் உணவும் ஒன்று. எப்படி என்னை நானே உண்ண முடியும். இப்படி நிறைய அனுபவங்கள். ஒரு நாள் இரத்த வாந்தி. இனித் தியானம் செய்ய முடியாது. நோய்க்கு அளாகி மருத்துவ மனையில் பல மாதங்கள் இருந்தேன்.

முன்பு வில்லியம் ஜேம்சின் ஒருநூலைப் படித்திருந்தேன். இளம் வயதில் நமக்குள் திணிக்கப்பட்ட உணர்வுகள்தான் பின்னர் தியானத்தின் போது கடவுளைக் காண்பதாக, கடவுளோடு பேசுவதாக வெளிப்படுகிறது என்ற அவரது விளக்கம் உண்மை என எனக்குத் தோன்றியது. வெளியில் இருப்பது உலகம். பொருள் வகை உலகம். வெளியில் இருப்பது கடவுள் இல்லை. உள்ளுணர்வில்தான் கடவுள். இது உண்மையில்லை. புற உலகமே உண்மை. இத்தகைய புரிதல், நாளடைவில் என்னை மார்க்சியம் நோக்கித் தள்ளியது. ஏங்கெல்சின் நூலைப் படித்த போது எனக்குள் பெரும் வெளிச்சம். மேலும் சில நூல்களைக் கற்றேன். இப்படித் தான் அறுபதுகளின் இறுதியில் நண்பர்களோடு

பேசி, தொடர்ந்து மார்க்சியம் எனப் பல நூல்களைக் கற்றேன். இதன் விளைவாக நான் மார்க்சியன் ஆனேன்.

கோவையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தேன். மாபெரும் தொழில் நகரம் கோவை. தொழிலாளர் இயக்கச் சூழலில் நான் மார்க்சியத் தோடு நெருக்கமானேன். அறுபதுகளின் இறுதியில் எஸ்.என். நாக ராசன், எஸ்.வி. இராசதுரை முதலியவர்களோடு கொண்டிருந்த நெருக்க மான உறவு மார்க்சியம் எனக்குள் செறிவு பெற்றதற்கு முக்கியமான காரணம்.

தொடக்கத்தில் நேருவின் குருச்சேவின் சோசலிசம் இவைதான் என்னைக் கவர்ந்தன. எஸ்.என். நாகராசன் மூலம்தான் இந்த மாயை யிலிருந்து விடுபட்டேன். அப்பொழுதே சோவியத் இரஷ்யா பற்றி நிறைய விமர்சனங்கள் எழுந்தன. சோவியத்தில் செயல்படுவது முதலாளி யம் சார்ந்த பெயரளவு சோசலிசமேயன்றி வேறல்ல என்பதைப் புரிந்து கொண்டேன். நக்சல்பாரி இயக்கத்தின் வரவு எனக்குள் மாவோவின் சிந்தனைகளை அழமாக அறிமுகப்படுத்திற்று. இரஷ்ய மார்க்சியத் தை முற்றாகக் கைவிட்டு மாவோவின் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டேன். எஸ்.என்.நாகராசன் மூலம்தான் இத்தகைய மாற்றம் எனக்குள் விரிவுபெற்றது.

நான் தமிழ் இலக்கிய மாணவன். வள்ளுவரும் இளங்கோவும் எனக் குள் பதிந்திருந்தனர். மார்க்சியத்தின் வழியே இவர்கள் எனக்குள் புதிய வெளிச்சங்களைத் தந்தனர். தமிழ் இலக்கியத்தைத் தொடர்ந்து அழ மாகப் பயில மார்க்சியத்தையும் தமிழ் இலக்கியத்தையும் ஒரு புள்ளியில் வைத்து எனக்குள் புரிந்து கொண்டேன். இனி மார்க்சியம் அன்றி எனக்கு வேறு பார்வையில்லை. 'புதிய தலைமுறை' அசிரியர் குழுவில் இருந்தபொழுது நண்பர்களோடு இணைந்து நிறையப் படித்து விவா தம் நடத்தி மார்க்சிய அறிவை மேலும் மேலும் வளர்த்துக் கொண் டோம்.

இன்னும் ஒன்று என் அனுபவத்தை நான் அழமாகப் புரிந்துகொண்ட அளவில் கடவுள் என்பது ஒரு மாபெரும் செறிவான கருத்தாக்கம். வரலாறு, அறிவியல், உளவியல் முதலியவற்றைத் தொடர்ந்து பயின்ற போது இந்த அடிப்படைகளில் கடவுள் என்ற கருத்தாக்கத்தைப் புரிந்து கொள்கிறேன். மார்க்சியம் கற்றதனால்தான் கடவுளைப் பற்றிய தெளிவு எனக்கு ஏற்பட்டது. 'கடவுள் ஏன் இன்னும் சாகவில்லை', 'நானும் கடவுளும் நாற்பது இண்டுகளும்' என்ற எனது இரண்டு நூல்களில் எனது அனுபவத்தை விரிவாக விளக்கி எழுதியுள்ளேன்.

கடவுள், மதம், புராணம் முதலியவற்றைப் பற்றிய தங்களின் கருத்தியல் கள் பிற மார்க்சியர்களிடமிருந்து மாறுபட்டதாய் அமைந்துள்ளன. இந்தப் பார்வை வேறுபாடுகள் எதன் அடிப்படையில் தோன்றுகின்றன?

மதம் நம் மக்களிடையே அழமாகப் பதிந்திருப்பதன் காரணம் என்ன என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். கடவுள், மதம், புராணங்கள் முதலியவற்றைப் புரோகிதர்கள், சமயவாதிகள் முதலி யவர் விடாப்பிடியாக மக்களிடையே எடுத்துரைத்து அவற்றை மக் களை நம்பச் செய்கிறார்கள். சடங்குகள், திருவிழா, அராதனை, பாடல் கள், தெய்வங்களின் அழகிய உருவங்கள் இவை எல்லாமே மக்களின் மதநம்பிக்கையை வலுப்படுத்துகின்றன. புரோகிதர் சமயவாதிகள் முதலியவர்களுக்கு முதலாளிகள் முதலியவர்களும் பேராதரவு தருகின் றனர். இவ்வகை நம்பிக்கைகளில் மக்கள் இகழ்ந்து கிடக்கும் வரை உடைமை வர்க்கத்தினர் தம் அதிகத்தைக் காத்துக்கொள்ளமுடியும். அரசியல்வாதிகளுக்கும் இவர்கள் தேவைப்படுகின்றனர். கல்விபாளர் களும் மதநம்பிக்கைகளை வலுப்படுத்தத் தவறுவதில்லை.

மதம் பற்றி மார்க்ஸ் சிலவற்றைத் தெளிவுபடுத்துகிறார். பொருளியல் அதிக்கத்தில் மக்கள் அடிபட்டு நொந்து வறுமை, நோய்கள் முதலிய வற்றுக்கு இட்பட்டு மனம் திரிந்து கிடக்கிறபோது கடவுள் மற்றும் மத நம்பிக்கைகள் அவர்களைப் பற்றிக் கொள்கின்றன. கடவுள் என் றாவது தம்மைக் காப்பார் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்றனர். மார்க்ஸ் இதை அழகிய முறையில் விளக்குகிறார். மக்கள் கரங்களை இறுக்கமாகப் பிணித்திருக்கும் விலங்குகளை, அவர்கள் பார்வையி லிருந்து மறைக்கும் முறையில் அவர்கள் கரங்களைச் சுற்றி அணிந்து கொண்டிருக்கும் அழகிய மலர்வளையம், மதம் என்கிறார் மார்க்ஸ். மலர்கள் அழகியவை. மக்கள் நெஞ்சைப் பிணிப்பவை. மலர்க்கொத்து அவர்கள் பார்வையை மறைப்பதனால் அவர்கள் கரங்களைப் பிணைத் திருக்கும் விலங்குகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. மதம் பற்றிய விமர சனம் எதுவாக இருக்க முடியும்? என்பதையும் மார்க்ஸ் விளக்குகிறார். மக்களின் கரங்களைச் சுற்றியுள்ள மலர் வளையத்தை முதலில் அகற்ற வேண்டும். மதம் பற்றிய விமர்சனம் என்பது இதுதான் என்கிறார் மார்க்ஸ். மலர் வளையத்தை அகற்றிய பிறகுதான், கரங்களை இறுகப் பிணைத்திருக்கும் விலங்குகள் அவர்கள் கண்களுக்குத் தெரி யும். இந்த விலங்குகள் யார் தயாரித்தவை? யார் பூட்டினார்கள்? எதற் காகப் பூட்டினார்கள்? என்றெல்லாம் அவர்கள் கேட்டுக் கொள்ளும் போதுதான் உண்மை அவர்களுக்குப் புரியும். அப்புறம் விலங்குகளை அவர்களே உடைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஆதிக்கவாதி களிடமிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆதிக்கங் களை நொறுக்க வேண்டும். மதம் பற்றிய மார்க்சின் பார்வை இத்தனை நுட்பமானது, விரிவானது. பெரியாரியரைப் பொறுத்த வரை மதம் பற்றிய விமர்சனத்தைத்தான் செய்து கொண்டி ருக்கிறார்கள். இதுவும் ஓரளவு பயன்படுமேயன்றி மக்கள் விடு தலைக்கு இது போதாது.

புராணங்களைப் பற்றியும் மார்க்ஸ் சுருக்கமாக விளக்கம் தருகிறார். மண்ணுலகில் மனிதர்களுக்கிடையில் நடைபெறும் வம்பு வழக்குகள், சண்டைகள் இவற்றின் பிரதிபலிப்புதான் மேலுலகில் கடவுளர்களுக் கிடையில் நடைபெறும் வம்பு வழக்குகள் சண்டைகள் என்கிறார் மார்க்ஸ். புராணக் கதைகளைப் பற்றிச் சுருக்கமான இய்வு இது என் பதில் ஐயமில்லை. அப்படியானால் புராணக் கதைகள் என்பவை அதே வடிவில் உண்மையில்லை. புராணக்கதைகள் முற்றிலும் பொய்யான வையுமல்ல. புராணக் கதைகள் அழகியவை. கவர்ச்சியானவை. மக் களை மயக்குபவை. இந்தக் கவர்ச்சியைக்கடந்து அவற்றினுள் நுழைந்து மனிதக்கதையை அவர்களுக் கிடையிலான சிக்கலை நாம் கண்டறிய வேண்டும். அப்புறம்தான் இத்தகைய கதைகள் ஏன் புனையப்பட்டன என்ற இய்வுக்கும் செல்ல வேண்டும். இத்தகைய இய்வுக்குப் பகுத் தறிவுப் பார்வை நமக்குப்போதாது. பகுத்தறிவோடு மார்க்சியப் பார் வையும் இணைந்து சென்றால்தான் வாழ்க்கையை வரலாற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

பகுத்தறிவாளர்களோடு மார்க்சியரும் இணைந்து கொண்டு புத்தரை யும் மகாவீரரையும் போற்றுகிறோம். எனினும் அவர்கள் படைத்தவை, சமயங்கள் அன்றி வேறில்லை. ஆரியர்களின் வேதங்களை வருண முறையை அவர்கள் கடுமையாகச் சாடினார்கள் என்பது உண்மை தான். அவர்கள் கடவுளை ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும் ஆன் மா, மறுபிறப்பு, மேலுலகம், வினைக்கோட்பாடு என்றெல்லாம் பேசி னார்கள். மக்களின் துயருக்கான காரணங்களை இவர்கள் இராய்வதில் தொடங்கி அப்புறம் சமய உணர்வில் போய் முடித்தார்கள், பகுத்தறிவு கொண்டும் இவர்களின் சமயங்களை விளக்க முடியாது. மார்க்சிய ஆய்விலிருந்துதான், பழங்கால வரலாற்றுச் சூழலில் அவர்கள் முன் வைத்த கருத்தினங்களை விளக்க முடியும்.

மனிதர்களின் துயரங்கள் முதலியவற்றுக்கு நம் காலத்தில் மார்க்சிய நெறியில் காரணங்கள் முதலியவற்றைக் கண்டறிந்துள்ளோம். கண் டறிந்தவற்றில் எவ்வளவு சரி அல்லது இல்லை என்பது பற்றிய ஆய்வும் தேவை. மார்க்சியமும் தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ளவேண்டும். எனினும் மக்கள் நெஞ்சில் குடிகொண்டுள்ள சமய உணர்வை முற்றாக நீக்கவும் முடியாது. மனிதனுக்குள் இயங்கும் உள்ளுணர்வைப் பகுத்தறிவாளர் மட்டும் அல்ல மார்க்சியரும் ஏற்ப தில்லை.

படைப்பியக்கம், அழகியல், அறவியல் முதலியவற்றில் உள்ளுணர்வின் இயக்கமும் அடங்கியுள்ளது. தொ.மு.சி.யிடம் செயல்பட்ட உள்ளுணர் வின் வெளிச்சத்தைப் பொன்னீலன் எடுத்துரைக்கிறார். $E=MC^2$ என்ற அற்புதமான விதியை அன்ஸ்டீன் கண்டறிந்ததில் உள்ளுணர் வின் பங்கும் உண்டு. அரசு இருக்கும் வரை மதமும் இருக்கும் என்றார் மார்க்ஸ். தமிழ்ச்சூழலில் இவ்வாறெல்லாம் மார்க்சியரிடமிருந்தும் பகுத்தறிவாளரிடமிருந்தும் நான் வேறுபடுகிறேன். என் சமய அனுப வம் இதற்குக் காரணம். அனுபவமில்லாமல் சமயத்தைப் புரிந்து கொள்ளவும் முடியாது.

பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம், பின்நவீனத்துவம் முதலிய பார்வை களை மார்க்சிய நோக்கில் நீங்கள் எப்படி உள்வாங்கிக்கொள்கிறீர்கள்?

பெரியாரியத்தையோ, தலித்தியம், பெண்ணியம் முதலியவற்றையோ

**பெண்ணுக்கு விடுதலை என்பது ஆணாதிக்கத்தை ஒழிப்பது. தொழிலாளிக்கு விடுதலை என்பது முதலாளியத்தை ஒழிப்பது. எவ்வகை ஆதிக்கத்தோடும் பெரியாரியம் ஒத்துச்செல்வதாக இருக்க முடியாது. அரசதிகாரத்தோடு ஒத்துழைப்பவர், அரசதிகாரத்தில் பங்குபெற முனைபவர் பெரியாரியராகவும் மார்க்சியராகவும் இருக்க முடியாது.**

நான் மறுக்கவில்லை. இவை சில வரையறைக்குள் முடங்கிவிடக் கூடாது என்பதுதான் என் கருத்து.

பெரியாரியத்தின் மையம் சமதர்மம்தான். சாதி, மதம், பார்ப்பனியம் முதலியவற்றைச் சாடுவதிலேயே பெரியாரியர் தம்மை முடக்கிக் கொள்கின்றனர். இத்தகைய முடக்கம் காரணமாக இவர்கள் முதலாளிய எல்லையைக் கடக்க முடியாது. முற்றான மனித விடுதலை நோக்கி இயங்க முடியாது. முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியம் எப்படி மனித விடுதலையை நோக்கி இயங்க முடியாதோ அது போலவே முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட பெரியாரியமும் சாதி என்றும் மதம் என்றும் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கலாமே அன்றி இவற்றில் வெற்றி பெறவும் முடியாது.

பெரியாரே ஓர் அற்புதமான கருத்தைத் தனக்குள் கொண்டிருந்தார். பெண்ணுக்கு விடுதலை என்பது ஆணாதிக்கத்தை ஒழிப்பது. தொழிலாளிக்கு விடுதலை என்பது முதலாளியத்தை ஒழிப்பது. எவ்வகை ஆதிக்கத்தோடும் பெரியாரியம் ஒத்துச்செல்வதாக இருக்கவும் முடியாது. அரசதிகாரத்தோடு ஒத்துழைப்பவர், அரசதிகாரத்தில் பங்கு பெற முனைபவர் பெரியாரியராகவும் மார்க்சியராகவும் இருக்க முடியாது. பெரியாரியரும் தமக்குச் சொத்து சேர்த்துக் கொள்ள முடியாது. அதிகாரத்தைச் சேர்த்துக் கொள்ள முடியாது. சாதி, மதம் ஒழிய வேண்டும் என்று போராடுவது தேவைதான், நான் மறுக்கவில்லை. இதனால் சாதி இதிக்கம் ஓரளவுக்கேனும் குறைந்தால் நல்லதுதான். தேர்தல் அரசியல் சாதி மதங்களை வளர்க்கிறது. முதலாளியத்தோடு ஒத்துச் சென்றால் சாதியை, முதலாளியத்தை, பார்ப்பனியத்தை ஒழிக்க முடியாது. எவ்வகை ஆதிக்கத்தையும் மார்க்சியம் ஏற்பதில்லை. அரசு உதிர வேண்டும் என்பது மார்க்சியத்தின் ஓர் அடிப்படை.

அதிகாரத்தை மக்கள் மயப்படுத்துவதன் மூலமே அரசதிகாரம் ஒழியும். இப்படித்தான் மக்கள் தம்மை நிர்வாகம் செய்துகொள்ள முடியும்.

தனியுடைமை, அரசதிகாரம், மதம் முதலியவை மக்களைப் பிளவுபடுத்தும். மக்களை அடிமைப்படுத்தும். ஆண் ஆதிக்கம் என்பதும் தனியே இயக்கமுடையது அன்று.தனியுடைமை, இராணுவம், மாபெரும் தொழில் நிறுவனங்கள் முதலியவற்றை நிர்வாகம் செய்யும் ஆண்களுக்குள் ஏற்படுகின்றஓர் வெறித்தனமான உணர்வுதான் ஆதிக்க உணர்வு. தனியுடைமை முதலியவைதான் தன்னை நெருங்கி இருப்பவருக்குள் ஆதிக்க உணர்வைத் தூண்டி வளர்க்கிறது. இறுதியில் தனியுடைமை அரசதிகாரம் ஒழிந்த நிலையில்தான் மனிதனுக்குள் சமத்துவம் ஏற்படும். சமதர்மம் நிலைக்கும்.

சுதந்திரம் பிரிவுபடாதது என்று மார்க்ஸ் எறியதை எஸ்.என்.நாகராசன் அடிக்கடி எறுவார். தொழிலாளிக்கு விடுதலை தேவை என்றால் முதலாளியை அவன் சார்ந்த பொருளியல் அதிகாரத்திலிருந்து விடுவிக்க வேண்டும். அடிமைக்கு விடுதலை தேவை என்றால் அவன் ஆண்டானையும் விடுவிக்க வேண்டும். இதேபோல பெண்ணுக்கு விடுதலை தேவை என்றால் இணையும் அதிகார வட்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும். எவ்வகை இதிக்கமும் மனிதனைச் சிறுமைப்படுத்தும் மனித மாண்பை அழிக்கும்.

பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம் என்பவை தனித்தனியே இயங்கவும் முடியாது. இவற்றின் உடனடி நோக்கம் சிலவகை ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதுதான் என்றாலும் இவற்றின் இறுதிநோக்கம் மனித விடுதலையாகத்தான் இருக்க முடியும்.

இன்றைய உலகமயமாதல், தனியார் மையப்படுத்தல் முதலிய சூழலில் எல்லாமே தலைதடுமாற்றத்திற்கு, குழப்பத்திற்கு, சீர்குலைவுக்கு உள்ளாகி வருகின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் எந்த ஒரு தேசத்தின் இறையாண்மையையும் ஒப்புக் கொள்வதில்லை. மனிதர் உட்பட அனைத்தும் மூலதனத்தின் இதிக்கத்திற்கு உள்ளடங்கித் தீர வேண்டும் என்கிறது உலக முதலாளியம். பொருளியல் இதிக்கத்திற்கு எவ்விடத்தும் தடை இருக்க முடியாது. தம் தேசம், தம் தொன்மை வரலாறு, வளமான தம் மரபு என்றெல்லாம் இனிப் பேசுவதில் பொருளில்லை. எல்லாமே தகர்ந்து வருகின்றன. ஒற்றை வரலாறு என்று இனிப் பேசுவதற்கில்லை. ஒரு தத்துவம் என இனிப் பேச முடியாது. நிகழ்காலம் என்பதைத் தவிர இறந்த காலமும் எதிர்காலமும் இனி இல்லை. அன்றன்றைக்குமான வாழ்வு இன்பத்துய்ப்பு என்று மனிதர் அடங்கி இருக்க வேண்டும்.

எவ்வகை இயக்கமும் உலகை இனி உய்விக்க முடியாது. இயற்கை முதலிய அனைத்தும் மனித நுகர்வுக்கே உரியவை. எல்லாமே இயந்திரமயம், கணினிமயமான சூழலில் தனிநபர் உழைப்புத்திறன், தனித்திறன் என்று பேசுவதில் பொருளில்லை. எந்த உறவும் நிரந்தரமானதில்லை. எதுவும் தற்காலிகமானதாகத்தான் இருக்க முடியும்.

வரலாற்றுக்கும் பொருளில்லை. வாழ்வுக்கும் பொருளில்லை. இப்படிப் பேசுகிறது பின் நவீனத்துவத்தின் ஒரு போக்கு. இதன் முன்னிலையில் மார்க்சியம் பெரியாரியம் போன்ற எதற்குமே பொருளில்லை. இப்படியெல்லாம் பேசுவது அமெரிக்காவின் இதிக்கத்திற்கு முதலாளிகளின் இதிக்கத்திற்குத் தேவையாக இருக்கலாம். இவர்களிடம் நம் தேசத்தை, வரலாற்றை, இயற்கையை, வாழ்வை ஒப்படைக்க முடியாது. எல்லாவற்றையும் இவர்கள் நம்மிடமிருந்து அபகரிக்க முனைந்திருக்கிறார்கள். இவர்களிடமிருந்து நம்மை, நம் தேசத்தை, நமக்கான இயற்கையை, நம் வரலாற்றை நாம் விடுவித்துக் கொள்ள வேண்டும். இத்தகைய தூண்டுதலை நமக்குள் தருவது மார்க்சியம். உலகமயமாதல் முதலிய சூழலில் இத்தகைய விடுதலை உணர்வை, பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம் இதியனவும் தமக்குள் கொள்ளவேண்டும். இத்தகைய போக்கை இடதுசாரி பின்நவீனத்துவம் என்றும் சில அறிஞர் அரற்றுகின்றனர்.

தமிழிலக்கியம் குறித்து மார்க்சிய நோக்கிலான உங்கள் பார்வையைச் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்குங்கள்? தொன்மை இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் என்று தமிழிலக்கியப்பரப்பு முழுவதும் விரிந்து செல்லும் உங்கள் ஆய்விலிருந்து சிலவற்றைக் கூறுங்கள்?

இருவேறு உலகத்து இயற்கை / திருவேறு தெள்ளியராதலும் வேறு என்பது வள்ளுவரின் வாக்கு. ஒரு காலத்தில் உலகம் ஒன்றுபட்டு இருந்தது. இன்னொரு காலத்தில் உலகம் இரண்டாகப் பிளவுபட்டது. பிளவுபட்ட உலகில் ஒரு பக்கத்தில் குவிந்திருக்கும் செல்வம். இன்னொரு பக்கத்தில் அறிவும் பண்பும். இவை இணைவதில்லை. இந்த முரண்பாட்டோடுதான் வாழ்ந்தாக வேண்டும். குறளுக்கு இப்படிப் பொருள் சொல்ல முடியும். இனக்குழுச் சமூகக்காலத்தில் மனிதர்களுக்கிடையில் பிளவு இல்லை. ஏற்றத்தாழ்வில்லை. பொய்யும் வழுவும் இல்லை. தனியு டைமை, அரசதிகாரம் என்பனவற்றை உள்ளடக்கிய வர்க்கச் சமூக வரலாற்றுக் காலத்தில் திரு ஒரு பக்கம். தெள்ளியராதல் இன்னொரு பக்கம். 'ஓர் இல் நெய்தல்கறங்க' என்ற புறநானூற்றுப்பாடல் இந்த உண்மையைத்தான் தனக்குள் தாங்கி உள்ளது.

வள்ளுவரின் இன்னொரு குறள்: உருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் / பேரறிவாளன் திரு. மழை இயற்கையாகப் பெய்கிறது. ஏர் நடுவில்

உள்ள குளத்தில் நீர் நிறைகிறது. யாருக்கு எவ்வளவு தேவையோ அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். இதற்குத் தடை இல்லை. இதே போலத்தான் ஒருவனிடத்தில் குவிந்திருக்கிற செல்வமும். 100 பேர், 1000ம் பேர் உழைத்ததன் விளைவாக ஒருவனிடத்தில் செல்வம் குவிந்துள்ளது. அவன் பேரறிவாளன் என்றால் இந்த உண்மை அவனுக்குத் தெரியும். யாருக்கு என்ன தேவையோ அதை இவன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். பேரறிவுடையவன் இவ்வாறு செய்வான். (அறிவில் குறைந்தவன் வம்பு செய்வான்) செல்வம் தனதே என்பான். இவன் பொய்யன். வள்ளுவர் இவனை ஒப்புக் கொள்ளமாட்டார். வள்ளுவரின் அறம் இத்தகையது. இதுவே தமிழறம். சங்க இலக்கியத்தினுள்ளும் இதற்குச் சான்றுகள் உண்டு.

கோப்பெருஞ்சோழன் தன் செல்வத்தைப் பலரோடும் பகிர்ந்து கொள்வான். அவன் மக்களுக்கு இது உடன்பாடில்லை. தந்தைக்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள். தங்களுக்கு உடைமை வேண்டும். அதிகாரம் வேண்டும். தந்தை போல மக்களில்லை. சமூகம் மாறிவிட்டது. தனியுடைமை மனிதனைப் பற்றிக் கொண்டது. சோழன் என்ன செய்வான். இடையில் வந்த புலவர் அறிவுரை எறுகிறார். அரசதிகாரத்திலிருந்து விலகி அரசன் இற்றங்கரையில் வடக்கிருந்து உணவு, நீர் உண்ணாமல் உயிர் துறந்தான். புலவர் பலர் அவனோடு இருந்து உயிர் நீத்தனர். இவர்களுக்கும் புதிதாக வந்த உடைமைச் சமூகம் உடன்பாடில்லை. மனிதனைப் பிளவுபடுத்துகிறது இந்தச் சமூகம். உடைமை மனிதனுக்கு வெறி ஏற்றுகிறது. இந்த வெறி நமக்கு வேண்டாம். இந்தச் சமூகம் நமக்கு வேண்டாம். சங்க காலச் சமூகம் இப்படித்தான் இயங்கியது. இது விரிவான கதை.

இதன் தொடர்ச்சியாகத்தான் வள்ளுவரும் இளங்கோவும் வருகின்றனர். அந்நிய தேசத்திலிருந்து வரும் கோவலன் கையில் விலையுயர்ந்த சிலம்பு இருக்கிறது. வாழ்வு தேடி வருபவனிடம் இப்படிச் சிலம்பு இருக்க முடியாது. இகவே அவன் கள்ளன். பொற்கொல்லன் எறியதை அரசன் ஏற்றுக் கொண்டான். மனைவியின் கூடல் தீர்க்கும் அவசரம் அவனுக்கு. காம உணர்வு அவனை ஆட்கொண்டிருக்கிறது. அவசரத்தில் ஆணையிட்டான். காவலன் கோவலனைக் கொன்றான். அப்புறம் கண்ணகி வழக்காடுகிறாள். அரசனோடு அரசியும் மாண்டாள். எரிதழல் தீப்பற்றி எரிகிறது. தெய்வம் தடுமாறுகிறது. இப்படிச் செல்கிறது சிலம்பின் கதை. இதுதான் உடைமைச் சமூகம். இத்தகைய சமூகம் அழியத்தான் வேண்டும். தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்கிறது, இந்தச் சமூகம். இளங்கோவின் நெஞ்சில் இருப்பதும் தமிழறம். சமத்துவம், சமதர்மம் என்ற அறம்.

கம்பர் காவியத்திற்கு வருவோம். மார்க்சிய நோக்கில் கம்பர் காவியத்தை நான் பொருள்படுத்துகிறேன். அரசுப் பதவி துறந்து காட்டிற்கு மனைவியோடு வருகிறான் இராமன். வேடர்களோடு உறவு கொள்கிறான். அதன் பின்னர் சுக்ரீவன் முதலியவர்களோடு தோழமை உறவு கொள்கிறான். இராவணனுக்கு இட்சி, அதிகாரம் அனைத்தும் தேவை. அடுத்தவன் மனைவி அழகி என்றால் அவளும் தனக்குத் தேவை. அவன் அதிகாரம், படை வலிமை முதலியவற்றில் மிக்கவன். ஏழைகளோடு ஏழைகள், காட்டுவாசிகள் முதலியவர்களோடு தோழமை கொண்ட இராமன் அவர்களின் பேருதவியால் இராவணனை வென்றான். என்ன இருந்தாலும் அவனுக்குள் இணாதிக்கம் எஞ்சியிருக்கிறது. சீதை தீக்குளிக்கிறாள். அயோத்தியில் இராமன் அரசனாகிறான். அரசதிகாரம் மனைவியைக் காட்டுக்கு அனுப்புகிறது. அதிகாரம் கொடியது. மனிதர்களின் தரத்தைத் தாழ்த்துவது. இறுதியில் இராமன் யமுனையில் மாண்டான். மார்க்சிய நோக்கில் கம்பர் காவியத்திற்கு இப்படிப் பொருள் சொல்லலாம்.

தற்காலத்திற்கு வருகிறோம். பாரதியின் அத்வைதத்தை மார்க்சிய நோக்கில் பொருள்படுத்துகிறோம். எல்லாமே ஒன்று என்றால் யார் யாரையும் அதிகாரம் செய்ய வேண்டாம். இங்கிலேயன் இள வேண்டியதில்லை. பிராமணன் நமக்குத் தேவையில்லை. எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் இனம். இங்குள்ளவை யாவருக்கும் பொது. ஆணும் பெண்ணும் சமம். இது பாரதியின் சமதர்மம். சங்க காலத்தில் நமக்குள் வந்த ஒப்புரவு என்ற உணர்வு, நம் காலத்தில் சமதர்மம். தமிழிலக்கியத்தினுள் இடையறாது இயங்குகிறது இந்த நீரோட்டம்.

நெடுங்காலத் தமிழிலக்கியத்தை, மார்க்சியத்தை இப்படித்தான் நான் வாசிக்கிறேன். தமிழ்ச் சமூகத்தில் சங்ககாலம் முதற்கொண்டு இன்று வரை நடைபெறுவது வர்க்கப் போராட்டம்தான் என்பதில் எனக்கு மறுப்பில்லை. சங்க காலத்திலும் நடைபெற்றது வர்க்கப் போராட்டம்தான். பாரி முதலிய வேளிர்கள் மக்கள் சார்பினர். நால்வகைப் படையோடு எடிய வேந்தர் மக்களிடமிருந்து மெல்ல மெல்ல விலகியவர்கள் எனினும் கபிலர், அவ்வையார் முதலிய தமிழ்ச் சான்றோர் நெஞ்சில் தங்கி இருந்தது, முந்தைய இனக்குழுச் சமூகத்தின் பொதுமை அற உணர்வு. உடைமைச் சமூகம் உச்சம் பெற்ற காலத்தில் பாணர், விறலியர் முதலியவர்களுக்கு வாழ்வில்லை. பரத்தையரோடுதான் இவர்களுக்கு வாழ்வு. அதியனுக்குப் பிறகு அவ்வை புலம்பியது 'இனிப் பாடுநரும் இல்லை பாடுநருக்கு ஒன்று உகுநரும் இல்லை' என்பது உண்மையாயிற்உ.

உடைமை இதிக்கம் பெற்உ வரும் சூழலில்தான் களவுமணம் ஒதுக்கப்பட்டது. எனினும் புலவர்கள் இதையே போற்றினர். கபிலர் அறத்தொடு நிற்றலைப் போற்றிப்பாடினார். தொல்காப்பியருக்கு நிலமும் பொழுதுமே முதற்பொருள். பிற்காலத்தில் இறைவன்தான் முதற்பொருள். சமணர் வந்த காலத்தில் வினை முதற்பொருள். இப்படித்தான் வர்க்கச் சமூகம் பெருகியது. சங்க காலத்தில் போர்க் கொடுமைகள் அதிகம். அடுத்த காலத்தில் மக்கள் வறுமை கொடிது. மன்னர்கள் செல்வர்கள் கொடுத்த வறுமை தீராது. இனித் தெய்வம் வேண்டும். அமுதசுரபியும் வேண்டும்.

உடைமையும் அரசதிகாரமும் மேலும் மேலும் வலுப்பெற்ற காலத்தில் மக்கள் இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் தனக்குள்ளிருந்தும் அந்நியமாயினர். நெல்லும் நீரும் இனி அவர்களே தேடிக்கொள்ள முடியாது. எரும் உறவும் இனி உறுதியில்லை. மனிதர்களுக்கு இடையிலும் எத்தனையோ பிளவுகள். மன்னர்களின் கொடுமையும் அதிகம். இனித் தெய்வம்தான் மக்களைக் காக்க வேண்டும்.

துறவு, தவம் இனி நல்லது. நாயன்மார்களும் இழ்வார்களும் தமிழ் நிலம் முழுவதும் சுற்றிவந்தனர். தமிழிசையோடு வாழ்ந்தனர். வர்க்கச் சமூகம் இப்படித்தான் பக்தி இயக்கத்தைத் தோற்றுவிக்கிறது. தெய்வங்களையும் வினைக் கோட்பாடுகளையும் உற்பத்தி செய்கிறது. கடவுள் என்ற பேருணர்வை அழகைப் படைக்கிறது. அந்நியமானவன் தனக்குள் சொர்க்கத்தைப் படைத்துக் கொள்கின்றான். இவ்வகை மயக்கம் அவனுக்குத் தேவை. தமிழிலக்கியத்தை இப்படித்தான் நேசத்தோடு பொருள்படுத்துகிறேன். மார்க்சியம் எனக்குக் கை கொடுக்கிறது. பார்வை கொடுக்கிறது. தமிழிலக்கியத்தில் என்னை வாழவைக்கிறது. தமிழிலக்கியம் இப்படித்தான் எனக்குள் வள்ளுவரும் இளங்கோவும் பாரதியாரும் பாரதிதாசனும் வாழ்கின்றனர். என்னைப் பொறுத்தவரை வள்ளுவரும் இளங்கோவும் வணிகச் சமூகத்திற்குச் சேவை செய்யவில்லை.

சங்கத் தமிழ்ச் சான்றோர் அரசதிகாரத்தோடு ஒத்துச் செல்லவில்லை. சாதியையும் மதப்பற்றையும் தமிழ்ச் சான்றோர் போற்றவில்லை. தமிழிலக்கியத்தின் மையம் எனச் சித்தர்களைத்தான் மதிக்கிறேன். வள்ளுவர் முதற்கொண்டு வள்ளலார் வரை இயங்கியது சித்தர் இயக்கம். இந்த இயக்கத்தின் வீச்சில்தான் பெரியார் முதலியவரையும் மதிப்பிட முடியும். இம்முறையில்தான் மார்க்சியமும் தமிழிலக்கியமும் ஒரு புள்ளியில் இணைந்திருக்கின்றன. மார்க்சியம் தான் தமிழிலக்கியத்தைச் சரியான முறையில் பொருள்படுத்தமுடியும். புலமை நெறியை மார்க்சியம் சாட வேண்டியதில்லை. சடங்குகள் இல்லாமல் சமூகம் இல்லை. பக்தியும் மனிதனின் இதார உணர்வில் ஒன்று.

**மார்க்சியம் குறித்துத் தமிழக மார்க்சியர் பலரிடமிருந்து நீங்கள் வேறுபடுகிறீர்கள். எவ்வகையில் எந்தக் காரணத்தோடு வேறுபடுகிறீர்கள்?**

என் வாழ்வியல் அனுபவங்கள் ஒரு பக்கம், இன்னொரு பக்கம் எஸ். என். நாகராசன் முதலியவர்களோடு உறவும் விரிவான படிப்பறிவும் இரண்டும் இணைந்த நிலையில் மார்க்சியம் குறித்த தெளிவு எனக்கு ஏற்பட்டது. இது குறித்து சுருக்கமாக முதலில் நான் சொல்ல வேண்டும். மார்க்சியத்தை நம் மரபிலிருந்து தான் செறித்துக் கொள்ளவும் முடியும். நம் மண்ணுக்கு மார்க்சியம் தேவை. மார்க்சியம் இல்லாமல் நம் வாழ்வில் மேம்பாடு சாத்தியம் இல்லை. நம் வரலாற்றில் இருந்து மார்க்சியத்தை நாம் புரிந்து கொள்ளவும் வேண்டும். நான் தமிழிலக்கிய மாணவன். மார்க்சியத்தின் வேர்கள் தமிழிலக்கியத்தினுள்ளும் தொடக்கக்காலம் முதலே உண்டு என்ற புரிதலும் எனக்கு ஏற்பட்டது. இவ்வாறெல்லாம்தான் மார்க்சியம் எனக்குள்

**இந்தியாவிலேயே முதன்முறையாக மார்க்சின் அந்நியமாதல் பற்றி பேசியவர் எஸ்.என். நாகராஜன் அவர்கள்தான். மார்க்சின் கையெழுத்துப் படிகளில் அந்நியமாதல் என்ற போக்கை நுட்பமாக மார்க்ஸ் எழுதியிருக்கிறார்.**

செறிவு பெற்றது. மார்க்சியத்தோடு எனக்கு உறவு ஏற்படவில்லை என்றால் என் வாழ்வு அர்த்தமற்றதாகத்தான் போயிருக்கும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக மார்க்சின் அந்நியமாதல் பற்றி பேசியவர் எஸ்.என். நாகராஜன் அவர்கள்தான். மார்க்சின் கையெழுத்துப்படிகளில் அந்நியமாதல் என்ற போக்கை நுட்பமாக மார்க்ஸ்எழுதியிருக்கிறார்.வரலாற்றுக்குமுற்பட்ட காலத்தில் மனிதன் இயற்கையோடும் சமூகத்தோடும் தன்னோடும் ஒன்றியிருந்தான். தனியுடைமை, அரசதிகாரம் என்பனவற்றோடு எடிய வரலாற்றுக் காலத்தில் மனிதன் இயற்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் இறுதியாகத் தன்னிலிருந்தும் அந்நியமானான். இந்தச் சூழலில்தான் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் போட்டி, பொறாமை, போர்கள் முதலியவை ஏற்பட்டன. இத்தகைய வர்க்க முரண்பாடுகள் இல்லாத இன்னொரு காலத்தில் மனிதன் அந்நியமாதலில் இருந்து விலகி இயற்கையோடும் சமூகத்தோடும் தன்னோடும் ஒன்றியிருப்பான். இத்தகைய சமுதாயம்தான் கம்யூனிச சமுதாயம் என்றார் மார்க்ஸ்.

மனிதன் தனக்குள்ளும் பிளவுபட்டு இயற்கையோடும் சமூகத்தோடும் தான் கொண்ட உறவு அறுபட்டு தன் வாழ்வின் பொருள் என்ன? நான் எங்கிருந்து வருகிறேன்? எங்கே போகிறேன்? என்பது தெரியாமல் தனக்குத்தானே அந்நியமான சூழலில்தான் மனிதனுக்குள் துயரங்கள், வேதனைகள், மயக்கங்கள், மாயைகள் ஏற்படுகின்றன. கடவுள், மதம், சடங்குகள், சொர்க்கம், நரகம் என்பனவற்றுக்கெல்லாம் மனிதன் வசப்படுகிறான். இந்த நிலையில் தனக்குள்ளும் புறத்திலும் மனிதன் தேடுகிறான். இத்தகையத் தேடலின்போதுதான் மனிதன் தன்னை உணர்கிறான். வரலாறு, சமூகம் என்பனவற்றை உணர்கிறான். தன்னை இவ்வாறு செய்தவர்களோடு போராடுகிறான். இறுதியில் தன்னை மீட்டுக் கொள்கிறான். மனிதனின் வரலாற்றை இப்படி மார்க்சியம் விளக்குகிறது. இத்தகைய விளக்கத்தை வேறு எந்தத் தத்துவமும் நமக்குத் தருவதில்லை.

மார்க்சின் அந்நியமாதல் என்ற இந்த விளக்கத்தைப் புரிந்துகொண்ட நிலையில்தான் இலக்கியம், மதம் இவற்றின் பார்வைகள் நமக்குத் தெளிவுபடும். சாதி, மதங்கள் முதலியவை எப்படி ஏற்பட்டன என்பதும் புரியும். இந்திய வரலாற்றையும் இத்தகைய பார்வையில் இருந்துதான் புரிந்துகொள்ள முடியும்.

வாழ்வுக்கு என்ன அர்த்தம் என்ற தேடல் அந்நியமாதல் என்பது பற்றிய புரிதலோடுதான் ஏற்படுகிறது. மனித வாழ்வுக்கு அர்த்தம் என்ன என்பதை மார்க்சியம்தான் நமக்குத் தெளிவாகக் கற்பிக்கிறது. குறிப்பிட்ட வரலாறு, பொருளியல் சூழலில் நாம் அகப்பட்டிருக்கிறோம். இந்தச் சூழலில் உள்ள முரண்பாடுகளுக்குள் நாம் இருக்கிறோம். நம்மோடு நாமே போராடுகிறோம். புறத்திலும் அகத்திலும்போராடுகிறோம்.வாழ்வைப்புரிந்துகொள்கிறோம்.உடைமை, அதிகாரம் முதலியவை வாழ்வுக்கு உண்மையான பொருளாக முடியாது. சமத்துவம், சமதர்மம் இகியவற்றின் மூலமே மனிதன் தனக்கான வாழ்வைப் பெறமுடியும். மார்க்சியத்தின் மெய்யியல் என இதைத்தான் சொல்லமுடியும்.

இதிக்கம் எந்த வடிவில் இருந்தாலும் மனிதவாழ்வு அர்த்தம் இழக்கும். அரசதிகாரம், மத அதிகாரம், பொருளியல் அதிகாரம், ஆணாதிக்கம் என்பனவெல்லாம் மனித வாழ்வைச் சிதைக்கும் வரலாற்றிலிருந்து சமூகத்திலிருந்து எவ்வகை ஆதிக்கத்தையும் அறவே களைந்து இதிக்கமற்ற சமத்துவமான எல்லோருக்கும் எல்லாம் என்பதான வாழ்வை ஏற்படுத்துவதுதான் மார்க்சியத்தின் இறுதி இலக்கு. தற்பெருமை, தன் அகங்காரம், காமம், வெகுளி முதலியனவும் மனிதவாழ்வின் தரத்தை நாசமாக்கும் இத்தகைய மனிதன்தான் இயற்கையைக் காப்பான். உயிரினங்களைக் காப்பான். இயற்கையோடு ஒத்து வாழ்வான். இத்தகைய பேருணர்வு மார்க்சியனுக்கு இருக்க வேண்டிய உணர்வு. மனித வாழ்வுக்கு இதாரமான கலாச்சாரம், மெய்யியல் என்றெல்லாம் இதனைத்தான் எறமுடியும். வர்க்கங்கள் இருக்கும்வரை அரசு இருக்கும் மதம் இருக்கும் என்று மார்க்ஸ் எறியதையும் இவ்வகையில்தான் புரிந்துகொள்ள முடியும். வரலாறு, சமூகம் முதலியவை பற்றிய சரியான பார்வை தருவது மார்க்சியம் தவிர வேறில்லை.

மார்க்சியத்தை இவ்வாறுதான் எனக்குள் செறித்துக் கொண்டேன். என்னுடைய தமிழ் இலக்கியப் பார்வையென்பது மார்க்சியம் பற்றிய புரிதலோடு எடியதுதான். 'இதயமற்ற உலகின் இதயம். இன்மாவற்ற உலகின் இன்மா' என்று மதம் பற்றி மார்க்ஸ் எறினார். அந்நியமாதல் என்றபுரிதல்வழியேதான் மார்க்சின் மதம்பற்றிய பார்வையைப்புரிந்து கொள்ள முடியும். எந்தவொரு மதத்தினுள்ளும் இரண்டு அடுக்குகள் உள்ளன. புரோகிதம் முதலியவை சார்ந்தது மேலடுக்கு. இன்மீகம் சார்ந்தது அடுத்த அடுக்கு. எல்லோருக்குமானது இந்த உலகம். மனிதர் அனைவரும் சகோதரர்கள். அன்பைத்தவிர மனிதனுக்கு வேறொன்று தேவையில்லை. எல்லாவற்றையும் மனிதர் பகிர்ந்துகொள்ள வேண்டும். இத்தகைய இன்மீக உணர்வு மதங்களின் உள்ளடக்கம். இலக்கியமும் மனிதவாழ்வின் மேன்மை குறித்தது. மார்க்சியத்தின் மெய்யியல் என்றும் கலாச்சாரம் என்றும் இவற்றைத்தான் குறிப்பிட முடியும். இவை என் புரிதல்.

இவ்வாறெல்லாம் நானும் எஸ்.என். நாகராசனும் எனது நண்பர்கள் சிலரும் தமிழகத்தில் பிற மார்க்சியரிடமிருந்து இப்படித்தான் வேறுபடுகிறோம். மார்க்சியத்திற்கு இயங்கியல்தான் தத்துவம் என்றும் இயற்கை விஞ்ஞானத்தின் உச்ச அளவிலான வளர்ச்சி நிலையில் தத்துவத்திற்கு வேலையில்லை என்றும் மார்க்சிய ஆசான்கள் சிலர் கருதினர். நாங்கள் இப்படிக்கருதவில்லை. மேற்குலகில் வளர்ச்சிபெற்ற இருத்தலியல்தான் வாழ்வுக்கு அர்த்தம் என்ன என்ற கேள்வியை எழுப்பியது. உலகில் தோன்றிய எல்லாச் சமயங்களும் இந்தக் கேள்வியோடுதான் தொடங்குகின்றன. இந்தக் கேள்வியும் மார்க்சியம் தனக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விதான். உண்மையில் இந்தக் கேள்விக்கு மார்க்சியம்தான் சரியான விடையைத்தருகிறது. இயந்திரவியல் தனமான, வறட்டுத்தனமான மார்க்சியம் இந்தக் கேள்வியை மறுக்கும்.

மார்க்ஸ் தன் இளமைக்காலத்தில் அந்நியமாதல் பற்றிப்பேசியது அவர், மதத்திலிருந்து விடுபடாத நிலையில்தான் என்று சில மார்க்சியர் கருதினர். உண்மை இப்படி இல்லை. அந்நியமாதல் என்ற கேள்வியில் இருந்துதான் மார்க்சியத்திற்கான மெய்யியல் பார்வைக்குள் செல்ல முடியும். இத்தகைய பார்வையுடையோர்க்குத் தன்முனைப்பு அதிகார வெறி முதலியவை இருக்க முடியாது. இத்தகைய முறையில் பிற மார்க்சியரிடமிருந்து நாங்கள் முற்றாக வேறுபட்டோம். நாங்கள் கட்சிக்குள் தொடர்ந்து இருக்க முடியவில்லை என்பதற்கும் இது காரணம். அரசியலுக்கு இலக்கியம் சேவை செய்யவேண்டும் என்ற பார்வையும் எங்களுக்கு உடன்பாடில்லை. இதன் காரணமாகவே தமிழிலக்கிய ஆய்வில் பிற மார்க்சியரிடமிருந்து நான் முற்றாகவே மாறுபட்டேன்.

அறுபதுகளின் தொடக்கம் முதலே மார்க்சியத்தில் எனக்கு ஈடுபாடு இருந்த போதிலும் எஸ்.என்.நாகராசன் அவர்களோடு ஏற்பட்ட நெருக்கமான உறவின் விளைவாகவே மார்க்சியம் குறித்து எனக்குத் தெளிவு ஏற்பட்டது.

இரஷ்ய மார்க்சியத்திலிருந்து மாவோவின் மார்க்சியத்திற்கு நாங்கள் எப்படி வந்து சேர்ந்தோம் என்பதையும் இனி சொல்லலாம். சோசலி சமும் பெருந்தொழிலும் ஒத்துப்போக முடியாது என்று ஏங்கெல்ஸ் எழுதியிருக்கிறார். பெருந்தொழிலுக்கு பெரும் மூலதனம் தேவை. மூலதனத் திரட்சிக்காக சோவியத் அரசு தன் தேசத்து உழவர்களை, தொழிலாளிகளை சுரண்ட வேண்டியிருந்தது. இதற்காகவே உழைப் பாளர் முகாம்களும் ஏற்பட்டன. பெருந்தொழில் வளர்ச்சியோடு நகர வளர்ச்சி நடுத்தர வர்க்கத்தின் பெருக்கம் முதலியனவும் ஏற்பட்டன. அரசு, இராணுவம் என்பனவும் இதிக்கம் பெற்றன. அரசதிகாரத்தோடு கட்சியதிகாரமும் இணைந்துகொண்டது. மக்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாகினர். இயற்கை நாசமாயிற்று. மேற்கத்திய முதலாளிய நாடு களை எதிர்க்க வேண்டும். வெற்றிகொள்ள வேண்டும் என்ற உணர் வின் விளைவாகத் தன்னை அறியாமலேயே சோவியத் ஒன்றியம் இதிக்க அரசாக, முதலாளிய அரசாக, அதிகார வர்க்க அரசாக மாறியது.

அரசதிகாரம் உதிரவில்லை. ஸ்டாலின் காலத்தில் பெருந்தொழில் வளர்ச்சியும் அரசு/கட்சி அதிகாரத்தின் வளர்ச்சியும் எடுதலா யின. பெயரளவுக்கு இதை சோசலிசம் என்றார்கள். இனால் இதே சமயம் சோவியத் ஒன்றியத்தின் போக்கிலிருந்து மாவோ மாறு பட்டார். உற்பத்திச் சக்திகளுக்கு முதன்மை என்பது இறுதியில் முதலாளியத்திற்கே வழிவிடும் என்பதை மாவோ கண்டார். எங் களைப் பொறுத்தவரை சோவியத் மார்க்சியத்தைவிட மாவோவின் மார்க்சியத்தையே மார்க்சியம் என ஏற்றுக் கொண்டோம். இன்று வரையில் மார்க்சிய லெனினியம் என்பதிலிருந்து நாங்கள் மாறு படவில்லை.

நாளடைவில் மேலும் சிலவற்றைப் புரிந்துகொண்டோம். மேற்குலகி லும் மார்க்சியம் இற்றல் மிக்க சில பரிமாணங்களோடு வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. இலக்கியம், கலாச்சாரம், உளவியல் என்ற வகை யில் மார்க்சியம் தனக்குள் விரிவு பெற முடியும். இப்படித் தொடங்கி மார்க்சியத்தை நாங்கள் விரிவாகக் கற்றோம்.

சோவியத் ஒன்றியத்தில் சோசலிசத்தின் தகர்வு என்பது உண்மையில் முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியத்தின் தகர்வுதான் என்ற உண்மையும் எங்களுக்குப் புரிந்தது.

தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள், சிற்றிதழாளர்கள், படைப்பாளிகள் முதலியவர்களோடு நீங்கள் கடந்த 50 ஆண்டுகளாகக் கொண்டிருக்கும் உறவு பற்றி...?

என் நினைவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் முறையில் தமிழின் மிகச் சிறந்த இலக்கியவாதிகள் முதலியவர்களை இங்கு முதலில் தொகுத்துக் கொள்ள விரும்புகின்றேன். சி.சு.செல்லப்பா, க.நா. சுப்பிரமணியம், சிட்டி, பிரமிள், வெங்கட்சாமிநாதன், சுந்தரராம சாமி, அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, ஞானக்எத்தன், ஜி.எஸ்.இர்.கிருஷ்ணன், தமிழவன், ராஜ் கௌதமன், கைலாசபதி, சிவத்தம்பி, எஸ்.பொன்னுத்துரை, நுஃமான், யேசுராஜா, டொமினிக் ஜீவா, பத்மனாப ஐயர், பிரபஞ்சன், கல்யாண்ஜி, கலாப்ரியா, நாஞ்சில் நாடன், ஜெயமோகன், பொன்னீலன், முத்துமோகன், நாகார்ச்சுனன், எம்.டி.முத்துக்குமாரசாமி, டாக்டர் தேலூர்து, க.ப.அறவாணன், மா.இலெ.தங்கப்பா, க.பஞ்சாங்கம், புவியரசு, சிற்பி, கனல்மைந்தன், சு.சமுத்திரம், எம்.ஜி.சுரேஷ், பிரேம், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், க. பூரணச்சந்திரன், ஜீவஒளி, ரவி சீனிவாஸ் நீஇப்படி இன்னும் பலர் என் நினைவில் மட்டும் அல்ல; எனக்குள்ளும் நுழைந்து என் ஆளுமையை விரிவுபடுத்தியதோடு பக்குவப்படுத்தியவர்கள் என இன் னும் சிலரையேனும் நான் குறிப்பிட வேண்டும்.

இவர்களோடு எனக்குத் தமிழ் கற்பித்த பேராசிரியப் பெருமக்கள் எனவும் பலரையும் குறிப்பிட வேண்டும். ஒவ்வொருவரைப் பற்றியும் என் அனுபவம், புரிதல் என்று சிலவற்றையேனும் சொல்லி வைக்க நான் விரும்புகின்றேன்.

செல்லப்பா சில சமயம் வற்புறுத்திய போதும் நான் மௌனியைச் சந்திக்கவில்லை என்பது என் வருத்தம். தி. ஜானகிராமனோடு ஒரு கருத்தரங்கில் உரையாடியது என் நினைவில் என்றும் பசுமையாக இருக்கும். தி.க.சி. வல்லிக்கண்ணன், செந்தில்நாதன் முதலியவர்களும் எனக்குள் சில உணர்வுகளை விட்டு வைத்திருக்கின்றனர். பிரமிளும் வெங்கட் சாமிநாதனும் வானம்பாடி இயக்கத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும் மார்க்சியன் என்ற முறையிலும் என்னைக் கடுமையாகச் சாடினர் என்றாலும் நேரில் இவர்களைக் கண்டு உரையாடியபோது இவர்களோடு நான் கரைந்துவிட்டேன். செல்லப்பாவும் க.நா.சு.வும் கவிதை, இலக்கியம் திறனாய்வு என எனக்குள் பெரும் பாதிப்பை ஏற் படுத்தியவர்கள். அசோகமித்திரனும் இந்திரா பார்த்தசாரதியும் எங்குக் கண்டாலும் என்னோடு அருகிருந்து நெருக்கமாக எது பற்றியும் தயக்க மில்லாமல் என்னோடு உரையாடுகின்றனர். நான் எந்தக் கேள்வியையும் இவர்களோடு எழுப்ப முடியும். சமுத்திரத்தோடு என்னுடைய உறவு மகிழ்ச்சியும் கொஞ்சம் கசப்பும் கொண்டது.

அசோகமித்திரன் தொடங்கி மார்க்சியம் சாராத ஆனால் மனிதநேயச் சார்புடைய எழுத்தாளர் பலரோடு என் உறவை மார்க்சியர் விமர்சனம் செய்கின்றனர். இவர்கள் எவரும் சமூக அக்கறை அற்றவர்கள் இல் லை. இவர்களில் ஒரு சிலரைப் பார்ப்பனர் என்று வசைபாடி இவர் கள் தமிழுக்குச் செய்த அரும்பணியை என்னால் ஒதுக்க முடியாது. கல்யாண்ஜி, கலாப்ரியா, பிரபஞ்சன் முதலியவர்கள் நம் நெஞ் சை அன்பால் குளிர்விக்கின்றனர். இத்தனை அன்பை இவர்கள் எங்கிருந்து நமக்கு வழங்குகிறார்கள் என்பது எனக்குள் வியப்பு.

ஜி.எஸ்.இர்.கிருஷ்ணன், தமிழவன், ராஜ்கௌதமன் இகியவர்கள் அமைப்பியல் முதலிய புதிய திசைகளில் எனக்குள் புதிய வெளிச்சங் களைத் தந்தவர்கள். ஜெயமோகன், பிரேம், எம்.ஜி.சுரேஷ் ஆகிய வர்கள் தமிழுக்குப் புதிய புதிய ஆற்றல்களைத் தொடர்ந்து வாரி வழங்குகிறவர்கள். இவர்களோடு எஸ். இராமகிருஷ்ணனையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

ஞானக்கூத்தன் மட்டும் அல்லாமல் மனுஷ்யபுத்திரன் முதலிய எத்த னையோ கவிஞர்கள் தமிழ்க் கவிதையைப் புதிய திசைகளில் நகர்த்திய வர்கள். இவ்வகையில் பிரம்மராஜன் ஒரு பெரும் சாதனையாளர். அபியைப் பொருத்தவரைத் தனக்குள் தேடித்தேடிச் சென்று இறுதி யாக வெட்ட வெளியில் தன்னை இழந்தவர். தமிழன்பன், சிற்பி, புவியரசு முதலியவர்கள் தமிழை நிகழ்காலத்தோடு தமிழ்ச் சமூகத் தோடு, பாரதி பாரதிதாசனோடு இணைத்தவர்கள்.

க.பூரணச்சந்திரன், ரவி சீனிவாஸ், ஜீவஒளி இகியவர்கள் உலக அள வில் இன்றும் தேடுதலை நிகழ்த்திக் கொண்டிருப்பவர்கள். ஜீவ ஒளி பிரபஞ்சம் பற்றிய இய்வில் தன்னை இழந்தவர். பிரமிள் அளவுக்கான வீச்சைத் தமிழில் எவரும் எட்டவில்லை.

எஸ்.என். நாகராசன் கட்டுரைகள் இருபது இண்டுகளுக்கு முன்பே ஆங்கிலம் வழியே உலக அளவில் சென்றிருக்கும் என்றால் உலக அளவிலான மார்க்சியப் பேரறிஞர்களில் ஒருவராக அவரை உலகம் கொண்டாடியிருக்கும்.

எஸ்.வி. ராஜதுரையை சாமிநாத சர்மாவோடு இணைத்துப் பேசுவது கூட அவரைப் பற்றிய மிக எளிய மதிப்பீடு. அ.மார்க்ஸ் முன்பு என் னைச் சில முறை சாடினாலும் அவரது பன்முனை அறிவு வீச்சுக்கள் எனக்குப் பெரிதும் வியப்பு அளிக்கின்றன.

தமிழில் ஞானபீடம் என்ற தகுதியை ஜெயகாந்தன் பெற்றதில் வியப்பு இல்லை. சுந்தரராமசாமி, ஜெயமோகன், எஸ்வி. ராஜதுரை, லா.சா. ராமாமிர்தம் முதலியோர்களும் இந்தத் தகுதியை எளிதாகப் பெறும் தகுதிஉடையவர்கள். தமிழில் இத்தனை அறிய இளுமைகளை மார்க்சியர் கொண்டாடி இருக்க முடியும். மார்க்சியம் பற்றிய அறிவு இவர்களை எல்லாம் ஏன் புறந்தள்ள வேண்டும்?

டால்ஸ்டாயை லெனின் கொண்டாடியதுபோல தாஸ்தாவ்ஸ்கியைப் பொருட்படுத்த வில்லை என்பது ஏன் என்று எனக்குப் புரிவதில்லை. லெனினுக்குள் அடைபட்டிருந்த பகுதி எதுவாக இருக்க முடியும்? தமிழகத்தில் மார்க்சியரும் இப்படித்தம்மை ஏன் அடைத்துக் கொள்ள வேண்டும்?

பொன்னீலன் அளவுக்குவிரிந்த பார்வை இவர்கள் எவருக்கும் இல்லை. மார்க்சியரின் இலக்கியப் பார்வையைக் கைலாசபதி ஓரளவுக்கு முட மாக்கினார். எஸ்.பொன்னுத்துரையைக் கைலாசபதியால் முடக்கவே முடியவில்லை.

இவ்வகையான சில குறைபாடுகளைச் சிவத்தம்பி ஓரளவுக்கேனும் நீக்கி வரத்தான் செய்கிறார். மார்க்சியருக்குத் தமிழின் இழம் ஏனோ தெரிய

# க.நா.சு., செல்லப்பா, வெங்கட்சாமிநாதன், பிரமிள் முதலியவர்களை நான் கொண்டாடிய அளவிற்கு மார்க்சிய எழுத்தாளர், திறனாய்வாளர்களை நான் பாராட்டவில்லை என்று என்னைப் பற்றி ஒரு சிலர் குறைகூறுவது உண்டு.

வில்லை. சிவத்தம்பி தமிழின் இழத்தைத் தொடர்ந்து தேடுகின்றார். கேசவன், வானமாமலை இகியவர்கள் தமக்குள் இறுகி இருந்தார்கள். வானமாமலை, தமிழுக்குப் புதிய சில திறப்புக்களைச் செய்தார்.

நாட்டார் வழக்காற்றியலைத் தமிழ் அறிவுலகில் நிலை நிறுத்தியவர்களில் டாக்டர் தே. லூர்து அவர்களின் பங்களிப்பை நம்மால் என்றும் மறக்க இயலாது.

சிலப்பதிகாரத்தையும் கம்பராமாயணத்தையும் கே.முத்தையா வித்தியாசமான கோணங்களில் ஆராய்ந்தார். ஆத்மாநாமின் தமிழ்க் கவிதை என்றும் மறக்க இயலாது. இத்தனை இளுமைகளோடு நான் நெருங்கியிருந்து எவ்வளவோ கற்றுக்கொண்டு என்னை அன்றும் இன்றும் புதியவனாக்கிக் கொண்டே இருக்கின்றேன்.

நவீன கவிதை தமிழுக்கு ஒரு பெரும் ஆற்றல். பரிசுகள், பாராட்டுக்கள் ஆகியவற்றில் எனக்கு ஈடுபாடில்லை. தமிழை, தமிழ் வரலாற்றைத் தக்கவைப்பதுதான் நம்மவர் அனைவரும் செய்யவேண்டிய நற்செயல். இத்தகைய செயலில் உடுபடுபவர்கள் இன்றும் நம் மரியாதைக்குரியவர்கள் இவர்களுக்குள்தான் வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் வள்ளலாரும் இன்றும் வாழ்கின்றனர்.

க.நா.சு., செல்லப்பா, வெங்கட்சாமிநாதன், பிரமிள் முதலியவர்களை நான் கொண்டாடிய அளவிற்கு மார்க்சிய எழுத்தாளர், திறனாய்வாளர்களை நான் பாராட்டவில்லை என்று என்னைப் பற்றி ஒரு சிலர் குறைகூறுவது உண்டு. இதற்கு நான் சுருக்கமாக பதில் சொல்ல வேண்டும். மார்க்சியரிடமிருந்து நான் கற்றுக் கொள்ளாமலுமில்லை. ஆனால் இலக்கியத்தின் நோக்கம் அரசியலாக அதிலும் குறிப்பாக கட்சி அரசியலாக இருக்க வேண்டும் என்று மார்க்சியர் கூறுவதை நான் எப்போதும் ஒப்புக்கொண்டதில்லை. வர்க்கப்பார்வை என்று சொல்லி தமிழிலக்கியத்தை க.நா.சு. முதலிய எழுத்தாளர்களையும் காயப்படுத்தும் அளவுக்கு மார்க்சியர் குறை எறுவதை என்னால் ஏற்க முடியவில்லை. இலக்கியத்தில் தீர்வை தட்டில் வைத்து வழங்க வேண்டும் என்பது எனக்கு உடன்பாடில்லை. க.நா.சு. முதலியவர்களிடமிருந்துதான் வளமான இலக்கியப் பார்வையை கலை உணர்வை நான் கற்றுக்கொண்டேன். மார்க்சியரின் படைப்புகளின் உள் ளும் இடம்பெறும் அவர்களின் அரசியல் கூட வளமானதாக இருக்கவில்லை. இவர்களைக் காட்டிலும் அரசியல் பார்வையில் எனக்குக் எடுதலான தெளிவு உண்டு. படைப்பியக்கம் என்பது ஒரு பேராற்றல். அது மனிதனின் உள்ளுணர்வோடு உறவுடையது. மார்க்சியருக்கு இது பற்றி பெரும்பாலும் தெரியாது. கட்சிக்குள் இருந்து என்னை நானே இழந்துவிட எனக்கு இயலாது. இதுபோலவே க.நா.சு. முதலியவர்களைப் பார்ப்பனர் என்று சாடுவதும் எனக்கு உடன்பாடில்லை. அசோகமித்ரன், லா.ச.ர முதலியவர்களிடம் பார்ப்பனியத்தைக் கண்டுபிடித்து, அதை முதன்மைபடுத்தி அவர்களின் படைப்பைச் சாட முடியாது.

'புதிய தலைமுறை', 'வானம்பாடி', 'வேள்வி', 'பரிமாணம்', 'நிகழ்' முதலிய சிற்றிதழ்களை நடத்திய அனுபவங்கள் உங்களுக்கு உண்டு. தற்போதும் 'தமிழ் நேயம்' என்னும் சிற்றிதழை நடத்தி வருகின்றீர்கள்? தங்களுக்கு ஏற்பட்ட சிற்றிதழ் அனுபவங்களைப் பற்றி?

1968, 70 வாக்கில் கோவையில் 'புதிய தலைமுறை' என்ற மார்க்சிய இலக்கியத் திங்கள் இதழை நாங்கள் தொடங்கினோம். மாவோவின் சிந்தனைகள்தான் இந்த இதழின் மையம். எஸ்.என். நாகராசன் எங்களுக்குத் தந்த விளக்கத்தின் அடிப்படையில் அந்நியமாதல் என்ற கருத்தியலை விளக்கும் கட்டுரைகளையும் கதைகளையும் இந்த இதழில் வெளியிட்டோம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று அக்கறையோடு எழுதினோம். பாரதிதாசனை நாங்கள் கொண்டாடினோம். சங்க இலக்கியம், தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகளை வெளியிட்டோம். மொழிச்சிக்கல்கள் குறித்த விவாதங்கள் இந்த இதழில் வெளியாயின. கனலின் கவிதைகள் இவ்விதழில் முக்கியமானவை. 'புதிய தலைமுறை' இதழ் என்பது பிற மார்க்சிய வட்டாரங்களிலிருந்து எங்களைத் தனித்துக் காட்டியது. அவர்களிடம் பேரளவு இல்லாத மொழி உடுபாடும் இலக்கிய உடுபாடும் மெய்யியல் இய்வும் எங்களுக்குள் இருந்தன. இரண்டு இண்டுகள் மட்டுமே இந்த இதழைச் செயல்படுத்த முடிந்தது. நக்சல்பாரி இயக்கம் சார்ந்தவர் என்ற முறையில் இந்த இதழ் காவல் துறையின் கவனிப்புக்கு உள்ளாகி நின்றது.

70க்குப் பிறகு 'வானம்பாடி' இயக்கத்தினுள்ளும் நான் இருந்தேன். வானம்பாடி இயக்கத்திற்குள் இருந்த முரண்பாடு காரணமாக நானும் சில நண்பர்களும் வெளியேறி 'வேள்வி' என்ற இதழை வெளியிட்டோம். வானம்பாடி இதழில் கவிதைகள் மட்டுமே இடம்பெற்றன. 'வேள்வி'யைப் பொறுத்தவரை ஒரு இலக்கிய இயக்கம் என்ற முறையில் கவிதைகள் சிறுகதைகள் திறனாய்வுகள் எனப் பலவற்றை வெளியிட்டோம். வானம்பாடி இயக்கத்தை இலக்கிய இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற எங்கள் கருத்து வேள்வி இதழில் செயல்பட்டது. இனால் இங்கும் நாங்கள் மாவோ சார்புடையவர்கள் என்பதன் காரணமாக எங்களுக்குள்ளும் பிளவு ஏற்பட்டு 'வேள்வி' நின்றது.

79க்குப் பிறகு 'பரிமாணம்' என்னும் பெயரில் மார்க்சிய ஆய்விதழ் ஒன்றை நாங்கள் தொடங்கினோம். சோவியத் மார்க்சியத்தோடு எங்களுக்கு உடன்பாடு இல்லை. மாவோவின் மார்க்சியம் தவிர மேற்குலகிலும் மார்க்சிய நோக்கில் இலக்கியம், மெய்யியல், சமூகவியல் என்ற பலவகைப் பரிமாணங்கள் மார்க்சியம் பெற்று வந்த வளர்ச்சியைத் தமிழில் தர விரும்பினோம். அல்தூசர், கிராம்சி முதலியவர்கள் இத்தகையவர். இந்தியாவினுள்ளும் மார்க்சியம், கட்சி வட்டாரத்திலும் பிற ஆய்வுகளிலும் புதிய பொருள் விளக்கம் பெற்றது. தமிழகத்திலும் குணா முதலியவர்களின் புதிய விளக்கங்கள். ஸ்டாலின் பற்றிய விமர்சனங்களைத் தொகுத்தலும் தேவை. கேரளாவில் தாமோதரன் தந்த புதிய விளக்கம் இவ்வகையில் மார்க்சியத்தின் புதிய பரிமாணங்களைத் தொகுத்து வெளியிடும் முறையில் 'பரிமாணம்' 16 இதழ்கள் வெளிவந்தது.

மாவோ சிந்தனைகளும் பின்னடைவுக்கு உள்ளாகியிருந்தது. பிரெஞ்சு மார்க்சியர் மார்க்சியத்தில் புதிய வெளிச்சங்களை வெளிப்படுத்தினர். தமிழகச் சூழலில் கட்சி மார்க்சியரின் இறுக்கத்தைத் தளர்த்தும் நோக்கில் பரிமாணம் செயல்பட்டது. இந்த முயற்சி எங்களுக்கு மன நிறைவு தருவதாக அமைந்தது. எஸ்.என். நாகராசன், எஸ்.வி.ராஜதுரை, ராஜ்கௌதமன் முதலியவர்கள் தொடர்ந்து எழுதினர். கட்சி மார்க்சியரின் இறுக்கத்தை எங்களால் மாற்ற முடியவில்லை.

1983க்குப் பிறகு நண்பர்களின் ஒத்துழைப்போடு 'நிகழ்' இதழைத் தொடங்கினோம். தொடக்கத்தில் அது இலக்கிய இதழ். 8இம் இதழ் முதல் முழுப் பொறுப்பை நான் எடுத்துக்கொண்டேன். 80களின் இறுதியில் கிழக்கு ஒரோப்பாவிலும் சோவியத் ஒன்றியத்திலும் சோசலிசம் தகர்வுக்கு உள்ளாயிற்று. உலக அளவில் மார்க்சியம் கேள்விக்கு உள்ளாகியது. அமைப்பியல், பின் நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம், இகியவை முன்னுக்கு வந்தன. சோவியத் ஒன்றியத்தில் தகர்ந்தது முதலாளியத்தை உள்வாங்கிக்கொண்ட மார்க்சியம் தான் மார்க்சியத்திற்குள் நுழைந்து விட்ட முதலாளியத்தை வெளி

யேற்றத்தான் வேண்டும். சோசலிசமும் பெருந் தொழிலும் ஒத்துப் போக முடியாது என்று ஏங்கல்ஸ் எறியதை சோவியத் கட்சி புறக் கணித்தது.

பெருந்தொழில், பெரிய இராணுவம், பெரிய அரசு அமைப்பு, அனல் மின்நிலையங்கள் பெரிய அணைக்கட்டுகள் என்உ தொடங்கினால் பெருத்த மூலதனம் தேவை. இதற்காக உள்நாட்டு உழவர்களோடு தொழிலாளிகளையும் கடுமையாகச் சுரண்டியாக வேண்டும் எதிர்ப்பு களை ஒடுக்கியாக வேண்டும். இதே சமயம் கட்சிக்குள்ளும் அரசு அதி காரத்தினுள்ளும் உயர் பீடங்களில் இருந்தவர்கள் அதிகாரத்தோடு பெரும் உடைமைகளையும் சேகரித்துக் கொண்டனர். இத்தகைய மார்க்சியம் மக்களுக்கு அதிகாரத்தை வழங்காது.

சோவியத் ஒன்றியத்தை இந்திய மார்க்சியர் திறனாய்வுக்கு உள்ளாக் கவே இல்லை. இத்தகைய சூழலில்தான் அமைப்பியல், பின்நவீனத்துவம் முதலிய புதிய போக்குகள் எழுந்தன. எஸ்.என்.நாகராசன் கருத்துப்படி மார்க்சியத்தின் உள்ளுறை இற்றலை மேம்படுத்தக்கூடிய வாய்ப்பு வந்திருக்கிறது. மார்க்சியத்திற்குள் புதிய அனுபவங்கள் வந்து சேர வேண்டும். மார்க்சியம், இலக்கியம் முதலிய எல்லாத் துறைகளிலும் தம்மைப் புதுப்பித்துக் கொள்ள முடியும். பெரியாரியம், பெண்ணியம், தலித்தியம் முதலியவற்றின் இக்கக் எறுகளை மார்க்சியம் தனக்குள் செரித்துக் கொள்ள முடியும். இவ்வகையில் 'நிகழ்' செயல்பட்டடது.

உலக அளவில் அறிவியல், உளவியல், பொருளியல் முதலியவற்றின் இக்கங்களை மார்க்சியத்தோடு இணைக்கும் முறையிலும் 'நிகழ்' கட்டு ரைகளை வெளியிட்டது. க.பூரணச்சந்திரன், பிரமிள், எஸ்.வி.ராஜதுரை, ஜி.எஸ்.இர். கிருஷ்ணன், சிங்கராயர், ரவி சீனிவாஸ், ஜீவஒளி முதலிய வர்களின் மிக விரிவான இவ்வுக் கட்டுரைகள் நிகழில் வெளி வந்தன. சிறுகதை, கவிதை, நூல் மதிப்புரை என்றும் நிறைய வெளி யிட்டோம். தமிழ்ச் சிற்றிதழ் வரலாற்றில் 'நிகழ்' பதித்த தடம் உறுதி யானது என்பதில் ஐயமில்லை.

மார்க்சியத்தைச் செழுமைப்படுத்துவதற்கு 'நிகழ்' செய்த முயற்சியைத் தமிழில் வேறு எவரும் இதுவரை செய்யவில்லை. 83ல் தொடங்கி 96 வரை நிகழ் 32 இதழ்களை வெளியிட்டது. சில இதழ்கள் 100க்கும் மேற்பட்ட பக்கங்கள். விரிவான நேர்காணல்களையும் 'நிகழ்' வெளி யிட்டது.

1998க்குப் பிறகு 'தமிழ்நேயம்' இதழைத் தொடங்கி இதுவரை நடத்தி வருகின்றேன். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இன்று நேர்ந்துள்ள நெருக்கடிகள் மிகக் கடுமையானவை. பன்னாட்டு நிறுவனங்களின் உள் நுழைவு தொடர்ந்து விரிவடைகிறது. பசுமைப் புரட்சியின் விளை வாகத் தமிழகத்தின் நிலம், நீர்நிலைகள் பெரும் அளவு மாசுபட்டு வருகின்றன. தொழிற்சாலைக் கழிவுகள் காரணமாக நதிகளும் நாச மாகின்றன. தமிழ், பயிற்று மொழியாக, இட்சி மொழியாக, கோயில் மொழியாக இல்லை. மெட்ரிக் பள்ளிகளும் சுயநிதிக் கல்லூரிகளும் இங்கில இதிக்கத்தை வளர்ப்பதோடு தமிழைத் திட்டமிட்டு அழித்து வருகின்றன. மேற்கத்திய மோகம், நுகர்வு வெறி முதலியவை தமிழ்ச் சமூகத்தைத் தொடர்ந்து அழித்து வருகின்றன. தமிழ்மீது இன்று நடுத்தர மக்களுக்கு மரியாதை இல்லை. அரசியல் சூழல் உச்ச அள வில் புரையோடி போயிருக்கிறது.

இந்திய அரசுக்குத் தமிழகத்தை அரசியல்வாதிகள் அடிமைப்படுத்தி விட்டார்கள். இந்திய அரசும் மேற்கத்தியருக்குத் தன்னை அடிமைப் படுத்துகிறது. இவ்வகை நெருக்கடிகளை எடுத்துரைக்கும் வகையில் 'தமிழ்நேயம்' வெளிவருகிறது. தமிழில் மிகச்சிறந்த இலக்கியவாதிகளை விரிவாக அறிமுகப்படுத்தும் வகையில் சிறப்பிதழ்களை வெளியிடுகிறது. ஈழம் பற்றியும் 'தமிழ்நேயம்' ஓயாமல் வேதனைப்பட்டு எழுதுகிறது. தற் போது தமிழில் வெளிவரும் சிற்றிதழ்களில் 'தமிழ்நேயம்' அளவுக்குப் பல்வேறு சிக்கல்கள் குறித்து இவ்வுக்கட்டுரைகளை வெளியிடும் இதழ் வேறு எதுவும் இல்லை. பேராசிரியர் நெடுஞ்செழியன், சாத்தூர் சேகரன், ஜெயமோகன், எஸ். பொன்னுத்துரை, இரா. திருமுருகன் முதலியவர் களைக் குறித்து விரிவான கட்டுரைகளைத் 'தமிழ்நேயம்' வெளியிடு கிறது.

செம்மொழித் தமிழ் குறித்து தொடர்ந்து சிறப்பிதழ்களைத் தமிழ் நேயம் வெளியிடுகிறது. தமிழ்த்தேசியம் என்பது தமிழ்நேயத்தின் அடிப் படைக் கொள்கை. மார்க்சியத்திலிருந்து சிறிதளவும் பிறழாமல் தமிழ்த் தேசியம் குறித்துத் தமிழ்நேயம் பேசுகிறது. இதைத்தவிர பெண் எழுத் தாளர்களின் சிறுகதைகள் என இதுவரை பதினோரு தொகுப்புகளைத் தமிழ்நேயம் வெளியிட்டுள்ளது. இன்னும் பல்வேறு தனி வெளியீடு களும் வெளிவருகின்றன.

எழுத்து, கசடதபற, பிரக்ஞை, படிகள், இலக்கிய வெளிவட்டம், நிறப் பிரிகை எனத் தமிழில் கடந்த அய்ம்பது இண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் சிற்றிதழ் இயக்கத்தில் என் அளவில் இணைந்து நண்பர் களின் ஒத்துழைப்போடு இடைவிடாமல் இயங்குகின்றேன். இவ்வகை முயற்சி எனக்குப் பெரும் மனநிறைவு தருகிறது. இறுதியாக நிகழில் வெளிவந்த 95 கட்டுரைகளைக் கொண்ட ஒரு பெருந்தொகுப்பைக் காவ்யா வெளியிட்டதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி.

தமிழ்த் தேசியத்திற்குக் கட்சிமார்க்சியர்கள் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை முக்கியத்துவம் அளிக்கவில்லை. சில மார்க்சிய லெனினியக் குழுக் கள்தான் தற்பொழுது தமிழ்த்தேசிய அரசியலை அங்கீகரித்துள்ளன. ஆரம்பகாலம் முதற்கொண்டே நீங்கள் தமிழ்த்தேசியத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்துள்ளீர்கள். தற்பொழுது தமிழ்த் தேசியத்திற்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்து இயங்குகிறீர்கள். ஏன்?

ஒரு மார்க்சியன் என்ற முறையில் தமிழ்த் தேசியத்திற்கு இன்று நான் முன்னுரிமை கொடுப்பதில் உறுதியாக இருக்கிறேன். இன்று தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் நேர்ந்துள்ள நெருக்கடிகளை விரிந்த அளவில் புரிந்துகொள்ள வேண்டுமானால் மார்க்சியம் பற்றிய அறி வில்லாமல் புரிந்து கொள்ள முடியாது. உலகமயம், தாராளமயம், தனியார் மயம், சந்தைப் பொருளாதாரம் என்ற உலக அளவிலான போக்குகள் இந்தியாவை மட்டும் அல்லாமல் தமிழகத்தையும் கடுமை யாகப்பாதித்துள்ளன. பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் பல்வேறு தொழில் நிறுவனங்களை அமைக்க அரசு வாய்ப்புத் தந்ததோடு அவர் களுக்கு ஏராளமான சலுகைகளையும் வழங்கி உள்ளது. மின்சாரத் தையும் நிலத்தடி நீரையும் வேண்டும் அளவுக்கு அவர்கள் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்கள் பலவும் தனியார் முத லீட்டுக்குத் திறந்துவிடப்படுகின்றன. வெளிநாட்டுப் பல்கலைக் கழங் கள் இந்தியாவுக்குள் இனி விரிவாக இடம் பெறலாம். தொழிற் சாலைக் கழிவுகள் காரணமாக நீர், நிலம், காற்று முதலியவை மாசடைகின்றன. இதன் இன்னொரு விளைவு மக்களிடையே ஏற்றத் தாழ்வு என்ற இடைவெளி அதிகரிக்கின்றது. தொழில் நிறுவனங்கள் மட்டும் அல்லாமல் கல்வி நிறுவனங்களிலும் தனியாரின் இதிக்கம் தொடர்ந்து அதிகரிக்கிறது. கல்வி, சுகாதார'ம் முதலிய துறைகளை அரசு தொடர்ந்து கைகழுவுகிறது. முதலாளிகளும் அரசும் தொடர்ந்து நெருங்கி இருப்பதன் விளைவாகத் தொழிற்சங்க உரிமைகள் மக் களின் வாழ்வுரிமைகள் பறி போகின்றன. 47இல் இந்தியாவை விட்டு இங்கிலேயர் வெளியேறியதாகச் சொல்லுகிறார்கள். இனால் இன்று அமெரிக்கர் மற்றும் மேற்கத்தியரின் இதிக்கம் இன்று எல்லாத் துறைகளிலும் அதிகரித்து வருகிறது.

கல்வித்துறையில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங் கிலத்தின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. மேற்குலகில் குறிப் பாக அமெரிக்காவில் கணினி முதலிய துறைகளில் வேலை வாய்ப்பு களுக்காகத் தமிழகமாணவர்கள் தயாரிக்கப்படுகிறார்கள். இவர்களி டம் தாய் மொழிப்பற்றோ, தமிழ் மக்கள் மீது பற்றோ, தமிழ் நிலத் தின் மீது பற்றோ இருப்பதற்கு இல்லை.

தமிழன் தனக்கான அடையாளங்களைத் தொடர்ந்து இழந்து வருகின் றான். அரசியல் அதிகாரத்தில் எப்படியேனும் இடம்பெற வேண் டும் என்ற முறையில் இடது சாரிகளும் மக்கள் சார்பைத் தொடர்ந்து கைவிட்டு வருகின்றனர். பணம், பதவி, நுகர்வு வெறி முதலியவற்றுக்குத் தொடர்ந்து மக்கள் பலியாகின்றனர். இத்தகைய போக்கை அரசும் முதலாளிகளும் எக்கப்படுத்துகின்றனர். தற்கொலை கள், விபத்துகள், கொடிய நோய்கள் தொடர்ந்து அதிகரித்து வரு கின்றன. பசுமைப்புரட்சி என்ற போக்கை அரசும் இவ்வு நிறுவனங் களும் தொடர்ந்து விரிவுபடுத்துகின்றன. உழவர்கள் பெரும் கடன் சுமைக்கு ஆளாகி உள்ளனர்.

அமெரிக்க ஆதிக்கத்திற்கு இந்திய அரசு தொடர்ந்து இடம் தருவதன் விளைவை இன்று அதிக அளவில் காண்கிறோம். இந்தியாவின் கனிம

## தேசிய இனங்களின் இறையாண்மையை ஒப்புக்கொள்கிற ஒரு கூட்டாட்சியில் தான் இந்தியாவில் எந்த ஒரு தேசிய இனமும் தன்மானத்தோடு வாழமுடியும்.

வளங்களைப் பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டுவதற்கு இந்திய அரசு பேரளவு இதரவு தருகிறது. இதிவாசிகள் தம் வாழ்விடங்களை விட்டு அகற்றப்படுகின்றனர். தீவிரவாதம் என்று பெயரிட்டு மக்களின் உரிமைப் போராட்டங்கள் கடுமையாக ஒடுக்கப்படுகின்றன. அந்நிய மதுவகைகளைத் தயாரித்து வழங்கும் பொறுப்பை அரசே மேற்கொள்கிறது. இவ்வாறு அரசும் முதலாளிகளும் அந்நிய நிறுவனங்களும் அமெரிக்க அரசு முதலியவைகளும் கைகோர்த்துக் கொண்டு மக்கள் வாழ்வைத் தொடர்ந்து நாசமாக்குவதையும் மக்கள் தம் வாழ்வுரிமைகளையும் தம் தேசத்தையும் இழந்து விடுவதையும் ஒரு மார்க்சியனால்தான் புரிந்துகொள்ள முடியும்.

இத்தகைய உணர்வோடுதான் தமிழ்த்தேசியம் என்று பேசவேண்டி இருக்கிறது. தேசிய இனங்களின் இறையாண்மையை ஒப்புக்கொள்கிற ஒரு கூட்டாட்சியில் தான் இந்தியாவில் எந்த ஒரு தேசிய இனமும் தன்மானத்தோடு வாழமுடியும்.

சோவியத் ஒன்றியம் தகர்ந்துபோனதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்த போதிலும் அங்கு தேசிய இனங்கள் மைய அரசால் ஒடுக்கப் பட்டதன் விளைவு என்பதை நாம் மறுக்க வேண்டியதில்லை. தேசிய இனங்களின் தன்னுரிமையை சோவியத் ஒன்றியத்தின் அரசியல் அமைப்புச் சட்டம் ஒப்புக் கொண்டிருந்ததன் விளைவாகவே கோர்பர்ச்சேவ் காலத்தில் தேசிய இனங்கள் பிரிந்து சென்றன. தேசிய இனங்களின் தன்னுரிமையை லெனின் வற்புறுத்தியதையும் நாம் அறிவோம்.

தேசிய இனம் பற்றிய ஸ்டாலினிய வரையறைக்குள் மறைந்திருக்கிற முதலாளியத்தை ஒதுக்கிவிடவும் முடியும். தேசியம் என்பது ஒரு கற்பிதம்/ கட்டமைப்பு என்று சிலர் எறுவதையும் நம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

தேசிய இனங்களின் தன்னுரிமையை 47க்கு முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியினர் மட்டும் அல்லாமல் காங்கிரஸ் இயக்கத்தினரும் ஒப்புக் கொண்டிருந்தனர். 47க்குப் பின்னரும் இந்தியாவில் சில தேசிய இனங்கள் தம் தன்னுரிமைக்காக இன்றுவரை போராடி வருவதையும் நாம் மறுப்பதற்கில்லை. தன்னுரிமை என்றவுடன் பிரிவினை என்று பொருள்படுத்தவும் வேண்டியதில்லை. தேசிய இனங்களின் தன்னுரிமை என்ற அடிப்படையில் இந்தியா ஒரு எட்டாட்சியாக இணைந்திருக்க முடியும். இந்தியா ஒரு துணைக்கண்டம் என்பதை எல்லோரும் அறிவர். மாநிலங்களின் அதிகாரத்தைத் தொடர்ந்து மைய அரசு பறிப்பதன் விளைவாகத்தான் தன்னுரிமை என்ற கோரிக்கையும் எழுகிறது. மைய அரசு மேற்கத்தியரின் ஆதிக்கத்திற்குத் தொடர்ந்து தன்னை விட்டுக் கொடுப்பதையும் இதன் காரணமாக இந்திய மக்கள் தம் அரசியல் பொருளியல் முதலிய வாழ்வுரிமைகளை இழந்து வருவதையும் இந்தப் போக்கிற்குத் தமிழகத்து ஆட்சியாளரும் அரசில்வாதிகளும் இடம் கொடுத்து வருவதையும் பார்க்கிற நிலையில் தான் தமிழ்த்தேசியம் பற்றிக் எடுதலாகப் பேச வேண்டியிருக்கிறது. தமிழ் இல்லாமல் தமிழ் நிலம் இல்லாமல் தமிழ் இலக்கியம் தமிழ்வரலாறு ஆகியவற்றின் தொடர்பு இல்லாமல் நமக்கு இங்கு ஏது வாழ்வு?

இன்றைய சூழலில் தமிழியல் இய்வுகள் என்ற நிலையில் நாம் செய்ய வேண்டியவை எவை?

தமிழைச் செம்மொழி என இந்திய அரசு ஏற்றுக் கொண்டதையடுத்து நமக்கு கிடைத்துள்ள வாய்ப்பை நாம் பெருமளவு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்திய நாகரிகம் என்று அறியப்படுவதன் மேலடுக்கு இரிய நாகரிகம் என உ சொல்லப் பட்டாலும், இந்திய நாகரிகத்தின் அடித்தளம் முழுவதும் திராவிடர் நாகரிகம்தான். அறிஞர் பலர் இந்த உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளனர். திராவிடர் நாகரிகம் என்பதும் தமிழர் நாகரிகம் என்பதும் வேறுபட்டவையும் அல்ல. இந்திய நாகரிகத்தில் வேளாண்மை, நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு, கட்டிடக்கலை, சிற்பக்கலை, இசை, மருத்துவம், அறிவியல், கணிதம், தர்க்கம், மெய்யியல் ஆகியவற்றில் திராவிடர் பங்களிப்புதான் முதன்மையானது. இவற்றில் இரியரின் பங்களிப்பு என்று சொல்வதற்கு அதிகமில்லை. சமஸ்கிருத மொழியும் தமிழைப் பார்த்தே தன்னை திருத்தம் செய்து கொண்டது. வட இந்திய மொழிகளின் தொடரமைப்பு என்பது தமிழின் தொடரமைப்பாகத்தான் இருக்கிறது. வேதம், இதிகாசங்கள் முதலியவற்றினுள்ளும் தமிழரின் பங்களிப்புக்கு இடமுண்டு. வைதீகம் தமிழ்ச் சூழலில் அழுத்தம் பெறவில்லை. இந்துத்துவம் தமிழர் நெறியாக பெரும்பாலும் இருந்ததில்லை. செம்மொழி என்ற ஆதாரத்தில் தமிழின் தொன்மையைச் சிந்து சமவெளி நாகரிகத்திற்கு அப்பாலும் கொண்டு செல்லமுடியும். சங்க இலக்கியத்தின் உலகியல் சார்பை நாம் எந்தக் காலத்திலும் கைவிட்டதில்லை. தமிழிலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் இய்வோடு தமிழ்மெய்யியல் தர்க்கவியல், இசை, மருத்துவம் முதலியவற்றின் இய்வையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இவற்றோடு தொல்லியல் முதலிய இய்வையும் தொடரவேண்டும். இவ்வகை இய்வுகளை நம்மால் சிறப்புற செய்ய இயலும் என்றால் இந்திய அரசியலில், இதுவரை நமக்கு மறுக்கப்பட்ட இடத்தை, மரியாதையை நம்மால் மீட்டுக் கொள்ள இயலும். இந்துத்துவத்தை நம்மால் எதிர்கொள்ள முடியும். தமிழியல் இய்வறிஞர்களுக்கு இத்தகைய பெரும் கடமை இன்று உண்டு. இதை செய்வதன் மூலமே தமிழ் வரலாற்றை நம்மால் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

தமிழர் என்ற முறையில் தமிழியல் இய்வாளர் என்ற முறையில் தமிழ்ப் பெருமை என்றெல்லாம் இனி பேசிப் பயனில்லை. தொன்மை இலக்கியத்தை மட்டுமல்லாமல் இன்றைய நம் வாழ்வியல் முதலிய அனைத்தையும் திறனாய்வுக்கு உட்படுத்துவதன் மூலமே இன்றைய உலகில் நம்மை தக்கவைத்துக் கொள்ள முடியும். மார்க்சியம், பெரியாரியம் உட்பட எல்லாவற்றையும் திறனாய்வுக்கு உட்படுத்தித்தான் நமக்கான தெளிவை பெறமுடியும். வள்ளுவரோ இளங்கோவோ தம் காலச்சமூகம், அரசியல், அறவியல், இலக்கிய மரபு முதலியவற்றை இய்வுக்கு உட்படுத்தாமல் தம் படைப்புகளைச் செய்திருக்க முடியாது.

தமிழிலக்கியம் அனைத்தினுள்ளும் பதிந்திருக்கிற திறனாய்வுப் பார்வையை இன்றைய நோக்கில் நம்மால் கண்டறிந்து தொகுக்க முடியும். தொன்மை இலக்கியத்தை நாம் விரும்பிக் கற்கும் அளவுக்கு நவீன தமிழிலக்கியத்தையும் நாம் அக்கறையோடு கற்கவேண்டும். சிற்றிதழ் வட்டாரத்தில்தான் இலக்கியம், வாழ்வியல் குறித்த புதிய பார்வைகளும் திறனாய்வு நோக்கும் செழித்திருக்கிறது. பெண்ணியம் தலித்தியம் பின்நவீனத்துவம் என்றெல்லாம் விவரிக்கப்படும் நவீனகாலப் பார்வையின் வழியே தொன்மை இலக்கியங்களை, மெய்யியலை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம் அவ்விலக்கங்களை நமக்கான, நம் காலத்திற்கான இலக்கியங்கள் இக்க முடியும்.

இவ்வகை பார்வையின் மூலமே தமிழ் மாணவர்களுக்குள் தமிழிலக்கியத்தின் மீது அக்கறையைத் தூண்ட முடியும். இம் மாணவர்கள் தான் நம்காலத்தைக் கடந்தும் தமிழை வாழவைப்பார்கள். தம் இளமை காலத்தில் கற்ற இலக்கியமே போதும் என்று பேராசிரியர்கள் இருப்பார் என்றால் அவர்கள் தமிழுக்கு சுமையாகத்தான் இருக்கமுடியும். அன்றியும் புதுவகையான திறனாய்வுப் பார்வையைப் பெறுவதென்பது நம் கால அரசியல் பொருளியல் முதலிய அனைத்தையும் நுட்ப

மாகக் கற்பதன் மூலம்தான் சாத்தியப்படும். வள்ளுவரையும் இளங்கோவையும் பாரதியையும், பாரதிதாசனையும் நம்மால் என்றும் இழக்கமுடியாது. இழந்தால் நாம் தமிழராகவும் இருக்க முடியாது.

தமிழ்ச்சூழலில் மெய்யியல் என்றாலே சமயம்தான் என்ற புரிதல் எப்படியோ ஏற்பட்டுவிட்டது. ஒருவகையில் பெரியாரியம் இங்கு அழுத்தம் பெற்றது ஒரு காரணம். இதைப் போலவே இங்கு சமயப்பார்வையும் அழுத்தம் பெற்றிருக்கிறது. சமயம், மெய்யியல் இகமுடியாது. சமயம் என்பதன் மேலடுக்கு கோயில், கடவுள் வழிபாடு, புரோகிதம், சடங்குகள், சாத்திரங்கள் முதலியவற்றோடு தொடர்புடையது. இவை தமிழ் மக்கள் மீது சுமையாக பதிந்துவிட்டன. இவற்றைக் கடந்து சமயம் என்பதன் உள்ளடுக்கு எது என்பதை நாம் தேடிச்செல்ல வேண்டும். உள்ளடுக்கு என்பது இன்மீகம் அல்லது மெய்யியலோடு தொடர்புடையது. உதாரணத்திற்குச் சைவத்தின் முதன்மைக் கோட்பாடு என்று சொல்லப்படும் பதி, பசு, பாசம் என்பதை எடுத்துக்கொள்வோம். பாசத்திலிருந்து விலகினால் பசு, பதி ஆகும் என்பது சித்தாந்தம், ஆணவம் முதலியவற்றிலிருந்து விலகினால் மட்டுமே மனிதன் இறைவனைக் காணமுடியும். இறைவனோடு கலக்கமுடியும். இறைவன் என்பதை நாம் ஏற்கவில்லை. உணர்மையில் பிரபஞ்சம், இயற்கை, வரலாறு முதலியவற்றின் பேரியக்கம் நம்மை வியப்பிற்குள்ளாக்கும்.

பிரபஞ்சத்தின் பேரியக்கம்தான் இயற்கை முதலியவற்றினுள்ளும் இயங்குகிறது. இறைவன் எல்லாவற்றையும் படைத்துக் காத்து மறைபவன் என்று எறுவதை நாம் நம் வழியில் புரிந்து கொள்கிறோம். பிரபஞ்சமும் இயற்கையும் தொடர்ந்து படைப்பியக்கத்தில் உள்ளவை. எல்லாவற்றையும் காப்பவை. எல்லாவற்றையும் தனக்கு உரமாக்கிக் கொண்டு மீண்டும்படைப்பவை. பிரபஞ்சம் என்ற பேரியக்கத்தின் ஒரு எறு மனிதன். மனிதனுக்குள்ளும் படைப்பியக்கம் உண்டு. மனிதன் தன்னை இயற்கையாக, பிரபஞ்சமாக தன்னை உணரமுடியும். இந்தப் பேரியக்கத்தைத்தான் இறைவன் என்று சமயவாதிகள் எறினர். இன்றும் இருப்பது பிரபஞ்சம். இதை யாரும் படைக்கவில்லை. இந்தப் பேரியக்கத்தைத் தனக்குள் மனிதனால் உணரமுடியும். தானும் பிரபஞ்சமாக முடியும். இணவம், செருக்கு, பதவி, பணம், முதலியவற்றையே பெரிதெனக்கொள்பவன் தனக்குள் இந்தப்பேருணர்வை, பரவசத்தை உணர முடியாது. இத்தகைய பார்வைதான் மெய்யியல் பார்வை. கடவுள் என்பது பொய் என்று சொல்வதில் மட்டுமே பயனில்லை. பகுத்தறிவு வாதிகளுக்கு இதுபோதும். மனிதன் இப்படித் தனக்குள் வரலாற்றை, சமூகத்தை உணரமுடியும். இத்தகைய உணர்வைப்பெற்றவன் தன்னலம் அற்றவன். இயற்கையை உயிர்களை நேசிப்பவன் அடிப்படையில் இவனது உணர்வு சமதர்மமாக இருக்க முடியும். பக்தி இலக்கியம் தமிழின் மாபெரும் இலக்கியம். பகுத்தறிவுணர்வு உள்ளவன் பக்தி இயக்கத்தை இவன் நேசிக்க முடியாது. தமிழியக்கதின் பெரும் பகுதியை இவன் இழப்பான். மார்க்சியருக்கும் இத்தகைய மெய்யியல் உணர்வு தேவை. தமிழ் வாழ்வுக்கு மெய்யியல் உணர்வு இல்லாமல் முடியாது.

சூன் மாதம் கோவையில் நடைபெறும் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளீர்கள். இம் மாநாட்டில் உங்களுக்கு ஈடுபாடு இல்லை என்பதற்கான காரணங்கள் எவை?

செம்மொழி மாநாட்டில் நானும் இன்னும் சில நண்பர்களும் கலந்து கொள்வதில்லை என்று மாநாடு பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே முடிவு செய்தோம். தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டம் மிகக் கொடிய முறையில் ஒடுக்கப்பட்டது. மூன்று இலட்சம் மக்கள் முள் வேலி முகாம்களில் எவ்வித வசதியும் இன்றி அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் தம் சொந்த ஊர்களில் குடி இருத்தப்படுவார்கள் என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. வெடிகுண்டுகள், நச்சுக் குண்டுகளால் அழிக்கப்பட்ட ஊர்களில் இவர்கள் வாழ்வதற்கான ஆதாரங்கள் முழுவதும் அழிக்கப்பட்ட நிலையில் எப்படிக் குடி இருக்க முடியும்? இத்தனை பெரிய அழிவை ராஜபக்சே தலைமையில் உள்ள சிங்கள அரசு செய்து முடித்தது. இந்திய அரசு முழு அளவில் ஒத்துழைத்தது.

இந்தியாவின் போரைத்தான் நாங்கள் நடத்தினோம் என்று ராஜபட்சே வெளிப்படையாகப் பேசினார். ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைமீறல் பற்றிய விவாதத்தின் போது சிங்கள அரசை இந்திய அரசு முழு அளவில் இதரித்ததோடு ரஷ்யா முதலிய பிற அரசுகளும் சிங்கள அரசுக்கு இதரவாகவே செயல்படவும் தூண்டியது இந்திய அரசு. இந்திய அரசோடு நல்லுறவு அவர்களுக்கும் தேவை. இவ்வளவும் நடைபெற்றதைக் கலைஞர் தொடக்கம் முதலே நன்றாக அறிவார். தமிழ் மக்களை ஏமாற்றும் முறையில் இறுதி வரை நாடகம் இடினார். ஈழத் தமிழர் போராட்டம் நொறுக்கப்பட்டதற்குக் கலைஞரும் ஒரு காரணம். ஈழத் தமிழகத்திற்கு ஆதரவாகவும் இந்திய அரசுக்கு எதிராகவும் கலைஞரால் செயல்பட்டிருக்கவே முடியாது. காரணம் இந்திய அரசுக்கு எவ்வளவோ வகையில் கடமைப்பட்டவர் கலைஞர். தன் சொந்த நலன்களுக்காகக் கட்சி நலனுக்காக ஈழத் தமிழகத்திற்குத் தமிழ் மக்களாகிய நாமும் துரோகம் செய்ததற்குக் கலைஞரும் காரணம் ஆனார். இந்த அவமானத்திலிருந்து என்றைக்கும் நமக்கு மீட்சி இல்லை.

உலக அளவில் தமிழன் என்றால் ஈழத்தமிழன் பெயர்தான் முன்னுக்கு வரும். தமிழ் ஈழம் ஒடுக்கப்பட்டதற்கு இந்திய அரசு காரணம் என்பதில் ஐயமில்லை. ஈழத்தில் மட்டும் அல்ல, தமிழகத்திலும் தமிழன் தன்னைப் பற்றிய வரலாறு மற்றும் மொழி பற்றிய உணர்வோடு தன்னுரிமை பற்றிப் பேசுவதையும் இந்திய அரசு என்றும் ஏற்காது. தமிழ் மக்களின் அரசியல், பொருளியல் முதலிய பல்வேறு நலன்களும் இன்றைய சூழலில் கடுமையாக ஒடுக்கப்பட்டுள்ளன. ஈழத் தமிழனுக்கு எப்படி விடுதலை இல்லையோ அப்படியே இந்தியத் தமிழனுக்கும் விடுதலைக்கான வாய்ப்பு இல்லை. இவ்வகையிலும் இந்திய அரசோடு கலைஞரும் தொடர்ந்து உறுதியாக ஒத்துழைக்கின்றார்.

இந்தச்சூழலில்தான் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டைக் எட்டுவதன் தேவை பற்றிக் கேள்வி எழுகிறது. கலைஞர் தன் காலத்தில் ஒரு மாநாட்டை நடத்த விரும்புகின்றார். தன் அரசியலுக்கும் இந்த மாநாடு பெரிதாகப் பயன்படும். 600 கோடி செலவு என்பது அவருக்கு ஒரு பொருட்டல்ல. டாஸ்மார்க் ஒன்றுபோதும், தமிழனை, தமிழ்க் குடும்பங்களை நாசப்படுத்துவதற்கு. ஆங்கிலம் தேவை என்று ஓயாமல் பேசி மக்கள் நெஞ்சில் முன்பிருந்த தமிழ்ப்பற்றை ஒழித்ததிலும் கலைஞர் அரசுக்கு முதன்மையான பங்கு உண்டு.

இந்தி எதிர்ப்பு என்று தொடங்கி தமிழகத்தில் ஆங்கிலத்தை வளர்த்தனர். நாளடைவில் இங்கில இதிக்கத்தை வளர்ப்பதற்காக தமிழை ஒதுக்கியதிலும் கலைஞர் அரசின் பங்கு அதிகம். இந்த உண்மையை மறைப்பதற்காகவும்தான் உலகத் தமிழ்மாநாடு.

பேராசிரியர்கள் என்பவர்களில் பெரும்பாலோர் இவ்வுத்திறனை மழுங்கச்செய்தவர்கள். தமிழ்க்கல்வி பயிலும் மாணவர்களின் நெஞ்சில் தமிழ் உணர்வைச் சிறிதளவும் தூண்டாதவர்கள். எங்கோ சில இடங்களில் தமிழியல் ஆய்வு உயிர்த்துடிப்போடு இன்னும் இருப்பதை நாம் மறுக்கவில்லை. தன்மானம் உடைய தமிழாய்வாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள விரும்ப மாட்டார்கள். மாபெரும் திருவிழா போல மாநாடு கோவையில் நடைபெறும். விழாவைக் காண மதுரைச் சித்திரைத் திருவிழாவில் பல இலட்சம் பேர் கூடுவது போலக்கோவையிலும் கூடுவார்கள். 100 இண்டுகளுக்கு மேல் வளர்ந்த இயிரக்கணக்கான மரங்களை வெட்டி நான்கு வழிச் சாலைகளும் இறுவழிச் சாலைகளும் கோவையில் போடப்படுகின்றன.

கோடீஸ்வரர்களுக்குச் சொர்க்கபூமியாகக் கோவையும் மாறிக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் மனநிறைவோடு நம்மால் பார்க்க முடியாது. தமிழியல் இவ்வுக்காகத்தான் மாநாடு என்றால் அதில் தரமான இவ்வுகள் வெளிப்படுவதை வரவேற்காமல் இருக்க முடியாது. இத்தனை அழிவுகளுக்கும் அப்பால் சில ஆய்வுகளையேனும் வரவேற்கிறோம். தமிழை மேம்படுத்தத்தான் 600 கோடி என்பதை யாரால் ஏற்க முடியும்? உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகம் இன்னும் உள்ள பிற பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகள் இவற்றில் விரிவான இவ்வுகளுக்கு 100 கோடியாவது செலவு செய்யப்படுமானால் நல்லதுதான். இவ்வளவு நடைபெற்றிருந்தாலும் மாநாட்டின் இறுதியில் இந்த இண்டு முதற்கொண்டு 12 இம் வகுப்பு முடிய அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்தான் பாடமொழியாக இருக்கும் என்ற அறிவிப்பைக்கலைஞரால் வெளியிட இயலுமானால், இவ்வளவு காலமும் செய்த தமிழ் அழிப்புக்கு ஒரு கழுவாய்போல அமையலாம். ■

# தமிழர் மத்தியில்

## AMIDST TAMILS

free issue

20

இலவச இதழ்

*வீழ்வோம் என்று நினைத்தாயோ...!*

# 2010



[ கட்டுரை ]

# வல்வாய்(வல்வை)க் கடலோடிகளின் 'காவற்காரனே' கப்பற்கிழவன்


## பொன்.சிவகுமாரன்


மாயோன் மேய காடுறை உலகமும் / சேயோன் மேய மைவரை உலகமும் / வேந்தன் மேய தீம்புனல் உலகமும் / வருணன் மேய பெருமணல் உலகமும் / முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் / சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே - தொல்காப்பியம்.

இதற்கு உரை எழுதிய "நச்சினார்க்கினியார்" கருங்கடற்கடவுள் காத லித்த நெடுங்கோட்டெக்கர் என இதற்கு பொருள் கூறினார். கருங் கடற் கடவுள் என்பது வருணபகவானைக் குறிக்கும். இவ்வுரையானது "பெருமணல்கள் குவிந்திருக்கும் கடற்கரைப்பகுதியில் வணங்கப்படும் தெய்வம்" எனவே பொருள் தருகின்றது. தொல்காப்பியத்துக்கு பின் வந்த எந்த நூல்களிலும் கடற்தெய்வமாக வருணன் என்னும் பெயர் குறிப்பிடப்படாத போதும் காஞ்சிப்புராணம் உட்பட வேறு வேறுபல புராணங்களில் மழைத்தெய்வமாக வருணன் உவமிக்கப் படுவதை நாம் காணலாம். கடலில் உள்ள நீர் ஆவியாகி மழை மேகமாகின்றது. மேகம் குளிர்ந்து மழையாகி மீண்டும் கடலில் பொழிகின்றது. நதிகளில் பொழியப்படும் நீரும் இறுதியில் கடலையே அடைகின்றது. இவ்வகையில் மழைத் தெய்வமும் கடல் தெய்வமும் ஒன்றே ஆகின்றது. இந்துக்களினால் வருணன் மழைத்தெய்வமாக வணங்கப்படும் பொழுது பௌத்தமத நூலான மஹாவம்சம் பஜ்ஜன் என்பவரை மழைத் தெய்வமாக குறிப்பிடுகின்றது.

ஆரியப் பண்பாட்டின் முன் இயற்கையை இறைவனாக வழிபட்ட மக்களின் வழிபாடும் தெய்வ ஆடலும் இரண்டறக்கலந்த ஒன்று. வெற்றித் திருமகளாம் "கொற்றவை" என்னும் பெண்தெய்வத்தை வழிபடும் போது நடக்கும் ஆடலினை சிலப்பதிகாரம் "வேட்டுவவாஜீ" பின்வருமாறு விளக்குகின்றது. சாலினி என அழைக்கப்படும் பெண்பூசாரி கையில் வில்லேந்திய மறவர் குடியில் பிறந்து வளர்ந்த வள்.; அவள் தன் ஊர் நடுவே உள்ள கொற்றவையின் கோவிலின் முன்னே தெய்வம் ஏறப்பெற்று (உருவந்தவளாய்) தன்னிலை மறந்து கைகளைக் கால்;களை அப்படியும் இப்படியும் அசைத்து ஆடிய படியே கண்ணகிக்கு குறி சொல்லுவாள்.

இது போன்றதே முருகன் என்னும் வேலன் பற்றிய வழிபாடும் ஆகும். இங்கு குறிப்பிடும் தெய்வஆடல் என்பது "வேலன்வெறியாடல்" எனப்படுகிறது இதனை மதுரைக்காஞ்சியின் 611619ம் அடிகள் பின்வருமாறு விளக்குகின்றது.

அருங்கடி வேலன் முருகொடு வளைஇ / அரிக்கூ டின்னியங் கறங்க நேர் நிறுத்துக் / கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின் / சீர்மிகு நெடுவேட் பெணித் தழூஉப்பிணையுலீஉ / மன்றுதொறு நின்ற குரவை சேரிதேறும் / உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ / வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப் / பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட் / சேரிவிழவின் ஆர்ப்பெழுந் தாங்கு.

வேலன்வெறியாடத் தொடங்கினான். இசைகருவிகள் பலவும் ஒன்று கலந்து இசையைப் பொழிந்தன. கார்காலத்தில் மலரும் குறிஞ்சி மலரை அவர்கள் அணிந்து கொண்டனர். கடம்பமலர் மாலை அணிந்த முருகனின் கைவேலை தமது நெஞ்சில் பொருத்திக் கொண் டனர். அவ்வாறே ஊலீஜீன் மன்றுதேறும் ஆடினர். ஊர்தேறும் அவன் பெருமையை பாட்டாகப் பாடினர். பல்வேறு வகையாக ஆடினர்.

இவைபோலவே நெய்தல் நிலமான கடற்கரையோர மக்களும் தமது தெய்வமான வருணனை ஆடல் பாடலுடன் தொழுது வணங்கினர். அவ்வேளையில் குறிப்பாக பொஜீய சுறா எலும்புகளை நிலத்தில் நட்டும்பனங்கள்ளைக்குடித்தும் ஆணும்பெண்ணும்தமக்குபிடித்தவர் களுக்கு தாழை (கத்தாழை) மலாஜீன் மாலையைச் சூடியும் கடலுக்கு போகாத முழுமதிநாளான பௌர்ணமி நாளில் இவ்வாறே தமது பொழுதைக்கழிப்பர். எனக் கூறும் நச்சினார்க்கினியார் முதல் பின் வந்த தமிழ் அறிஞர்களான பி.டிசீனிவாசஜயங்கார் வரை வருண வழிபாட்டின் எச்சமாக குறிப்பிடும் பட்டினப்பாலையின் 8192ம் அடிகள் பின்வருமாறு நிலவு அடைத்த இருள்போல / வலை உணங்கும் மணல் முன்றில் / வீழ்தாழைத் தாள் தாழ்ந்த / வெண் கூதாளத்துத் தண்பூங்கோதையர் / சினைச்சுறாவின் கோடு நட்டு / மனைச்சேர்த்திய வல் அனங்கினான் / மடல்தாழை மலர்மலைந்தும் / பிணர்பெண்ணைப் பிழி மாந்தியும் / புன்தலை இரும்பரதவர் / பைந்தழை மா மகளிரோடு / பாயிரும் பனிக்கடல் வே(லீட்டம் செல்லாது.

இவ்வாறு கடல்தெய்வமான வருணவழிபாட்டு முறையானது இன்று பெருமளவு மறைந்துள்ளது. எனினும் வல்வெட்டித்துறை மக்களின் ஆரம்ப காலவழிபாடானது இவ்வகையானதேயாகும். இதன் எச்ச மாக இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பும் மீன், கூழ், கள்; என் பனவற்றை படைத்து ஆடல் பாடலுடன் மக்கள் வழிபட்ட தெய் வம் தான் "கப்பற்கிழவன்;" என அழைக்கப்படும் தெய்வமாகும். கடற் தெய்வமாம் வருணபகவானை காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் வழி பட்டதனை நினைவுகூரும் பட்டினப்பாலை வாஜீகள் உரைப்பது போன்ற இயற்கைவழிபாடானது இருபதாம் நுற்றாண்டின் நடுப்பகுதி வரை இக்கோவிலின் முன்றலின் வல்வெட்டித்துறை மக்களால் கைக்கொள்ளபட்டுள்ளது. இத்தகையவழிபாடானது கிறிஸ்தவிற்கு பின 150180 ஆண்டுகளிலகளில் வாழ்ந்த கரிகாற்சோழனுடைய கால வழிபாடென பட்டினப்பாலை ஆசிரியரான "கடியலுலீர்" உருத்தி ரங்கண்ணணார் உரைக்கின்றார். அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டி னத்துடன் கடற்தொடர்புகளை வைத்திருந்த வல்வெட்டித்துறைப் பட்டினத்தின் மறுபெயரான "வல்வை" பற்றிய குறிப்பினையும் பட்டினப்பாலையே நமக்குத்தருகின்றது. காவிரிப்பூம்பட்டினத்திற்கு வேறு இடங்களில் இருந்துவந்த படகுகள் கடற்கரையில் கட்டப் பட்டிருந்தகாட்சியை அதன்29 32வது அடிகளில் பின்வரும்மாறு

**கடல் வணிகர்களின் பிறப்பிடமாகவும் உறைவிடமாகவும் பல்லாண்டு காலமாக விளங்கிய வல்வெட்டித்தறையில் இருந்து புறப்படும் கப்பல்கள் யாவும் இக்கோவிலை அண்டிய கடற்பகுதியில் இருந்தே தமது கடற்பயணங்களை ஆரம்பித்தன.**

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி/ நெல்லோடு வந்த வல்வாய் பஃறி / பணைநிலைப் புரவியின் அணை முதல் / பிணிக்கும் கழிசூழ் படப்பை கூறும் ஆசிலீஜீயா; வல்வெட்டித்துறையின் மறுபெயரான வல்வை (வல்வாய்)இல் இருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்கு சென்ற படகுகளை “நெல்லோடு வந்த வல்வாய் பஃறி“ எனக்கூறுகின்றாலீ;. இவ்வாறு கூறிய உருத்திரங்கண்ணனாலீ; பட்டினப்பாலையின 190191 வது அடிகளில் கங்கை வாரியும் காவரிப் பயனும் / ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் என மீண்டும் ஈழத்தில் இருந்து வந்த உணவப் பொருட்களை வல்வை(வாய்)த் துறைமுகத்தில் இருந்து வந்த நெல்லென முன்பே அடையாளம் காட்டியுள்ளார். காவிரிப்பூம் பட்டினம் பலநூற்றாண்டுகளிற்கு முன்பே கடலில் மூழ்கிவிட்டது. அதனுடன் கடற்றொடர்புகளை கொண்டிருந்த வல்வை எனும் வல்வெட்டித்துறை பட்டினமானது கடலோடிகளின் பெருமைக்குரிய பட்டினமாகவே இன்றும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின இறுதிவரை இத்தகைய இயற்கைவழிபாடு வல்வைகடகடற்கரையில் நின்று நிலைத்துள்ளமை ஆச்சரியமல்ல. இவ்வகைவழிபாடு இம்மண்ணின் தொன்மைக்கும் இன்றும் கடலைத்தமது தெய்வமாக வணங்கும் இம்மண்ணின் மைந்தர்களின்; பெருநம்பிக்கைக்கும் சான்றாகும். கடல்தாண்டி கப்பலில் செல்வோரும் கடல்மீது மீன்பிடிக்கச் செல்வோரும் தமக்குத் துனையாக தாம் வணங்கும் கடவுளையே எப்போதும் நினைத்துக் கொள்வர். பொதுவாகவே மழையும் புயலும் சேர்ந்தடிக்கும் காலங்களில் கடல் பொங்கி ஆகாயத்தில் நட்சத்திரங்களும் மறைந்துவிடும் அலைகளினால் கப்பல்களும் படகுகளும் பந்தாடப்படும்போது கடலோடிகளின் துணையாக வருணபகவானே முன்னிற்பார் என்பது ஐதீகம். இக்காலத்தைப் போல வானொலித் தொடர்பாடல் எதுவுமின்றி கருமையான கடலிலே தனிமையாக நிற்கும் படகானது காற்றின் போக்கிற்கும் அலையின் வீச்சிற்;குள்ளும் சிக்கிசசூழலும் போது இடிஇடிக்கும் அவ்வேளையில் உடலின் இயக்கமே நின்றுவிடும் அக்காலத்தில் மழைத்தெய்வமான வருணபகவானையும் அவர் மகனான அருச்சுனனையும் கடலோடிகள் கூவி அழைப்பர்.

இன்றும்கூட இடி இடிக்கும் போது “வருணபகவானுக்கு அரோகராஞ்ஞ்ஞ் அருச்சுனருக்குஞ்ஞ்ஞ்ஞ்அரோகராஞ்ஞ்..எனகுரலெடுக்கும் வயோதிபத் தாய்மாரையும் முதியோர்களையும் எமது வாழ்நாளில் எமது மண்ணில் நாம் கண்டு வந்திருகின்றோம்.

கடல்மீது கலங்கி நின்று மனம் பயந்து வருணபகவானை நினைத்து அவருக்கு நேர்த்தி வைத்து தப்பிப் பிழைத்து ஊருக்கு திரும்பும் மக்கள் தமமைக் காப்பாற்றிய அக்கடற்தெய்வத்திற்கு நன்றிக்கடனாக தமது நேர்த்தியை நிறைவேற்றுவர். தம்மைக்காத்ததனால் வருணபகவானை தமது காவல்காரனாக மனதில் நினைத்து அவரை வணங்கினர். அவ்வாறே ‘கள்ளை அருந்திய பின்ஏற்படும் மயக்கத்தில்’ (பிணர்பெண்ணைப் பிழிமாந்தி;) வருணபகவானை தமக்கு உடையவனாக தம்மில் ஒருவராக காவற்தெய்வமாக அவரைப்போற்றி வணங்கினர். அக்கடலோடிகளின் அவ்வகையான வணக்கத்தினால் ‘வருணபகவான’; என்னும் பெயர் மறைந்து ‘காவற்காரன்’ என்னும் பெயர் நிலைத்துவிட்டது. எமது மண்ணில் பொதுவாகவே மீனவரும் கப்பல்வணிகர்களும் கடல்மீது பயணிப்பதால் தமக்குத் துணையான தமது காவற்தெய்வமான வருணபகவானை எப்பொழுதும் நினைத்து குறிக்கப்பட்ட உருவை வழிபட்டு இருப்பர். அவ்வுருவம் பின்நாட்களில் கடலோடிகளின் காவற்காரன் என்றும் கப்பலில்



செல்பவர்கள் வழிபடும் தெய்வம் என்பதால் ‘கப்பற்கிழவன்’ என்ற பெயருடனும் நின்று நிலைத்துவிட்டது. ஆரியப்பண்பாட்டிற்கு முந்திய வல்வெட்டித்துறை கடலோடிகளின் முதற்தெய்வமான கப்பற்கிழவன் என்னும் வருணவழிபாடு பின்வந்த காலங்களில் கடற் தாயான முத்துமாரியம்மன் வழிபாட்டால் பின்தள்ளப்பட்டு சைவசமய மறுமலர்ச்சியுடன் கூடிய ஆகமவிதி வழிபாட்டில் முன்வந்த விநாயகர் வணக்கத்தின் எழுச்சியில் இன்று அருகிவிட்டது.

புலால் உண்பதும் கள்அருந்துவதும் எனத்தாம் உண்பதனையே ஆண்டவனுக்கும் படைப்பதே முன்னிருந்ழிதாரின் இயற்கை வழிபாடாகும். புலாலும் கள்ளும் மாமிசமும் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பின்வந்த சைவ ஆகமவிதியாகும்.. இவ்வகையில் கோவிலின் மூலஸ்தானத்தில் முதன்மைத்தெய்வமாக இருந்த ‘கப்பற்கிழவன்’ காவல்காரனாக கோவிலின் வாசலுக்கு படி இறங்கியதும் இன்று புலால் தெய்வம் என்ற பெயரில் கோவிலின் வடகிழக்கு மூலையில் ஒதுக்கப்பட்டுள்ளதும் ஆகம வழிபாட்டின் ஆக்கிரமிப்பே அன்றி வேறில்லை. கப்பற்கிழவன்; என்பதும் காவற்காரன் என்பதும் ஒரேதெய்வமான போதிலும் இன்று பலரும் ‘கப்பற்கிழவன்’ அங்கிருக்கும் விநாயகர் என எண்ணிவழிபடுவது மேலும் விந்தையானது. இவ்வகையிலேயே வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் முதல்தெய்வமான வருணபகவானான கப்பற்கிழவனுடன்· பின்வந்தபிள்ளையாரும் இணைந்து ‘கப்பலுடையபிள்ளையார்’ கோவில் என இக்கோவில பின்வந்தகாலங்களில் பெயர் பெறுவதாயிற்று.

கடல் வணிகர்களின் பிறப்பிடமாகவும் உறைவிடமாகவும் பல்லாண்டு காலமாக விளங்கிய வல்வெட்டித்தறையில் இருந்து புறப்படும் கப்பல்கள் யாவும் இக்கோவிலை அண்டிய கடற்பகுதியில் இருந்தே தமது கடற்பயணங்களை ஆரம்பித்தன. வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரையுடன் இணைந்து காணப்படும் இக்கோவில் அமைந்திருக்கும் நிலப்பகுதி ஆனைவிழுந்தான் என அழைக்கப்படுகின்றது. இக்கோவிலின் முன்னிருந்த பகுதியே பொரியகல்லடி என முன்பு அழைக்கப்பட்டுவந்தது. ஒல்லாந்தர் காலம்வரை வல்வெட்டித்துறையில் இருந்து யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதனை அடை

தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

வாழ்நாள் தமிழ் இலக்கியச் சாதனை விருது

கனடாவில், லாப நோக்கமற்ற குழுவாகப் பதிவு செய்யப்பட்ட தமிழ் இலக்கியத் தோட்டம் உலகெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஓர் இயக்கமாகும். இது வருடா வருடம் வாழ்நாள் தமிழ் கல்வி, இலக்கிய சாதனைகளுக்காக உலகத்தின் மேன்மையான சேவையாளர் ஒருவரைத் தேர்வு செய்து அவருக்கு விருது வழங்கும். இந்த விருது, பாராட்டுக் கேடயமும் 1500 கனடிய டொலர்கள் பணப் பரிசும் கொண்டது. ரொறொன்ரோ பல்கலைக் கழகத்தில், கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தால் நிறுவப்பட்ட நிதியத்தின் ஆதரவில் வருடா வருடம் யூன் மாதம் நடைபெறும் உரைத்தொடருடன் இந்த விருது விழாவும் நடைபெறும். விருது பெற்றவர் பெயர், வழங்கும் இடம், காலம், நேரம் போன்ற விவரங்கள் பத்திரிகைகளிலும், இணையத்தளத்திலும் அறிவிக்கப்படும். உலகளாவிய அங்கத்தினர்களைக் கொண்ட விருது. நடுவர் குழுவின் முடிவு அறுதியானது.

விண்ணப்பப் படிவம்

பெயர்: ..........................................

முகவரி: ..........................................

தொலைபேசி: ..........................................தொலைநகல்: மின்னஞ்சல்:

பரிந்துரை செய்யப்படும் தமிழ் இலக்கிய சேவையாளர் பற்றிய விவரம்: ..................................

முழுப்பெயர்: ..........................................

முகவரி: ..........................................

தொலைபேசி: .......................................... தொலைநகல்: .......................................... மின்னஞ்சல்:

பிறந்த தேதி (அல்லது வயது): ..........................................

கல்வித்தராதரம்: ..........................................

தொழில்/ உத்தியோகம்: ..........................................

பெற்ற விருதுகள், பரிசுகள் பற்றிய விவரம்: ..........................................

தமிழ் இலக்கிய சேவையாளரின் பிரசுரமான புத்தகப் பட்டியல். பதிப்பாளர் பெயரும் பதிப்பித்த தேதி மட்டுமே குறிப்பிடுக. புத்தகமாக வெளிவராதவற்றைக் குறிப்பிட தேவையில்லை. விண்ணப்பத்துடன் புத்தகங்களை இணைக்கவேண்டாம்.

நாவல்கள் விவரம்: ..........................................

சிறுகதைத் தொகுப்பு விவரம்: ..........................................

கவிதைத் தொகுப்பு விவரம்: ..........................................

விமர்சனங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், செவ்விகள்: ..........................................

இன்னும் மேலே குறிப்பிடாத வேறு இலக்கியச் சேவைகள்: ..........................................

இலக்கியச் சேவையாளரை இந்த விருதுக்குப் பரிந்துரைத்து 500 வார்த்தைகளுக்குள் ஒரு குறிப்புத் தரவும் அல்லது இணைப்பாகச் சேர்க்கவும்:

தேதி: விண்ணப்பதாரின் கையொப்பம்:

**பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை கீழ்க்கண்ட முகவரிக்கு 31 ஒக்டோபர் 2010 க்கு முன்பாகக் கிடைக்கும்படி தபாலில் அனுப்பவும். மின்னஞ்சல் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது. விபரங்களுக்கு www.tamilliterarygarden.ca**

Nominations for Iyal Virudhu
c/o Chelva Kanaganayagam
Trinity College
6, Hoskin Avenue
University of Toronto,
Toronto, ON
M5S 1H8
Canada

தமிழ் இலக்கியத் தோட்டம்
TAMIL LITERARY GARDEN

**பொதுவாகவே இயற்கை வழிபாடான சங்ககால வழிபாட்டிலும் சரி அல்லது பின்புவந்த ஆகம வழிபாட்டிலும் சரி தெய்வத்திற்கு படைக்கப்படும் திருவமுதுகள் இறுதியில் பக்தர்களிற்கே உரியனவாகின்றன.**

யாளப்படுத்தும் இவ்விடத்திலேயே தமிழரின் தொன்மைக்கு சான்று பகரும் கப்பற்கிழவன் கோவில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் இருந்து தமது கடற்பயணங்களை ஆரம்பிக்கும் கப்ப லோட்டிகள் தமது காவல்க்காரனாம் கப்பலுடையவரை வணங்கி விட்டே தமது பயணத்தைத் எப்போதும் தொடருவர். இக்காலங் களில் பாய்களை விரித்து நங்கூரத்தை இழுக்கும் போது ஏற்படும் தம்உடல் அசதியைமறக்க அனைவரும் கோரசாக தமக்கு நம்பிக்கை உள்ள கடவுளர்களை துணைக்கழைத்து பாடுவர். இப்பாடல்கள் 'ஏலோலப்பாடலகள்' எனவும் 'அம்பாப்பாடல்கள' எனவும் இடத்திற் கிடம் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படும்.

இத்தகையபாடல்களுடன் தமது கடற்ப்பயணங்களினை ஆரம்பிக் கும் வல்வெட்டித்துறைக் கடலோடிகளினால் பாடப்பட்ட பல பாடல்கள் பா.மீனாட்சிசுந்தரம் எழுதிய 'வரலாற்றில் வல்வெட்டித் துறை' என்னும் நூலில் காணப்படுகின்றன. தனித்தனியாக பல தெய்வங்களின் பெயா;களும் அப்பாடல்களில் இழையோடிக; காணப் படுகின்றன. உதாரணமாக அந்நூலின் 148ம்பக்கத்தில் காணப்படும் பாடலின் சில அடிகள் பின்வருமாறு

பிள்ளையார் காவலிலே வேதனைகள் வாராமல் /அம்மனுடைய காவலிலே ஆபத்து வாராமல் / சிவனுடைய காவலிலே சீரழிவு வாராமல் / முருகையா காவலிலே மோசமேதும் வாராமல் / வாராமல் காத்தருளும் வல்லிபுரஆண்டவனே / கப்பலுடையவரே கணகலக்கம் தீர்த்தவழி / எப்பொழுதும் உமைமறவோம் எங்களை நீ கரைசேரும்!........

இப்பாடலில்பிள்ளையார் எனும்விநாயகர் அம்மன் என வல்வெட்டித் துறையில் அழைக்கப்படும் முத்துமாரிஅம்மன் சிவபிரான் மற்றும் முருகன் என்பவர்கள் தம்முடன் இருந்தாலும் கடலில்செல்லும் தமக்கு எவ்விதஇங்கும் நேராமல் தம்மைக்காக்கும்படி காத்தற்க்கடவுளாம் வல்லிபுர ஆண்டவனை வேண்டும் இவர்கள் இறுதியில் கப்பலடை யவரே கண் கலக்கம் தீரித்தவரே.... எங்களை நீ கரைசேரும் எனப் பாடுகின்றார்கள். மேற்கூறிய இவ்வடிகள் மூலம் பிள்ளையாரைத் தவிர்த்து 'கப்பலுடையவா' அல்லது 'கப்பற்கிழவன்' என்னும் தெய் வம் வேறானது என்பதுடன் இறுதியில் கப்பலுடையவரையே அக் கடலோடிகள் தஞ்சமடைந்து அவரையே தம்மைக் கரைசேர்க்கும் படி வேண்டுவதையும் அறியக்கூடியதாக உள்ளது..

இங்கு குறிப்பிடப்பட்ட பாடல்போன்று வேறும் சிலபாடல்கள் மூலமும் கப்பலுடையவர் வேறு பிள்ளையார் வேறு என்பது உறுதிப் படுத்தப்படுகின்றது. இத்தகைய ஆதாரங்கள் மூலம் கப்பலுடைய வர் என்னும் கப்பற்கிழவனே கடலோர வல்வெட்டித்தறை மக்களின் ஆரம்பகால காவல்தெய்வமும் முதல்த்தெய்வமும் ஆகின்றுது.

இவ்வாறு ஆரம்பகாலங்களில் கடற்தெய்வமான வருணனை வழிபட்ட மக்கள் பின்நாட்களில் கடல்நீரையும் தெய்வமாக வழிபட்டார்கள். கடலலையை தாயாக போற்றும் இம் மக்கள் கடல்நீரையே தமது தெய்வமாக வழிபட்டவர்கள் என்பதை பின்வரும் "நற்றிணை" அடிகள் மூலம் நாம் அறியலாம்.

தெண்டிரைப் / பெருங்கடற்பரப்பில் அமர்ந்துறை யணங்கே / இருங்கழி மருங்கின் நிலைபெற்றனையே.

தெண்டிரை தெளிந்தகடல் அலை / இருங்கழி ஆழந்தகடல் / அணங்கே பெண்ணே / கடற்பெண்ணே / ஆழ்ந்தகடலிலும் நிலைபெற்றனையே என இதன் கருத்து அமைகின்றது.

கடலைவணங்குவதும் அதற்கு அடையாளமாக கடல்நீரிற்கு நேர்த்தி கடன் வைப்பதும்; அதன்காரணமாக படையலிட்டு வணங்குவது



அல்லது பலிகொடுப்பதும் இன்று எங்கும் அருகிவிட்டது. இன் றைக்கு சுமார் நாற்பது வருடங்களிற்கு முன்பும் கப்பலுடைய பிள்ளையார் கோவிலின் முன்றலில் இத்தகைய வழிபாடுநடைபெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை கப்பலுடைய பிள்ளையார் கோவிலின் வடக்கு வாசலை அன்று அலங்கரித்துக்கொண்டிருந்த அரசமரநிழலில் ஆக்கப் படும் பலவித உணவுகளும் அதேவாசலில் 'கப்பற்கிழவன்' வருண னுக்கு படைக்கப்படும். இதனை 'வழிவெட்டும்படையல்' என அழைப் பர். பின்னர் கட்டுமரமாதிரியில் செய்யப்பட்ட சிறியபாய்மர மொன் றில் அனைத்து உணவுகளும் வைக்கப்படும். இதனைத் தொடர்ந்து படையலுடன் கூடிய அம்மாதிரிப்பாய்மரம் கரையில் இருந்து 'வட்டி' எனப்படும் கடல் அணைக்கு வெளியில் இழுத்துச்செல்லப் பட்டு ஆழ்கடலிற்குள் விடப்படும். பொதுவாகவே இயற்கை வழி பாடான சங்ககாலவழிபாட்டிலும் சரி அல்லது பின்புவந்த ஆகம வழிபாட்டிலும் சரி தெய்வத்திற்கு படைக்கப்படும் திருவமுதுகள் இறுதியில் பக்தர்களிற்கே உரியனவாகின்றன. ஆனால் இங்கு கடற் தாய்க்கு படைக்கப்படும் அனைத்துஉணவுகள் யாவும் கடலிற்கே உரியனவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடலின் சீற்றத்தினால் தமதுதொழிலில் ஏற்படும் பாதிப்பகளை தவிற் பதற்காக கடல் வணிகர்களும் கடல்மீது சென்று மீன்பிடிப்போர் தமது வலைகளில் மீன்படுவது(மீன் அகப்படுவது) குறையும்போது; 'ஓடாவியார்' எனப்படும் படகுகளைச் செய்வோர் தமது படகுகள் கடல் மீது எவ்விதகுந்தகமும் நேராமல் பயணம் செய்வதற்காகவும் இவ்வாறான நேர்த்திக்கடன்களை கடல்தாய்மீது நிறைவேற்றுவர்.

'ஓடாவி கந்தசாமி' என்பவரால் இறுதியாக இத்தகைய வழிபாடு கப்பற் கிழவன் கோவில் முன்றலில் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. எனினும் போர்க்காலச் சூழ்நிலையால் இவ்வழிபாடு முற்றுமுழுதாக இன்று மறைந்துவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை பேணப்பட்டு வந்த இவ்வகை நடைமுறைகளின் மூலம் கடலோடி களான வல்வெட்டித்துறை மக்களின் முதல் தெய்வமாக வருண பகவானான 'கப்பற்கிழவன்' வல்வெட்டித்துறையின் முதற்கோவிலாக 'கப்பற்கிழவன்' கோவிலும் காணப்படுகின்றது. ■

[ கட்டுரை ]

# நாம் அவர்களுக்கு எதையாவதை சொல்லியே ஆகவேண்டும்

## செழியன்

"இராணுவம் உன்னுடைய வீட்டை உடனடியாகக் காட்டிக் கொடுக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தது. மூன்று மாதமாக நான் அதை தவிர்த்துக்கொண்டே வந்தேன். அவர்களுக்கு நான் சொன்னது: "இப்போது நாம் அவனுடைய வீட்டுக்குப் போனால் அவன் அங்கு இருக்கமாட்டான். பின்னர் ஒரு சமயம் போவோம்."

பிறந்த வீட்டையே பார்க்க முடியாத ஒரு நிலைமை ஒருவருக்கு இருந்தால் அது வாழ்க்கையில் ஒரு பெரிய சாபம். அந்த வீட்டை மீண்டும் ஒரு தடவை பார்க்கக் கிடைத்தால் அது ஒரு வரப்பிரசாதம். இந்த அனுபவம் இலங்கையைத் தவிர வேறு எந்த நாட்டில் இருக்கின்றது? ஒரு வேளை பாலஸ்தீனர்களுக்கு அது இருக்குமோ?

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு பிறகு யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற எனது பிறந்த வீட்டுக்குச் சென்றேன். நான் பிறந்த போது இருந்த அந்த குடிசை வீடு இப்போது இல்லை. குடிசையோடு பக்கத்தில் இருந்த சமையல் கொட்டில் இல்லை. பதிலாக பின்னர் கட்டிய கல் வீடு இருந்தது.

எனது அம்மாவுக்கு பிரசவ வலி எடுக்கின்ற போதெல்லாம் பக்கத்தில் இருந்த எனது ஆச்சியும் பெரியம்மாவும் இப்போது உயிரோடு இல்லை. ஆச்சியின் ஒரு புகைப்படமாவது இருக்கின்றதா என்று தேடிப் பார்த்தேன். அவர் அங்கு வாழ்ந்ததற்கான எந்த அடையாளமும் அங்கு இருக்கவில்லை. நான் என் தாத்தாவை ஒரு தடவையேனும் பார்த்தது கிடையாது. என்னுடைய கடைசி மகள் பிறக்கின்ற போது அவளுடைய தாத்தா உயிரோடு இல்லை அது போலவே நான் பிறக்கின்ற போது என்னுடைய தாத்தா உயிரோடு இல்லை. அவருடைய முகம் எப்படி இருக்கும் என்று எத்தனையோ தடவை கற்பனை செய்தும் அது சரியாக வரவில்லை.

துலாவில் தண்ணி அள்ளி எடுத்துப் பருக ஆசை. ஆனால், துலா அங்கு இல்லை. அதை தாங்கிய பூவரசுகளும் இல்லை. கயிறும் வாளியும் இருந்தன. அதைக் கூட பயன்படுத்துபவர்கள் குறைவு. எல்லாப் பக்கமும் மோட்டார் இயந்திரம்.

முன்றலில் மிக வீரமாக எழுந்து நின்ற வேம்பு ஒரு அன்னியனால் தலை வெட்டப்பட்டு குனிந்து கிடந்தது. பதிலாக புதிதாக பல வேம்புகள் மிக இளமையாக, முகம் மலர்ந்து, அழகு காட்டி வளவை நிறைத்து நின்றன. என் குழந்தைகளைப் பார்க்கின்ற போது ஏற்படும் உற்சாகமும் சந்தோசமும் அதில் இருந்தது. தென்னைகள், கமுகுகள் எல்லாம் என்னைவிட வயதாகி சோர்ந்து போய் இருந்தன.

ஆச்சியை எனக்கு நினைவிருக்கின்றது. பள்ளி விடுமுறையின் போது ஒவ்வொரு வருடமும் நாம் மலையகத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்வோம். ஒரு நாளேனும் தனது பிள்ளைகளையோ, பேரப்பிள்ளைகளையோ பாட்டி திட்டி நான் பார்த்ததில்லை.

மிக சுறு சுறுப்பான பேர்வழி. ஏழு குழந்தைகளை பெற்றெடுத்தவர். அந்த நாளிலேயே தனது மூத்த மகன் மதம் மாறி கல்யாணம் செய்ததை ஏற்றுக்கொண்டவர். இப்போது அவர் இருந்தால் முற்போக்கு பெண்மணி என்று ஒரு பெயர் கிடைத்திருக்கும்.

என்னுடைய அப்பா ஒரு வாத்தியார். கணக்கில் ஒரு புலி என்று சொல்லாம். சரியாக பள்ளிக்கு கோடை விடுமுறை வருகின்றபோது அம்மாவை யாழ்ப்பாணம் அனுப்பி விடுவார். அம்மா வரும் போது ஒரு குழந்தையுடன் வருவார்.

யாழ்ப்பாணத்தில் எனக்கு பல பெரியம்மாக்கள் இருந்தனர்.

எனது தம்பிகள் பிறந்த போதெல்லாம் அவர்களை குளிப்பாட்டி சீராட்ட குடு குடுவென குட்டிப் பெரியம்மா வருவார். அவர்தான் பிறந்த குழந்தைகளை சுடுதண்ணீர் போட்டுக் குளிப்பாட்டுவார். திண்ணையில் பாய்விரித்துக் கிடத்தி துவட்டி விடுவார். நெற்றியில் கறுப்பு பொட்டு போட்டுவிடுவார். கன்னத்தில் ஒரு திருஸ்டிப் பொட்டு. எல்லா இடத்திலும் பவுடர் போடுவார். முடிவில் "சுப்பிரமணிய சாமி" என்று மர்ம உறுப்பில் ஒரு முத்தம் கொடுப்பார். அந்தத் தாய் இப்போது உயிரோடு இல்லை.

பாக்கியப் பெரியம்மா என்று இன்னொரு பெரியம்மா இருந்தார். மாலை நேரத்தில் தனது ஆட்டுக்கு புல் புடுங்க எங்கள் தோட்டத்திற்கு வருவார். கடைசித் தம்பி அப்போது தான் பிறந்து இணுவில் வைத்தியசாலையில் இருந்தான்.

"என்னடா தம்பியோ, தங்கச்சியோ கிடைச்சது'. புல்லை உலவாரத்தால் செதுக்கிய படி கேட்டார். "தம்பி பெரியம்மா."

"அப்ப நீங்கள் இப்ப பஞ்ச பாண்டவர் ஆகிட்டிங்கள்.... என்ன பெயர் அவனுக்கு வைச்சனீங்கள்?" "சிவலோகன் பெரியம்மா."

"சிவசுதன் என்று வையுங்கோடா."

"சரி பெரியம்மா... அப்பா வந்ததும் சொல்லுறம்."

என் குட்டித் தம்பி வீட்டுக்கு வரும் போது கையோடு ஒரு சிறு புத்தகமும் வந்தது. அதில் முதலில் சிவலோகன் என்று எழுதப்பட்ட பெயர் வெட்டப்பட்டு பின்னர் சிவசுதன் என்று எழுதப்பட்டிருந்தது.

பாக்கியப் பெரியம்மா இப்போது உயிரோடு இல்லை. அவர் வாழ்ந்த வீடும் இல்லை. அந்த நிலத்தில் இருந்த மரங்களும் இல்லை. யுத்தத்தால் தரைமட்டமாகிக் கிடந்தது அந்த நிலம். அந்த வீட்டில் வாழ்ந்த அவருடைய மூன்று பெண்களும் (எனது அக்காக்கள்) இப்போது அங்கு இல்லை.

தனக்கு யார் பெயர் வைத்தது என்று என் கடைசி தம்பிக்கு இன்று வரை தெரியாது.

சிவசுதனுக்கு இப்போ மூன்று ஆண் குழந்தைகள். அமெரிக்காவில் இருக்கின்றார்கள். தமிழ் ஒரு கஸ்டமான மொழி என்ற திடமான முடிவில் இருக்கின்றார்கள்.

உரும்பராயில் நான் காலடி வைத்ததும் என்னை சந்திக்க திரண்டு யாருமே வரவில்லை. என் ஒன்றுவிட்ட தம்பி வந்தான். அவன் பிறந்ததது, வளர்ந்தது பக்கத்து வளவில்.

"அண்ணை ஞாபகம் இருக்கா. உங்களைத் தேடி இராணுவம் வந்தது, உங்கட வீட்டை சுத்தி வளைச்சது, எல்லாம்..."

"அட இப்பையும் அது உனக்கு நினைவிருக்கா?"

"விடியப்புறம் ஒரு இரண்டு மணி இருக்கும். பத்துப் பதினைஞ்சு ரக்குகள் உங்கட வீட்டை வந்தது. நான் பயத்தில வீட்டை விட்டே ஓடிப்போயிட்டன் அண்ணை."

**பிடிபடுபடுவர்கள் தங்களுக்கு தெரிந்த எல்லா விடங்களையும் இராணுவத்திற்கு சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனது அமைப்பில் இருந்த எல்லாருக்கும் இருந்தது.**

இப்படித்தான் அது நடந்தது. இந்தியாவுக்கு போவதற்காக 'ஐயா' தோழரை மயிலிட்டிக்கு கூட்டிச்சென்ற சுகுத் தோழர் மீண்டும் எனது வீட்டுக்குத் திரும்பவில்லை.

மறுநாள் அறிந்தோம், எல்லாருமே இராணுவத்தால் கைது செய்யப் பட்டதாக. அன்றில் இருந்து நான் வீட்டில் இரவில் தங்குவதில்லை. "இவரைத் தேடி இராணுவம் வருமாம் என்று இவர் ஒழிச்சுத் திரியிறார். எல்லாம் இவன்ட கப்சா" என்று அப்பா தொடர்ந்து திட்டிக்கொண்டிருந்தார். சில நாட்களின் பின்னர் மீண்டும் எல்லா அரசியல் வேலைகளும் எனது வீட்டில் தொடர்ந்தது.

ஒரு மூன்று மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு இராணுவப் படுகொலைகளைப் படம் பிடித்;தோம். எல்லா வெளிநாட்டு தூதரங்களுக்கும் அனுப்புவதற்காக அதை பிரதி எடுத்து கடித உறையில் இட்டு, முகவரி எழுதி எனது வீட்டில் வைத்தோம். மறுநாள் அதை நாம் அஞ்சல் செய்ய வேண்டும்.

அன்று பின் இரவில் இராணுவம் எனது வீட்டை சுற்றி வளைத்தது. அந்த இராணுவ வாகனத்தில் இருந்த ஐயாத் தோழர் என்னுடைய வீட்டைக் காட்டிக் கொடுத்தார்.

நான் வீட்டில் இல்லாத படியால் எனது கடைசி இரண்டு தம்பிகளையும் இராணுவம் கைது செய்துகொண்டு போனது.

அதன் பிறகு அந்த இராணுவம் மானிப்பாய்க்கு சென்றது. அங்கு எமது இன்னொரு தோழனான அசோக்கின் வீடு இதே ஐயாத் தோழரால் காட்டிக் கொடுக்கப்பட்டது. ஆனால், அங்கு அசோக்கும் இருக்கவில்லை.

"எங்கட வீட்டில தங்கியிருந்து, எங்கட சாப்பாட்டை சாப்பிட்ட உன்ட ஆள்தான் இப்ப உன்னை காட்டிக் கொடுத்திட்டான்" என்று எனது அப்பாவும் அம்மாவும் ஆவேசப்பட்டனர்.

சில வருடங்களின் பின்னர் ஒரு நாள் ஐயா தோழர் விடுதலை செய்யப்பட்டார். ஒரு சமயத்தில் எனது வீட்டுக்கு நான் அவரைக் கூட்டிச் சென்றேன். ஐயா தோழரின் மீதான கோபம் எனது பெற்றோர்களுக்கு கடைசி வரை இருந்தது.

"காட்டிக்கொடுத்தவனையேதிரும்பவும்வீட்டுக்குகூட்டிக்கொண்டா வாராய்?" என்று என்னோடு சண்டை போட்டார்கள்.

நான் சைக்கிளில் பலாலி வீதியால் போகும் போது இராணுவ வாகனத்தில் 'யாரையாவது தெரிந்தவர்களைக் காட்டிக் கொடு' என்று கொண்டு செல்லப்பட்ட ஐயா தோழர் என்னைக் கண்டும் காட்டிக் கொடுக்கவில்லை.

"மூன்று மாதங்களாக உன்னுடைய வீட்டுக்கு இராணுவம் வருவதை நான் ஒத்திப்போட்டேன். அங்கிருந்து நீங்கள் எல்லாரும் தப்பிவிட வேண்டும். அங்கு எந்த ஆதாரமும் இல்லாமல் அழிப்பதற்கு உங்களுக்கு கால அவகாசம் வேண்டும் என்பதே என்னுடைய நோக்கமாக இருந்தது."

வவுனியாவைச் சேர்ந்த ஐயாத் தோழரையும், அந்த மண்ணில் அரசியல் வேலைகள் செய்து கொண்டிருந்த சுகுத் தோழரையும் இராணுவம் பிடித்ததும், "டேய் சிவாவைத் தெரியுமா உங்களுக்கு?" என்று சித்திரவதை செய்தது.

இராணுவம் கேட்ட சிவா வவுனியாவில் புளட் இயக்கத்தில் இருந்த சிவா. நான் அவன் இல்லை.

ஆனால், ஐயாத் தோழரும் சுகுவும் இராணுவத்திற்கு ஏற்கெனவே என்னைப் பற்றி தெரியும் என்று தவறாக நினைத்து, என்மீதே எல்லா குற்றங்களையும் சுமத்திவிட்டார்கள்.

இராணுவத்திடம் பிடிபடுபவர்கள் இரகசியங்களை சொல்லிவிடக் கூடாது என்பதற்காக புலிகள் தமது உறுப்பினர்களுக்கு கொடுத்தது சயனைட். நாங்கள் கொடுத்தது நம்பிக்கை. பிடிபடுபடுவர்கள் தங்களுக்கு தெரிந்த எல்லா விடங்களையும் இராணுவத்திற்கு சொல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனது அமைப்பில் இருந்த எல்லாருக்கும் இருந்தது. ஆனால், கைது செய்யப்படுபவர்கள் தமக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்ல முடியாது. எதையாவது அவர்கள் சொல்லியே ஆகவேண்டும். யாராவது ஒருத்தரை சுட்டிக் காட்டி, 'அவர்தான் எல்லாவற்றுக்கும் பொறுப்பு' என்றும் சொல்ல வேண்டி வரலாம்.

ஐயாத் தோழர் கைது செய்யப்பட்டது இது முதற் தடவை அல்ல. பஸ்தியாம் பிள்ளை இவரை ஏற்கெனவே ஒரு தடைவ கைது செய்து சித்திரவதை செய்துள்ளான். அப்போது தான் எப்படி நடந்து கொண்டேன் என்பதை ஐயா எனக்கு மிக விபரமாக சொல்லியுள்ளார். சித்திரவதையின் உற்சக்கட்டத்தில், "நான் எல்லா உண்மைகளையும் சொல்லுறன் சேர்" என்று ஐயா சொல்ல அந்த வதை படலம் தற்காலிகமாக முடியும்.

அதற்கு பிறகு சிகரட், தேனீர் வழங்கப்படும்.

"சரி உண்மையை சொல்லு."

"எனக்கு ஒன்றுமே தெரியாது சேர்."

மீண்டும் சித்திரவதை. "சொல்றன் சேர்."

"சரி சொல்லு." அடி உதைகள் நிறுத்தப்படும்.

"சேர் தண்ணி."

தண்ணீர் வழங்கப்படும். 'மட' 'மட' என்று தண்ணீரை குடித்து விட்டு நிமிர, "சரி இப்ப உண்மையைச் சொல்லு" என்ற உறுமல் கேட்கும். "சேர் எனக்கு உண்மையிலேயே ஒன்டும் தெரியாது." திரும்பி அடி உதை.

இப்படியே நாட்கள் போய் ஒரு நாள் களைச்சுப் போன பொலீஸ் காரர்கள் ஐயாத் தோழரை விட்டுவிட்டார்கள்.

இப்படித்தான் இரண்டாம் முறையும் ஒரு நாள் ஐயாத் தோழரை விடுதலை செய்தார்கள். மீண்டும் தனது அரசியல் பணிகளை அவர் தொடர்ந்தார். பின்னர் ஒரு நாள் சுகு தோழர் விடுதலை செய்யப் பட்டார்.

ஆக முடிவில், இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் பின்னரான ஒரு சில நாட்களில் ஐயாத் தோழர் படுகொலை செய்யப் பட்டார். வவுனியாவில் தங்களைத் தவிர வேறு யாரும் அரசியல் செய்யக்கூடாது என்பதற்காக மக்கள் செல்வாக்குப் பெற்ற தோழர் ஐயாவை சக விடுதலை இயக்கம் படுகொலை செய்தது. இந்த படுகொலையை செய்தவர்கள் விடுதலைப் புலிகள் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அது உண்மையில்லை.

தோழர் ஐயாவை கொன்றது புளட் இயக்கம்.

எதிரியிடம் இருந்து பல தடவைகள் தப்பிய பலருக்கு, தம் நண்பர்களின் துப்பாக்கிகளிடம் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்பது ஒரு வரலாறு அல்ல. இன்றும் தொடரும் தொடர்கதை.

■

[ கட்டுரை ]

# செகாவின்மீது பனிபெய்கிறது

## எஸ்.ராமகிருஷ்ணன்

Give me a wife who, like the moon, won't appear in my sky every day செகாவின் புகழ்பெற்ற காதல் வரிகள் இப்படி தான் துவங்குகின்றன. செகாவ் தனது நாடகங்களில் நடித்த ஒல்கா என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தபோது விதித்த நிபந்தனைகளில் மிக முக்கியமானது மணமானபிறகு ஒல்கா மாஸ்கோவிலும் தான் யால்டாவிலும் இருக்க வேண்டும் என்பதே. ஒல்கா விரும்பும் போது தன்னை பார்க்க வரலாம். தான் மாஸ்கோவிற்கு போகும்போது அவளோடு சேர்ந்து இருப்பேன். மற்றபடி அவரவர் வாழ்வு அவருக்கு. இப்படியான துணையாக ஒல்கா இருப்பதாக இருந்தால் மட்டுமே திருமணம்செய்து கொள்ள முடியும் என்றார்.

அதை ஒல்காவும் ஒத்துக் கொண்டார். எதற்காக இப்படி பிரிந்து வாழ வேண்டும் என்ற கேள்விக்கு செகாவ் அப்போது தான் மனைவியை எப்போதுமே காதலித்து கொண்டிருக்க முடியும். ஒரே வீட்டில் எப்போதும் கூடவே இருந்தால் மனைவியின் மீதான ஈர்ப்பு குறைந்துபோய்விடும். இப்படி அவரவர் உலகில் தனித்து வாழ்வதால் ஒவ்வொரு முறையும் காதலியை தேடிப் போவதை போல ஆர்வமாக கிளம்பி சென்று மனைவியை சந்தித்து தங்கி மகிழ்ந்து வரலாம் என்றார்.

திருமணமான பெண்கள் அடையும் வெறுமையையும், அதை போக்கி கொள்ள அவர்கள் கொள்ளும் எத்தனிப்புகளையும் செகாவின் கதைகள் தொடர்ந்து சித்தரிக்கின்றன. குறிப்பாக அவரது நாய்க்கார சீமாட்டி கதை ( The Lady with the Dog). திருமணமான பெண் ஒருத்திக்கும் திருமணமான ஆண் ஒருவனுக்கும் எதிர்பாராமல் ஒரு கோடை வாசஸ்தலம் ஒன்றில் ஏற்படும் சந்திப்பும் நெருக்கமும் பற்றியது.

இருவரையும் ஒன்று சேர்ந்து வைப்பது அவர்களது உயிர்ப்பில்லாத குடும்ப வாழ்க்கையே. திருமணம் அவர்களின் கனவை நிறைவேற்றவில்லை. மாறாக அது வெறும் சடங்காக மட்டுமே நடந்தேறிவிடுகிறது. அவர்கள் இருவருக்குள்ளும் தவிப்பும், தொடர்ந்து காதலிக்கபட வேண்டும் என்ற இச்சையும் பீறிடுகிறது.

ரோமியோ ஜூலியட் கடந்த காலத்தின் காதல் கதை என்றால் நம் காலத்தின் காதல் கதை நாய்க்கார சீமாட்டியே. திருமணத்திற்கு முன்பு திருமணத்திற்கு பின்பு என்ற பேதங்கள் காதலில் கிடையாது. காதல் எந்த வயதிலும் உருவாகக் கூடியது. அது ஒரு தேவை. அது ஒரு தவிப்பு. இளைப்பாறுதல், அல்லது நேசிக்கபட வேண்டும் என்ற அடிமனிதனின் ஏக்கம். ஆணும் பெண்ணும் தங்களை யாராவது நேசிக்க வேண்டும் என்பதில் எப்போதுமே அக்கறை கொள்கிறார்கள்.

நாய்கார சீமாட்டியில் வரும் காதலும் அப்படி தான் துவங்குகிறது. டிமிட்ரி மாஸ்கோவில் உள்ள வங்கி ஒன்றில் பணியாற்றுகின்றவன். திருமணமாகி பனிரெண்டு வயதில் மகளும் இரண்டு மகன்களுமிருக்கிறார்கள். யால்டாவில் அவன் விடுமுறையை கழிக்க வந்து சேர்கிறான். அங்கே தற்செயலாக கடற்கரையில் ஒரு இளம்பெண் நாயோடு நடந்து செல்வதை காண்கிறான். அவள் அழகில் மயங்கி அந்த ஊரே அவளை வேடிக்கை பார்க்கிறது. டிமிட்ரிக்கும் முதல் பார்வையிலே அவள் பேரழகி என்பது புரிந்துவிடுகிறது.

ஆனால் அவள் யார். யாரோடு வந்திருக்கிறாள் என்ற எந்த விபரமும் தெரியவில்லை. நாயோடு ஒரு இளம் பெண் நகரை சுற்றிக் கொண்டிருக்கிறாள் என்பதில் நகர ஆண்கள் கிளர்ச்சி கொள்கிறார்கள். அவளை சந்தித்துபேசி நட்பு கொள்ள வேண்டும் என்று டிமிட்ரி நினைக்கிறான். அவள் பெயர் அன்னா என்பதை அறிந்து கொள்கிறான். அவளும் திருமணமானவள். கணவன் வேலை காரணமாக வர முடியாமல் போகவே தனியே விடுமுறையை கழிக்க யால்டா வந்திருக்கிறாள்.

அவர்கள் மிக இயல்பாக சந்தித்து பேசிக் கொள்ள துவங்குகிறார்கள். பேச்சின் வழியே அவர்கள் வெறுமை கலையத் துவங்குகிறது, ஓயாத பேச்சு, கடற்கரையில் சேர்ந்து நடப்பது, ஒன்றாக உணவு உண்பது, பரஸ்பர ரசனையை வெளிப்படுத்திக் கொள்வது என்று அவர்களுக்குள் மெல்லிய உறவு உருவாகிறது. பெயரில்லாத அந்த உறவை இருவரும் விரும்புகிறார்கள். பட்டம் காற்றின் விசையில் பறந்து அலைவதை போல அவர்கள் இச்சையின் போக்கில் மிதந்து கொண்டேயிருக்கிறார்கள். எந்த நேரமும் அவள் கணவன் அவளை தேடி யால்டா வந்துவிடக்கூடும் என்ற நெருக்கடி கூடவே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அன்னா தன் வயதை மறந்து, சூழலை மறந்து தன் கனவின் பின்னால் போவதை போல டிமிட்ரியோடு பழகுகிறாள். விடுமுறை முடிந்து அவர்கள் பிரிந்துவிடுகிறார்கள்.

மாஸ்கோவிற்கு வந்து தன் இயல்பான வேலைக்கு திரும்புகிறான் டிமிட்ரி ஆனால் அவனால் அன்னாவை மறக்க முடியவில்லை. நினைவெல்லாம் அன்னா நிரம்பி அவனை ஆக்ரமித்து கொள்கிறாள். அவளைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே பீட்டர்ஸ்பெர்க் நகரில் ஒரு வேலையிருப்பதாக கிளம்புகிறான். போன வேலையை முடித்து கொண்டு அன்னாவின் வீட்டினை தேடி கண்டுபிடிக்கிறான். அவள் தன்னை நினைவில் வைத்திருப்பளா? தான் ஒரு வேளை அவளை இடையூறு செய்கிறோமா என்று அவன் மனது குழப்பமடைகிறது. ஆனாலும் அவளை ஒரு முறை மறுபடி பார்க்க

**சமூகம் உருவாக்கி வைத்துள்ள கட்டுபாடுகள், நியதிகள் வரம்புகளை தனிநபர்கள் எல்லா நேரங்களிலும் பின்பற்றுவதில்லை. அதை மீறவும் எதிர்க்கவும் ரகசியமாக தாண்டி செல்லவுமே முற்படுகிறார்கள்.**



வேண்டும் என்ற மனவேகம் அவனை இழுத்து போகிறது. இந்த குழப்பத்தின் முடிவில் அவளை பார்க்காமல் அறைக்கு திரும்பி விடுகிறான்.

மறுநாள் ஒரு இசை நிகழ்ச்சி நடைபெறுவதை நாளிதழில் காண்கிறான். அதற்கு அன்னா தன் கணவனோடு வரக்கூடும் என்று அங்கே செல்கிறான். அவன் நினைத்தது போலவே அன்னாவை சந்திக்கிறான். புகை பிடிக்க அன்னாவின் கணவன் விலகி சென்ற நேரம் அவளை தனியே சந்திக்கிறான். அவனை போலவே அவளும் மறக்க முடியாமல் நினைத்து கொண்டேயிருப்பதாக சொல்லி அங்கே அவர்கள் சந்தித்து கொள்ள வேண்டாம் தானே அவனை பார்க்க மாஸ்கோ வருவதாக சொல்கிறாள். டிமிட்ரி போய்விடுகிறான்.

அதன்பிறகு மருத்துவரை பார்க்க செல்வதாக கணவனிடம் பொய் சொல்லிவிட்டு அவள் மாஸ்கோ கிளம்பி வருகிறாள். டிமிட்ரியை சந்திக்கிறாள். இருவரும் காதல் வசப்பட்டிருப்பதை புரிந்துகொள் கிறார்கள். இந்த உறவை எப்படிக் கொண்டு செல்வது என்று இரு வருக்கும் தெரியவில்லை. ஆனால் அவர்கள் பிரிந்து போவதில் விருப்பமற்று இருக்கிறார்கள். கதை அங்கேயே முடிந்து போகிறது. எதிர்பாரத இடத்தில் எதிர்பாரத நபருடன் ஏற்படும் காதலை சொல்லும் செகாவ் தனது சுயவாழ்வின் சாயல்களை இந்த கதையில் நிறைய அடையாளப்படுத்துகிறார்

நாய்க்கார சீமாட்டியின் மீது ஒல்காவின் ரசனைகளும் அவளது சாயலும் படிந்திருக்கிறது. 1899 ம் ஆண்டு டிசம்பரில் இந்த கதை வெளியானது. நூறு வருசங்களை கடந்த பிறகு இன்றும் இக்கதை யின் ஈரம் உலரவேயில்லை. நேற்று வெளியான கதையின் செழுமை போல துளிர்ப்புடனிருக்கிறது. காலம் அதை புதியதாகவே வைத்தி ருக்கிறது. செகாவ் என்றைக்குமான மனித உறவின் சிக்கலை எழுதியிருக்கிறார். அதனால் தான் மொழி கடந்து அது உலகெங்கும் ஒன்று போல வாசிக்கவும் நேசிக்கவும்படுகிறது

நாற்பது வயது மனிதனின் காதல் பதின்வயதின் காதலை போன்ற தில்லை. மாறாக அது திருமணத்தின் பிறகும் தீராத அன்பிற்கான ஏக்கம். அதை தான் டிமிட்ரியும் அன்னாவும் உணர்கிறார்கள். டிமிட்ரியின் குழப்பங்களும் தடுமாற்றங்களும் இயல்பாக சித்தரிக்க படுகின்றன. இந்த குழப்பங்கள் எதுவும் அன்னாவிடம் இல்லை. அவள் தனக்கான மனிதனை தேடி வெளியே வர தயாராகவே இருக் கிறாள். அவை தடுப்பது சமூகமும் குடும்பமும் மட்டுமே. ஆனால் அவளிடம் அதை எதிர்கொள்ளும் துணிச்சலிருக்கிறது.

சமூகம் உருவாக்கி வைத்துள்ள கட்டுபாடுகள், நியதிகள் வரம்புகளை தனிநபர்கள் எல்லா நேரங்களிலும் பின்பற்றுவதில்லை. அதை மீறவும் எதிர்க்கவும் ரகசியமாக தாண்டி செல்லவுமே முற்படுகிறார்கள். வரம்புகளுக்குள் வாழ்பவர்கள் தங்களை வருத்திக் கொண்டு இயல் பான சுதந்திர வேட்கையை அடக்கி கொண்டுவிடுகிறார்கள். திரு மணத்தின் பிறகு தனது விருப்பங்களையும் கனவுகளையும் பகிர்ந்து கொள்ள இயலாத ஒருவரோடு வாழ வேண்டிய நெருக்கடி உருவாகி விட்டதே என்று பலரும் தங்களுக்குள்ளாக புலம்பிக் கொண்டி ருக்கிறார்கள். தலை லேசாக நரைக்க துவங்கியதும் மனது இனி மேல் எதற்காக குடும்ப ஒழுக்கங்களுக்குள் சிக்கி கொள்ள வேண் டும் நாம் விரும்பியது போல வாழலாமே என்ற எண்ணம் துளிர்க்க துவங்குகிறது. சமூகம் இது போன்ற உறவை ஒரு போதும் அங்கீ கரிக்காது என்ற போதும் தனிநபர்கள் அதை நோக்கியே நகர்கி றார்கள்.

கதையின் மையப்படிமம் நாய்க்குட்டி. நாய்களோடு பழகுவதில் செகாவ் அதிக ஆர்வம் கொண்டிருந்திருக்கிறார். ஒரு நாள் அவரது மருத்துவமனைக்கு ஒரு சிறுமி கால் உடைந்துபோன தெருநாய் ஒன்றினை கொண்டுவந்து சிகிட்சை செய்ய சொல்லியிருக்கிறாள். அவர் அந்த நாய்க்குட்டியை செல்லமாக தடவிக் கொடுத்துவிட்டு எங்கே போய் விளையாண்டு காலை உடைத்து கொண்டாய். ரொம்ப வலிக்கிறதா? உன்னால் இந்த சிறுமி எவ்வளவு வேதனைபடுகிறாள் பார் என்று வாய்விட்டு பேசியிருக்கிறார். மருந்திட்டு நாயை அவளி டம் தந்துவிட்டு உன்னை பார்க்கும்போது எனக்கும் வேதனையா கவே இருக்கிறது. நீ விரைவில் குணமடைந்து என்னை பார்க்க வரவேண்டும் என்கிறார்.

சில வாரங்களுக்கு பிறகு அதே சிறுமி தெருநாயை அழைத்துகொண்டு வந்த போது அவர் மிக ஆசையோடு அதை கட்டி அணைத்துக் கொண்டு கண்ணே சௌக்கியமாக இருக்கிறயா என்று பேசியதை மருத்துவமனையே வேடிக்கை பார்த்திருக்கிறது. செகாவின் நினைவு குறிப்புகளில் இந்த சம்பவம் குறிப்பிடப்படுகிறது. செகாவ் கதை களில் வரும் நாய்கள் பெரும்பாலும் குறீடாகவே வருகின்றன. உதார ணம் பச்சோந்தி கதை.

நாய்க்கார சீமாட்டியில் அவள் தன்னுடைய தனிமையை தான் நாய்க்குட்டியாக கூட்டிக் கொண்டு அலைகிறாள் என தோன்று

கிறது. அந்த நாய்க்குட்டியோடு அவள் நடக்கிறாள். நாய் அவளது இயல்பையே கொண்டிருக்கிறது. அவளை சந்தித்து பேச ஆசைப் படும் டிமிட்ரி முதன்முதலில் உணவகத்தில் அன்னாவின் நாயைப் பற்றி தான் பேச துவங்குகிறான்.

அது கடிக்காது என்று அவள் சொல்கிறாள். தன்னை அனுமதிக்கும் செயல் அது என்பதை உடனடியாக டிமிட்ரி புரிந்து கொள்கிறான். அவள் சலிப்புற்றிருக்கிறாள். இந்த நகரால், வாழ்வின் நீண்ட தனிமையால், நகரவாசிகளின் கண்கள் தன்னை பின்தொடர்வதால் அவள் சலிப்பு அடைந்து போயிருக்கிறாள். அதை டிமிட்ரி முதல் பார்வையிலே உணர்ந்து கொள்கிறான். அவன் அதைப்பற்றியே பேசு கிறான். அவள் சிரிக்கிறாள்.

சிரிப்பு தான் அவர்கள் இருவரின் மௌனத்தை கலைக்கிறது, அந்நியர் களாக தோன்றிய மனத்தடையை உடைத்து எறிகிறது. அந்த சிரிப்பை அவள் உலகில் நுழையும் சாவியை போல பயன்படுத்துகிறான் டிமிட்ரி. இருவரும் தன்னை பற்றி பேசியபடியே கடற்கரையில் நடக்கி றார்கள். அவசர அவசரமாக கிடைத்த நேரத்திற்குள் தன் மொத்த கடந்த காலத்தையும் அவளிடம் சொல்ல விடவேண்டும் என்று ஆசைப்படுகின்றவனை போலவே டிமிட்ரி நடந்து கொள்கிறான்.

அன்னா தான் ஒரு மோசமான பெண், தன்னை தானே பல வருச மாக ஏமாற்றிக் கொண்டு வருகிறேன். என் கணவர் மிக அன் பானவர். என்னால் அப்படியிருக்க முடியவில்லை எனக்குள் ஏதோ நடந்து கொள்கிறது. அது என்னை உந்தி தள்ளுகிறது. ஏதையாவது செய் என்கிறது. நான் அவதிப்படுகிறேன் என்கிறாள்.

அவர்கள் நாட்கணக்கில் கடலின் முன்னால் பேசிக் கொண்டே யிருக்கிறார்கள். ஒன்றாக உணவு உண்கிறார்கள். ரசனையை பகிர்ந்து கொள்கிறார்கள். முடிவில் இத்தோடு அந்த உறவு முடிந்துவிட்டது என்று பரஸ்பரம் விடைபெற்றும் கொள்கிறார்கள். ஆனால் ஆசைகள் எளிதில் முடிந்துவிடக்கூடியதில்லை என்பதாலே அவன் மறுபடி அவளை தேடிப்போகிறான். அவள் மாஸ்கோவிற்கு மறுபடி வருகிறாள்.

செகாவ் நடுத்தரவயது ஆண் பெண்ணின் மனதை துல்லியமாக படித்து அறிந்து எழுதுகிறார். அன்னாவும் டிமிட்ரியும் பேசிக் கொண்டிருக்கும் போது திடீரென கவிழ்ந்துவிடும் நிசப்தம் பற்றி பல இடங்களில் கவனமாக குறிப்பிடப்படுகிறது. அந்த நிசப்தம் கடந்த காலத்தின் மிச்சம். அவர்களை கடந்த காலம் பின்னோக்கி இழுத்துக் கொண்டேயிருக்கிறது. அதை அவர்கள் உணர்வதும் கடந்து போவதுமாக இருக்கிறார்கள். கலையின் உன்னத விளை யாட்டில் ஒன்றே இது. அதை செகாவ் அழகாக நடத்தி காட்டு கிறார்.

செகாவின் பெரும்பான்மை கதைகள் முடிவதில்லை. நிகழ்வின் ஒரு இடத்தில் கதை துண்டிக்கபட்டுவிடுகிறது. வாழ்க்கை அப்படியானது தான். அதற்கு தனியான துவக்கமோ முடிவோ இல்லை. இரண்டு புள்ளிகளுக்குள் நாம் தான் அதை அடையாளப்படுத்திக் கொள் கிறோம் என்கிறார் செகாவ்.

இதே நாய்க்கார சீமாட்டி கதையை அமெரிக்க எழுத்தாளரான ஜாய்ஸ் காரல் ஒட்ஸ் பெண்ணிய பார்வையில் புதியதாக மாற்றி மறுகதை எழுதியிருக்கிறார்.இக்கதை செகாவின் கதையில் வரும் அதே நிகழ்வுகளை அன்னாவின் பார்வையில் விவரிக்கிறது. அதில் வரும் அன்னா செகாவின் கதாபாத்திரத்திலிருந்து மாறுபட்டவள். ஆனாலும் செகாவின் கதை நாயகியை போல அவள் நுட்பமாக உருவாக்கபடவில்லை.

செகாவ் நிறைய பெண்களை காதலித்தார். காதலிப்பதன் வழியாக மட்டுமே தன்னை புத்துருவாக்கம் செய்து கொள்ள முடிகிறது என்று அறிவித்தார், திருமண வயதை கடந்தும் தனித்து வாழ்பவர்கள் துயரமானவர்கள். அவர்கள் தயக்கத்தாலும், தடுமாற்றத்தாலுமே தனியே வாழ்கிறார்கள். அதை விடுத்து விரும்பியபடி வாழ்க்கை அனுபவித்துவிட்டு போகலாம் என்றே குறிப்பிடுகிறார் செகாவ்.

வாழ்வை புரிந்துகொள்வதில் செகாவ் தனித்துவமானவர். அவர் மனது வாழ்வை நேர்கொண்டு உழன்று அதிலிருந்து கற்று தேறியி ருக்கிறது. சிறுவயதில் அவர் சாலையொன்றில் கைவிடப்பட்ட



குதிரை ஒன்று பனியில் நனைந்தபடியே நிற்பதை கண்டார். அதன் மீது அவருக்கு பரிதாபம் உண்டானது. ஏன் இவ்வளவு நிர்கதியாக குதிரை நிற்கிறது என்று நினைத்துக் கொண்டு தானும் இது போல யாருமில்லாமல் இதே இடத்தில் நின்றால் என்னவாகும் என்ற படியே பனியில் நிற்க துவங்குகிறார். இரவு நீள்கிறது. முடிவில்லாமல் பனி கொட்டுகிறது.

செகாவ் மீது பனி பொழிந்து அவரை நடுங்க செய்கிறது. அவர் நோயாளி. ஆனாலும் குளிரோடு போராடியபடியே நின்று பார்க் கிறார். அந்த வீதியில் ஒரு குதிரையும் செகாவும் மட்டுமே நிற்கிறார்கள். இருவர் மீதும் பனி கொட்டுகிறது. குதிரை அவரை திரும்பி பார்க்க வேயில்லை. செகாவ் துயரமடைகிறார். கைவிடப்படுதலும் நிரா கரிப்புமே மனித வேதனைகளில் முக்கியமானது என்ற குறிப்பை எழுதுகிறார். அவரது கதைகள் இந்த இரண்டு உணர்ச்சிகளையே தொடர்ந்து வலியுறுத்துகின்றன.

செகாவ் பிறந்து 150 ஆண்டுகள் ஆனதை இன்று உலகமே கொண் டாடுகிறது. செகாவின் கதைகளில் மிக சிறந்ததும் இந்த நூற்றாண்டின் மிக சிறந்த காதல்கதையும் நாய்க்கார சீமாட்டியே என்று நபகோவ் தனது ருஷ்ய இலக்கிய கட்டுரையில் விவரிக்கிறார்.

என்னை எப்போதுமே செகாவ் பனியில் நனைகிறார் என்ற படி மம் வசீகரிக்கிறது. அது வெறும் குதிரையின் மீதான பரிதாபம் மட்டுமில்லை. மொழியற்ற துயரின் மீதான எழுத்தாளனின் அக்கறை யான செயல்பாடு அதுவே.

செகாவின் சொற்களில் அந்த இரவும் பனியும் தனிமையும் அப்படி யே உறைந்து போயிருக்கிறது. 150 ஆண்டுகளை தாண்டியும் செகாவ் பேசப்படுவதற்கும் கொண்டாடப்படுவதற்கும் இதுவே காரணம் என்பேன்.

■

[ கட்டுரை ]

# பழைய சொற்கள் புதிய மெருகு ஐராவதம் மகாதேவனின் எழுத்து பயணம்


## பொன். தனசேகரன்


சர்வதேச அளவில் தொல்லியல் நிபுணர்கள் மத்தியில் பிரபலமான பெயர் ஐராவதம் மகாதேவன். இந்திய விடுதலைப் போராட்ட காலத்திலிருந்து டி.எஸ். சொக்கலிங்கம், ஏ.என். சிவராமன் போன்ற தலைசிறந்த பத்திரிகையாளர்கள் ஆசிரியர்களாக இருந்த தினமணி நாளிதழுக்கும் அவர் ஆசிரியராக இருந்து அவர்கள் விட்டுச் சென்ற நல்ல மரபுகளையும் பண்பாடுகளையும் கட்டிக் காத்து பெருமை சேர்த்தவர். கல்வெட்டு எழுத்தும் அச்சு எழுத்தும் அவரை ஆட்கொண்டது. ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்த அவர், தொல்லியல் துறையிலும் பத்திரிகை துறையிலும் தனது தனி முத்திரையைப் பதித்து நமது பெருமைக்கு உரியவராக இருக்கிறார்.

திருச்சி மாவட்டம் மணச்சநல்லூரில் 1930ல் பிறந்த அவர், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்தார். அவர் டாக்டராக வேண்டும் என்பது அவரது தந்தையின் விருப்பம். அதில் இடம் கிடைக்காததை அடுத்து சென்னை விவேகானந்தா கல்லூரியில் பி.எஸ்சி. வேதியியல் படித்து விட்டு, மீண்டும் டாக்டராக வேண்டும் என்று நினைத்தார். அந்த நாளில் பி.எஸ்சி. படித்து விட்டும் எம்.பி.பி.எஸ். படிக்க வாய்ப்பு இருந்தது. ஆனாலும்கூட, எதிர்பார்த்த அளவு பட்டப் படிபபில் மதிப்பெண் கிடைக்கவில்லை என்பதால் சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். வழக்கறிஞராகச் சிறிது காலம் பணியாற்றினார். வழக்கறிஞர் பணி செய்து பொருளாதார ரீதியாக தனித்து இயங்க நாளாகும் என்ற எண்ணத்தில், 1953ம் ஆண்டில் சிவில் சர்வீஸ் தேர்வுகளை அவர் எழுதினார். 23 வயதான அவர், தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெற்றவர்களிலேயே முதல் மாணவராகத் திகழ்ந்தார். ஐ.ஏ.எஸ். முதல் நிலையில் இருந்த சிலரை நேரு அழைத்து அவர்களை ஐ.எஃப்.எஸ். பணியில் சேரும்படி கூறினார். இதையடுத்து ஐ.எஃப்.எஸ். பயிற்சியில் சேர்ந்த மூன்று மாதங்களுக்குள்ளாக ஐ.ஏ.எஸ். பணியில் சேர்ந்து நாட்டின் வளர்சிப் பணிகளில் ஈடுபட விரும்பினார். இதையடுத்து, ஜவஹர்லால் நேருவுக்கு கடிதம் எழுதி ஐ.ஏ.எஸ். பணிக்கு மாற்றிக் கொண்டார். ஐ.ஏ.எஸ். பணிக்குத் திரும்பாமல் ஐ.எப்.எஸ். பணியிலேயே இருந்திருந்தால் வெளிநாடுகளில் பணியாற்றி ஓய்வு பெற்றிருப்பார்.

அவர் ஐ.ஏ.எஸ். பணியைத் தேர்ந்தெடுத்ததால், இந்தியாவிலேயே பணி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது தொல்லியல் துறைக்குக் கிடைத்த பேறு என்றால் மிகையில்லை. பள்ளிக் காலத்திலேயே சிந்து வெளி நாகரிகம் பற்றி அவருக்கு ஆர்வம் தலையெடுக்கத் தொடங்கிவிட்டது. வணிகவியல் அமைச்சகத்தில் பணியில் இருந்த போது அவரது அலுவலகத்திற்கு அருகே தேசிய அருங்காட்சிய கத்திலிருந்த சி. சிவராமமூர்த்தியைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பும் கிடைத்ததால் கல்வெட்டு எழுத்துகள் ஆய்வில் மேலும் தீவிர ஆர்வம் கொண்டார். தொல்லியல் துறையில் ஈடுபாடு காரணமாக தமிழகத்தில் மலைப் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று தகவல்களைப் பதிவு செய்வதில் ஆர்வம் காட்டினார். தமிழகத்தில் கல்வெட்டு எழுத்துக்கள் ஆராய்ச்சியில் அவரது பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர் எழுதி வெளியிட்ட நூல்களிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும்.

ஐ.ஏ.எஸ். பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றிருந்த நிலையில், இந்தி யன் எக்ஸ்பிரஸ் அதிபர் கோயங்காவின் வேண்டுகோளை ஏற்று தினமணியில் ஆசிரியப் பணியிலும் சேர்ந்தார். அவருக்கு தமிழில் ஆர்வம் உண்டே தவிர, பத்திரிகைத் துறையில் அனுவபம் இருந்த தில்லை. ஆனால், ஏ.என். சிவராமன் பணி ஓய்வுக்குப் பிறகு தினமணி ஆசிரியர் பொறுப்பை ஏற்ற ஐராவதம் மகாதேவன், அந்தப் பணி யையும் நன்கு அறிந்து கொண்டு சிறப்பாகவே செய்திருக்கிறார். 1987ஆம் ஆண்டில் தினமணிக்கு ஆசிரியராக வந்ததும் அவர் செய்த சில பணிகள் முக்கியமானவை. பத்திரிகையில் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியதும் பத்திரிகையின் அமைப்புமுறையில் காலத்துக்கேற்ற வடிவமைப்பு மாற்றங்களைக் கொண்டு வந்ததும் அவரது சாதனைகள். அத்துடன் செய்திகளை நல்ல தமிழில் கொண்டு வருவதற்கான முயற்சிகளையும் செய்தார். தினமணியின் வார இணைப்புகளாக தமிழ்மணி, தினமணி சுடர் ஆகியவற்றைக் கொண்டு வந்ததார். 1987ம் ஆண்டிலிருந்து 1991ம் ஆண்டுக்குள் ஆசிரியராக இருந்த குறுகிய காலத்திற்குள் இந்தப் பணிகளைச் செய்திருக்கிறார். இதையெல்லாம்விட குறிப்பிடத்தக்கது, ஆசிரியர் என்ற பொறுப்புக்கு உரிய கௌரவத்தையும் கம்பீரத்தை விடாமல் காப்பாற்றியிருக்கிறார்.

தினமணியில் ஆசிரியாரசப் பொறுப்பேற்றதும் பெரியாரின் சீர் திருத்த எழுத்துக்களை தினமணியில் அறிமுகப்படுத்தியது பலரை யும் ஆச்சரியப்படுத்தியது. அதுவரை விடுதலை நாளிதழும் அதை யடுத்து தினமலர் நாளிதழும்தான் பெரியார் அறிமுகப்படுத்திய சீர்திருத்த எழுத்துக்களைப் பயன்படுத்தி வந்தன. தினமணியில் அவர் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்ததை அடுத்து மற்ற பத்திரிகைகளும் பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு மாறின. இது அவரது முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதலாம். "தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை வாசகர்கள் ஏற்றுக் கொண்டதை ஒரு வெற்றியாகக் கருதுகின்றேன். முதல் நாளன்று வந்த ஒரு கடிதம் விடுதலை இதழுக்குப் போய்ச் சேர வேண்டிய ஆசிரியர் தின மணிக்குக் கிடைத்து விட்டார் என்று ஒரு கடிதம் வந்தது. அதை வெளியிட்டேன். அதைத் தொடர்ந்து பல மாணவர்கள் இபபொழுது உள்ள தினமணி எழுத்துக்களைத்தான் எங்களால் படிக்க முடிகிறது என்று எழுதினார்கள். ஆக அது இன்றளவும் நிலைத்து விட்டது" என்று அவர் நேரில் பேசும் போது குறிப்பிட்டார். தினமணி இதழில் பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் ஏன் பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்கி ஒரு கட்டுரையே எழுதினார்.

"ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெரியார் அவர்கள் தமிழில் சில எழுத்துக்களைத் திருத்தியமைத்து அவற்றைத் தமிழ் மக்கள் ஏற்க வேண்டுமென்று விடுதலை முதலிய வெளியீடுகள் மூலம் இடைவிடாது பிரசாரம் செய்தார். ணா, றா. னா, ணை, லை, ளை, னை என்று எழுத்துக்களை மாற்றியமைத்தது அவர்தான். தமிழறி ஞர்களின் பழமை பற்றினாலும் அரசியல் விருப்பு வெறுப்புகளா லும் "பெரியார் எழுத்துகள்" பொதுவாக ஏற்றுக் கொள்ளப் படாமல் இருந்தன....சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாடு அரசு "பெரியார் எழுத்துக்களை" அங்கீகரித்து ஆணை பிறப்பித்த பிறகு, இவ்வெழுத்துக்கள் பாடப் புத்தகங்களிலும் மற்ற நூல்களி லும் பரலாக உபயோகத்தில் வந்து விட்டன. இன்று பள்ளி களில் படிக்கும் சிறுவர்களால் ணா, லை போன்ற பழைய எழுத்து களை அடையாளம் கண்டு கொள்ள முடியாது என்றே சொல்ல லாம். இந்நிலையில் நாமும் இப்புதிய எழுத்துக்களைக் கையாண் டால்தான் இளைய தலைமுறையினர் நாம் எழுதுவதைப்புரிந்து கொள்ள முடியும். நாம் இப்புதிய எழுத்துக்களை ஏற்காவிடில் நாம் எழுதுவதை முதியோரும் கல்வெட்டு ஆராய்ச்சியாளருமே படித்தறி யும் நிலை வந்துவிடும்" (தினமணி 28.8.1987) என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

எழுத்துக்கள் ஒரு மொழியைப் பதிவு செய்ய உதவும் கருவிகளே. ஒரு மொழியை வெவ்வேறு எழுத்துகளிலும் பல மொழிகளை ஒரே விதமான எழுத்து முறையிலும் எழுத இயலும் என்று குறிப்பிடும் ஐராவதம் மகாதேவன், உலகிலுள்ள எல்லா எழுத்து வடிவங்களும் காலப்போக்கில் படிப்படியாக மாறி வந்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி'யின் முதல் பதிப்பு வெளி யானபோது அவர் தமிழ்மணியில் (25\1\1992) எழுதிய புத்தக மதிப்பு ரையில் கூறியுள்ள விஷயங்கள் இன்றைக்கும் நினைத்துப் பார்க்க வைக்கிறது. அதிலிருந்து ஒரு பகுதி:

'இந்தப் பத்திரிகை நான் வாங்கியது'. இந்த வாக்கியத்தின் பொருள் உங்களுக்கு விளங்குகிறது அல்லவா? ஆனால் இதன் பொருள் தொல் காப்பியருக்கோ, திருவள்ளுவருக்கோ புரிந்திருக்காது என்ற வியப் பான உண்மையைச் சுட்டிக்காட்டினார்.('தமிழின் மறுமலர்ச்சி' என்ற தொகுதியில் 'சொல் வரலாற்று நியதி' என்ற கட்டுரையைப் பார்க்க வும்).

'இந்த' என்ற சொல் தொல்காப்பியத்திலோ, திருக்குறளிலோ, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை ஆகிய சங்க இலக்கியங்களிலோ காணப் படவில்லை. 'பத்திரிகை' என்ற வடமொழிச் சொல்லுக்கு முற் காலத்தில் 'இலை' அல்லது 'ஓலை' என்ற பொருள்களே இருந்தன. 'நாளேடு' என்ற பொருளில் இந்தச் சொல் 19ம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்துதான் வழங்கத் தொடங்கியுள்ளது. (இன்னும் சில ஆண்டுகளில் வையாபுரிப் பிள்ளையின் காலத்தில் பெரு வழக்கி லிருந்த 'பத்திரிகை' என்ற சொல்லும் வருங்காலத் தமிழில் இடம் பெறாமல் போகலாம் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.) 'நான்' என்ற சொல்லும் மேற்கூறிய சங்க இலக்கியங்களில் காணப் படவில்லை. 'யான்' என்பதே அந்தக் காலத்திய வழக்காகும். 'வாங் கியது' என்பது பழந்தமிழர் சொல்லாயினும், 'விலை கொடுத்துப் பெற்றுக் கொண்டது' என்ற பொருளில் சங்க காலத்திற்குப் பிறகு தான் வழங்கத் தொடங்கியது. ஆகையால் நீங்கள் தொல்காப்பி யரிடமோ, திருவள்ளுவரிடமோ, 'இந்தப் பத்திரிகை நான் வாங்கி யது' என்று இன்றைய 'தினமணி'யை நீட்டினால் அப்பெரும் புலவர் கள் நீங்கள் பேசும் மொழி என்னவென்றே புரியாமல் விழிப்பார் கள்!(இன்றைய 'தினமணி'யில் உள்ள எழுத்துகளையும் அவர்களால் படிக்க முடியாது.)

கன்னித் தமிழ் என்பது ஓர் அழகான கற்பனையே. உண்மையில் தமிழும் மற்ற உயிரோட்டமுள்ள உலக மொழிகள் அனைத்தையும் போலவே காலந்தோறும் மாறி மாறி வந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் காலந்தோறும் மாற்றங்களைப் பெற்று பெருகி வருவதே ஓர் உயிருள்ள மொழிக்குப் பெருமையாகும்..." இப்படி அவரது விமர்சன கட்டுரை தொடர்கிறது.

தினமணி பத்திரிகையில் ஆங்கிலச் சொற்களைக் குறைத்து வட மொழிச் சொற்களைக் குறைத்தும் நல்ல தமிழில் எழுத வேண்டும் என்ற அக்கறையுடன் செயல்பட்டு அதை செயல்படுத்தியதில் அவ ருக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. தமிழ் வார்த்தைகளைப் பயன் படுத்துவதில் எப்படிப் பயன்படுத்துவது என்பதில் அவரது அணுகு முறை எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

'காலையில் எழுந்து நாளேட்டைப் பிரித்துப் பார்த்தவுடன் இன் னொரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கும் செய்தி நம் கண் ணை உறுத்துகிறது.

தமிழ் இலக்கியத்தில் காணப்படாத உயர் மட்டம் என்ற அழகற்ற சொல் தொடர் எப்படி இன்றைய வழக்கில் வந்தது? இது High level என்ற ஆங்கிலச் சொல் தொடரின் நேர் மொழிபெயர்ப்பாகும்.

தமிழில் மட்டம் என்ற சொல் சமநிலை (Level) என்ற பொருளைத் தந்தாலும் இச்சொல் தாழ்வு, கீழ்மை, சிறுமை என்ற பொருளில் தான் பெருவாரியாக வழங்குகிறது. அவன் மட்டமானவன்: மட்ட மான நடத்தை, பேச்சு மட்டம் தட்டுதல் போன்ற வழக்குகளைக் கவனிக்கவும். மட்டு, மட்டம் என்ற சொற்களுக்குக் குறைவு என்பது தான் அடிப்படைப் பொருளாகும். இந்த நோக்கில் உயர் என்ப தும் மட்டம் என்பதும் எதிர்மறைப் பொருள்களையே தருகின் றன.

நல்லவேளையாக உயர்மட்டம் என்ற சொல் உருவாகு முன்னரே நமது பள்ளிகளுக்கு மேல் நிலை (மேனிலை) அல்லது உயர்நிலை என்று பெயரிட்டு விட்டார்கள். இல்லையென்றால் இன்று உயர் கல்வியும் உயர் மட்டக் கல்வி ஆகி விட்டிருக்கும்.

தினமணியில் உயர் மட்டம் என்று இப்பொழுது எழுதுவதில்லை. உயர்நிலை அல்லது மேனிலை என்ற சொற்களையே பயன்படுத்து கிறோம். உயர்நிலை, இடைநிலை, கடைநிலை என்ற அழகிய பொருள் நிறைந்த சொற்கள் இருக்கும்போது உயர்மட்டத்தையும் அடிமட்டத்தையும் நாட வேண்டாமே" என்று தினமணி தமிழ் மணியில் (27\1\1990) 'பழைய சொற்கள் புதிய மெருகு' என்ற தலைப் பில் எழுதிய பகுதியில் அவர் எழுதியுள்ளார்.

தினமணியில் நாள்தோறும் வரும் செய்திகளைப் பொருத்து எந்த விதமான வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறிப் பிட்டு ஆசிரியர் குழுவினருக்கு குறிப்புகளாக எழுதி அனுப்புவார். செய்தி எழுதும்போது, தினமணி ஆசிரியர் குழுவினரும் நிருபர் களும் அதனைப் பின்பற்ற வேண்டும். பத்திரிகையாளர்களைச் சுதந்திர மாக எழுதுவதற்கு அனுமதிக்கும் அதே நேரத்தில் பத்திரிகையில் தவறு ஏற்பட்டு விடக்கூடாது என்பதிலும் கறாராக அவர் இருப் பார். பத்திரிகையில் பணிபுரிபவர்களில் விஷயங்களை அறிந்தவர் களிடம் அதுகுறித்த கருத்துக்களைக் கேட்டறியவும் தயங்கியதில் லை. சரியான கருத்துகளை ஏற்கவும் தவறியதில்லை.

அவரது தமிழ் ஆர்வம் காரணமாக தினமணியில், ராஷ்டிரபதி என் பது குடியரசுத் தலைவர் என்று ஆனது. லோக்சபா மக்களவை ஆகியது. ராஜ்ய சபா மாநிலங்களவை ஆகியது. கேசட் என்பதற்கு ஒலிப்பேழை, ஒளிப்பேழை என்ற சொற்களைக் கொண்டு வரக் காரண மாக இருந்தவர் அவர்தான். சஸ்பென்ஷன் (Suspension) என்பதற்கு சஸ்பெண்டு செய்தார்கள் என்று எழுதி வந்த நிலை மாறி பணி இடை நீக்கம் என்ற சொல்லை கொண்டுவரக் காரணமாக இருந்த வர் அவர்.

அவர் ஆசிரியராக இருந்தபோது நிருபர்களும் துணை ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டியவை என்று குறிப்பிட்டு எழுதி அனுப்பிய குறிப்பு கள் இன்றைக்குக் காணாமல் போனது பத்திரிகையாளர்களுக்கு ஏற் பட்ட இழப்பு என்று தான் சொல்ல வேண்டும். தினமணி பத்திரி கையாளர்கள் பின்பற்ற வேண்டும் என்று ஐராவதம் மகாதேவன் எழுதி அனுப்பிய குறிப்புகளிலிருந்து சில எனது நினைவுகளிலி ருந்து...

பஞ்சலோகச்சிலை என்று சொல்லக்கூடாது. செப்புச் சிலைகள் என்று எழுத வேண்டும். செப்புச் சிலைகளில் பஞ்சலோகங்கள் இல்லை.

மேலும் இவ்வாறு கூறுவதனால் சிலை என்றே எழுத வேண்டும்.

மனைவி என்ற சொல்லுக்குப் பதிலாகத் துணைவி என்று எழுத வேண்டாம். மனைவி (Wife), துணைவி (Companian) என்ற இரு சொற்களும் வெவ்வேறு பொருள் தரும். வருஷம், ஆண்டு இரண்டு

**நீங்கள் தொல்காப்பியரிடமோ, திருவள்ளுவரிடமோ, ‘இந்தப் பத்திரிகை நான் வாங்கியது’ என்று இன்றைய ‘தினமணி’யை நீட்டினால் அப்பெரும் புலவர்கள் நீங்கள் பேசும் மொழி என்னவென்றே புரியாமல் விழிப்பார்கள்!**

சொற்களையும் பயன்படுத்தலாம். வருடம் என்று எழுதுவது காதுக்கு இனிமையாக இல்லை. இதுபோல விஷம், விசேஷம் என்ற சொற்களை நஞ்சு, சிறப்பு என்று தமிழ்படுத்தலாம். ஆனால், விடம், விசேடம் என்று எழுதுவது நன்றாயிராது. சுமுகமாக என்பது சரி. சுமூகமாக என்பது தவறு. ஷ, ஜ, ஸி, ஹ என்ற நான்கு கிரந்த எழுத்துகளை உரிய இடத்தில் பயன்படுத்த தயக்கம் காட்டக்கூடாது. (உம்) ஹிந்து, ஹரிஜன், ஹைதராபாத், ஹிமாசலபிரதேசம். ஆனால் சொற்களின் நடுவில் ‘ஹ’ என்ற எழுத்தை ‘க’ என்று எழுதுவது தமிழ் மரபாகும். (உ\ம்) மகாராஜா, அலகாபாத்.

ப்ரணவ முகர்ஜி என்பது சரியானதே என்றாலும் அப்படி எழுத வேண்டாம். பிரணாப் முகர்ஜி என்று வங்காளி மொழி மரபிலேயே எழுதவும். சர்க்காரியா என்று எழுதுவது சரி. மேகாலய, மேகாலயத்தில் என்றும் திரிபுரா, திரிபுராவில் என்றும் எழுத வேண்டும்.

கழகம் என்ற சொல்லைத் தமிழ்நாடு அரசு நிறுவனங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். (உ\ம்) பல்லவன் போக்குவரத்துக் கழகம்

மற்றபடி கம்பெனி, கார்ப்பொரேஷன், இன்ஸ்டிட்யூட் போன்ற ஆங்கில சொற்களுக்கு நிறுவனம் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். (உ\ம்) Life Insurance Corporation என்பதை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் என்று மொழிபெயர்க்கலாம். மேலும் நிலையம், ஸ்தாபனம், மையம் போன்ற சொற்களை இடமறிந்து பயன்படுத்தலாம். Company, Corporation என்ற ஆங்கிலச் சொற்களை அப்படியே ஒலிபெயர்த்து எழுதினாலும் தவறில்லை.

உயிரெழுத்துக்களில் தொடங்கும் சொற்கள் முன்னால் ஓர் என்றும் மெய்யெழுத்துகளில் தொடங்கும் சொற்களுக்கு முன்னால் ஒரு என்றும் எழுத வேண்டும் (ஓர் ஊர், ஒரு கிராமம்) தலைப்புகள் இரு வரிகளில் வருமானால் முதல் வரியின் முடிவில் ஒற்று தேவையில்லை. கொடும்பாவி எரிப்பு என்று வரக்கூடாது. உருவ பொம்மை எரிப்பு என்று எழுத வேண்டும்.

ஜப்பானை சப்பான் என்றோ ஜெர்மனியை செருமனி என்றோ எழுதுவதிலும் அவருக்கு ஈடுபாடு கிடையாது. “அந்த தீவிர எண்ணத்தைக் கொண்டால் பொது மக்களிடம் நாம் போய்ச் சேர முடியாது. அதேபோல கிராமப்புறத்திலே மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தும் வடமொழிச் சொற்களை நீக்கவும் முயலவில்லை” என்பதில் ஐராவதம் தெளிவாக இருந்தார்.

அத்துடன், சொல்லிலேயும் ஒரு நாகரிகம் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவார். தெருவில் ஒரு விபத்து நடந்தால் பரிதாபமாகத் துடிதுடித்துச் செத்தார். மண்டை உடைந்து ரத்த வெள்ளத்தில் மிதந்தார் என்று எழுதக்கூடாது என்பார். நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எல்லா விபத்துச் சாவுகளும் பரிதாபத்துக்குரியதுதான். எனவே இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுவார். இப்படி அவரது தமிழ் ஆர்வம், தினமணியில் எதிரொலித்தது.

இதைபோலவே மொழியில் மட்டுமல்லாமல், வடிவமைப்பு மூலமும் தினமணிக்கு நவீன முகம் கொடுக்க முயன்றார் மகாதேவன். தினமணியின் தலைப்பு எழுத்து வடிவத்தைக் காலத்துக்கேற்ற முறையில் மாற்றி அமைத்ததுடன் முதல் பக்கத்தையும் ஆங்கிலப் பத்திரிகை போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயன்றார். நடுப்பக்கத்தை கட்டுரையும் தலையங்கமும் வாசகர் கடிதமும் உள்ள இடமாக மாற்றினார். தலையங்கம் என்ற சொல்லை ஆசிரியர் உரை என்று மாற்றினார். நடுப்பக்கத்தில் இடது ஓரமாக ஆசிரியர் உரைக்கு இடமளித்த அவர், நடுவில் மேலும் கீழாக இரண்டு கட்டுரைகளுக்



கும், அதற்குக் கீழாக வாசகர் கருத்துகளுக்கும் இடம் அளித்தார். அதையடுத்து அதற்கு வாசகர்களிடம் வரவேற்பு இருந்தது. தலைப்பில் தேவையில்லாத கொட்டை எழுத்துகள் போடுவதையும் தவிர்க்கச் சொல்வார். பார்வைக்கு அழகாக இதழ் இருக்க வேண்டும் என் பதிலே அவர் ஆர்வம் காட்டினார். உருவ அமைப்பில்தான் மாறுதலே தவிர, செல்லும் லட்சிய பாதையில் எந்த மாற்றமும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தவும் அவர் தவறவில்லை.

"...இவையெல்லாம் வெளித்தோற்றத்தில் ஏற்படும் மாறுதல்களேயாகும். தினமணி தோன்றிய நாள் முதல் இன்று வரை கடைப்பிடித்து வந்திருக்கும் அடிப்படைக் கொள்கைகளில் யாதொரு மாறுதலும் ஏற்பட்டதில்லை. இனிமேலும் ஏற்படாது என்றே கூறலாம். அவ்வப்போது இக்கொள்கைகளை நினைவுபடுத்திக் கொள்ள நமக்கென வகுத்துக் கொண்ட லட்சியப் பாதையிலிருந்து நாம் விலகாமலிருக்கத் துணைபுரியும்...நாட்டுப் பற்று, சமுதாயத்தில் ஒருமைப்பாடு, ஜனநாயக மரபுகள், தமிழ்த் தொண்டு, அறிவியல் வளர்ச்சி இவ்வைந்தும் தினமணியின் பஞ்சசீலக் கொள்கைகளாகும்..." (தினமணி ஆசிரியர் உரை 11\9\1987)

தமிழ் நாளிதழ் ஒன்றில் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து தனி இணைப்பு இதழை வெளியிட்டது பத்திரிகை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தினமணியின் இணைப்பாக ஐராவதம் மகாதேவனின் ஆர்வத்திலும் ஈடுபாட்டிலும் வெளிவந்த தமிழ்மணியை தமிழறிஞர்களும் இலக்கிய ஆர்வம் கொண்டவர்களும் இன்றைக்கும் நினைவு கூர்கிறார்கள். முதலில் தினமணி சுடரின் உள் பக்கங்களிலும் பின்னர் தனியாகவும் அது வெளிவந்தது. இலக்கியக் கட்டுரைகளுடன் உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள், சங்கப்பலகை, இலக்கிய மேடை, மதிப்புரைகள்...இப்படி தமிழ் மொழி வளர்ச்சி, இலக்கியம் தொடர்பான பல்வேறு அம்சங்கள் அதில் இடம் பெற்றன.

தமிழில் ஒரு மரபுப் பிரச்சினை என்ற அவரது கட்டுரை (14\7\1990) தமிழ்மணியில் வெளியானது. தினமணி நாளிதழில் தமிழில் பெயர்களை எழுதுவதில் எந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அதில் விளக்கியுள்ளார்.

"வடமொழிப் பெயர்களை தமிழில் எழுதும்பொழுது, 'அன்' அல்லது 'அர்' விகுதிகளைச் சேர்த்து எழுதுவது தமிழ் மரபாகும். ராம, க்ருஷ்ண போன்ற வடமொழிப் பெயர்கள் இராமன், கிருஷ்ணன் என்றே தமிழில் வழங்குகின்றன.

அதேபோன்று வடநாட்டுப் பெரியார்களின் பெயர்களைத் தமிழாக்கம் செய்யும் பொழுது மரியாதைப் பன்மையைக் குறிக்கும் 'அர்' விகுதியைச் சேர்த்து எழுதுவது நம் மரபு (எ\டு) அரவிந்தர், திலகர், விவேகானந்தர். வரலாற்றுப் புகழ் பெற்ற பெயர்களையும் இவ்வாறே எழுதி வந்திருக்கிறோம். (எ\டு) புத்தர், அசோகர், ஹர்ஷர். கடந்த சில ஆண்டுகளில்தான் இந்த மரபு ஆங்கிலத்தின் தாக்கத்தால் சீர்குலைந்து வருகிறது. ஆங்கில மொழியாக்கத்தில் பெயர்களின் பின்னர் அன், அர், அம் விகுதிகள் சேர்க்கப்படுவதில்லை என்பதாலும் பெயர்களின் ஈற்றில் உள்ள அகரம் ஆங்கிலத்தில் ஆகாரமாக நீட்டி உச்சரிக்கப்படுகிறது என்ற தவறான எண்ணத்தினாலும் தமிழிலும் இப்போது இராமன், கிருஷ்ணன் போன்ற மரபுப் பெயர்களை 'ராமா', 'கிருஷ்ணா' என மாற்றி எழுதி வருகின்றனர்.

இதே காரணங்களினால் தமிழ்ப் பெயர்ச் சொற்களின் ஈற்றில் இருக்க வேண்டிய 'அம்' 'அத்து'ச் சாரியைகளும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. 'கேரளம்', 'கர்நாடகத்தில்' போன்ற வழக்குகள் நலிந்து 'கேரளா', 'கர்நாடகாவில்' முதலிய தமிழ் இலக்கணத்திற்குப் புறம்பான சொற்கள் புழக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றன.

இந்திரன் என்பது ஆண் பால்: இந்திரா என்றால் பெண் பால். 'உபேந்திரா' ன்பது எந்தப் பாலைச் சேர்ந்த பெயர்? தெலுங்கு மொழியில் 'உபேந்திர' என்றே எழுதுகிறார்கள்.

ராமதாஸ் என்ற வடமொழிப் பெயரை இராமதாசர் என்று தானே இதுவரை தமிழில் எழுதி வந்திருக்கிறோம். ப்ரேமதாஸ மட்டும் பிரேமதாசாவாக ஆவதேன்? ஹர்ஷவர்த்தனர், பிரபாகவர்தனர் என்று நம் வரலாற்றுப் பெயர்களை எழுதி வந்திருக்கும்போது, இலங்கை முன்னாள் அதிபரின் பெயரை மட்டும் 'ஜயவர்த்தனா' என்று ஏன் நீட்டி எழுத வேண்டும்?

பெயர்களுடன் வேற்றுமை உருபுகளைச் சேர்க்கும்போதுகூட, அன், அர் விகுதிகளையோ அத்துச் சாரியையோ கூட்டாது. 'சின்மயானந்தாவின் பேருரை', 'ஜயவர்த்தனாவின் அறிக்கை', 'உபேந்திராவின் வருகை', 'கேரளாவில் மழை', என்றெல்லாம் பத்திரிகைகள் எழுதி வந்திருக்கின்றன. இவற்றிற்குத் தமிழில் இலக்கணம் எப்படிக் கூறுவது?

தினமணியில் தமிழ் மரபைப் பேண வேண்டும் என்ற ஆர்வத்தில் முதல் கட்டமாக, 'பிரேமதாசா', 'உபேந்திரா' போன்று தவறாக நீட்டி எழுதப் பெறும் பெயர்களை 'பிரேமதாச', 'உபேந்திர' என்று மாற்றி எழுதத் தொடங்கியிருக்கிறோம். மேலும் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதும்போது 'பிரேமதாசவின்' 'உபேந்திரவின்' என்று தினமணியில் வருவது தமிழ் மரபுக்கு உகந்ததாக இல்லையே என்று சில வாசகர்கள் சுட்டிக் காட்டிய பிறகு, வடமொழிப் பெயர்களைத் தமிழாக்கம் செய்து எழுதும்போது இடத்திற்குத் தக்கபடி அன், அர், அம் விகுதியை அல்லது அத்துச் சாரியை சேர்த்து நெடு நாளைய தமிழ் மரபின்படி எழுத வேண்டும் என்றும் முடிவு செய்து ஓரளவு முயன்று வருகிறோம். (எ\டு) இலங்கை அதிபர் பிரேமதாசருடன் விடுதலைப் புலிகள் பேச்சு முறிவு. மத்திய அமைச்சர் உபேந்திரரின் அறிக்கை ஆந்திரத்தில் புயல். கேரளத்தில் மழை.

ஆயினும், இந்த மரபு மீட்சியைச் சிறிது சிறிதாகத்தான் நடைமுறைக்குக் கொண்டு வர இயலும் என்று தோன்றுகிறது... இப்படி எழுதி இருப்பதிலிருந்தே ஐராவதம் மகாதேவனின் மொழி பற்று எத்தகையது என்பது தெரிய வரும்.

'இருபதாம் நூற்றாண்டில் தமிழில் ஏற்பட்டு வரும் மறுமலர்ச்சியில் அறிவியலின் தாக்கம் மிகவும் முக்கியமானது. தமிழ் பாடமொழியாக திறனுடன் செயல்பட வேண்டுமெனில் பல்வேறு அறிவியல் துறைகளிலும் உள்ள கலை நுணுக்கச் சொற்களைத் தமிழாக்கம் செய்தல் வேண்டும். இயற்பியல், வேதியியல், கணிதம், வானவியல், உயிரியல், மருத்துவம், விவசாயம் போன்ற பற்பல அறிவியல் துறைகளிலும் நிகழும் புதிய கண்டுபிடிப்புகளையும் முன்னேற்றங்களையும் விளக்கி எளிய தமிழில் ஏராளமான கட்டுரைகளையும் மொழி பெயர்ப்புகளையும் வெளியிட்டு வரும் தினமணி தமிழில் அறிவியல் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வந்திருப்பதை வாசகர்கள் நன்கறிவார்கள். 21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் நிலையில் அறிவியலின் முக்கியத்துவத்தை முழுவதும் உணர்ந்து இத் துறையில் செய்திகளையும் கட்டுரைகளையும் மேலும் விரிவாக்கித் தரவும் தமிழில் அறிவியல் சொல்லாகத்திற்கு ஊக்கம் அளிக்கவும் திட்டமிட்டு வருகிறோம்" என்று தமது ஆசிரியர் உரையில் குறிப்பிட்ட ஐராவதம் மகாதேவன், அறிவியல் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக 1988ம் ஆண்டில் தினமணி சுடர் அறிவியல் வார இணைப்பை வெளியிட்டார். இதற்காக அறிவியல் துறை கட்டுரைகளை எளிமையாக மற்றவர்களுக்கு புரியும் வகையில் எழுதும் தினமணியின் மூத்த பத்திரிகையாளரான என். ராமதுரையின் பொறுப்பில் அந்த இதழ் தினமணி இணைப்பாக சனிக்கிழமை தோறும் வெளிவந்தன. எளிய தமிழில் பல அறிவியல் கட்டுரைகள் அதில் வெளியாயின.

அதன் முதல் இதழிலேயே அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி விடுகிறார் ஆசிரியர் ஐராவதம் மகாதேவன். "... பெரும்பான்மையான கட்டுரைகள் மொழிபெயர்ப்புகளாக இருப்பது பலருக்கும் ஒரு பெருங் குறையாகவே தென்படுகிறது. இன்றுள்ள நிலையில் அறிவியல் துறைகளில் மொழிபெயர்ப்புகளைத் தவிர்க்க முடியவில்லை. புதுக் கண்டுபிடிப்புகளை உடனுக்குடன் தமிழுலகத்திற்கு அறிவிக்க மொழி பெயர்ப்புகளைத்தான் பெரும்பாலும் நம்பியிருக்க வேண்டியுள்ளது. இந்நிலை படிப்படியாக மாற வேண்டுமெனில், தமிழைத் தாய்மொழியாகப் பெற்ற அறிஞர்கள் தத்தம் அறிவியல் துறைகளில் தாம் அறிந்த உண்மைகளைப் பற்றித் தமிழிலேயே சிந்தித்து, தமிழிலேயே எழுதி தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்க முன்வர வேண்டும். இதை ஒரு சமுதாயப் பணியாக தமிழறிந்த அறிவியல் வல்லுநர் கருதல் வேண்டும்" என்று தினமணி சுடர் (2\4\1988) இதழில் குறிப்பிட்ட அவர், மிக நுட்பமான சிக்கல் நிறைந்த ஆராய்ச்சித் தாள்களை நாளேடுகளில் வெளியிடுவது பொருத்தமாக இருக்காது

## தமிழ் நாளிதழ் ஒன்றில் தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து தனி இணைப்பு இதழை வெளியிட்டது பத்திரிகை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது

என்பதையும் தெளிபடுத்தியுள்ளார்.

அறிவியல் சொல்லாக்கம் எப்படி இருக்க வேண்டும்? என்பதையும் தினமணி சுடரில் ஐராவதம் விளக்கியிருக்கிறார். "ஆங்கிலக் கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்காது அப்படியே ஒலி பெயர்ப்புச் செய்து கொள்வது தான் சரி என்றும், ஆங்கிலத்தையும் வடமொழியையும் அறவே அகற்றிவிட்டு தனித் தமிழச் சொற்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் கூறிவரும் இரு வகையான தீவிரவாதங்களிடையே கருத்து மோதல்கள் நிகழ்ந்தவண்ணம் உளளன. நடைமுறையில் படிப்படியாக ஆங்கிலச் சொற்கள் நீங்கி வடமொழிச் சொற்களும், பின்னர் வடமொழிச் சொற்களும், பின்னர் வடமொழிச் சொற்கள் அகன்று தூய தமிழ்ச் சொற்களும் தமிழில் எழுதப்படும் அறிவியல் நூல்களில் இடம் பெற்று வருவதைக் காண்கிறோம். இவ்வியக்கம் வருங்காலத்தில் மேலும் வலுவடையும் என்றே தோன்றுகிறது.

ஆயினும் அதிவேகமாகப் பெருகி வரும் அறிவியல் துறைகளில் ஆண்டுதோறும் படைக்கப்பட்டு வரும் ஆயிரக்கணக்கான கலைச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களை உடனுக்குடன் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். தேவைக்கேற்ப ஆங்கிலச் சொற்களை அப்படியேயாவது சிறிது ஒலி மாற்றங்களுடனாவது தமிழில் ஏற்றுக் கொள்வது தவிர்க்க முடியாதது. அதேபோல ஒலிபெயர்ப்பு செய்யும் போது ஏற்கனவே தமிழில் அறிமுகமான ஜ, ஷ, ஸ, ஹ என்ற எழுத்துக்களை நீக்கியெழுதுவதும் கூடாது. இவ்வெழுத்துக்கள் வடமொழியில் உள்ள ஒலிகளை மட்டும் குறிக்கவில்லை. அறிவியலில் மிகவும் பயன்படுத்தப்படும் லத்தீன், கிரேக்க மொழிகளிலும் நமக்கு அறிவியல் நுழைவாயிலாக விளங்கும் ஆங்கிலம் முதலான எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இவ்வொலிகள் உள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகையால் இவ்வெழுத்துக்களையும் தேவைக் கேற்ப பயன்படுத்த வேண்டும். அவசியம் ஏற்பட்டால் புதிய குறியீடு களையும் கடன் வாங்கிக் கொள்ளவோ புதிதாகப் படைக்கவோ தயங்கக்கூடாது. 1, 2, 3 முதலிய எண்களும், கால்புள்ளி, அரைப்புள்ளி, முக்கால் புள்ளி, முற்றுப் புள்ளி, வினாக்குறி, ஆச்சரியக்குறி போன்ற குறியீடுகளும், கணிதத்தில் பயன்படுத்தப்படும் (+, -, =, %, போன்றவை) அண்மைக் காலத்தில் தமிழில் நுழைந்து இன்று தமிழ் எழுத்துக்களுடன் இரண்டறக் கலந்து விட்டன என்பதைச் சுட்டிக்காட்டலாம்." என்கிறார்.

தமிழ்மணியிலும் தினமணி சுடரிலும் மற்றவர்கள் எழுத களம் அமைத்துக் கொடுத்த அவர், தனது கட்டுரைகளே அதில் அதிகம் வர வேண்டும் என்று நினைத்து தொடர்ந்து எழுதுபவர் இல்லை. எனினும், செய்தியின் முக்கியத்துவம் கருதி அதுகுறித்து எழுதத் தவறுவதில்லை. சென்னையில் எழும்பூர் சிறுவர்கள் அருங்காட்சியகத்திற்கு முன்பாக உள்ள திறந்தவெளியில் டைரானோசரஸ் ரெக்ஸ் என்ற மிகப்பெரிய டைனோசார் இனத்தைச் சேர்ந்த விலங்கின் உருவம் கண்ணாடி இழையால் செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. 1991ம் ஆண்டில் இதுபற்றி வெளியான செயதியில் எழும்பூர் அருங்காட்சியகத்தின் இயக்குநர் ஜி.கேசவராம், இந்த உலகத்தில் வாழும் விலங்கினங்களும் தாவர இனங்களும் கடந்த 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தான் தோன்றியிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பொது அமைப்பில் இருக்கக்கூடிய ஒருவர் கூறியுள்ள இந்தக் கருத்து தவறானது என்பதை அறிந்த ஐராவதம் மகாதேவன், தினமணி சுடரில், 'டைனோசார்களின் காலம் எது?' என்று கட்டுரை (8\1\1991) எழுதினார். தொல்லுயிர் இயல் (Palaentology) நூல்கள் டைனோசார்கள் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஜுராசிக் (Jurassic) யுகத்தில் தோன்றி 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் க்ரிடேசியஸ் (Cretaceous) யுகத்தின் இறுதி வரை வாழ்ந்து வந்தகாவும் அதற்குப் பின்னர் அவை புவியியலில் ஏற்பட்ட மாறுதல்களைத் தாங்க முடியாமல் அழிந்து போன்தாகவும் குறிப்பிடுகின்றன. அவற்றின் எலும்புகள் காலப்போக்கில் கற்படிவங்களாக (Fossils) மாறி இன்று அருங்காட்சியகங்களை அலங்கரித்து வருகின்றன என்பதை அவரது கட்டுரையில் விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். இதுபோல, தவறான விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவருவதை அவர் ஒரு போதும் விரும்பியதில்லை.

தொல்லியல் துறை சம்பந்தமான செய்திகளோ கட்டுரைகளோ பத்திரிகைகளுக்கு வந்தால் அவரிடம் படித்துக்காட்டி அது சரிதானா என்பதை நிருபர்களும் துணை ஆசிரியர்களும் கேட்டு சரிபார்த்து வெளியிடுவது வழக்கம். இதேபோல எந்த வார்த்தையைப் பயன் படுத்துவது என்பது குறித்து ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் எப்போது சந்தேகம் கேட்டாலும்கூட அதற்கு விளக்கம் அளிக்க அவர் தயங்குவதில்லை. பள்ளி மாணவர்களுக்குச் சொல்வது போல எளிமையாக விளக்கிக் கூறுவார். திரைப்படச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவருக்குப் பிடிக்காது. திரைப்பட விளம்பரங்கள் முதல் பக்கத்தில் வரக்கூடாது என்று சொல்வார். நேரம் அவருக்கு முக்கியம். பணியில் கண்டிப்பாக இருப்பார். பணியாளர் நியமனத்திலிருந்து எதிலும் விதிமுறை இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதற்கேற்ற நடைமுறைகளையும் உருவாக்கியவர். பணியில் நேர்மையை எதிர்பார்ப்பார். ஆசிரியத்துவத்தின் மேன்மையை எதற்காகவும் விட்டுக் கொடுப்பவர் இல்லை அவர். இவையெல்லாம் அவரை தனித்துவம் மிக்கவராகக் காட்டுகின்றன.

மொழி நடையில் மட்டும் அக்கறை கொண்டவர் என்று அவரைக் கூறி விடமுடியாது. எத்தகைய செய்திகள் முக்கியத்துவமாக வர வேண்டும், எந்த செய்திகள் முதல் பக்கத்தில் வரலாம், வரக்கூடாது என்பதிலும் ஆசிரியர்களுடன் கலந்து பேசி வெளியிடுவதில் கவனம் செலுத்துவார். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலிருந்து கட்டுரைகளை அதிகமாக மொழிபெயர்த்து வெளியிடுவதில் ஐராவதம் மகாதேவன் ஆர்வம் காடடவில்லை. ஒரே நிறுவனத்தில் இருந்து இந்த இரண்டு பத்திரிகைகளும் வந்தாலும், தினமணிக்கு என தனிப்பண்புகள் இருக்கிறது என்பதை உறுதிபடுத்தினார் அவர். மண்டல் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டு அதன் தொடர்பாக சாதகமாகவும் பாதகமாகவும் விமர்சனங்கள் பத்திரிகைகளில் வெளி வந்தன. அப்போது மண்டல் கமிஷன் அறிக்கையை இந்தியன் எக்ஸ்பிரஸ் எதிர்த்தது. தினமணி அதை ஆதரித்தது. இதற்கு முழுமையான காரணம் ஐராவதம் மகாதேவன்தான். தமிழ் மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டு மண்டல் கமிஷனை தினமணி ஆதரித்தது என்கிறார் அவர்.

அவரது பல தலையங்கங்கள் அதாவது அவரது ஆசிரியர் உரைகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கூறமுடியும். அணுமின் நிலையங்களின் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து தொடர்ந்து ஆசிரியர் உரையில் எழுதியுள்ளார். அணுமின் நிலையங்கள் தேவைதான்? (10\12\1987), கல்பாக்கம் இனியும் தேவைதானா? (4\5\1988) அணு உலை: மெய்யும் பொய்யும் (8\6\1988) , கூடங்குளம் கூடவே கூடாது! (31\8\1988), அணு உலை: மெய்யும் பொய்யும் (31\10\1988), பத்திரமான அணு உலை கிடையாது (28\11\1988), செவிடன் காதில் ஊதிய சங்கு (21\12\1988), கூடங்குளம்: சில கேள்விகள் (4\2\1989)... இப்படி சமூக அக்கறையுடன் அவர் தொடர்ந்து இது குறித்து எழுதி

வந்துள்ளார். அணுஉலைகளுக்கு எதிரான இயக்கம் சென்னையில் நடந்த போராட்டத்திலும் அவர் பங்கேற்று பேசியிருக்கிறார்.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆலயத்தில் 16 ஜோடிக் குழந்தைகளுக்கு ஒரே சமயத்தில் திருமணம் நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களை கண்டிக்கும் வகையில் பொம்மை கல்யாணங்கள் என்று ஆசிரியர் உரையில் ( 5\2\1988) எழுதினார். “தனிப்பட்ட குடும்பங்களின் குலாசாரங்களை விமர்சிப்பது எமது நோக்கமன்று. ஆனால், தில்லையில் நடந்துள்ள குழந்தைத் திருமணங்கள் சட்ட விரோத மானவை. அவை பொது இடத்தில் நடந்துள்ளன. கோயில் நிர்வாகி கள் அவற்றைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டாமா? அல்லது அரசு அதிகாரிகளிடம் அங்கு நடக்கவிருக்கும் சட்டவிரோதச் செயல்களைப் பற்றி முன்கூட்டியே அறிவித்திருக்க வேண்டாமா?” என்றெல்லாம் சமூக ஆவேசத்துடன் அதில் குரல் எழுப்பியிருக்கிறார்.

“தீண்டாமை வாழ்க! ஹரிஜனங்கள் கோயிலுக்குள் நுழைவதை ஹிந்து சாஸ்திரங்கள் அனுமதிக்கவில்லை. விதிவை மறுமணம் ஒழிக! விதவா விவாகம் சாஸ்திர சம்மதமானது அன்று. பொம்மைக் கல்யாணம் வாழ்க! பெண்கள் ருதுவான பிறகு விவாக் செய்வது சாஸ்திர விரோதமானது. உடன்கட்டை ஏ(ற்)றுதல் வாழ்க!” இப்படியெல்லாம் பூரி ஸ்ரீ சங்கரமடத்துப் பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ நிரஞ்சன தேவ தீர்த்த சுவாமிகள் கூறியதைக் கண்டித்து அறத்தின் பெயரால் மறம் (6\4\1988) என்று எழுதிய ஆசிரியர் உரையில், “ஆதி சங்கரரின் பதிமூன்றாவது நூற்றாண்டு விழாக் காணும் இந்த ஆண்டில் அந்த மகானின் பரம்பரைக்கு இழுக்கு ஏற்படுத்தும் செயல்களை எதிர்ப்பதே அவருக்கு நாம் செலுத்தக்கூடிய உண்மையான அஞ் சலியாகும்” என்று கூறியுள்ளார்.

“இந்திய நாட்டிற்கு நாலு எதிரிகள். அவர்கள் யார்? சீனாவா? இல்லை. பாகிஸ்தானா? இல்லை. தென் ஆப்ரிக்காவா? இல்லை. பிரபாகரனா? இல்லவேயில்லை? தேர்தல் பிரசாரத்தின் ஒலி பெருக்கி களின் கூச்சல் கேட்காதவண்ணம் காதைப் பொத்திக் கொண்டு ஆற அமரச் சிந்தித்துப் பார்ப்போமானால், நம் நாட்டை அச்சு றுத்தி வரும் நாலு எதிரிகள் மதம், மொழி, இனம் (ஜாதி) பற்றிய வெறிகளும் ஊழலுமே என்று கண்டு கொள்வதில் அதிகச் சிரம மிருக்காது...” என்று இந்தியாவின் நாலு எதிரிகளை ஆசிரியர் உரை (16\6\1988) விவரிக்கிறது.

தேர்தல் சமயங்களிலும் பாபர் மசூதி இடிப்பு நேரத்திலும் அவர் எழுதிய ஆசிரியர் உரைகள் குறிப்பிடத்தக்கவை. வரதட்சிணைக் கொடுமையால் இளம் பெண்கள் தீக்கிரையாவது குறித்து புதிய முறை ஸதி (28\12\1988), இன்னொரு காந்தி வேண்டும் (5\11\1987), ஏட்டளவில் ஒழிந்த தீண்டாமை (5\10\1988)...இப்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர் எழுதியுள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஆசிரியர் உரைகளை குறிப்பிட்டுக் கொண்டே போகலாம். திரு வள்ளுவரின் திருமேனி தாங்கிய தங்கக் காசு பற்றி தினமணி கதிரில் கட்டுரை எழுதியுள்ள கட்டுரையும்கூட தவிர்க்க முடியாத அனைவரும் படிக்க வேண்டிய கட்டுரைதான்.

ஐராவதம் எழுதிய ஆசிரியர் உரைகளில் இன்றைக்கும் நினைவுக் கூரத்தக்கது. 9\2\1988 ல் எழுதிய ‘அதிசயம் ஆனால் உண்மை’ இந்த ஆசிரியர் உரையின் மொழி நடையும் கருத்துச் செறிவும் அவரது ஆளுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

“இந்தியாவில் ஒரு மாநிலம். அதற்கு ஒரு முதல் அமைச்சர். அவர் பத்தாண்டுகள் ஆட்சி செய்தார். அவர் முதல்வராக இருக்கும் பொழுதே தம் உடைகளைத் தாமே தோய்த்து உடுத்திக் கொண்டார். தம் கையால் சமைத்துச் சாப்பிட்டார். தம் செலவுகள் போக மிஞ் சிய சம்பளத்தைத் தம் கட்சிக்கு மாதாமாதம் கொடுத்துவிட்டார். பதவிக்காலம் முடிந்த அன்றே அரசு கொடுத்த இல்லத்தைக் காலி செய்தார். தம்முடன் இரண்டு பெட்டிகளில் தனது துணி மணிகளையும் புத்தகங்களையும் மட்டும் எடுத்துச் சென்றார். சொந்த வீடுஇல்லாததால் கட்சி அலுவலகத்தில் ஓர் அறையில் குடியேறினார்.

இது இந்திய விடுதலைக்குப் பிறகு ஒரு முதல்வர் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டு ஓர் இலட்சியவாதி எழுதிய நாவலின் சுருக்கம் இல்லை. நேற்றைய நாளேடுகளில் தேடிப் பார்த்தீர்களானால் சின்னச் சின்ன எழுத்துகளில் வெளி வந்திருக்கும் ஒரு பெரிய செய்தி இது.

இந்த அதிசயம் \ ஆனால் \ உண்மைச் சம்பவம் நடந்த மாநிலம் திரிபுரா. அந்த முதல்வரின் பெயர் நிருபேந்(திர) சக்கரவர்த்தி. அவர் இடது கம்யூனிஸ்ட்டு கட்சியைச் சேர்ந்தவர். அதைவிட முக்கிய மான செய்தி அவர் பரம யோக்கியர் என்பதே.

அறியாமையிலும், ஊழலிலும், அரசியல்வாதிகளின் அடுக்கு மொழி களிலும், சினிமா நடிக, நடிகைகளின் மாயா ஜாலங்களிலும், சிக் குண்டு, தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, பாழ்பட்டு நிற்கும் பாரத தேசம் இனி வாழவே முடியாது என்று கலங்கி நிற்கும் மக்களுக்கு இது ஒரு நற்செய்தி.

வாசகர்களுக்கு நினைவிருக்கிறதோ என்னவோ, தமிழ்நாட்டில் கூட ஒரு காலத்தில் இத்தகைய அதிசயப் பிறவிகள் உண்மையாகவே உயர் வாழ்ந்தனர். காமராஜ் எனறு ஒரு முதல்வர். கக்கன் என்று ஒரு அமைச்சர். மாற்றுத்துணிகளைத் தவிர வேறு உடைமைகள் இல்லாதவர்கள் இவர்கள். மக்களின் அன்பு என்பதைத் தவிர வேறு செல்வத்தைப் பெறாதவர்கள் இவர்கள்.

யார் கண்டது. அங்கொன்றும் இங்கொன்றும் ஆக இன்று காணப் படும் தீப்பொறிகள் பற்றிக் கொண்டு உண்மைக் கனலாக வளர்ந்து இன்றைய அரசியலின் பொய்மைகளை எரித்து விடும் நற்காலமும் நம் நாட்டுக்கு வரலாம் அல்லவா. அதை நினைந்து நிருபேந் சக்கர வர்த்திகளை வாழ்த்தி வணங்குவோம்.”

ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்து மக்கள் வளர்ச்சிப் பணிகளில் தன் னை ஈடுபடுத்திக் கொண்டு ஓய்வு பெற்றிருந்தால் இந்த அளவுக்கு அவருக்குப் பெயரும் புகழும் பெயரும் கிடைத்திருக்குமா என்பதைச் சொல்ல முடியாது. இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக இருந்த அவருக்கு கல்வெட்டு எழுத்து ஆய்வில் தீவிர ஆர்வம். அத்துடன் நவீன தமிழ் மொழியிலும் தீவிர அக்கறை. இந்த இரு ஆர்வங்களும் அக்கறையும்தான் மறக்கமுடியாத ஆளுமையாக நம்மிடையே அவ ரை இனம் காட்டுகிறது. பத்திரிகைத் துறையில் குறுகிய காலமே இருந்தாலும்கூட அவர் ஏற்படுத்திச் சென்றுள்ள தாக்கங்களையும் சாதனைகளையும் மறக்கமுடியாது. அத்துடன், 80 வயதிலும் உடல் நலிவையும் பொருட்படுத்தாமல் தொல்லியில் துறை ஆய்வுகளில் அவர் இன்னமும் காட்டி வரும் ஆர்வம் அனைவரையும் வியக்க வைக்கிறது. இதைவிட மிக முக்கியமாக நெஞ்சை நெகிழ வைக்கும் விஷயம், அவர் சிறந்த மனிதாபிமானி என்பதுதான். மறைந்த மூத்த மகன் வித்யாசாகர் பெயரில் தனது வாழ்வின் சேமிப்பிலிருந்து ரூ.50 லட்ச ரூபாயைக் கொண்டு கல்வி அறக்கட்டளையை ஏற்படுத்தி சப்தமில்லாமல் உதவிகளைச் செய்து வருகிறார். சென்னை சங்கர நேத்ராலாயவில் வித்யாசாகர் இன்ஸ்டியூட் ஆஃப் பயோ மெடிக் கல் டெக்னாலஜி அண்ட் சயின்ஸ் கல்வி நிலையத்தை உருவாக்க அறக்கட்டளையிலிருந்து ரூ.40 லட்சத்தை நன்கொடையாக வழங்கி யுள்ளார். அத்துடன் ஏழை மாணவ, மாணவிகள் படிக்க ஆண்டு தோறும் அந்த அறக்கட்டளை மூலம் பண உதவியும் செய்து வருகிறார் ஐராவதம் மகாதேவன். ‘உதவும் கரங்கள் ஜெபிக்கும் உதடு களைவிட மேன்மையானவை’.

■

[ நேர்முகம் ]

# ஐராவதம் மகாதேவன்

## லிலிதா ராம்

### தமிழில்: ஷங்கர்ராமசுப்ரமணியன்

இந்தியவியல் ஆராய்ச்சியில் அறிஞர் ஐராவதம் மகாதேவன் ஐம்பது ஆண்டுகளை கடந்திருக்கிறார். இவரது 28ஆவது வயதில், 'Coin collecting in Coimbatore district' என்ற இவரது முதல் கட்டுரை 'The Hindu' நாளிதழில் பிரசுரமானது. அப்போதிருந்து, புதியதை நாடும் வேட்கையும் உண்மைக்கான தேடலும், இவரிடம் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. இந்த 78 வயது இளைஞர் வசிக்கும் வீட்டுக்குச் சென்றபோது அவரது மேஜையில் இருந்த வாசகம் இது. 'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் / எவ்வெவர் தீமையும் மேற்கொளார் - செவ்வி / அருமையும் பாரார் அவமதிப்பு கொளார் / கருமமே கண்ணாயி னார்.' ஐராவதம் என்ற மனிதரை இவ் வரிகளை விட சிறப்பாக வர்ணித்திட முடியாது. பண்டைய தமிழ் கல்வெட்டுகள் பற்றியும், சிந்து சமவெளி குறியீடுகள் பற்றியும் இவர் எழுதியிருக்கும் இரு நூல்கள் இத் துறை மாணவர்க்கும் வல்லுனர்களுக்கும் கலங்கரை விளக்கமாய் விளங்குபவை. இத்தொல்லியியல் இமயத்தின் புகழ் வாழ்வின் முக்கிய கணங்களைத் திரும்பிப் பார்க்கும் முயற்சியே இந் நேர்காணல்.

உங்களது குடும்பப் பின்னணியிலிருந்து நேர்காணலைத் தொடங்கலாமா?

"நான் தஞ்சாவூர் ஸ்மார்த்த தமிழ் பிராமணர் வழியில் வந்தவன். நாராயண தீர்த்தர் வாழ்ந்த வரகூர் கிராமம் எங்கள் பூர்வீகம். எங்களது வேர்களை தொடர்ந்து பார்க்கும் போது, பதினெட்டாம் நூற்றாண்டில் நாராயண தீர்த்தர் காலத்தில் வாழ்ந்த வெங்கடராயர் வரை செல்ல முடிகிறது; அவர் தஞ்சாவூரிலிருந்த மராத்திய அரசவையில் பணிபுரிந்திருக்க வேண்டும். ராயர் என்ற பட்டத்தை வைத்தும், ஆசந்தார் என்றழைக்கப்படும் வரிவிலக்கு பெற்ற நிலங்களை எங்கள் குடும்பம் வைத்திருந்ததாலும் நான் இதை யூகிக்கிறேன்.

எங்களது குடும்பத்தில் 'ஐராவதம்' என்ற பெயர் ஒவ்வொரு இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையிலும் யாராவது ஒருவருக்கு வைக்கப்படும். ஆனை (ஐராவதம்) பாகவதர், தஞ்சாவூர் மராட்டிய அரசவையில் வித்வானாக இருந்தார். அவர் வம்சத்தில் வந்தவர்கள் நாங்கள். எங்கள் குடும்பத்திற்கு சொந்த ஊர் நேமமாக இருந்திருக்க வேண்டும். காவிரி நதிக்கரையில் அமைந்திருக்கும் நேமத்தில்தான் ஐராவதீஸ்வரர் கோவில் உள்ளது. எங்களது குடும்பத்தில் அடிக்கடி ஐராவதம் என்ற பெயர் வருவதால் அவர்கள் நேமத்தை சேர்ந்தவர்களாக இருந்திருக்கவேண்டும்.

18ஆம் நூற்றாண்டில் நாங்கள் வரகூரில் இருந்தோம். இரட்டை கிராமங்களான வரகூரும் கண்டமங்கலமும், 17ஆம் நூற்றாண்டில், தஞ்சாவூர் நாயக்கர்களின் புகழ்பெற்ற அமைச்சராக இருந்த கோவிந்த தீட்சிதரால் பிராமணர்களுக்கு வழங்கப்பட்டன. வரகூரில் இருந்த ஒற்றைத் தெரு அக்ரகாரத்தில் ஜனத்தொகை பெருகியபோது, சில குடும்பங்கள் கண்டாமங்கலத்துக்கு இடம்பெயர்ந்தன. அங்கேதான் எனக்கு முந்தைய ஏழு தலைமுறையினர் வசித்தனர். எனது தந்தையின் தந்தையான வைத்யநாத ஐயர் தான் நவீன பள்ளிக் கல்வியை முதலில் பெற்றவர். அவர் ரயில்வேயில் பணியாற்றினார். எனது தந்தை பள்ளியில் படிக்கும்போதே அவர் ரயில் விபத்து ஒன்றில் மறைந்தார்.

எனது தந்தையான ஐராவதம், திருக்காட்டுப்பள்ளி உயர்நிலைப் பள்ளியில் படித்தார். சென்னை ஸ்டான்லி மருத்துவ கல்லூரியில் மருத்துவம் பயின்றார். எல்.எம்.பி. பட்டம் பெற்று பத்து வருடங்கள் பர்மாவில் பணிபுரிந்தார். அந்த சமயத்தில்தான் பர்மாவின் ஐராவதி ஆற்றங்கரையோரம் உள்ள இடத்தில் என்னை என் அன்னை கருவுற்றார். அப்போது என் தந்தை இந்தியாவுக்குத் திரும்பி திருச்சிராப்பள்ளியில் வாழ முடிவெடுத்தார்."

உங்களது இளம்பருவ நாட்களைப் பற்றி...

"எனது இளம்பருவம் திருச்சிராப்பள்ளியில் கழிந்தது. கண்டமங்கலத்தில் இருந்த எனது தாத்தா வீட்டில்தான் கோடை விடுமுறைகளைக் கழித்தேன். அப்போதெல்லாம் இரண்டு மூன்று மாதங்கள் விடுமுறை இருக்கும். எனது அப்பாவின் மாமாவான தியாகராஜ ஐயர் அங்கே பக்கத்து வீட்டில் வசித்து வந்தார். அவரது மகன் மகாதேவன் தான் எனக்கு குரு. அவர் மிகப்பெரிய சமஸ்கிருத அறிஞர். கோடை விடுமுறையின் போது சிறுவர்களாகிய எங்களுக்கு பாடம் நடத்துவார். அவரிடம் இருந்துதான் நான் பஜகோவிந்தமும் ராமோதந்தமும் கற்றேன். பகவத் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தையும் விஷ்ணு சகஸ்கரநாமம் உள்ளிட்ட பல ஸ்லோகங்களையும் கற்றோம்.

நான் மகாதேவனுக்கு பிடித்த மாணவனானேன். அவர் கற்றுக் கொடுப்பதை வேகமாக கிரகித்து தவறின்றி திரும்பச் சொல்வேன். சமஸ்கிருத மொழியில் ஸ்லோகங்களை எழுதிப் பார்ப்பதற்கும் எங்களை அவர் பழக்கினார். 12 வயதில், சமஸ்கிருத மொழியில்

அனுஷ்டுப் சந்தங்களில் செய்யுள்களை எழுதக் கற்றுக்கொண்டேன். எனக்கு இன்னமும் சமஸ்கிருதத்தில் ஆர்வம் இருப்பினும், சமஸ் கிருதத்தை விட தமிழ் ஆய்வில்தான் அதிக நேரம் செலவழித்திருக் கிறேன். தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளின் மீது ஏற்பட்ட காதலே தமிழ் கல்வெட்டியல் மற்றும் சிந்து சமவெளி குறியீடுகள் குறித்த எனது ஆய்வுகளுக்கு வேராக அமைந்தது."

வேதியியல் பட்டப் படிப்பில் ஏன் சேர்ந்தீர்கள்?

"எனது அப்பா என்னை மருத்துவராக்க விரும்பினார். ஆனால், இன்டர்மீடியட் பரீட்சையில் நான் அதிக மதிப்பெண்கள் எடுக்க வில்லை. அக்காலத்தில் பி.எஸ்.சி. படித்துவிட்டு மருத்துவ பட்டப் படிப்புக்கு செல்லலாம். அதனால், 1947ஆம் ஆண்டு சென்னையில் உள்ள விவேகானந்தா கல்லூரியில் வேதியியல் பட்டப்படிப்பில் சேர்ந்தேன்."

வேதியியல், அதற்கு பிறகு நீங்கள் படித்த சட்டக்கல்வி இரண்டுமே தொடர்பற்றவை. வேதியியல் பாடத்திலிருந்து எப்படி சட்டக்கல்விக்கு மாறினீர்கள்?

"நான் எதிர்பார்த்தது போலவே பி.எஸ்.சி. பரீட்சைகளில் நன்றாக மதிப்பெண்கள் பெறவில்லை. அக்காலத்தில், வேறு எந்த கல்லூரியி லும் இடமில்லை எனில் சட்டக் கல்லூரியில் சேர்ந்து கொள்ளலாம். அதனால் நான் மெட்ராஸ் சட்டக்கல்லூரியில் சேர்ந்தேன். அங்குதான் வெங்கடசுப்ரமணிய ஐயரின் தாக்கம் எனக்கு ஏற்பட்டது. அவர் எங்களுக்கு இந்து சட்டம் மற்றும் அரசியல் சட்டம் கற்றுத்தந்தார். இந்து தர்ம சாஸ்திரங்களை அவர் எங்களுக்கு விளக்கிய விதம் சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தையும், அனைத்து மதங்களுக்கும் மரியாதை அளிக்கும் தன்மையையும் எனக்குச் சொல்லித்தந்தது. பிறகு நான் ஒரு ஆட்சிப்பணியாளனாக பணிபுரிவதற்கும் அவரது கற்பித்தல் உதவியது."

ஆட்சி பணியில் சேர்வதற்கான எண்ணத்துடன்தான் சட்டம் பயின் றீர்களா?

"இல்லை. வழக்கறிஞராக பணிபுரிவதற்காகவே சட்டக்கல்லூரியில் சேர்ந்தேன். எனது பள்ளி/கல்லூரி நாட்களில் பேச்சுப் போட்டி களில் பெற்ற பரிசுகள் எனது பேச்சுத் திறனின் மீது நம்பிக்கை யளித்திருந்தன. அத்துடன் அந்நாட்களில் வழக்கறிஞர் பணியில் அதிகம் போட்டி இல்லை. நான் எனது சட்டப்படிப்பை முடித்து விட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்தை சேர்ந்த ஒரு மூத்த வழக்கறிஞரிடம் சேர்ந்து ஒரு வருடம் பயிற்சி பெற்றேன். அப்போதுதான் ஒரு வழக்கறிஞராக நான் அங்கீகாரம் பெறுவதற்கு நிறைய ஆண்டுகள் தேவைப்படும் என்பதை உணர்ந்தேன். விரை விலேயே பொருளாதார ரீதியாக யாரையும் சாராமல் இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அதனால், 1953இல் நடைபெற்ற ஆட்சிப்பணி தேர்வை எழுதினேன்."

எந்த வயதில் ஆட்சிப்பணி தேர்வை எழுதினீர்கள்?

"அப்போது எனக்கு 23 வயது. தமிழகத்திலிருந்து இந்திய ஆட்சி பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் நான் முதலிடம் பெற்றி ருந்தேன். பட்டியலில் முதலிடத்தில் வந்த சிலர் வெளிநாட்டு பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதமர் ஜவஹர்லால் நேருவை நேரடியாக சந்தித்து நேர்காணல் நடந்தது. அதில் நான் தேர்வு பெற்று டெல்லியில் பயிற்சி பெற்றேன். ஆனால், மூன்று மாதத்தில் என் மனம் மாறியது. இந்திய ஆட்சிப் பணிக்கு மாறி, நாட்டின் வளர்ச்சியில் நேரடியாக பங்குகொள்ள விரும்புவதாக உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதினேன். எனது கோரிக்கையை ஏற்க அமைச்சகம் மறுத்துவிட்டது. அதனால், நான் பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதி என் விருப்பைத் தெரிவித்தேன். அவரது தலை யீட்டின் பேரில், இந்திய நிர்வாகப் பணிக்கு மாற்றப்பட்டு, தமிழ கத்தில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றேன்."

ஆட்சிப்பணி, அதிகாரிப் பணியின் ஆரம்ப நாட்கள் பற்றி கூறுங்கள்.

"நான் கோவை மாவட்டத்தில் உதவி ஆட்சியராக எனது பணியை தொடங்கினேன். அப்புறம் சப்ஆட்சியராக பொள்ளாச்சியில் பணி அமர்த்தப்பட்டேன். என் வாழ்வின் அற்புத நாட்கள் அவை. கோவையில் இருந்தபோது எனக்கு திருமணமானது. கிராமங்கள் அனைத்தையும் நேரடியாக பார்த்து கிராம மேம்பாட்டு திட்டங் களில் ஈடுபட்டேன். கிணறு, சாலைகள், அரிஜனங்களுக்கான குடி யிருப்புகள் கட்டுவதில் ஈடுபட்டேன். எனக்கு இயற்கையாக வாய்த்த மொழியார்வம் என்னை கல்வெட்டுகள் பக்கமும், நாணயவியல் பக்கமும் செலுத்தியது. 1958இல் புதுடெல்லியில் உதவி நிதி ஆலோசகராக வணிக தொழில்துறை அமைச்சகத்தில் பொறுப் பேற்றதுடன் என் ஆட்சிப்பணியின் முதல்கட்டம் முடிவுற்றது."

புதுடெல்லியில் இருந்தபோதும் ஆய்வை தொடர முடிந்ததா?

"வணிகத் துறையில்பணியாற்றியபோது, சம்பளமும் மதிப்பும் நிறை வாக இருந்த போதும் வேலை பளு அதிகமில்லை. எனது நேரத் தை பயனுடன் கழிக்க விரும்பினேன். எனது அலுவலகத்துக்கு அருகே தான் ஜனாதிபதி மாளிகை இருந்தது. அந்த மாளிகையின் முன்புறம் அப்போது தேசிய அருங்காட்சியம் இருந்தது. இந்தியாவின் மிகச் சிறந்த கல்வெட்டு அறிஞர்களுள் ஒருவரான சிவராமமூர்த்தி அருங் காட்சியக காப்பாளராக இருந்தார். முடிந்த போதெல்லாம் அவ ரைச் சந்தித்து, கல்வெட்டியலின் அடிப்படைகளைக் கற்றுக்கொண் டேன். இந்திய கல்வெட்டியலில் எனது குருவாக அவரையே கருது கிறேன்.

1961இல் சென்னைக்கு திரும்பினேன். அங்கே வரலாற்றறிஞர் நீல கண்ட சாஸ்திரியை சந்தித்து, எந்த தலைப்பில் நான் ஆய்வுகள் செய்யலாம் என்று சிபாரிசு செய்ய வேண்டினேன். தமிழகத்தில் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட பல கல்வெட்டுகள் குகைகளில் காணப்படுவதாக கூறினார். அதை கே.வி. சுப்பிரமணிய ஐயர் தமிழ் மொழிதான் என்று கூறினாலும், அவற்றை சரிவரப் படிக்க முடியாதது பெரும் சிக்கலாக இருப்பதாகவும் தெரிவித்தார். தமிழகத்தில் உள்ள குகை கல்வெட்டுகள் பற்றிய எனது ஆய்வுகள் இப்படித்தான் தொடங்கின."

நீலகண்ட சாஸ்திரி சொன்ன சிக்கலுக்கு எப்படித் விடை கண்டீர்கள்?

"தொழில்துறையில் உதவி செயலராக நான் அப்போது சென்னையில் இருந்தேன். என்னால் நேரடியாக குகைகளுக்குச் செல்லமுடியவில்லை. ஊட்டியில் இருந்த அரசு கல்வெட்டு எழுத்து ஆய்வாளர் ஒருவரை, அந்த எழுத்துக்களின் அச்சுமை பதிவுகளை எடுத்துவர நீலகண்ட சாஸ்திரி நியமித்தார். அவற்றை ஆய்வு செய்வதில் நான் ஆறு மாதங்கள் செலவழித்தேன். எந்த முன்னேற்றமும் இல்லை. அப்போதுதான் ஒரு திருப்பமாக கைத்தறி மற்றும் ஜவுளி துறையின் இயக்குனராகும் வாய்ப்பு வந்தது. தமிழகத்தில் உள்ள எல்லா கிராமத்துக்கும் செல்வதற்கு அப்பணி என்னை அனுமதித்தது. ஐந்து வருடங்கள் அப்பொறுப்பில் பணியாற்றியபோது, வேலைகளுக்கு இடையில் ஆய்வுகளையும் திட்டமிட்டு செய்து வந்தேன். வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் வேலையை முடித்துவிட்டு, ஞாயிற்றுக் கிழமைகளில் அருகில் உள்ள குகைகளுக்கு சென்று, கல்வெட்டு எழுத்துக்களை நகல் எடுப்பேன்.

1965இல் புகளூரில் நான் கண்டெடுத்த சங்க கால சேரர் ஆட்சி கல் வெட்டுகள் மூலம் நான் வெளிச்சத்துக்கு வந்தேன். அந்த வெளியீடு அறிஞரிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. சங்க காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் அதுவரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கல்வெட்டுகளும், மாங்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட முற்பாண்டி யர் கல்வெட்டுகளும் சர்வதேச அளவில் பேசப்பட்டன. 1966இல் கோலா லம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் கட்டு ரை வாசிக்க அழைப்பு வந்தது.

அதற்கு சில மாதங்களுக்கு பிறகு ஆர். நாகசாமி தமிழக தொல்பொருள் துறையின் இயக்குனராக பொறுப்பேற்றார். அவர் கல்வெட்டுகள் குறித்த ஒரு கருத்தரங்கை சென்னையில் ஏற்பாடு செய்தார். மிகப்பெரிய ஆளுமைகளான நீலகண்ட சாஸ்திரி, கே.கே. பிள்ளை, மா.இராசமாணிக்கனார் மற்றும் பிற அறிஞர்கள் முன்னிலையில் எனது கட்டுரையை வாசித்தேன். தமிழ் பிராமி கல்வெட்டுகளின் தொகுப்பு இம்மாநாட்டையொட்டி வெளியிடப்பட்டது. இது பல்வேறு அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, எனது ஆய்வை தொடர ஊக்கத்தை அளித்தது."

கல்வெட்டு ஆய்வில் மிக முக்கியமான திருப்பத்தை நீங்கள் ஏற்படுத்தி

**பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தாலும், தமிழகத்தில் உள்ள குகை எழுத்துகள் தமிழில்தான் உள்ளதாக கே.வி. சுப்பிரமணிய ஐயர்தான் முதலில் கண்டுபிடித்தார். தமிழில் ஓசைகளை தெரிவிக்கும் சிறப்பு எழுத்துக்களை அவரால் அடையாளம் காணமுடிந்தது.**



உள்ளீர்கள். ஆனால், அதை எவ்வாறு சாதித்தீர்கள்?

"பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தாலும், தமிழகத்தில் உள்ள குகை எழுத்துகள் தமிழில்தான் உள்ளதாக கே.வி. சுப்பிரமணிய ஐயர்தான் முதலில் கண்டுபிடித்தார். தமிழில் ஓசைகளை தெரிவிக்கும் சிறப்பு எழுத்துக்களை அவரால் அடையாளம் காணமுடிந்தது. அவரை நான் ஒருமுறையே பார்த்திருந்தாலும், எனது குருவாக கருதுகிறேன். அப்போது அவருக்கு 90 வயதை தாண்டியிருந்தது. தமிழ் பிராமி எழுத்துகளுக்கும், பட்டிபொருலுவில் கண்டெடுக்கப்பட்ட எழுத்துக்களுக்கும் உள்ள தொடர்பை விவரித்து அவர் ஏற்படுத்திய மாதிரியை பின்பற்றினேன். தமிழ் பிராமி எழுத்துக்கள் இப்படித்தான் வட்டெழுத்துக்களாக மாறியிருக்க முடியும் என்பதை கண்டுகொண்டேன். எனது சமீபத்திய புத்தகத்தில் இந்த ஆய்வை பற்றி சுருக்கமாக எழுதியுள்ளேன்."

சிந்து எழுத்துக்கள் ஆய்வு உங்களது இன்னொரு கண்ணாக இருந்து வருகிறது. இத்துறைக்கு எப்படி அறிமுகமானீர்கள்?

"தேசிய அருங்காட்சியகம் மற்றும் இந்திய தொல்பொருள் ஆய்வு துறையுடன் எனக்கு இருந்த தொடர்புகள், 'Indus Seals' மற்றும் கல்வெட்டுகளை காண்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி தந்தன. 1970இல் இந்திரா காந்தியால் நடத்தப்பட்ட 'ஜவஹர்லால் நேரு நினைவு அறக்கட்டளை' சார்பாக எனக்கு 'ஜவஹர்லால் நேரு ஆய்வு நல்கை' வழங்கப்பட்டது. அதன் மூலம், இரண்டு வருடங்கள் சிந்து எழுத்துக்களை வாசிப்பதில் ஈடுபட்டேன்.

இதற்காக எனது வேலைக்கு தற்காலிகமான இடைவெளி விட்டு, நேரு ஆய்வு நல்கை பணிக்காக சென்னை திரும்பினேன். சென்னைக்கும் டெல்லிக்கும் அடிக்கடி பயணம் செய்தபோது, சிந்து கல்வெட்டுகள் குறித்த அட்டவணை ஒன்றை உருவாக்கினேன்."

அந்தப் பணி உங்களை மிகவும் சிரமப்படுத்தியிருக்குமே. அந்த ஆய்வுக்கு உதவி எதையாவது கண்டறிய முடிந்ததா?

"தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், சிந்து எழுத்துகளை ஆய்வு செய்வதற்கு கணிப்பொறியைப் பயன்படுத்திக்கொள்ளச் சொன்னார். நான் அதற்கு முன்பு கணிப்பொறியைப் பார்த்ததே இல்லை. அந்நாட்களில் கால்குலேட்டரைப் பார்ப்பதே அரிது. என்னை அவர் தமிழக தொழில்நுட்ப கல்வி துறை இயக்குனர் வி.சி. குழந்தைசாமியிடம் அழைத்துச் சென்றார். 'ஃபண்டமெண்டல் என்ஜியினரிங் ரிசர்ச் எஸ்டாப்ளிஷ்மெண்ட்'டில் இருந்த ஐ.பி.எம். 1620 கணிப்பொறியில் எனக்கு பணி செய்வதற்கு அனுமதி கிடைத்தது. அக்காலத்திய கணிப்பொறிகளை விட இன்றுள்ள மிகமிக சாதாரண மொபைல் போன்கள் அதிக சக்தி வாய்ந்தது. அப்போது மானிட்டர் திரை கிடையாது. தரவுகளை பஞ்ச்ட் கார்டுகளாக கொடுத்து அவுட்புட்டையும் பஞ்ச்ட் கார்டு வழியாகவே எடுப்போம். அதற்குப் பிறகு அதன் முடிவுகளை தெரிந்துகொள்வோம். அது மிகமிக மெதுவான சிரமமான வேலையுமாகும்."

சிந்து எழுத்துகளுக்கான எழுத்துருக்கள் இன்றி, மானிட்டர் திரை இன்றி உங்களால் ஒரு முடிவுக்கு வர முடிந்ததா?

"என்னிடம் அனைத்து விவரங்களும் பொருளடக்க அட்டையில் இருந்தன. எண்களை மட்டும் பயன்படுத்தி பின்னணி தரவுகள் மற்றும் கல்வெட்டு எழுத்துகளையும் குறியீடாக்க கற்றுக்கொண்டேன். எண்கள் வழியிலான அந்த பதிப்பை கணிப்பொறியில் இட்டு, தோராயமாய் முதல் வரைவு தயாரானது. அந்த முடிவுகளை, 'டாடா இன்ஸ்

டிட்யூட் ஆப் பண்டமென்டல் ரிசர்ச் நடத்திய கருத்தரங்களில் கட்டுரையாக வாசித்தேன். அங்குள்ள கணிப்பொறி துறையின் தலைவரான ஆர்.நரசிம்மன், எனது பேச்சைக் கேட்டு அவரது ஆய்வகத்தில் கணிப்பொறியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை கொடுத்து அழைத்தார். அப்போது அந்த ஆய்வகத்தில்தான் நல்ல கணிப்பொறி வசதிகள் இருந்தன. மைதிலி ரங்காராவ் என்ற கணிப்பொறி நிபுணர், மேம்படுத்தப்பட்ட ஆய்வு முடிவை நான் தயாரிப்பதற்காக எனக்கு உதவிபுரிய நியமிக்கப்பட்டார். நான் சென்னைக்கும் மும்பைக்குமாக அலைய ஆரம்பித்தேன். ஆனால், அதற்குள் எனது ஆய்வு நல்கை காலம் முடிவுக்கு வந்தது. திரும்பவும் 1974இல் டெல்லிக்கு மாற்றப்பட்டேன். அப்போது எனது ஆய்வுப்பணி முடிவடையவில்லை."

உங்கள் ஆய்வு முடிவுக்கே நீங்கள் மிகவும் சிரமப்பட்டுள்ளீர்கள். அதை புத்தகமாக அச்சிடுவதில் இன்னமும் சிரமங்கள் ஏற்பட்டிருக்குமே?

"ஆமாம். சிந்து எழுத்தை அச்சிடுவதற்கு அச்சுருக்களோ அச்சு வசதிகளோ இல்லை. அது புத்தகமாக தயார் நிலையில் இருக்கும் போது என்ன விதமான அச்சுமுறையைப் பயன்படுத்துவது என்பது பெரிய சவாலாக இருந்தது. முதலில் நாங்கள் எக்ஸ்.ஒய். டிரம் ப்ளாட்டரின் உதவியுடன் அச்சடித்தோம். ஆனால், அச்சு அத்தனை திருப்திகரமாக இல்லை. 1975இல் எனது பணி கிட்டத்தட்ட ஸ்தம்பித்த நிலைக்கு வந்துவிட்டது. அதேவேளையில், டாடா ஆய்வகத்தில் சக்தி வாய்ந்த கணிப்பொறிகளின் அறிமுகத்தால், கணிப்பொறி உதவியுடனான போட்டோ டைப்செட்டிங் முறையில் கையால் வரையப்பட்ட படக்குறிகளை எழுத்துருக்களாக அச்சுக்குப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் வந்திருந்தது. அப்போது நான் மும்பைக்கும் டெல்லிக்குமாக அலைந்து முடிந்தளவுக்கு விடுமுறைகளை எடுத்துப் போய்க்கொண்டிருந்தேன். 1976இல் ஆறுமாதம் கல்வி விடுமுறை எடுத்து பாதி சம்பளத்தில் 'டாடா இன்ஸ்ட்யூட் ஆப் பண்டமென்டல் ரிசர்ச்'க்கு சென்று புத்தகம் அச்சாகும் வரை அங்கேயே இருந்தேன். 'தி இண்டஸ் ஸ்க்ரிப்ட்: டெக்ஸ்ட்ஸ், கன்கார்டன்ஸ் அண்ட் டேபிள்ஸ்' என்ற அந்தப் புத்தகத்தை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியிட்டது. சிந்து எழுத்து குறித்த ஆய்வுக்கு முக்கிய மூலகமாக அந்த ஆய்வுப் புத்தகம் கருதப்படுகிறது."

வரலாற்றாய்வாளராக இருந்ததோடு மட்டுமின்றி, பிரபல தினசரி ஒன்றுக்கும் ஆசிரியராக இருந்துள்ளீர்கள். அது எப்படி நடைபெற்றது?

"எனக்கு அரசு வேலையினால் அயற்சி ஏற்பட்டு, ஐம்பது வயதானால் இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் விருப்பரீதியான ஓய்வு பெறலாமென்ற அடிப்படையில் ஓய்வுகோருவதற்கு தீர்மானித்தேன். ஆனால், என்னை முழுநேர ஆய்வுக்கு உட்படுத்திக் கொள்வதற்கு முன்பு வேறு வேலை எதையாவது இன்னும் சில வருடங்கள் செய்யலாம் என்று நினைத்தேன். எனது மகன்கள் கல்வியை நிறைவு செய்து வேலை பார்க்கும் வரை நான் பணிபுரிய வேண்டும் என்று தீர்மானித்தேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' குழுமத்தில் செயல் இயக்குனராக 1980 முதல 82 வரை பணிபுரிந்தேன். ஆய்வு வேலைகளுக்காக அந்தப் பணியை நான் ராஜினாமா செய்தேன். ஆனால், அப்போதுதான் எனது மூத்த மகனான 29 வயது வித்யாசாகர் ஒரு விபத்தில் மரணமடைந்தார். அவர் திருமணமானவர். இரண்டு குழந்தைகள் இருந்தன. எனது பேரக்குழந்தைகளுக்கு உதவியாக நான் திரும்பவும் வேலை தேட வேண்டியிருந்தது. அதனால், 'தினமணி'யில் ஆசிரியராகப் பணியாற்ற அழைத்த ராம்நாத் கோயங்கோவின் அழைப்புக்கு சம்மதம் தெரிவித்தேன்."

தினமணி நாட்களைப் பற்றி கூறுங்கள்...

"நான் அதுவரை செய்தித் துறையில் இருந்ததே இல்லை. ஒரு செய்தித்தாள் அலுவலகம் எப்படி இருக்கும் என்று தெரியாது. செய்தித்தாள் எழுத்துக்கு தேவையான தமிழறிவும் என்னிடம் கிடையாது. எனக்கே ஆச்சரியம் உண்டாகும் வகையில் என் பணி சிறப்பாக அமைந்தது. 'தமிழ் மணி' மற்றும் 'அறிவியல் சுடர்' போன்ற இணைப்புகளை நான் 'தினமணி'யில் அறிமுகம் செய்தேன். அதற்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. சீர்திருத்த எழுத்துகளை செய்தித்தாளில் பயன்படுத்தினேன். சமஸ்கிருதம் மற்றும் ஆங்கிலத்தை கூடுமானவரை தவிர்த்தேன். ஆசிரியர் பக்கத்துக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அதில் தீவிரமான விஷயங்கள் பற்றி தொடர்ந்து கட்டுரைகள் வெளிவந்தன. நான் மிகச் சுதந்திரமான பத்திரிகை ஆசிரியராக செயல்பட்டேன். அருண் ஷோரி ஆசிரியராக இருந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மண்டல் கமிஷன் பரிந்துரைகளை கடுமையாக எதிர்த்தபோது, அதே நிறுவனத்திலிருந்து வந்த 'தினமணி'யில் இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவான நிலை எடுக்கப்பட்டது. 'தினமணி'யின் ஆசிரியராக எனக்கு அப்பணி முழுமையான திருப்தியைத் தந்தது. 1991இல் எனது மிச்ச காலத்தில், ஆய்வுப் பணிகளை நிறைவு செய்வதற்காக வேலையை ராஜினாமா செய்தேன்."

தமிழ் பிராமி எழுத்தில் உங்கள் இரண்டாம் கட்ட ஆய்வைப் பற்றி சொல்லுங்கள்?

"நான் 1991ஆம் ஆண்டில் மீண்டும் தமிழ் கல்வெட்டியல் ஆய்வைத் தொடங்கினேன். இதற்காக தமிழகம் முழுவதும் உள்ள குகைகளுக்கு தீவிரமான பயணத்தைத் தொடங்கினேன். 'இந்தியன் கவுன்சில் ஆப் ஹிஸ்டாரிக்கல் ரிசர்ச்'சில் எனக்கு தேசிய ஆய்வு நல்கை மூன்று வருடங்களுக்கு கிடைத்தது. 1992ஆம் ஆண்டு எனது மனைவி திடீரென்று மாரடைப்பால் மரணமடைந்தபோது திரும்பவும் ஆய்வுப் பணிகளில் பின்னடைவு ஏற்பட்டது. ஆனாலும், தமிழக தொல்லியல் ஆய்வுத்துறையிலுள்ள இளம் ஆய்வாளர்களின் உதவியுடன் ஆய்வைத் தொடர்ந்து 2000இல் பணியை முடித்தேன். 2003 ஆம் ஆண்டில் க்ரியா பதிப்பகமும் ஹார்வர்ட் பல்கலைக்கழகமும் சேர்ந்து எனது 'எர்லி தமிழ் எபிக்ராபி' புத்தகம் வெளியிட்டன."

தற்போது நீங்கள் என்ன பணியில் ஈடுபட்டுள்ளீர்கள்?

"சமீபத்தில் ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் சிந்து ஆய்வு மையம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். இதற்காக இந்த ஆய்வு நூலகம், 'டாடா இன்ஸ்ட்யூட் ஆப் பண்டமென்டல் ரிசர்ச்' உடனும் சென்னையிலுள்ள 'மேட்சயின்ஸ்'டனும் இணைந்து புதுப்பிக்கப்பட்ட விரிவுபடுத்தப்பட்ட சிந்து கல்வெட்டுகள் பற்றிய முடிவுகளைத் தொகுப்பதில் ஈடுபட்டு வருகிறது. இந்த மையத்திலிருந்து ஏற்கெனவே சில நல்ல ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. சிந்து எழுத்துகளை ஆய்வு செய்யும் இளம் ஆய்வாளர்களை இந்த ஆய்வு மையம் ஈர்க்கும் என்று நினைக்கிறேன். 'Interpreting Indus script : A Dravidian model' என்ற புத்தகம் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளேன். இது பெங்குவின் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட உள்ளது."

உங்களது அறக்கட்டளை பற்றி கொஞ்சம் கூறுங்கள்...

"எனது மூத்த மகன் வித்யாசாகர் 1986இல் விபத்தில் இறந்தபோது எனது மனைவியும் நானும் அவனது நினைவாக ஒரு அறக்கட்டளை நிறுவ தீர்மானித்தோம். எனது மற்ற கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றும் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அத்துடன் அந்த அறக்கட்டளைக்கான வளங்களையும் திரட்ட வேண்டியிருந்தது. 2003இல், திருவான்மியூரில் இருந்த கடலோர பங்களாவை விற்று வித்யாசாகர் கல்வி அறக்கட்டளையை எனது பணம் ஐம்பது லட்சத்தை இட்டு உருவாக்கினேன். அந்த அறக்கட்டளையிலிருந்து நாற்பது லட்ச ரூபாய் பணம் சங்கர நேத்ராலயா மருத்துவமனைக்கு தரப்பட்டு அங்கு 'வித்யாசாகர் இன்ஸ்ட்யூட் ஆப் பையோ மெடிக்கல் டெக்னாலஜி அண்ட் சையன்ஸ் பயிலகம்' உருவாக்கப்பட்டது.

ஆண்டுதோறும் பாலிடெக்னிக் மற்றும் தொழிலக பயிற்சி நிலையங்களில் படிக்கும் ஏழை மற்றும் நன்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த அறக்கட்டளையிலிருந்து ஸ்காலர்ஷிப் தொகை வழங்கப்படுகிறது."

இந்த வயதிலும் உங்களை உற்சாகமாக இருக்கச் செய்வது எது?

"அறிவுப் பசியும், உண்மையை அறிந்துகொள்வதற்கான விழைவும் தான்."

(வரலாறு.காம் (varalaaru.com) வெளியிட்டுள்ள தொல்லியல் இமயம் ஐராவதம் மகாதேவனின் பணிப்பாராட்டு மலரான 'ஐராவதி'க்காக எழுத்தாளர் லலிதாராமால் எடுக்கப்பட்ட ஆங்கில நேர்காணலின் மொழிபெயர்ப்பு இது.)

■

[ கட்டுரை ]

# இரட்டைக் கோபுரம்

## நிர்மலன்

நெடுஞ்சாலையின் இருபுறத்தேயும் தெரிந்த செம்பனைத் தோட்டங்களில் பனிப்புகார் விலகியிருக்கவில்லை. தூரத்தே மலைமுகட்டுக்கு மேலால் சூரியன் மெதுவாக எட்டிப்பார்த்தான். திரும்பிப் பார்த்தேன். தூரத்தில் இரட்டைக் கோபுரம் மங்கலாய்த் தெரிந்தது. சுப்பிரமணியம் தனது சிவப்புநிற போட்டோன் காரை நிதானமாகவும் விரைவாகவும் செலுத்திக்கொண்டிருந்தார் பின் சீற்றில் இருந்த சுனில் விம்முவதும் அவனை லால் தேற்றுவதும் காரின் கண்ணாடியில் தெரிந்தது.

"எத்தினை மணிக்கு 'பிளைட்' கொழும்பில் லாண்ட பண்ணும் லா?" சுப்பிரமணியத்தின் குரலிலும் கவலை தெரிந்தது.

"ரெண்டு மணிக்குப் போய்விடும்;" நான் சொன்னேன்.

"இவரை யாரு கண்டிக்குக் கூட்டிப் போவாங்களா?"

"சுனிலின்ரை மச்சான் கொழும்பிலை வேலை செய்யிறார் அவர் கூட்டிக்கொண்டு போவார்"

சுனிலுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. இடிபோல் அச்செய்தி கண்டியிலிருந்து ரெலிபோனின் றிசீவர்

வழியாக, மலேசியாவில் என் காதில் வந்திறங்கிற்று. சுனிலின் தம்பி விமல் சொன்னான்.

" முரளி ஐயே, சுனில் ஐயாகே புத்தா அத மரில்லா, ஐயாவ கெற்ற லங்காவட்ட எவண்ட"

சுனிலின் மகன் இறந்து விட்டதாகவும் சுனிலை இலங்கைக்கு அனுப்பி விடும் படியும் சிங்களத்தில் கூறினான்.

விஷ்வா நாங்கள் மலேசியா வந்ததன் பின் பிறந்த சுனிலின் தலைப்பிள்ளை. சுனிலின் முகத்தை விஷ்வாவும் விஷ்வாவின் முகத்தை சுனிலும் பரிக்கக் கூடவில்லையே! இரண்டு நாட்களுக்கு முன்பு விஷ்வா பேராதனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாய் சுனில் சொல்லியிருந்தான். ஆனால் அக்காய்ச்சல் குழந்தையின் மரணத்திற்கே காரணமாய் அமையுமென்பதை ஒருவரும் எண்ணியிருக்கவில்லை.

சுனில் இன்னும் அறைக்குத் திரும்பியிருக்கவில்லை. அவன் இந்நேரம் நூலகத்திலிருந்து படித்தக்கொண்டோ அல்லது கொம்பியு+ட்டர் அறையிலிருந்து ஏதாவது வேலை செய்துகொண்டோவிருப்பான். அவனின் குணமே அதுதான். அரசாங்க புலமைப் பரிசில் பெற்று படிக்க வருபவர்கள் படிப்பை மறந்து வேலை செய்யும்போது, அவன் பல்கலைக்கழக விரிவுரைகள் முடிவடைந்த பின்னும்கூட என்னுடனும் லாலுடனும் சேர்ந்து அறைக்கு வரமாட்டான். நாங்கள் அறைக்குத் திரும்பி குட்டித் தூக்கம் போட்டு மேல்கழுவி இரவுச் சாப்பாட்டிற்காய் ஏதாவது செய்யத் தொடங்கும் ஏழு மணியளவில், வேர்த்து விறுவிறுக்க வருவான். குளித்து விட்டு சமையலில் உதவி செய்வான்.

விசயத்தைச் சொல்ல, பாத்றூமில் உடைகளைச் துவைத்துக் கொண்டிருந்த லால் என்னுடன் பல்கலைக்கழகத்திற்கு வந்தான். நூலகத்தில் 'ஜேர்னல்' ஒன்றைப் 'போட்டோக் கொப்பி' எடுத்துக்கொண்டிருந்த சுனிலை வெளியே கூட்டி வந்து விசயத்தை சொல்லப் பெரும்பாடாகிவிட்டது.

"மகே புத்தே!"

எனது மகனே என்று சு+மூலை மறந்து கத்தினான். மலே, சீன, இந்திய மாணவர்கள் எங்களை வித்தியாசமாய்ப் பார்க்கத் தொடங்கினர். ரிக்கட் பதிவு செய்ய கோலாலம்பு+ர் போவதற்காக நாங்கள் பஸ்சுக்கு காத்திருந்த பொழுது, சுப்பிரமணியம் தனது காரை எங்களுக்கருகே நிறுத்திக்கதைத்தார் காரிலேயே ஸ்ரீ லங்கன் எயார் லைன்சின் ரிக்கட் பதிவு செய்யும் அலுவலகத்திற்குக்; கூட்டிப் போனார் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தானே ரிக்கட்டுக்குரிய பணத்தைச் செலுத்தினார்

சுப்பிரமணியம் மலேசியர் என அவரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கூறினாலும் அவரின் தகப்பன் இலங்கையர்தான். மலேசிய ரெலிக்கொம்மில் பொறியியலாளர் அவரின் தகப்பன் கந்தசாமி யாழ்ப்பாணம் மாதகலில் இருந்து மலேசியா வந்து ரெயில்வேயில் ஸ்ரேசன் மாஸ்ரராய் வேலை செய்து, அங்கேயே குடும்பமாயத் தங்கிவிட்டவர் மாதகல் பொன்னையாப் பரியாரியின் பேரன் தான் என்று சுப்பிரமணியம் அடிக்கடி சொல்வார் சுப்பிரமணியம் எங்களுக்கு அறிமுகமானதே வித்தியாசமான சம்பவத்தின்மூலந்தான்.

நாங்கள் மலேசியா வந்த புதிதில் பல்கலைக்கழகத்தால் விடுதி வசதி செய்து தரப்பட்டது. எங்களுக்கு கன்ரீனில் கிடைக்கும் எண்ணெய் மிகுந்த சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை. ஒரு மாதிரி எங்கள் இணைப்பாளரைப் பிடித்து அவர் மூலமாய் ஒரு சிறிய. வீடு வாடகைக்குப் பெற்றிருந்தோம். புது வீட்டுக்கு வந்த இரண்டாம் நாளின் காலையில்; படிப்பதற்காய் நான் எழுந்தபோது குழாயில் தண்ணீர் வரவில்லை. பேசாமல் இருந்தேன்;. சுனிலும் லாலும் கூட எழுந்து " வத்துற நா" என்று சொல்லிக் கொண்டிருந்தனர் காலைக் கடன்களை முடிக்காமல் அந்தரப்பட்டுக்கொண்டிருந்தோம்.

நானும் லாலும் வெளியே போய் பக்கத்து சீனரின் வீட்டு வெளிக் கதவைத் தட்டினோம்;. வீட்டுக்கு முன்னால் புத்தபெருமானின் சிலை இருந்தது. இலங்கையில் இருப்பவைகளிலும் பார்க்க வித்தியாசமாய் இருந்தது. வயதான சீன மூதாட்டி வந்து வீட்டுக் கதவைத் திறந்து எங்களைப் பார்த்தாள். லால் புத்தர் சிலையைப் பார்த்து விட்டு நம்பிக்கையுடன் " வோட்டர் ஞ் வோட்டர்" என்று கேட்டான். மூதாட்டி கதவை அடித்துச் சாத்தி விட்டுப் போய்விட்டாள்.

அவருக்கு ஆங்கிலம் புரியவில்லையோ? அல்லது விசா இல்லாமல் மலேசியாவில் அலையும் பங்களாதேசத்தவரென நினைத்தாரோ? மலேசியர்கள் இலங்கையரையும் பங்களாதேசத்தவரையும் தோற்றத்தை வைத்து வேறுபடுத்தக் கஸ்டப்படுகிறார்கள்.

அடுத்த வீடு ஒரு மலேக்காரரினது. வீட்டுக்காரர் யன்னலால் எட்டிப் பார்த்தவர் கதவைத் திறக்கவில்லை.

அடுத்த மூன்று நான்கு வீடுகளிலும் அதே மாதிரித்தான். இயற்கை உபாதை தொல்லை கொடுத்தது. ஐந்தாவது வீட்டின் வாசற் கதவு நிலையில் நூல் கட்டப்பட்டு, அதனுள் பிளாஸ்ரிக்கினால் செய்யப் பட்டிருந்த மாவிலைகள் கோக்கப் பட்டிருந்தன. என் மனதில் சிறிது நம்பிக்கை துளிர்விட்டது.

கதவைத் தட்ட வயதான ஆண் வந்து கதவைத் திறந்தார் எழுபது வயதிற்கு கூடுதலாக இருக்கும் போலிருந்தது. கண்ணாடி அணிந் திருந்த அவர் கையில் 'மலேசிய நண்பன்' பத்திரிகை இருந்தது.

"ஐயா. தண்ணி இருக்கா?" நான் கேட்டேன். ஓடி வந்து கையைப் பிடித்தவர்,

"நீங்கள் இலங்கைக் காரரா?" என்று சொல்லி வீட்டினுள் கூட்டிச் சொன்றார் எனது மூன்று சொற்களிலேயே எனது நாட்டைக் கண்டு பிடித்துவிட்டார் எங்களைப் பற்றி விசாரித்தார் அவரின் முகத்தில் சந்தோசம் தெரிந்தது.

தான் யாழ்ப்பாணம் மாதகலில் பிறந்தவரென்றும் கனகாலத்திற்குப் பின்பு தாய் நாட்டுத் தமிழ் கேட்க ஆசையாய் இருக்கிறதென்றும் சொன்னார் மனைவி என்று ஒரு மூதாட்டியையும் மகன் சுப்பிர மணியத்தையும் சுப்பிரமணியத்தின் மனைவியையும் அறிமுகப்படுத் தினார் சுப்பிரமணியத்தின் பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று விட்டதாகச் சொன்னார் அவர் என்னுடன் கதைக்க விரும்பினார் ஊர்ப் புதினங்கள் கேட்டார் அதற்குள் லால் சைகையால் தனது உபாதையைக் கூறிக்கொண்டிருந்தான்.

அவர் வீட்டில் பெரிய தண்ணீர்த் தொட்டியிருந்தது. நானும் லாலும் அவர் வீட்டில் காலைக் கடன் முடித்துக் குளித்தோம். அந்தக் குடும்பமே எங்களை சாப்பிடாமல் போக விடவில்லை. மேசையில் அவர்களுடன் அமர்ந்து தோசை சாப்பிட்டுவிட்டு எங் களின் வீட்டுக்குப் போனோம். சுனில் இயற்கைக் கடன் கழிக்கா மல் அந்தரப்பட்டு எங்களை ஏசியபடியிருந்தான். லால் தோசை யின் சுவையைச் சொல்லி சுனிலின் கோபத்தை அதிகரித்துக் கொண்டிருந்தான். சுனிலும் சுப்பிரமணியத்தின் வீட்டில் வந்து காரியங்களையும் நிறைவேற்றி சாப்பிட்டான். அன்று சுப்பிரமணியம் எங்களை தனது காரில் ஏற்றி அலுவலகத்திற்கு போகும் வழியில் பல்கலைக்கழகத்தில் இறக்கி விட்டார்

அதன் பிறகு ஒவ்வொரு நாளும் அவரின் கார் எங்களை பல்கலைக் கழகத்தில் இறக்கி விட்டுவிட்டுத்தான் அவரின் அலுவலகம் போகும். சுனிலும் லாலும் இங்கிலீசில் அவருடன் கதைப்பார்கள்.. எல்லோரி லும் பார்க்க சுனில் அவருக்கு நெருக்கமாகிப் போனான்!

சுப்பிரமணியம் செவ்வாய்க் கிழமைகளின் இரவில் 'பாசா மலாத்' துக்குப் போகும் போது எங்களையும் காரில் ஏற்றிச் செல்வார் அந்தச் சந்தையில் ஒரு வாரத்திற்குச் தேவையான மரக்கறி மீன் இறைச்சி அரிசி எல்லாவற்றையும் வாங்கி ஏற்றி வருவோம். சந்தை யில் விலை விசாரிக்க தமிழ் உதவியது. சுப்பிரமணியம் வீட்டுப் 'பிறிச்' எங்கள் உணவுகளையும் பழுதடையாது பாதுகாத்தது. தைப்பூ சமன்று பத்துமலைக்கு தனது குடும்பத்துடன் எங்களையும் கூட்டிப் போனார் பிள்ளைகளின் பாடசாலை விடுமுறைக்கு மலாக்கா, 'ஜென் ரிங் கைலாண்ட்'. என்று வேன் பிடித்து சுற்றுலா போனபோ தெல்லாம் எங்களையும் கூட்டிச் சென்றனர் ஒருமுறை 'செந்தூலி'ல் உள்ள சிவன் கோவிலுக்கும் அருகில் இருந்த ஸ்ரீ லங்கன் பௌத்த பன்சலைக்கும் அவர்களுடன் போனோம். அங்கிருந்த இலங்கைப் பௌத்த குரு தமிழிலும் கதைத்தார் சுப்பிரமணியம் அநேகமான சனி ஞாயிறுகளில் தோசை சாப்பிட வீட்டுக்கு அழைத்துப் போவார் தீபாவளியன்று மூன்று நேரமும் எங்களுக்கு விருந்து தந்தனர்

ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் சுனிலும் லாலும் நானும் செந்தூலில் இருந்த பன்சலைக்கும் சிவன் கோவிலுக்கும் போய் வந்தோம். மதிய உணவை பன்சலையிலேயே உண்டோம். அவர் கள் தமிழ் அரிச்சுவடிப் புத்தகம் வாங்கி எழுத வாசிக்கப் பழகினார் கள். இருபத்தைந்து வருடங்கள் இலங்கையில் இருந்த இவர்கள் இங்கு வந்து தமிழ் படிப்பது எனக்கு ஆச்சரியமாகப் பட்டது. கடை களில் சந்தைகளில் விலை விசாரிக்க, பேரம் பேச, சிலவேளை சுப்பிர மணியத்தின் வீட்டில் கதைப்பதற்குக் கூட தமிழ் அவர்களுக்குப் பயன்பட்டது. கண்டியில் அயல் வீடுகளில் தமிழர்கள் வாழ்ந்த போதும் தமிழைக் கற்காமல் விட்டதை எண்ணி சுனிலும், களுத் துறையில் இருந்து தமிழ் கற்காமல் விட்டதை எண்ணிலாலும் அடிக்கடி கவலைப்பட்டனர்

கண்டியிலிருந்து தபாலில் சுனிலுக்கு வந்திருந்த தேயிலைப் பைக் கற்றுக்களில் சிலவற்றை அவன் சுப்பிரமணியத்தின் வீட்டில் கொடுத்தி ருந்தான். அவர் கண்டித் தேயிலையில் தயாரிக்கப்பட்ட தேநீரை விட சுவையான பொருள் உலகிலேயே இல்லை என்பது போல் பேசித் திரிந்தார் அவர் மனைவிக்கு, நான் கொடுத்த புழுக் கொடியல்களிற் தான் விருப்பம். லால்கூட தனக்கு வந்த 'கித்துல்' ஐ சுப்பிரமணியம் ஆட்களுக்குக் கொடுத்திருந்தான்.

'நீலாயி'ல் உள்ள கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் நான், சுனிலின் ரிக்கட்டையும் பாஸ்போட்டையும் எடுத்துக்கொண்டு ஸ்ரீ லங்கன் எயார் லைன்சின் கரும பீடத்தை நோக்கி நடந்தேன். என் னைத் தொடர்து சுப்பிரமணியம் சுனிலின் சூட்கேஸைத் தள்ளிக் கொண்டு வந்தார் பின்னார் லால் சுனிலின் கையைப் பிடித்தபடி நடந்து வந்தான்.

கரும பீடத்தின் முன்னால் வழமைக்கு மாறாய், வரிசையில் நில் லாது பயணிகள் கும்பலாய் நின்றனர் அவர்களை விலத்தியபடி கரும பீடத்திற்குப் போனேன். அதிலிருந்த மயிலின் இறகு அச்சடிக்கப் பட்டிருந்த சேலை அணிந்து, லிப்ரிக் பூசியிருந்த இளம் பெண் அந் நேரத்திலும் சிரித்தபடி "பிளைட் கான்சல்" என்று சொல்லி கொம்பி யூட்டர் பிரிணற் அவுட் ஒன்றை நீட்டினாள். கட்டுநாயக்கா சர்வ தேச விமான நிலையத்தில் விமானங்கள் தகர்க்கப்பட்டு மோதல்கள் நடைபெறுவதாய் இக்பால் அத்தாஸை மேற்கொள் காட்டி சீ.என்.என் இணையத்தளம் வெளியிட்டிருந்த செய்தி அத்தாளில் இருந்தது. தலை சுற்றுவது போலிருந்தது. சிறு குழந்தையின் உடலை பல நாட்களுக்கு வைத்திருக்க முடியாதே. சுனில் என்ன செய்வான்!

வயோதிப சிங்களத்தம்பதி பௌத்ததுறவி என்போருடன் சுனிலும் லாலும் கதைத்தபடியிருந்தனர் அவர்களுக்கு விமானப்பயணம் தடைப் பட்ட செய்தியைச் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை. சுப்பிரமணியம் சுனிலின் சூட்கேஸைப் பிடித்தபடி நின்றார்.

"பறத் தெமிலு" சுனில் சொன்னான்.

என் காதுகளை என்னால் நம்பமுடியவில்லை. சுனில் ஏன் 'பறத் தெமிலு' என்று ஏசுகிறான்? அவனின் பயணம் தடைப்பட்டதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும். அவனின் துயர் எங்களிலும் பரவியுள்ளபோது ஏன் எங்களைத் திட்டுகிறான்?

விமான நிலையத்தின் சுவரில், மலேசிய சுற்றுலாத்துறையினரால் வரையப்பட்டிருந்த, அடியில் இணைக்கப்பட்டும் மேலே தனித் தனியாகவும் இருக்கும் இரட்டைக்கோபுரத்தின் பெரிய படம் கண்ணிற் பட்டது.

"இவங்கள் என்ன பேசுறாங்கள்?" சுப்பிரமணியம் என்னைக் கேட் டார்.

"எனக்கு எல்லாச் சிங்களச் சொற்களுக்கும் கருத்துத் தெரியாது" என் றேன்.

அருகிற் தெரிந்த இலத்திரனியல் அறிவிப்புப்பலகை இலங்கையைத் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு விமானங்கள் பறப்பதற்குத் தயாராய் இருப்பதாகக் காட்டிற்று!

■




capers



காப்புறுதி உங்களுக்காகவும் உங்களின் அன்புக்குரியவர்களுக்காகவும்..

• ஆயுட்காப்புறுதி

சேமிப்புடன் கூடியது, 10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்திமுடிக்கலாம்

• மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி

வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்படவரும் இணைந்து கொள்ளலாம்.

• கொடிய நோய்களுக்கான காப்புறுதி

2 மில்லியன் வரை காப்புறுதித் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம்.
அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.

• குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டம்

20 வீத அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

digi Media Creations

# சிறீதரன் துரைராஜா

காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

LILAND INSURANCE INC.

RBC Insurance